www.tamilarangam.net

# உயிர்ப்பு

2

92

UYIRPPU

NORWAY
SIGNATURE
SEELAN BOOKS

* மனித உரிமைகள்
* நூல் அறிமுகம்

— அரவிந்

* சிங்கள பேரினவாத இயக்கப்போக்கின் திசை

— தேவதாஸ்

* தனிநபர் பயங்கரவாதம் பற்றி

— வாணி

* தேசிய சக்தி பற்றி சில பிரச்சனைகள்

— ஏகலைவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> "ஒரு தனிநபர் தனக்காக மட்டும் பாடுபட்டால், ஒருவேளை பிரபலமான அறிவாளியாகலாம், மாபெரும் ஞானியாகலாம், மிகச்சிறந்த கவிஞராகலாம் ஆனால் அவர் ஒரு குறையில்லாத உண்மையிலேயே மாபெரும் மனிதராக முடியாது."
>
> -மார்க்ஸ்.

## உங்களுடன் நாம் ...............

முதலாவது இதழுக்குக் கிடைத்த உங்களது ஆதரவுடன் இரண்டாவது இதழுக்கான வேலைகளை உற்சாகமாகத் தொடங்கினோம். எமது சக்திக்கு அப்பாற்பட்ட பல காரணிகள் இரண்டாவது இதழின் வருகையைத் தாமதிக்கச் செய்து விட்டன.

எந்தவொரு போராட்டத்திலும் எழுச்சிகளும் தணிவுகளும் அடுத்தடுத்து வருபவைதான். எழுச்சிக் காலகட்டத்தில் மக்களது தன்னியல்பான ஆற்றலானது பொங்கிப்பிரவகித்து காட்டாற்று வெள்ளமென கரைபுரண்டோடும். இந்த அலையானது புரட்சிகர சக்திகளைக் கூட அடித்துச் சென்றுவிடக்கூடியது. தணிவான காலகட்டமானது தன்னியல்பான சக்திகளை சமூக இயக்கத்திலிருந்து வடிந்து போகச்செய்து வற்றிய குளம்போல காட்சிதரும். இந்த வரட்சித் தகிப்பானது புரட்சிகர சக்திகளைக் கூட வாட்டி எடுத்துவிடக் கூடியது. அவர்களது அடிப்படையான தத்துவார்த்த நிலைப்பாடுகளையே ஐயப்பட வைக்கக்கூடியது. பௌதீக ரீதியான பின்னடைவுகள் ஆன்மீக ரீதியான பின்னடைவுகளுக்கு காரணமாகின்றன. தத்துவார்த்த விடயங்களில் ஊசலாட்டங்களும், எதிரியின் சித்தாந்தங்களுக்குப் பலியாகிப் போவதும், நம்பிக்கை வரட்சியும், தோல்வி மனோபாவமும், மயக்கங்களும் எங்கும் ஆட்சிசெலுத்தத் தொடங்கி விடுகின்றன. எதிரியின் சித்தாந்தப் பிடியிலிருந்து விடுபடுவது, எந்தவிதமான பௌதீக வெற்றிக்கும் முன்நிபந்தனையானது என்றவகையில் போராட்ட உணர்வு வற்றித்தணிந்த காலங்களில் சித்தாந்தப் போராட்டமானது புரட்சிகர சக்திகளது முதன்மையான அக்கறைக்குரியதாகிறது.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள இன்றைய பின்னடைவுகள், தமிழ்த் தேசத்தின் மிகவும் முன்னேறிய பிரிவினரிடம் கூட ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை காலமும் தாம் ஏற்றுக்கொண்டிருந்த மிகவும் அடிப்படையான புரட்சிகர நிலைப்பாடுகளைக்கூட கைவிட்டு, பல எதிர்மறையான கண்ணோட்டங்களது செல்வாக்கிற்கு உட்படுவதைக் காணமுடிகிறது. இந்த தவறான கண்ணோட்டங்களுக்கு எதிராக தீவிரமாக போராடுவதும், யதார்த்த நிலைமை பற்றிய சரியான புரிதலை நிலைநாட்டுவதும், அதன் அடிப்படையில் அனைத்து முன்னேறிய பிரிவினரையும் ஒன்றிணைக்கக் கூடியதுமான ஒரு விரிவான திட்டத்தை வரைவதை நோக்கி முன்னேறுவதும் இன்றைய அவசர பணியாகின்றன.

உயர்வான எண்ணங்களேயாயினும் அவை யதார்த்தத்தில் கைவரப் பெறுவது அந்த எண்ணங்களை பிரதிபலிப்பவர்களது ஒன்றுபட்ட செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது என்பதால், 'உயிர்ப்பு' அதன் நோக்கங்களுடன் இணக்கமானவர்களை நோக்கி கரங்களை நீட்டுகிறது.

...........................................................................................................

...........................................................................

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித உரிமைகள்

அண்மைக் காலத்தில் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்ற பின்வரும் நிகழ்வுகள் கவனத்தைக் கவர்வன.

1. ஐக்கியநாடுகள் சபை, மனிதஉரிமைகள் சம்மந்தமாக வெளியிட்ட அதன் வருடாந்த அறிக்கையில் மனிதஉரிமைகள் மீறப்படுகின்ற முதன்மையான நாடாக இலங்கையை கணிப்பிட்டது.

2. மூன்றாம் உலக நாடுகளுக்கான பொருளாதார உதவிகளுக்கும், அந்நாடுகளில் மனித உரிமைகளின் பேணுகைக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்த பல மனித உரிமை அமைப்புக்கள் கடும் பிரயத்தனப்பட்டன.

பிரேமதாசாவின் பாசிசத்தன்மை மிக்க, தனிமனித புகழ்பாடும், மலின அரசியலினால் அதிதிருப்தியும் கொதிப்பும் கொண்டிருந்த இங்குள்ள ஜனநாயக, முற்போக்குப் பிரிவினரிடையே மேற்படி நிகழ்வுகள் பெரும் எதிர்பார்புக்களை ஏற்படுத்தின. ஏறக்குறைய பிரேமதாச அரசாங்கத்திற்கான வெளிநாட்டு உதவிகள் முற்றாகவே நிறுத்தப்படலாம் என்றும் அதன்மூலம் அவர் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்படும் நிலை தோன்றிவிடும் என்றும் இதனூடாக சிறப்பான ஜனநாயகச் சூழல் இந்நாட்டில் உருப்பெறும் என்றும் அவர்கள் எதிர்பார்த்தனர். எனினும் மிக விரைவிலேயே இந்த எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக நிலமைகள் திரும்பின. மூன்றாம் உலக நாடுகளுக்கான பொருளாதார உதவியை - அந்நாடுகளின் மனித உரிமைச் செயற்பாடுகளுடன் இணைக்க விரும்பிய மனித உரிமை அமைப்புக்களின் முயற்சிகள் நிராகரிக்கப்பட்டன; பிரோமதாச அரசாங்கம் எதிர்பார்த்த தொகையிலும் பார்க்க பத்து மில்லியன் டொலர் கூடுதலான உதவித்தொகை அதற்கு வழங்கப்பட்டது. கூடவே, "ஜனநாயகத்தை நோக்கி துரிதப்பயணத்தை" மேற்கொள்வதாக அமெரிக்கத் தூதுக்குழுவினால் பிரேமதாச அரசாங்கத்திற்கு "நற்சான்றிதழும்" வழங்கப்பட்டது.

"வளர்ச்சியடைந்த" நாடுகளினால், மனித உரிமைகள் எவ்விதம் கரிசனைக்குள்ளாக்கப்பட்டன என்பதைச் சுட்டி நிக்கும் சம்பவங்களாக மேற்கூறியவை அமைகின்றன. மனித உரிமைகள் உதாசீனப்படுத்தப் பட்டதான இத்தகைய நிகழ்வுகள் தற்செயலானவையா? மற்றும், விதிவிலக்குகள் எனக்கொள்ளத்தக்க அளவுக்கு இத்தகைய நிகழ்வுகள் அரிதாகவே இடம்பெறுகின்றனவா?

இந்தக் கேள்விகளக்கான விடைகளை சற்று விரிவான பரிசீலனைக் கூடாகக் காணமுயற்சிப்போம். இந்த முயற்சியில் மனித உரிமைகளை பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியம் ஆகிறது.

**மனித உரிமைகளின் வரலாற்றுப்பூர்வமான பரிணாமம்**

முதலில், அமெரிக்க கொங்கிரசு உறுப்பினர்களிடையே இடம்பெற்ற இரு விவாதங்களைக் கவனிப்போம். ஒன்று, மனித உரிமைகளை மீறுகின்ற மூன்றாம் உலக நாடுகளுக்கான அமெரிக்க உதவியைக் கட்டுப்படுத்தும் யோசனை பற்றி இச்சபையில் மும்மரமாக விவாதிக்கப்பட்டது. மற்றது, அதே அமெரிக்க கொங்கிரசில், அதன் உபகுழுக்களில் ஒன்று, இலங்கையில்



அமெரிக்க முதலீடு செய்வதில் உள்ள தடைகள் பற்றிய தனது அறிக்கையை சமர்ப்பித்து விவாதித்தது. இலங்கையில் நடைமுறையில் இருக்கும் தொழிலாளர் சட்டங்கள் சோசலிசத் தன்மையைக் கொண்டிருப்பதாகவும் அமெரிக்க முதலீட்டுக்கு அத்தகைய சட்டங்கள் வாய்ப்பாக இல்லை என்றும் குறிப்பிடப்பட்டது. மேலும் இந்தச் சட்டங்களை மாற்றி அமைப்பது குறித்த தனது ஆலோசனைகயையும் உபகுழு வழங்கியது. இந்த ஆலோசனைகளில் முக்கியமானவை பின்வருமாறு:-

1. விரும்பிய போது முன் அறி வித்தல் இன்றி தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதற்குரிய விதத்தில் தொழில் சட்டவிதிகளை மாற்றியமைத்தல்.
2. பெண்களுக்கு வழங்கப்படுகின்ற, சம்பளத்துடன் கூடிய நீணடகால பிரசவ விடுமுறையைக் குறைத்தல்.

இலங்கைத் தொழிலாளர்கள் நீண்ட காலப் போராட்டத்தினூடாக, தமது வேலையைப் பாதுகாத்துக் கொள் வதற்கும், தமக்குரிய விடுமுறைகளைப் பெற்றுக் கொள்வதகுமான உரிமைகளை சட்டரீதியாக அங்கீகாரம் பெறச் செய்திருக்கிறார்கள். இந்நிலையில், மனித உரிமைகளை வலியுறுத்தும் அமெரிக்க கொங்கிரசு, இந்தத் தொழிலாளர் உரிமை களை அகற்றுமாறு முன்மொழிவது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. அங்ஙனமாயின் தொழிலாளரது இந்த உரிமைகள் - (வேலையைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை, மற்றும் சம்பளத்துடனான விடுமுறையைப் பெறுகின்ற உரிமை) - மனித உரிமைகளின் வரையறைக்குள் அடங்காதவையா? இத்தகைய கேள்வி களுக்கான விடைகளைத் தெளிவு படுத்திக்கொள்வதற்கு, மனித உரிமைகள் என்ற கருத்தாக்கத்தை வரலாற்றுப் பூர்வமாக புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

வரலாற்று ரீதியில்- மறைமுகமாகவோ அன்றி, வெளிப்படை ஆகவோ- மனித உரிமைகளின் சார்புநிலை, உழைப்புச் சக்தி சுவீகரிக்கப்படும் முறையுடன் தொடர்புபடுகின்றது. ஏடறிந்த வரலாறு குறிப்பிடும் முதல்கட்டமான அடிமையுடமைச் சமூகத்தில், அடிமைகள் மனிதர்களாகவே கருதப்பட வில்லை. உழைப்புச் சக்தியை அள்ளித் தருகின்ற, மற்றும் புதிய உழைப்புச் சக்தியை உற்பத்தி செய்கின்ற விலங்குகளாகவே அவர்கள் கருதப்பட்டனர். அவர்களது முழு உழைப்புச் சக்தியும் அதன் விளை பொருட்களும் அவர்களது எசமானனுக்கே உரிமையாக்கப்பட்டன. ஆகவே, அடிமைகளின் உயிர்வாழும் உரிமை கூட அவர்களது எசமான னால் தீர்மானிக்கப்பட்டது. ஒரு அடிமை தனது எஜமானனுக்காக உழைக்கக் கூடிய ஆற்றலுடனும், ஒழுங்குமுறையுடனும் (அதாவது கீழ் படிவுடன்) இருக்கின்றானா என்பதைக் கொண்டே அவனது உயிர்வழும் காலம் தீர்மானிக்கப்பட்டது. இவற்றிக்கமைவாக இல்லாதபோது அவன் கொல்லப்பட்டான். இவ்வாறு அடிமையுடமைச் சமூகத்தில் "மனித உரிமைகள்" என்பவை (உயிர்வாழும் உரிமை அடங்கலாக) அடிமைகளுக்கு முற்றாகவே மறுக்கப்பட்டிருந்தன. இவை ஆண்டானுக்கு மட்டுமே உரியதாக அமைந்நன.

இதற்குப் பின்னரான நிலவுடைமைச் சமூகத்தில், உழைப்புச் சக்தியைச் சுவீகரிக்கும் முறை மாற்றமடை கிறது. பண்ணையடிமையின் (அல்லது குத்தகை விவசாயியின்) உழைப்புச் சக்தியில் ஒரு பகுதி அவனுக்கும் மறு பகுதி அவனது எசமானனான நிலப்பிரவுக்கும் சொந்தமாகின்றது. இங்கு பண்ணை அடிமையின் உயிர்வாழும் உரிமை அங்கீகரிக்கப்படுகின்றது. (தனக்குச் சொந்தமான ஒரு பகுதி உழைப்புச் சக்தி பெற்றுத்தரும் விளைபொருளின் உரிமையாளன் என்றவகையில் இயல்பாகவே உயிர்வாழ்வதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாத்தியப்பாட்டைப் பெறுவதோடு, மறு பகுதி உழைப்புச் சக்தியில்தான் நிலப்பிரபுவின் வாழ்க்கைக்கான செல்வ ஆதாரம் தங்கியிருக்கின்றது என்ற அவசிய நிலைமை, பண்ணையடிமையின் சுதந்திரமான உயிர்வாழ்வு அங்கீகரிக்கப்படுவதற்குக் காரணமாகின்றது.) நிலப்பிரபுக்குச் சொந்த மாக்கப்படவிருக்கும் ஒரு பகுதி உழைப்புச் சக்தியை நிலப்பிரபு பெற்றுக் கொள்வதை உறுதிப் படுத்தும் விதத்தில் அன்றைய சட்டங்கள் மற்றும் சமூக ஒழுங்குகள் உருவாக்கப்படுகின்றன. இங்கு, ஒரு பண்ணையடிமை தன்னுடைய வாழ்க்கையை தனது விருப்பத்துக்குரிய விதத்தில் ஒழுங்கமைப்பது அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் தன் வாழ்க்கை மீதான பண்ணை அடிமையின் சுதந்திரத் தெரிவு, நிலப்பிரபுவுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டிய உழைப்புச் சக்தியை நிலப்பிரபு கையகப்படுத்துவதைச் சாத்தியமற்றதாக்கி விடும். ஆகவே பண்ணையடிமையின் தொழில், இடப் பெயர்வு, கல்வி, திருமணம், கலாச்சாரக் கொண்டாட்டங்கள். . . . போன்ற அனைத்தும் நேரடியாக நிலப்பிரபுவினாலோ அல்லது நிலப் பிரவினால் கட்டுப்படுத்தக் கூடிய சமூகக் குழுவினாலோ தீர்மானிக்கப் படுகின்றன. இவ்வாறு தீர்மானம் எடுப்பதில் நிலப்பிரபுவுக்குரிய மேலாண்மை சமுகரீதியில் அங்கீகரிக்கப்படுகின்றது. இவற்றின் மூலம், பண்ணையடிமையின் ஒரு பகுதி உழைப்புச் சக்தியை நிலப்பிரபு சொந்தமாக்குவதை உறுதிப்படுத்தும் வகையிலான சமூக, கருத்தியல் ஒழுங்குகள் உருவாக்கப்படுகின்றன. இந்த ஒழுங்குகளை (குறிப்பாக தொழில், இடப்பெயர்வு, திருமண. . . போன்ற வற்றை) மீற முயலும் போது, பண்ணையடிமை குற்றவாளியாக்கப் பகிறான். அவனது இவ்வித "ஒழுங்கு மீறல்" சாராம்சத்தில் நிலப் பிரபுவுக்குச் சொந்தமான உழைப்புச் சக்தியைத் "திருடிக்" கொண்டு ஓடும் முயற்சியாக அமைகின்றது. எனவே இந்த குற்றத்திற்கான தண்டனையாக, அவன் மீது கொடிய சித்திரவதைகள் பிரயோகிக்கப்படுவதும் அங்கீகரிக்கப்படுகின்றது. இவ்வாறு நிலப்பிரபுத்துவ சமூகத்தில் "மனித உரிமைகள்" நிலப் பிரபுக்கள் மற்றும் உயிர் பிரிவினர் களுக்குரிய உரிமைகளாகவே விளங்குகின்றன. உயிர்வாழ்வதற்கான உரிமை தவிர்ந்த வாழ்வதற்கான ஏனைய உரிமைகள் அனைத்தும் உழைக்கும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டன; அல்லது கட்டுப்படுத்தப்பட்டன.

பின்னர் பூர்சுவா அமைப்பு வருகின்றது. அதன் உற்பத்தி முறைக்கு (நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலவிய) பகுதி உழைப்புச் சக்தியோ, கட்டுப்படுத்தப்பட்ட உழைப்புச்சக்தியோ போதுமானதல்ல. எந்தளவுக்கு முழுமையாகவும், சுதந்திரமாகவும், உச்ச விளைவைக்கொண்டதாகவும் உழைப்புச்சக்தி பயன்படுத்தப்படுகின்றதோ, அந்த அளவுக்கு முதலாளித்துவ உற்பத்தி முறை செழித்து வளருகின்றது. எனவே நிலப்பிரத்துவ சமூகத்தில் நிலவிய பிரதேச எல்லை முறை, இடப்பெயர்வு மற்றும் சுதந்திரத்தொழில் தேர்வுகள் மீதான கட்டுப்பாடுகள், கலாச்சார இறுக்கங்கள், குறுகியதிருமண உறவுகள் போன்றவை முதலாளித்துவ உற்பத்தி முறைக்குத் தடையாக அமைகின்றன தனக்குரிய சந்தையைப் பெறுவதிலும், தனக்கான தொழிலாளர்களைப் பெறுவதிலும், இந்தத் தடைகளை அகற்ற வேண்டிய அவசியம் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு ஏற்படுகின்றது. இதன் விளைவாக இதுவரை நிலவிய நிலப்பிரபுத்துவ சட்டங்கள் அகற்றப்படவேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. ஒருவர் தான் விரும்பிய எந்தத் தொழிலையும் செய்யக்கூடிய, தான் விரும்பிய எங்கும் வாழக்கூடிய தான் விரும்பிய எந்த மதத்தையும் பின்பற்றக்கூடிய, எந்த



பெண்ணையும் அல்லது ஆணையும் மணக்கக்கூடிய, தனது மொழியையும் கலாச்சாரத்தையும் சுதந்திரமாக வளர்க்கக் கூடிய உரிமைகளுக்கான கோரிக்கைகள் எழுகின்றன. தனது உடலைத் தானே முழுமையாகப் பொறுப்பெடுக்கவும், சித்திரவதைகளிலிருந்தும், கொலையிலிருந்தும், தனது உடலைப் பாதுகாத்துக் கொள்ளவுமான உரிமை வேண்டப்படுகின்றது. இவ்வாறாக இதுவரை நிலவிய சமூக அந்தசுத்து நிலை அகற்றப்படுகின்றது. சட்டத்திற்கு முன் சகலரும் சமம் என்ற கருத்து உருவாக்கப்படுகின்றது. இவ்விதமாக இதுகாலவரை கருத்தியல்ரீதியிலும், நடைமுறையிலும் ஆதிக்கப் பிரிவினருக்குரியதாக விளங்கிய மனித உரிமைகள், பூர்சுவா சமூகத்தில் கோட்பாட் அளவில் முழு மக்களுக்கும் உரியதாக அர்த்தப்படுகின்றன.

இதன்படி ஒருவர் தனது உழைப்புச் சக்தியை தான் விரும்பிய இடத்தில், விரும்பிய நேரத்தில், விரும்பிய விதத்தில் பயன்படுத்திக் கொள்ளும் முழுச்சுதந்திரம் பெற்றவராகக் கருதப்படுகின்றார். ஆனால் யதார்த்தத்தில், நடப்பிலுள்ள முதலாளித்துவ சொத்துடைமை உறவுநிலையின் குறிப்பான தன்மை காரணமாக உழைப்புக்கு அவசியமான உற்பத்திச் சாதனங்கள் அனைத்திற்கும் உடமையாளரான முதலாளியிடம் தமது உழைப்புச் சக்தியை விற்றுப் பிழைக்க வேண்டியுள்ளது. அதுவும் தன்னை ஒத்த இன்னும் பலருடன் போட்டி போட்டுக்கொண்டு. தனது சொந்த (மற்றும் குடும்பதினதும்) வயிற்றுப் பிழைப்புக்காக முதலாளி விரும்பும் இடத்திலும். விரும்பும் நேரத்திலும், விரும்பும்விதத்திலும். முதலாளி தீர்மானிக்கும் கூலிக்கு தனது உழைப்புச் சக்தியை விற்கவேண்டிய நிலையில் உள்ளார். இதனுல் கோட்பாட்டளவில் உள்ள சமத்துவமாது யதார்த்தத்தில், முதலாளித்துவ வர்க்கத்திற்குச் சார்பாக அர்த்தம் பெறுகிறது. தொழிலாளர், கொலை, சித்திரவதை போன்றவற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை என்பதற்கு மேலாக வேறெதையும், முதலாளித்துவம் அவர்களுக்கு வழங்கிவிடவில்லை. இதற்குமேலாக வேறு ஏதாவது உரிமைகளைத் தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டார்களானால் தொழிலாளரது மிகவும் கடுமையான போராட்டத்தின் விளைவாகப் பெறப்பட்டமையே.

வரலாற்றில் அடுத்த கட்டமான கொம்யூனிச சமுதாயத்தில் உற்பத்தி சாதனங்கள் யாவும் சமூக உடமையாக்கப்பட்டு விட்ட நிலையில் வர்க்கங்களும், வர்க்க போராட்டங்களும் மறைந்து ஒடுக்கு முறைச் சாதனங்களின் தேவை இல்லாதொழிந்து விட்ட நிலையில் உற்பத்தி சக்திகளின் அபரிமித வளர்ச்சி காரணமாக ஒவ்வொருவரும் அவரது தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் மட்டுமே ஒவ்வொருவரும் தமது ஆளுமையை எல்லா விதத்திலும் வளர்த்துக் கொள்ளவும் ஆற்றல்களை பெருக்கிக் கொள்ளவுமான நிலைமைகளில் மட்டுமே மனித உரிமைகள் என்பது அனைவருக்கும் பொதுவான அர்த்தத்தையும் அதன் முழு அர்த்தத்தையும் பெறும்.

எனவே இன்றைய முதலாளித்துவ சமூகங்களில் மனித உரிமைகள் என்பது வரையறுக்கப்பட்ட அர்த்தத்தையே பெறுகிறது. அதுவும் தொழிலாளர்களது உரிமைகளை நீக்கி விட்டு வெறுமனே உயிர் வாழும் சித்திரவதைகளில் இருந்து பாதுகாக்கப்படும் உரிமை என்பதாக மனித உரிமைகள் குறுக்கப்படுகையில் அது நேரடியான முதலாளித்துவ மதிப்பீடாகவே அமைகின்றது.

### மேற்கு நாடுகளில்மனித உரிமைகள்

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மேற்கு நாடுகள் ஒப்பீட்டளவில் சாதகமான நிலையில் இருப்பது அந்நாடுகளில் நிலவும் இரண்டு குறிப்பான நிலைமைகள் உடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்புபடுகின்றது. முதலாவதாக இந்நாடுகளில் உயர்ந்த உற்பத்தி மட்டமும் அதன் விளைவான உயர்ந்த வாழ்க்கைத்தரமும் காணப்படுவதால் இவற்றில் மனித உரிமைகள் ஓரளவுக்கேனும் பேணப்படுவது சாத்தியமாகியுள்ளது. ஆனால் இந்த உயர்வான நிலையை மேற்கு நாடுகள் எங்ஙனம் பெற்றுக் கொண்டன? இந்நாடுகள் பின்பற்றிய- மற்றும் பின்பற்றுகின்ற- கொடூரமான சுரண்டல் முறையும் ஆக்கிரமிப்பு வடிவங்களும்தான் இந்நிலைமையைச் சாத்தியமாக்கி உள்ளன. முதலாளித்துவத்தின் தொடக்க காலங்களில் மேற்கு நாடுகளின் விவசாயிகள் ஆளும் வர்க்கத்தினால் எங்கும் உடமை நீக்கம் செய்யப்பட்டார்கள்; தமது நிலங்களில் இருந்து ஈவிரக்கமற்ற முறையில் விரட்டி அடிக்கப்பட்டார்கள்; மற்றும் படுகொலை செய்யப்பட்டார்கள்; இவர்கள் உழுத நிலங்கள் கால்நடைகளுக்கான மேச்சல் நிலங்களாகவும் பாரிய முதலாளித்துவ பண்ணைகளாகவும் மாற்றப்பட்டன, இவ்வறு இந் நாடுகளில் ஆளும் வர்க்கத்தினர் ஆரம்பத்தில் செல்வத்தை திரட்டினர். மறுபுறத்தில் இந்த ஆளும் வர்க்கத்தினர் தமது காலனி நாடுகளை எல்லையற்ற பேராசை உடன் கொள்ளையடித்தனர் அங்கு வாழ்ந்த செவ்விந்திய, ஆசிய மற்றும் ஆபிரிக்க சுதேசிய மக்களின் குருதியும், வியர்வையும் இந்த மேற்கு நாட்டு ஆளும் வர்க்கத்தினரின் கைகளில் மூலதனமாக உருப்பெற்றன; கொல்லப்பட்ட ஒவ்வொரு செவ்விந்தியனின் மண்டையோடும் உழைப்பின் கடுமையால் இறந்த ஒவ்வொரு ஆபிரிக்கனின் கறுத்த உடம்பும் பட்டினியால் மரணித்த ஒவ்வொரு இந்தியனின் மெலிந்த தேகமும் இவர்களின் பைகளில் பணத்தை நிரப்பின ஈற்றில் தற்போது நவகாலனித்துவ வடிவில் மூன்றாம் உலக நாடுகளை இவர்கள் சுரண்டுகிறார்கள் தமது சந்தையாகவும் மூலப் பொருட்களுக்கான ஊற்றாகவும் மலிவான உழைப்புச் சக்தியின் பிறப்பிடமாகவும் இந்நாடுகளை மாற்றுகிறார்கள் மனிதகுலத்தின் மிகப்பெரும் எண்ணிக்கையினரை வறுமைக்குள் அமிழ்த்துவதன் மூலம் இவர்களின் செல்வம் மேலும் மேலும் திரண்டெழுகின்றது.

இவ்வாறு தமது வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் மனித உரிமைகளை முற்றாக மீறியதன் விளைவாகவே திரட்டிப் பெறுக்கிய செல்வத்தின் மூலம் தமது சொந்த நாட்டின் உற்பத்தி மட்டத்தையும், அங்குள்ள உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பிடத்தக்க உயர்ந்த அளவில் பேணிக் கொள்வது மேற்கு நாட்டு ஆளும் வர்க்கங்களுக்குச் சாத்தியம் ஆகின்றது.

இரண்டாவதாக, இம்மேற்கு நாடுகளின் தொழிலாளர்களினால் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் மேற்கொள்ளப்பட்ட இன்னும் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டங்களின் காரணமாக அங்கு சமூகநலத் திட்டங்கயைும், உயர்ந்த தரத்திலான ஜனநாயக சூழ்நிலையும் அத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் பேணமுயற்சிக்கிறார்கள். மேலும் இந்நாடுகளின் தொழிலாளர்களினதும் மற்றும் வெகுஜனங்களினதும் கலாச்சார உயர்நிலையும், தமது உரிமைகள் தொடர்பான இவர்களின் விழிப்புணர்வும் மனித உரிமைகள் விடயத்தில் இவர்கள் அதிக அக்கறை கொள்வதைச்சாத்தியமாக்குகின்றன இவற்றின் விளைவாக மேற்கு நாடுகளல் மனித உரிமைகள் கனிசமான அளவில் பேணப்படுவதற்குரிய வாய்ப்பான சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் செயற்படுத்தக் கூடிய சாதகமான சூழ்நிலைகளைக் கொண்டிருந்தும்கூட ஐரோப்பிய மற்றும் (வட) அமெரிக்க நாடுகள் உட்பட எந்தவொரு பூர்சுவா நாட்டிலும்அவை பூரணமாக அமுல் படுத்தப்படவில்லை



"புதிய உலக ஒழுங்கை" ஏற்படுத்த முயல்கின்ற மனித உரிமைகளின் தலைமைத் தளபதியாகத் தன்னைப் பிரகடனப்படுத்துகின்ற அமெரிக்காவை உதாரணமாகக் கொண்டால், அது ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட பலமனிஉரிமைத் தீர்மானங்களை தனது நாட்டில் சட்ட விதிக்குள் இணைக்காமல் இருக்கின்றது.

உதாரணமாக:-

1. இன ஒழிப்புக் குற்றச்செயல்களைத் தடைசெய்தும் அவற்றிற்கான தண்டனை வழங்குதலும் பற்றியதீர்மானம் (இது 1951இல் நிறைவேற்றப்பட்டது)

2. இனப்பாகுபாட்டின் எல்லா வடிவங்களையும் இல்லா தொழிலுக்கும் தீர்மாணிக்கும் (இது 1969இல் நிறைவேற்றப்பட்டது)

3. நிறவெறிக் குற்றங்களைக் கட்டுப் படுத்தலும், தண்டித்தலும் பற்றிய தீர்மானம் (1976)

4. திருமணமான பெண்களின் தேசியம் (NATIONALTTY) குறித்த தீர்மானம் (1958)

5. பெண்கள் மீதான அனைத்துப் பாரபட்சங்களையும் இல்லாது ஒழிப் பதற்கான தீர்மானம் (1962)

6. ஆட்கள் கடத்தப்படுவதையும் விபச்சாரத்தில் நபர்கள் பலவந்தமாக ஈடுபடுத்தப்படுவதையும் ஒழிப்பதற்கானதீர்மானம் (1951)

7. தண்டித்தல் தொடர்பான சர்வதேச உரிமைகள் குறித்த தீர்மானம் (1962)

8. சித்திரவதை, ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது அவ மானகரமான நடத்தைத் தண்டனைக் கெதிரான தீர்மானம் (1984)

9. அகதிகளின் அந்தசுத்து தொடர்பானதீர்மானம் (1954)

10. நாடற்றவர்களின் அந்தசுத்து தொர்பான தீர்மானம் (1960)

11. நாடற்ற தன்மையை இயன்றவரை குறைப்பது தொடர்பான தீர்மானம் (1975)

12. கட்டாய வேலை முறையை ஒழிப்பதற்கான தீர்மானம்(1959)

13. கல்வியில் பாரபட்சம் காட்டப்படுவதை எதிர்க்கும் தீர்மானம் (1962)

இவ்விதம் மனித உரிமைகளை - உண்மையில் பூர்சுவா ஜனநாயக வகைப்பட்ட உரிமைகளை முழுமை யாகப் பேணமுடியாத நிலையிலேயே இந்த "வளர்ச்சி அடைந்த" பூர்சுவா நாடுகளின் யதார்த்த நிலைமைகள் அமைந்திருக்கின்றன.

பூர்சுவாப் பண்பைக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் ஒரு பூர்சுவா சமூகத்திலேயே (உயர்ந்த அல்லது குறை வளர்ச்சியுள்ள) முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட முடியாது இருக்கும் விசித்திர முரண்பாடு தெளிவாகத் தெரிகின்றது. அதே வேளை இன்றைய பூர்சுவா அமைப்புக்குள் இந்த முரண்பாடு முழுமையாக தீர்க்கப்படவும் முடியாது. ஏனெனில் இங்கு மனித உரிமைகளைவிட பூர்சுவா வர்க்க நலன்கள், அதாவது உயர்வளர்ச்சிக்குரிய ஏகாதிபத்திய நலன்கள் - முதன்மை பெற்று நிற்கின்றன. இன்றைய உலகில், ஏகாதிபத்திய நலன்களுக்கு அப்பால் எந்த உரிமைகளுமே செயற்பட முடியாது. ஏகாதிபத்திய நலன்களுக்குக் கட்டுப்படாமல், அவற்றுக்கு சேவை செய்யாமல் எந்த உரிமைகளும் நிலவ முடியாது. "அனைத்து" மக்களுக்குமான "பொதுவான" உரிமைகளை அர்த்த ப்படுத்தப்படும் மனித உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் ஏகாதிபத்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நலன்களுடன் அவை கொண்டிருக்கும் உறவுகளினாலேயே தீர்மானிக்கப் படுகின்றன.

ஏகாதிபத்திய சுரண்டலாளர்கள் தமக் குரிய விதத்தில் உலகை ஒழுங்க மைப்பதற்குச் சாதகமாக்வா அல்லது பாதகமாகவா அமைகின்றது என்ற அடிப்படையிலேயே மனித உரிமை கள் மீதான அவர்களின் கரிசனை யும் மதிப்பீடும் அமைகின்றன. ஒரு நாட்டில் பல கட்சிகள் நிலவுவதையும் மக்கள் அவற்றில் தமக்குரியவற்றை சுதந்திரமாக தெரிவு செய்ய உரிமை வழங்கப்படுவதையும் ஜனநாயகத்தின் உயர் அம்சமாகக் குறிப்பிடும் ஏகாதிபத்திய நாடுகள் பலவற்றில் கம்யூனிசக் கட்சிகள் தடைசெய்யப் பட்டிருக்கின்றன. (உதாரணமாக 1950களில் அமெரிக்காவில் இடது சாரி அமைப்புக்கள் நசுக்கி ஒழிக்கப்பட்டன.) இன, நிற வேறுபாடுகளுக்கெதிராக இயங்குகின்ற, தொழிலாளர்களின் உரிமைக்காகச் செயற்படுகின்ற, பெண்களின் உரிமைகளுக்காக போராடுகின்ற, வெகுசனங்களின் பல்வேறு உரிமைகளை பாதுகாப்பதற்காக இயங்குகின்ற நிறுவனங்கள், இம்மேற்கு நாடுகளின் அதிகார அமைப்புக்களினால் நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றன; இன் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான, தடை செய்வதற்கான கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. பல சந்தர்ப்பங் களில் இந்நிறுவனங்கள் வன்முறைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகின் றன. நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு எங்கும் ஊடுருவியிருக்கும் உழவுப்பிரிவு களின் செயற்பாடுகள், மற்றும் பிரமாண்டமாக நிறுவனப்பட்டிருக்கும் வெகுசன தொடர்பு சாதனங்களின் பிரச்சார, கருத்தியல் மேலாதிக்கம் போன்றவற்றால் இந் நாடுகளில் சுதந்திரமான கருத்துப் பரிமாறல்களும், வெகுஜன பிரதிபலிப்புகளும் தடுக்கப்படுகின்றன.

கிரனடா, வியட்நாம், பனாமா... போன்ற நாடுகளின் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, மற்றும் லிபியாவின் மீதான அமெரிக்காவின் குண்டு வீச்சு, வட அயர்லாந்து மீதான பிரிட்டனின் நூற்றாண்டுக்கும் மேலான ஆதிக்கம் மற்றும் போக்லந்துத் தீவுகளுக்கான பிரிட்டனின் படையெடுப்பு, ஈராக்கிய அதிகார வர்க்கத்தை – குறிப்பாக சதாம் குசைனை– இலக்காகக் கொண்டு அந்நாட்டின் மீது விதிக்கப் பட்டிருக்கும் கடுமையான பொருளா தாரத் தடைகளின் காரணமாக அங்குள்ள குழந்தைகள் வயோதிபர்கள், மற்றும் நோயாளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் வேதனை மிக்க அனுபவங்கள்.... போன்ற எதையுமே அந்தந்த நாட்டு மக்களுடைய உரிமைகளை– அதாவது மனித உரிமைகளை– மீறுவதாக ஏகாதிபத்திய சக்திகள் கருதுவதில்லை. ஒருதேசம் ஆக்கிரமிப்புக்குள்ளாகும் போது, அதன் இறைமை மீறப்படும் போது அங்கு மனித உரிமைகள் என்ற சொல்லுக்கே அர்த்தம் இருக்க மாட்டாது என்பதை இவை ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக இவ்வாறான நடவடிக்கைகள்,"சன நாயக மீட்புக்காகவும், சுதந்திர சமுகங்களை உருவாக்குவதற்காகவும்" மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியச் செயற்பாடுகளாகவே ஏகாதிபத்தியவாதிகளினால் விளக்கப்படுகின்றன.

ஈரான் சா, பிலிப்பைன் மார்க் கோசு.....போன்ற தமது விசுவாச ஆட்சியாளர்களுக்கு வழங்கிய ஆதரவு பாலத்தீனியர்களின் உரிமைகளை மறுக்கின்ற, அவர்களை ஓயாது அழி த்துக் கொண்டிருக்கின்ற இசுரவேலுக்கு வழங்கும் ஆதரவு, மிக அண்மைய உதாரணமாக, சுதந்திர சந்தைப் பொருளாதாரம் நோக்கிய இந்தியாவின் திசை மாற்றத்தின் விளைவாக பல்வேறு தேசிய இனங்களின் மீதும் இந்திய அரசு மேற்கொண்டு வரும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கண்டு கொள்ளாது தவிர்த்துக் கொள்ளுதல்.......என்றவாறு ஏகா திபத்திய சக்திகளின் மனித உரிமைகள் மீதான "கரிசனை" வெளிப்படுகின்றது. மறுபுறத்தில் தமக்குக்



கட்டுப்பட மறுக்கின்ற, தனக்கென சுயமான பாதையில் இயங்க முயற்சி க்கின்ற நாடுகளின் மீது –(சீன, வியட்நாம், கியூபா, லிபியா,..போன்றவை) மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை இவை ஓயாமல் சுமத்துகின்றன. இவற்றைப் பற்றி பாரிய அளவிலான பிரச்சாரங்களை உலகெங்கும் முடுக்கி விடுகின்றன. இந்நாடுகளுக்கு எதிராக அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை எடுக்குமாறு ஏனைய நாடுகளை நிர்ப்பந்திக்கின்றன., இந்நாடுகளில் உள்ள தமக்குச் சாதகமான பிரிவினருக்குப் பொருளாதார, மற்றும் ஆயுத உதவிகளை வழங்குகின்றன.

இவ்விதம் சாராம்சத்தில், ஏகாதிபத்திய நாடுகள்,மூன்றாம் உலக நாடுகளுடனான தமது உறவில் இரண்டு விதமான நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டிருக்கின்றன. ஒன்று மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமைகள் பேணப்படுவதைக் "கண்காணிப்பது"– இது வெளிப்படையான நிகழ்ச்சி நிரல். இரண்டாவது, மூன்றாம் உலக நாடுகளை பொருளாதாரரீதியில் தனக்குக் கீழ்ப்படுத்துவது, அடிமைப்படுத்துவது.,–இது மறைமுக மான– நிகழ்ச்சி நிரல். ஏகாதிபத்திய நாடுகளைப் பொறுத்த வரையில் இந்த மறைமுகமான இலக்குத் தான்,– பொருளாதார ரீதியில் மூன்றாம் உலக நாடுகளைக் கட்டுப்படுத்துவது தான்– முதன்மையானது.. இந்த இலக்கை வென்றுகொள்வதற்கான துருப்புச் சீட்டாகத் தான் அவை மனித உரிமைகள் விடயத்தைக் கையாளுகின்றன. ஒரு மூன்றாம் உலக நாடு பொருளாதாரரீதியில் தனக்குக் கட்டுப்படச் சம்மதிக்கின்ற போது,அந்நாட்டின் மனித உரிமைகள் விவகாரத்தை இவை உதாசீனப் படுத்தி விடுகின்றன., மாறாக தனக்குக் கட்டுப்பட மறுக்கும் மூன்றாம் உலக நாட்டின் மீது, மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களையும் நிர்ப்பந்தங்களையும் சுமத்துகின்றன.

இவ்வாறு தமது நலனுக்குகந்த விதத்தில், மனித உரிமைகள் விடயத்தில் ஏகாதிபத்திய நாடுகள் இரட்டைத்தன்மையுடன் செயற்படுகின்றன .

## மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமைகள்

பல மூன்றாம் உலக நாடுகளில் ஒப்பீட்டளவில் மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம் பெறுவதற்கு, ஏகாதிபத்திய நாடுகளும் அவற்றின் உள்நாட்டு தரகு முதலாளித்துவ விசு வாசிகளுமே முழுக்காரணமாகின்றனர். முன்னைய காலனித்துவ ஆட்சியின் காரணமாகவும் தற்போதைய நவகாலனித்துவ சுரண்டலினாலும் உள் நாட்டின் சுயசார்புப் பொருளாதாரம் சிதைக்கப்பட்டிருக்கும் மூன்றாம் உலக நாடுகளில் பற்றாக்குறைகளும், தேவைகளும் அதிகரித்துச் செல்கின்றன. இவை தீர்க்கப்படாத போது–தீர்க்கப்பட முடியாத நிலையில்–மக்கள் கிளர்ச்சிகளாகக் கொதித்தெழுவது தவிர்க்க முடியாததாகின்றது. இந்நிலையில் சிறிய அளவிலான சனநாயகச் சூழல் உருவாவது கூட, தமது இருப்பை பாதிக்கும் என்ற அச்சத்தால், உள்நாட்டு தரகு முதலாளிகள் ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவுடன் மோசமான அடக்குமுறை களின் துணையை நாடுகின்றனர். அடிப்படையில் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு ஏதிராக வெடித்துக்கிளம் புகின்ற இத்தகைய உள்நாட்டு மக்கள் கிளர்ச்சிகளை கொடூரமாக நசுக்கி விடுவதற்காக ஏகாதிபத்திய அரசுகள் தமது தரகு முதலாளித்துவ கைக் கூலிகளுக்கு ஆயுதங்களையும், போர்ப்பயிற்சிகளையும், நவீன சித்திரவதைக் கருவிகளையும், அவற்றைக் கையாள்வதற்கான பயிற்சிகளையும் வழங்குகின்றன. அத்தோடு தொலைத் தொடர்புச் சாதனங்களினூடாக, சித்திரவதைக் கலாச்சாரத்தை உலகம் முழுவதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரப்புகின்றன மறுபுறத்தில் மூன்றாம் உலக நாடுகளில்,அரசினால் மேற்கொள்ளப்படும் சமூகநலத் திட்டங்களையும் (உதாரணமாக இலவசக் கல்வி) சராசரி வாழ்க்கைத் தரத்தைப் பேணும் முயற்சிகளையும் (உதாரண மாக...மானிய முறை) நிறுத்தி விடும் படிஇந்த" உதவிவழங்கும்"மேற்கு நாடுகள் நிர்ப்பந்திக்கின்றன. இதன் விளைவாக மூன்றாம் உலக மக்கள் தமது வாழ்கையைச் சராசரி நிலையிலேனும் பேணிக்கொள்வதற்கு இதுவரை தாம் பெற்றிருந்த உரிமைகளை இழக்கும் நிலைக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறு மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கான ஆதார மூலமாக ஏகாதிபத்திய நாடுகள் அமைகின்றன.

இவ்விதம் இன்று மனித உரிமைகள் கொண்டிருக்கும் வர்க்கப் பண்பு, யதார்த்தத்தில் அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சூழ்நிலைகள், ஏகாதிபத்திய சக்திகளினால் அவை இரட்டைத் தன்மையுடன் பயன்படுத்தும் விதம்.... என்பவற்றின் அடிப்படையில் எமது ஆரம்பக் கேள்விகளுக்கான விடைகளை இப்போது கண்டு கொள்ளலாம். சிறீலங்காவுக்கு உதவி வழங்கிய விடயத்திலும்,மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவி வழங்கும் விடயத்திலும் மனித உரிமைகளை இணைக்க விரும்பிய, மனித உரிமை அமைப்புக்களின் முயற்சிகள் தோல்வியடைந்தன என்பது தற்செயலான நிகழ்ச்சிகள் அல்ல அத்துடன் அவை விதிவிலக்கானவையும் அல்ல. மாறாக அவை ஏகாதிபத்திய சக்திகளினால் திட்டமிட்ட ரீதியில் செயல்படுத்தப்பட்டவை. இன்றைய ஏகாதிபத்திய சூழலில் தவிர்க்கப்பட முடியாதவை., அடிக்கடி தொடர்ச்சியாக வெவ்வேறு வடிவங்களிலும் நிகழ்பவை. மனித உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவது, ஏகாதிபத்திய சக்திகளினால் தீர்மானிக்கப்படுகின்ற நிலை தொடர்ந்து கொண்டிருக்கும் வரை இவ்வாறான நிகழ்ச்சிகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். எனினும் இன்றைய நிலையில் மனித உரிமைகள் மீதான ஏகாதிபத்திய சக்திகளின் இறுக்கமான பிடி தவிர்க்கப்பட முடியாதது என்பதை, மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாட்டுப் பொறிமுறையைப் பரிசீலிப்பதன் மூலம் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாட்டுப் பொறிமுறை எவ்விதம் அராஙுகின்றது? வெகுசனங்களிடையே மனித உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்,ஒரு நாட்டில் நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்வதும் இவற்றின் ஆரம்பச் செயற்பாடுகளாக அமைகின்றன. இவற்றின் மூலம் மனித உரிமை மீறல்களை உள்நாட்டு அரசாங்கங்களின்(மற்றும் போராளிக் குழுக்களின்) கவனத்திற்குக் கொண்டு வருவதும்,அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதும் இவற்றின் நோக்கங்களாகின்றன. எனினும் மிகபெரும்பாலான சந்தர்ப்பங்களில் உள்நாட்டு அரசாங்கங்கள் இவற்றை எவ்விதத்திலும் கவனத்தில் கொள்வதில்லை. இந்நிலையில், மனித உரிமை அமைப்புக்கள், குறிப்பிட்ட நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களை சர்வதேச அளவில் பகிரங்கப்படுத்துகின்றன. இதன் மூலம் பல்வேறு நாடுகளிலும்-குறிப்பாக மேற்கு நாடுகளில்- உள்ள வெகுசனங்களும், சமூக அமைப்புக்களும் குறிப்பிட்ட நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தும் விதத்தில் தலையிடுமாறுதத் தம் அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கத் தொடங்குகின்றன. இங்குதான் மூன்றாம் உலக நாடுகளின் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் பொறுப்பு மீண்டும் ஏகாதிபத்திய நாடுகளின்



கரங்களுக்கே வந்து சேர்ந்து விடுவதைக் காண்கிறோம். ஏகாதிபத்திய நாடுகள் குறிப்பிட்ட நாடுகளுக்கு "உதவி" வழங்கும்போது தாம் விரும்பியவாறு அந்த நாடுகளைச் செயற்பட வைக்கும் விதத்திலேயே இந்த மனித உரிமை மீறல் பிரச்சினைகளையும் கையாள்கின்றன. ஒரு ஏகாதிபத்திய நாடு மூன்றாம் உலக நாடுகளின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து, கட்டுப்படுத் துவதா அல்லது கண்டுகொள்ளாமல் விடுவதா என்பது இறுதியில் ஏகாதி பத்திய நலன்களாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

இவ்வாறு குறிப்பிடுகையில், எல்லா மனித உரிமை அமைப்புக்களுமே ஏதோ ஏகாதிபத்திய கைப்பாவைகளாகத்தான் செயற்படுவதாக அர்த்தம் பெருது. ஒரு சில மனித உரிமை அமைப்புக்களைப் பற்றி இத்தகைய விமர்சனங்கள் சில எழுந்தாலும் கூட "சர்வதேச மன்னிப்புச் சபை" போன்ற அமைப்புக்கள்,மனித உரிமை மீறல்களை எதிர்த்து நேர்மையாகவே போராட்டங்களை முன்னெடுக்கின்றன. இவை ஏகாதிபத்திய நாடுகளிவ் இடம் பெறுகின்ற மனித உரிமை மீறல்களைக் கூடக் கண்டிக்கவே செய்கின்றன. ஆனால் மனித உரிமைகளை மோசமாக மீறுகின்ற ஒருநாட்டைத் தண்டிக்கும் உரிமையானது இந்நாடுகளில் மனிதஉரிமை மீறல்களுக்கு அடிப்படைக் காரண மாக இருக்கும் ஏகாதிபத்திய நாடுகளிடமே இறுதியில் போய்ச் சேர்ந்து விடுவதில்தான் இந்த மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாட்டுப் பொறிமுறையின் அடிப்படையான குறைபாடு காணப் படுகிறது.

இவ்வாறான நிலையில் மனித உரிமைகளுக்கான போராட்டம் பற்றிய புரட்சிகர முற்போக்கு பிரிவினரின் மதிப்பீடு எவ்விதம் அமையவேண்டும்? மனித உரிமைகள் சாராம்சத்தில் பூர்சுவா உரிமைகளாக இருக்கின்ற போதிலும் நடைமுறையில் அவை ஏகாதிபத்திய நலன்களினால் எல்லையிடப்படுகின்ற போதிலும் அவற்றிற்காகப் போராடுதல் அவசியமாகின்றது. ஏனெனில் பூர்சுவா உரிமைகள்கூட மறுக்கப்படுகின்ற ஒரு எதேச்சாதிகார பிற்போக்கு அமைப்பில் அத்தகைய உரிமைகளுக்காக போராடுவது முற்போக்குத் தன்மையைப் பெறுகின்றது. இவ்வகையில் சமூக மாற்றத்தை இலக்காகக் கொண்டு செயலாற்றுகின்ற ஒவ்வொரு தனிநபரும், அமைப்புக்களும் மனித உரிமைப் போராட்டங்களின் ஆதரவாளர்களே சமூக மாற்றம் என்பது ஒரேபாய்ச்சலில் ஈட்டப்படுவதில்லை. அது பல்வேறுகட்டங்களை கடக்கவேண்டியவை. இந்த ஒவ்வொரு கட்டமும் தனக்குரிய வகையில் ஜனநாயகத்தின் உயர்ந்த நிலையை தக்கவைத்துக் கொள்ள முயலும் ஜனநாயகச் சூழலும், மனித உரிமைகளை பேணுதலும் நேர்விகிதத்திற்கு உரியவை எனவே மனித உரிமைகள் உயர்ந்த நிலையில் பேணப்படுவது (அதாவது இதற்கு காரணமாக அமையக்கூடிய உயர்ந்த ஜனநாயகச் சூழல் நிலவுவது) சமூக மாற்றத்துக்கான வாய்ப்பான சூழலை தோற்றுவிக்கக்கூடியது. இவ்வகையில் மனித உரிமைப் போராட்டம் சமூக மாற்றத்தை விரும்புவோரின் அக்கறைக்குரியதாகின்றது. தமது சமூகத்தில் வேறுபட்ட தரப்பினரால் - அரசு மற்றும் போராளித்தரப்புகளினால் - மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை கண்டிப்பதிலும், அவற்றைத் தடுப்பதிலும், மற்றும் தவிர்ப்பதிலும் இவர்கள் உறுதியுடன் செயற்பட வேண்டியவர்கள் மேலும் மக்கள் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தவும் எல்லாவடிவிலான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போராடவும் மக்களை ஒழுங்குபடுத்துவதில் புரட்சிகர முற்போக்கு பிரிவினர் ஊக்கமுடன் செயல்பட வேண்டியவர்கள். கூடவே சமூக மாற்றம் நோக்கிய புரட்சிகர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தின்போது தமது கட்டுப் பாட்டுக்குள் வருகின்ற பிரதேசங்களில் மனித உரிமைகளை முழுமையாகப் பேணவேண்டிய கடப்பாடு மிக்கவர்கள்.

இவ்விதத்தில் பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் பற்றிய விமர்சனங்கள் எவ்வாறிருந்த போதிலும், அவற்றின் செயற்பாடுகள் எல்லைக்குட்படுகின்ற போதிலும், மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான அவற்றின் செயற்பாடுகள் புரட்சிகர, முற்போக்குப் பிரிவினரால் அங்கீகரிக்கப்பட வேண்டியவையே. பொதுவாக நிலவும் சமூக அமைப்பின் பற்றுக் குறையாகவும், எதிர்ப்புக் குரலாகவும் அமைகின்ற மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவும்,பங்களிப்புகளும் வழங்கப்பட வேண்டும். சமயங்களில் மனித உரிமை அமைப்புக்களின் செயற்பாடுகள், புரட்சிகரப் போராட்டத்திற்குச் சாத கமான நிலைவை தோற்றுவிக்கக் கூடியவை. அதாவது மனித உரிமை அமைப்புக்களின் உறுதியான,தொட ர்ச்சியான செயற்பாடுகளின் மூலம் ஏதேச்சாதிகார அரச வடிவங்கள் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும், சர்வதேச ரீதியிலும் அம்பலப்படுத்தப்படுகின்றன. இத்தகைய அம்பலப்படுத்தல்கள் ஏதேச்சாதிகார சக்திகளை மக்களிடமிருந்தும், உலகின் பொது அனுதாபத்திலிருந்தும் தனிமைப்படுத்துகின்றன. இவ்வாறான நிலை வெகுசனப் போராட்டத்திற்கு உந்து சக்தியை அளிக்கின்றது. இவ்விதத்தில் புரட்சிகர, முற்போக்கு சக்திகள் மனித உரிமை அமைப்புக்களின் ஆதரவாளர்களாக அமைகின்றனர்.

எனினும் மனித உரிமைகளுக்கான போராட்டம்,முற்றி லும் பூர்சுவா எல்லைக்குள் குறுக்கப்படுவதை புரட்சிகர, முற்போக்கு பிரிவினர் அனுமதிக்க மாட்டார்கள். மனித உரிமைகளை பூர்சுவா எல்லைக்கு அப்பாலும் விரிவுபடுத்தி, உழைக்கும் மக்களது முழுநலங்களும் அடங்கலாக, அவற்றை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்கு இருக்கின்றது. தவிர்க்க முடியாது முன்னிறுத்தப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பானது, வெறுமனே மனித உரிமைகளுக்கான போராட்டத்தின் மூலம் மட்டும் நிறைவேற்றப்படக் கூடியதல்ல. ஏனெனில் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதும், அவற்றை விரிவுபடுத்துவதும் தனி நபர் சார்ந்த விடயங்களாக இல்லை. மாறாக,இவை அரசசார்ந்த விவகாரங் களாக. ஆளும் வர்க்கங்களின் நலன்கள் மற்றும் அவர்களின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்புறுகின்றன இவ்வாறு மனித உரிமைகளை நிலைநிறுத்துவது,இறுதியில் அரசு அதிகாரத்தை வென்று கொள்வதுடன் இணைக்கப்படுகின்றது. அதாவது ஆளும்வர்க்கமாக உழைக்கும் மக்கள் மாறிக் கொளும் நிழையுடன் இணை கின்றது.

இன்று,மனித உரிமைகள் வெளிப்படுத்தும் வர்க்கத்தன்மை,மனி த உரிமை அமைப்புக்கள் செயற்படு வதிலுள்ள எல்லைப்பட்ட நிலை...என் பவற்றிற்கமைய மனித உரிமைகளு க்கான போராட்டம் என்பது ஒரு பகு திப் போராட்டம் என்ற பண்பையே பெறுகின்றது. சமூக மாற்றம் என் னும் முழுமைக்கான போராட்டத்தில் புரட்சியாளர்கள் எதிர் கொள்கின்ற பகுதி நிலைப் போராட்டமாகவே இது அமைகின்றது. இந்நிலையில் சமூகத்தை வழிநடத்திச் செல்லும் கடப்பாட்டைக் கொண்டிருக்கும் புரட்சிகர முற்போக்குப் பிரிவினர்,மனித உரிமை ப்போராட்டம் என்ற எல்லைக்குள் மட்டும் தமது முழு ஆற்றலையும் குவிப்பது அர்த்தமற்றுப் போகின்றது. சமூக மாற்றத்திற்கான போராட்டப் பாதையில் வென்று கொள்ளப்பட வேண்டிய பல்வேறுபட்ட சனநாயக உரிமைகளில் ஒரு பிரிவாகவே மனித உரிமைகள் விளங்குகின்றன. இந்நிலையில் மனித உரிமைகளுக்கான போராட்டத்தில்-ஒரு பகுதிப்



போராட்டத்தில்-தம்மை முற்றாக ஈடுபடுத்திக் கொள்ள முனையும் புரட்சிகர சக்திகள் இதன் விளைவாக, அவசியக் கடமையாக முன்னே நிற்கும் சமூகத்தை மாற்றியமைத்தல் என்னும் முழுமைக்கான போராட்டத்தை உதாசீனப்படுத்தியவர்களாக ஆகின்றனர். பகுதி நிலைக்குரிய பண்பைக் கொண்டிருக்கும் மனித உரிமைகளு க்கான போராட்டம் முழுமையான சமூக மாற்றத்திற்காக நடாத்தப்படும் அரசியல் போராட்டத்திற்கான மாற்றீடாக மாட்டாது. பொதுவான நிலையில்-பூர்சுவா சனநாயக எல்லைக்குள்-மனித உரிமைகளுக்காக போராடுவதற்கு, பூர்சுவா சனநாயகவாதிகளும், மற்றும்,நிறுவனங்களுமே போதுமானவை. பூர்சுவா அமைப்பின் தோற்றத்தின் பின்னால் ஒவ்வொரு சமூகமும்-காலம் கடந்தாயினும் கூட-இத்தகைய மனித உரிமைப் போராட்ட சக்திகளைத் தனக்குள்ளிருந்து பிறப்பித்து விடுகின்றன. ஆனால் இவ்வாறான ஒரு சமூகத்தை-மனித உரிமைகளும் அடங்கலாக-உயர்ந்த நிலைக்கு வழிகாட்டிச் செல்வதற்கு இத்தகைய மனித உரிமைப் போராளிகள் போதுமானவர்கள் அல்ல. பதிலாக அச்சமூகத்தின் புரட்சிகர,முற்போக்கு பிரிவினரே அவசியமாகின்றனர். இத்தகைய பரிவினரின் உருவாக்கம் அவ்வளவு எளிதாக இடம் பெறுவதில்லை கடின முயற்சியும், உணர்வுபூர்வமான செயற்பாடுகளுமே இத்தகைய நபர் களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு உருப்பெறும் புரட்சிகரப் பிரிவினர், தாம் வாழும் சமூகத்தின் அரசியல் தலைமையைக்கையேற்பதும், உண்மையான வடுதலையை நோக்கி மக்களை அணிதிரட்டுவதும் இன்றியமையாததாகின்றது. இந்த வரலாற்றுக் கடமை இனியும் உதாசீனப்படுத்தப்படக்கூடாது. எனவே மனித உரிமைகளுக்கான போராட்டத்தை முதன்மைப்படுத்தக் கூடிய இத்தகைய புரட்சிகர, முற்போக்குப் பிரிவினர், தமது மக்களின் முழுமையான விடுதலை பற்றிய நேர்மையான அக்கறையுடன், தமது முடிவை மீள்பரிசீ லனைக்குட்படுத்த வேண்டியது அவசி யமும் அவசரமும் வாய்ந்த விடயமாகும்.

---

62ம் பக்கத் தொடர்ச்சி)

*இன்று இன்னும் சில குரல்களைக் கேட்கிறோம். " புலிகள் பற்றிய ஆய்வுகள் தேவைதானா---?. புலிகளின் தாக்குதல் களை மதிப்பிடுகையில் 'செய்திக்கதிர்' படிப்பது போன்று இருக்கிறது---! புலிகளின் நடத்தைக்கு அவர்களுக்கு அரசி யல் தெரியாதது காரணம் அல்ல---!! " இப்படியான பல ஆட்சேபனைகள் புலிகளை மதிப்பிடுவது தொடர்பாக எழுப்புப்படுகின்றன. அப்படியாயின் புலிகள் தொடர்பான மதிப்பீடு ஏன் இன்று தேவைப்படுகிறது.*

*இன்று எமது மண்ணில் ஒரு யுத்தம் கோரமாக நடந்து கொண்டு இருக்கிறது. சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவருமே இந்த யுத்தம் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை எடுத்தேயாக வேண்டும். நடப்புது ஒரு தேசிய விடுதலை யுத்தம் எனக்கருதி பேரினவாத்திற்கு எதிராக போரிடும் புலிகளைப் பலப்படுத்துவதா? அல்லது புலிகளின் 'பாசிசத்தை' தமிழ் மக்களின் முதல் எதிரியாக கருதி அதற்கு எதிராக போராடுவதாக கூறும் ஸ்ரீலங்கா அரசை பலப்புடுத்துவதா? இது உடனடியாக விடை காணப்பட வேண்டிய கேள்வியாகும். உண்மையில் இந்த ஆய்வுக் கூடாகத்தானே மூன்றாவது பாதை அல்லது மாற்றுத்தலைமை பற்றிய கருத்தே உதயமாகிறது. மூன்றாவது*

63ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் அறிமுகம்

# சிறிலங்கா – ஒரு தோல்வியுற்ற புரட்சி

– அரவிந்

Srilanka - A lost Revolution

ஆசிரியர்:- ரோகான் குணரத்ன

எமது சம காலத்தில் தென்னிலங்கையை உலுக்கியெடுத்த ஒரு போராட்டம் என்ற வகையில் யே.வி.பியின் போராட்டமானது அக்கறையுடன் கவனிக்கத்தக்கது. சிறிலங்கா அரசிற்கு எதிராக போராடுவது; பெரும்பாலும் குட்டிபூர்சுவா கிராமப்புற இளைஞர்களால் முன்னெடுக்கப்படுவது; ஆயுதப் போராட்டமானது பாசிச வடிவம் பெறுவது உட்பட பல அம்சங்களில் இப் போராட்டமானது தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் ஒப்பிடக்கூடிய பலதன்மைகளைக் கொண்டுள்ளது. இதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அக்கறையுடைய ஒவ்வொருவரும் ஜே. வி. பி. யின் போராட்டம் பற்றி விரிவாக பரிசீலிப்பதுடன் அதிலிருந்து முக்கிய படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதும் மிகவும் அவசியமானதாகும்.

இந்த நூல் ஜே.வி.பியின் போராட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு சம்பவங்கள் நபர்கள் பற்றிய தகவல்களின் ஆவணமாகக் கருதக் கூடியது

இதன் ஆசிரியர் இந்த நூலை எழுதியதற்கான காரணம் பற்றிக் குறிப்பிடுகையில் இது போன்ற அவலங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதே தனது நோக்கம் என்கிறார். இந்த வகையில் நடப்பு சமூக அமைப்பை காப்பாற்ற முனைபவராகவும்,ஆனால் அதில் உள்ள மோசமான குறைபாடுகளைக் களைவதற்காக சில சீர்திருத்தங்களை முன் மொழிபவராகவும் உள்ளார். இன்றுள்ள பிரச்சனைகளை இந்த சமூக அமைப்புக்குள்ளேயே சிற்சில சீர்திருத்தங்களை செய்வதன் மூலம் தீர்த்துவிட முடியும் எனவும் ஆனால் அரசியல் வாதிகளின் அக்கறையீனமும் சுய நலமிக்க குறுகிய கண்ணோட்டங்களுமே அவ்வாறு செய்யாமைக்கான காரணம் எனவும் வாதிடுகின்றார் .சமூகத்தில் காணப்படும் அவலங்கள் தொடர்பாக கண்டனங்களையும் அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மேற் கொள்ளும் போராட்டங்கள் தொடர்பாக அனுதாபத்துடனும் அணுகும் இவர் பிரச்சனைகளை ஒட்டு மொத்தமாக தார்மீகரீதியிலும் மனிதாபிமான அடிப்படையிலுமே பார்க்க முற்படுகிறார்.

அரசு,ஆளும் வர்க்கங்கள், அரசியற் கட்சிகள், ஏகாதிபத்தியங்கள் போன்றவை தொடர்பாக மிகவும் அப்பாவித்தனமான கண்ணோட்டங்களையே கொண்டுள்ளார். இன்றைய நெருக்கடிக்கான காரணங்களை ஏகாதிபத்தியங்கள், தரகுமுதலாளி வாக்கம் ஆகியவற்றின் சுரண்டலில் இனம் காண முடியாமல் போவது;அரசு,அரசியற் கட்சிகள் போன்றவற்றை நடுநிலையான அமைப்புகளாகவும், சமூகத்தின் பிரச்சனைகளை இம் முதலாளித்துவ நிறுவனங்கள் தீர்க்க முனையும் என்று பார்ப்பது ;போன்றவை இவரது பிரதான குறைபாடுகளாகும். உண்மையிலேயே ஒரு முதலாளித்துவ பத்திரிக்கையாளர் இந்த கண்ணோட்டங்களைக் கடந்து சமூகப்பிரச்சனைகளை அணுகுவாரா என்பது கேள்விக்குரியதே. ஆயினும் ஜே.வி.பி.யியின் போராட்டம் பற்றியும் அதனுடன் தொடர்புடைய அரசியற்



செயற்பாடுகள் பற்றியும் பல விரிவான தகவல்கள் இந்த நூலில் விரவிக்கிடக்கின்றன. இவை பெரும்பாலும் பொது மக்களாலும்,தமிழ்மக்களில் மிகவும் முன்னேறிய பிரிவினராலும் கூட பரவலாக அறியப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நூலில் வரும் தமிழ் தரப்புடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் மிகவும் திருத்தமானவையல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியில் பார்க்கையில் ஜே.வி.பியினா் பற்றிய தகவல்களின் சரியான தன்மை பற்றிய சந்தேகம் எழவே செய்கின்றது. ஆயினும் இந்த தகவல்களில் இருக்கக் கூடிய தவறுகளைக் கருத்திற்கெடுத்துக் கொண்டாலும் கூட இந்த நூல் ஒரு தீவிரமான வாசிப்பிற்கும் பரிசீலிப்பிற்கும் உரிய தகுதியை கொண்டிருக்கவே செய்கிறது.

அண்மைக் காலத்தில் தென்னிலங்கையிலுள்ள பத்திரிக்கையாளர்கள் ஜே.ஆரின் ஆட்சி பற்றி தீவிரமான விமர்சனங்களை முன் வைத்து வருகின்றார்கள். இன்றைய நெருக்கடிகள் பலவற்றிக்கும் ஜே. ஆரின் தவறான அணுகுமுறைகளே காரணம் என்ற வகையில் இவை அமைந்துள்ளன. இதே பத்திரிக்கையாளர்கள் முன்பு ஜே.ஆர் ஆட்சியிலுருந்தபோது இத்தகைய விமர்சனங்களை முன்வைக்கவில்லை என்பதுடன் தற்போதைய பிரேமதாசவின் ஆட்சிக்கு எதிரான விமர்சனங்களை நேரடியாக வைப்பதையும் தவிர்த்தே வருகின்றார்கள். முதலாளித்துவ சனநாயகத்தின் கீழ் சுதந்திரமான பத்திரிகை என்பது ஒரு அத்தியாவசியமான கூறாக கருதப்படுகிறது. நடப்பிலுள்ள ஆட்சியை விமர்சிக்காமல் கடந்தகால ஆட்சிகள் பற்றி விமர்சிப்பது என்பது பத்திரிக்கைத் துறையினர் தமது கடமையை தவறுவதாகவே அர்த்தப்படும். அண்மையில் ஒரு பத்திரிகையாளர் இது பற்றி குறிப்பிடுகையில், இன்று நாட்டில் தோன்றியுள்ள நிலமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் தாம் நேரடியான விமர்சனங்களை தமது சொந்த பாதுகாப்பு கருதி தவிர்த்தே வருவதாகவும், ஆயினும் தமது ஆக்கங்களில் வரிகளை மட்டுமே பார்க்காமல் வரிகளுக்கு இடையிலும் படிக்க முனைந்தால் பல செய்திகளை வாசகர்கள் பெற்றுக்கொள்ள முடியுமென்று குறிப்பிட்டிருந்தார். அந்த வகையில் இக்கால பாசிச அரசின் செயற்பாடுகளை விமர்சித்துக் கொண்டு, ஒரு நூலை வெளிக்கொணர்வதிலுள்ள சிரமங்களையும் கருத்திற் கொண்டு இந்த நூலை அவ்வாறு படிக்க முனைந்தால் இன்னும் அதிக செய்திகளை தரவே செய்கிறது.

இந்த நூலை நான் இந்த பகுதிக்காக தேர்ந்தெடுத்ததற்கான காரணமே ஜே.வி.பியின் போராட்டம் தொடர்பான இந்த நூல் எழுப்பும் பல கோட்பாட்டு ரீதியான பிரச்சனைகள்,தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் முக்கியத்துவம் பெறுவதனாலேயாகும். ஆகவே இந்த கட்டுரையில் குறிப்பிட்ட நூலிலுள்ள விடயங்களை அறிமுகப்படுத்துவது என்பதிலும் பார்க்க இதில் எழுப்பப்படும் கோட்பாட்டு ரீதியான விடயங்களில் கவனத்தை குவித்து, அந்த தேடலினூடாக எமது போராட்டம் பற்றிய சில புதிய புரிதல்களை அடைய முடியுமா என்பதே எனது அக்கறைக்குரியதாகிறது.

**********************

ஜே.வி.பி. ஆனது ஆரம்பத்திலிருந்தே ஒரு இளைஞர் அமைப்பாகவே இருந்து வந்துள்ளது. பிற்காலத்திலும் கூட அதன் இராணுவ அமைப்பிற்கு (D.J.V)அடுத்த படியாக பலமான அமைப்பாக அதன் மாணவர் அமைப்பே இருந்தது. யே.வி.பி.யின் தலைமை கூட இளைஞர்களால் ஆனதே. தலைமையில் 90% ஆனவர்கள் பல்கலைக்கழக பட்டதாரிகள் அல்லது பட்டப்படிப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைநடுவில் விட்டவர்கள் அல்லது ஆசிரியர்களாக இருந்தவர்கள். 1971இல் கிளர்ச்சியில் கைதானவர்களைப் பற்றி A.C. அலெக்சு என்பவர் தமது அறிக்கையில் குறிப்பிடுகையில் கைதான 10,192 சந்தேகநபர்களுள் 92.8%ஆனோர் கிராமப்புறத்தைச் சேர்ந்த சிங்கள பௌத்தர்களாக இருந்தார்கள் எனவும்,இவர்களது வயது 16-32 ஆக இருந்தது எனவும்,இவர்களுள் 77%ஆனோரின் வயது 17-26 எனவும்,அங்கத்தவரின் சராசரி வயது 20 எனவும் குறிப்பிடுகிறார்

இந்த தகவல்களை குறிப்பிடும் ஆசிரியர் இவ்வளவு பெருந்தொகையில் கிராமப்புற இளைஞர்களை அரசிற்கு எதிராக போராடுமாறு நிர்ப்பந்தித்த சமூக-பொருளாதார நிலைமைகள் எவையென்பதை ஆராய முனைகிறார் இதில் இவர் தரும் சமூக-பொருளாதார புள்ளிவிபரங்கள் ஆழ்ந்து கவனிக்கத்தக்கவை. பொதுவாகவே முதலாளித்துவ சமூக அமைப்பு பற்றி முதலாளித்துவ அறிஞர்களே முன்வைக்கும் புள்ளி விபரங்கள் ஒரு விதத்தில் ஒப்புதல் வாக்கு மூலங்களே. ஆளும் வர்க்கங்கள் கூட இவற்றை மறுக்க முடியாது என்பதால் முக்கியத்துவம் வாய்ந்தவை இவை.

இலங்கையில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை விளக்குகையில் நாட்டின் வருமானது எவ்வாறு பங்கிடப்படுகிறது எனக் காட்டுகிறார். சனத்தொகையில் 10%ஆனோர் நாட்டின் செல்வத்தில் 60%ஐ பகிர்ந்து கொள்கிறார்கள். இன்னோர் 20%ஆனோர் செல்வத்தில் 30%ஐ பகிர்ந்து கொள்கிறார்கள். மிகுதி 70%ஆனோர் நாட்டின் செல்வத்தில் 10%ஐ மட்டுமே பகிர்ந்து கொள்கிறார்கள் கொழும்பிலுள்ள மேட்டுக்குடி குடும்பம் ஒன்று தனது ஒருநாள் இரவுச் சாப்பாட்டிற்காக மட்டுமே கொழும்பிலுள்ள உல்லாச கோட்டலில் 700ரூபாயை செலவிடுகிறது.

ஆனால் சனத்தொகையில் 50%த்தினர் 700ரூபாவிற்கும் குறைவான மாத வருமானத்தையே பெறுகிறார்கள். இலங்கை சுதந்திர மடைந்த 40 வருடங்களின் பின்பும் 70%த்தினர் வீடுகளுக்கு மின்சாரம் கிடையாது. 40%மக்களுக்கு ஒழுங்கான மலசலகூட வசதியில்லை.40% இற்கும் அதிகமானோர் போசாக்கின்மையால் வாடுகிறார்கள். 42%மானோர் வயிற்றுப்போக்கால் சதா தொல்லைப்படுகிறார்கள்.

அரசின் திறந்த பொருளாதார கொள்கையானது கிராமப்புற சுய தொழில்களை, கைப்பணித் தொழில்களை அழித்து வருகிறது. கைத்தறி நெசவு பாதிக்கப்பட்டது இதற்கு சிறந்த உதாரணமாகும். கிழங்கு, வெங்காயம், மிளகாய் இறக்குமதி காரணமாக இவற்றைப் பயிரிடுவோர் பாதிக்கப்படுகிறார்கள் இதனால் விவசாயத்தில் ஈடுபடுவோர் எண்ணிக்கை குறைகிறது. தொழில் மயமாதலும், இயந்திரமயமாதலும் குறைந்த எண்ணிக்கையிலேயே உழைப்புச் சக்தியை வேண்டி நிற்கிறது. இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியமும் குறைவாகவே உள்ளன. பெருந்தொகையான குடும்பங்கள் தொடர்ந்தும் கடனிலேயே மூழ்குகின்றன.

1980 களின் பிற்பகுதியில் இலங்கையில் 12 இலட்சம் இளைஞர்கள் வேலையற்று இருந்தார்கள். இன்னும் 5 இலட்சம் பேர் அரைகுறை அல்லது தற்காலிக வேலைகளில் இருந்தார்கள். இது இளைஞர் தொகையில் 49%மும் இலங்கையின் மொத்த உழைப்பு சக்தியில் 26%ஆகும். வேலையற்றோரில் 11%ஆனோர் வேலைக்காக 4வருடங்கள் காத்திருக்க நேரிடுகிறது. 50%மானோர் 1வருடத்திற்கு மேல் காத்திருக்க நேரிடுகிறது. 4வருடங்கள் காத்திருப்போரில் 31%இனர் பட்டதாரிகள்.



அரசு சனத்தொகையில் 90% ஆனோர் கல்வியறிவு பெற்றவர்கள் என பெருமை பாராட்டினாலும் யுனி செப் (U.N.I.C.E.F ) நிறுவனத்தின் ஆய்வொற்றின்படி இலங்கையின் சனத்தொகையில் 14% ஆனோருக்கு அரிச்சுவடியே தெரியாது. 46%இனர் 5ம் வகுப்புக்கு மேல் படிக்காதவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தமது உரிமைகளுக்காக போராட முற்பட்ட போது தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள். இவர்கள் மேல் குண்டர்களின் தாக்குதல் கட்டவிழ்தது விடப்பட்டன. பல்கலைக் கழகத்தினுள் பொலிசு நிலையங்கள் திறக்கப்பட்டன. 1982 இல் மாணவர் அவைகள் சட்ட விரோதமாக்கப்பட்டன.1984 இல் மாணவர்கள் தமது இரகசிய சங்கங்களை அமைத்தார்கள் மாணவ கிளர்ச்சிகள் அதிகரிக்கும் போது பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. மிகுந்த சிரமங்களுககும், துன்பங்களுக்கும் மத்தியில் பல்கலைக்கழகம் புகுந்த கிராமப்புற வறிய மாணவர்கள் வெறுங்கையுடன் வீடு திரும்ப விரும்பவில்லை. யே.வி.பி.யின் அணிகளை இவர்கள் பெருக்கச் செய்தார்கள்.

76%ஆன இளைஞர்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர் குறைந்த வருமானமுடைய பெரிய குடும்பங்களை (8-12 பிள்ளைகள் கொண்டவை) சார்ந்த வர்கள். வயோதிபப் பெற்றோருடன் குடும்பத்தின் சுமையை பகிர்ந்து கொள்ளும் நிர்ப்பந்தங்கள் இளையவர் களுக்கு ஏற்படுகிறது. உயர் கல்வி வாய்ப்பில்லாத, ஆங்கில அறிவில்லாத கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளும் மறுக்கப்படுகின்றன. ஆளும் கட்சியின் ஆதரவாளர்களுக்கே வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இளைஞர்களின் கல்விக்கும்,வேலைவாயப்புகளிற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. 1977ல் யூ.என்.பி. அரசாங்கம் வேலை வாய்ப்பிற்கான அட்டையை விற்பனை செய்து 10 லட்சம் ரூபா திரட்டிக் கொண்டது. ஆனால் ஒரு வேலையும் இதன் மூலம் வழங்கப்படவில்லை. பின்பு ஒவ்வொரு எம். பி.மூலமாக 1000 வேலை வங்கி விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன. சில எம்.பி.க்கள் இவற்றை விற்கவும் செய்தார்கள். இவற்றின் மூலம் நாடு முழுவதிலும் ஆக 600 வேலைகள் மட்டுமே வழங்கப்பட்டன.

தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை மறுப்பதிலும், அவர்களது வாழ்கைத் தரத்தை தொடர்ச்சியாக சீரழிப்பதிலும் யூ.என்.பி. அரசு தீவிரமாக இருந்தது. 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 70 ஆயிரம் பேரை வேலையிலிருந்து நீக்கியது. சுதந்திர வர்த்தக வலையத்தில் வேலை செய்யும் 4500 பேரில் பெரும்பாலானோர் பெண்கள். இவர்களுக்கு தொழிற்சங்க உரிமை கிடையாது. ஊதியம், வேலைநிலைமைகள்,வாழ்கிகைத்தரம் போன்றவை நாட்டின் சராசரி நிலைமைகளை விட குறைவாகவே உள்ளது. இது ஒரு அடிமைப் பிரதேசமாகவே ஆக்கப்பட்டுள்ளது.

இது தான் யதார்த்த நிலைமை. நாட்டின் பெரும்பகுதி மக்கள் இப்படித்தான் வறுமைக்குள் சிக்கி உளன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொதுசன தொடர்பு சாதனங்கள் இந்த யதார்தத்திற்கு முற்றிலும் மாறாக ஒரு கற்பனா உலகத்தை சித்தரிக்க முனைகின்றன. அவுசுற்ரேலியாவின் ஆப்பிள்,பட்டர், chese, கேக்,கொக்கோ கோலா, ஆடம்பர குளியலறைச் சாதனங்கள். Benz கார்கள்,நீச்சல் தடாகங்கள் போன்றவற்றை தொலைக்காட்சி காட்டுகிறது. இவற்றை எத்தனை சதவீதமானோர் பயன்படுத்த முடியும்? யாரை இத்தொலைதொடர்பு சாதனங்கள் பிரதி நிதித்துவப்படுத்த முனைகின்றன.? ஏற்கனவே நாட்டிலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பவர் மத்தியில் இவை எப்படிப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிப்புக்களை ஏற்படுத்தும்?

சமுதாயத்தில் எல்லா விதத்திலும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்துவிட்ட இளைஞர்களில் ஒரு பகுதியினர் விரக்தியுற்று தம்மைத் தாமே அழித்துக் கொள்கிறார்கள். தற்கொலைகள் பெருகுகின்றன. தமது கவலைகள் மறக்க போதையினுள் சரண்புகுபவர் பலர். இன்று நாளொன்றுக்கு 2,40,000 ரூபா பெறுமதியான 12கிலோ போதைப் பொருள் இலங்கையில் பாவிக்கப்படுகிறது. போதைப் பொருள் பாவிப்பவர்களுள் 55,000 பேர் மாணவர்கள். போதைப் பொருள் பாவனையுடன் ஆண்/பெண் விபச்சாரமும் கைகோர்க்கிறது. பாடசாலை மாணவர்கள் இதில் ஈடுபடுகிறார்கள். இந்த பிரச்சனை இப்போது நெருக்கடியான கட்டத்தை எட்டிவிட்டது. பாதிக்கப்பட்ட இன்னோர் பகுதியினர் இந்த சமூக அமைப்பையே மாற்றியமைக்க வேண்டும் என்ற தீவிர உணர்ச்சிக்குள்ளானார்கள். இவர்களை அணிதிரட்டிக் கொள்வதில் ஜே.வி பி. வெற்றிகரமாக செயற்பட்டார்கள்.

சமூகத்தின் மோசமான ஏற்றத் தாழ்வுகளை தெளிவாக படம்பிடித்துக் காட்டுவதிலும், அதற்கான காரணங்களை விரிவாக விளக்குவதிலும், மாற்றத்திற்கான வழிமுறைகளை முன்மொழிவதிலும் ஜே.வி.பி மிகவும் திறம்பட செயலாற்றியது. விஜயவீராவின் பேச்சுக்கள் உணர்ச்சிகளைத் தூண்டுவதாகவும் அவரது எழுத்துக்கள் சிந்தனையை கிளறுவனவாகவும் இருந்தன. இவை இளைஞர்களை கவர்ந்திழுத்து பெருமளவில் அமைப்பினுள் உள்வாங்க வழிவகுத்தன. மாறிவரும் புறநிலைமைகளிற்கு ஏற்ப தமது கோசங்களை மிகவும் இலாவகமாக மாற்றி கொண்டார்கள். வர்க்கப் போராட்டத்தின் மூலம் சோசலிசத்தை அமைப்பதாக ஆரம்பத்தில் பிரச்சாரம் செய்தார்கள். 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது சிங்கள மக்களது தேசிய உணர்வு மோசமாகப் பாதிக்கப்பட்டது. அவர்கள் தன்னியல்பாகவே வீதிகளில் இறங்கினார்கள். அதற்கேற்ப ஜே.வி.பி. தமது கோசங்களையும் மாற்றிக் கொண்டார்கள். தேசபக்த யுத்தத்தின் மூலம் சோசலிசத்தை கட்டுவது என்று இது மாறியது. தமது பெயரைக் கூட பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேசபக்த மக்கள் இயக்கம் (D.J.V) என்றே பயன்படுத்தினார்கள். பிற் காலத்தில் இவர்கள் முன்வைத்த அரசியல் திட்டம் சோசலிச பொருளாதாரம் பற்றி எதுவும் கூறாமல் தேசிய தேவைக்கேற்ப பொருளாதாரம் பற்றியே பேசியது.

மிகவும் நுட்பமான வகையில் தமது பிரச்சாரத்தை முன்னெடுத்த இவர்கள் பல்வேறு அம்சங்களையும் சர்ந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு பயன்படுத்தினார்கள். 1940 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா (இலங்கை தேசிய காங்கிரசில்) ஆற்றிய உரை ஒன்றில் "இலங்கை இந்தியாவுடன் இணைந்த சமஷ்டியாக இருப்பதே விரும்பத்தக்கது" என குறிப்பிட்டிருந்தார். 47 வருடங்கள் கழிந்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்பு சிங்கள மக்களின் தேசிய உணர்வு பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இவரது உரையை சிங்கள மக்கள் முன்வைத்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஜே.ஆர் சாதிக்க முனைவது இதைத்தான் என்று பிரச்சாரம் செய்தார்கள். மாகாணசபை, வட-கிழக்கு இணைப்பு அனைத்தையுமே நாட்டை துண்டாடும் முயற்சியென காட்டமுனைந்தார்கள். தமிழர் அமைப்புக்களை இந்தியாவின் ஐந்தாம் படைகள் என சித்தரித்தார்கள். இலங்கையின் வான்பரப்பில் இந்திய விமானம் அத்துமீறியமை, இந்திய-இலங்கை ஒப்பந்தத்திணிப்பு, இந்தியப்படைகள் வடக்கு -கிழக்கில் தரை இறங்கியமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்த சிங்கள மக்களின்



விஜயவீரவின் தனிப்பட்ட நியமனங்களாகவே இருந்தன. மக்களுடனான உறவிலும் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் ஒருவித அதிகார உறவு இருந்தது. பிற்காலத்தில் இதுவே மக்களிடம் இருந்து இவர்களை அதிகம் அந்நியப்படுத்தும் காரணியாயிற்று.

1971ம் ஆண்டு கிளர்ச்சியின் போது கைதான ஜே.வி.பி. அங்கத்தவர்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்கள். 1977 பெப்ரவரியில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்காக பாராளுமன்றத்தைக் கலைத்த போது அதுவரை காலமும் அமுலிலிருந்து வந்த அவசரகாலச் சட்டமும் காலாவதியானது. இதனால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் விடுதலையானார்கள். ஜே.வி.பி. மீதான தடையும் நீங்கியது. 1977 மேயில் நடைபெற்ற தேர்தலில் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்த பின்பே விஜயவீர சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1977இல் தன்னை மீண்டும் புனரமைத்து செயற்பட முனைந்த ஜே.வி.பி.யானது ஆரம்பத்தில் யூ.என்.பி. அரசாங்கத்துடன் சுமுகமான உறவுகளையே கடைப்பிடித்து வந்தது. பொதுவாகவே முதலாளித்துவ அமைப்பை இவர்கள் விமர்சித்தாலும் பல சந்தர்ப்பங்களில் இவர்கள் யூ.என்.பி.யை பயன்படுத்தும் வகையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியையும், இடதுசாரிகளையும் தீவிரமாக விமர்சித்து வந்தார்கள். இதேநோக்கில் சில சந்தர்ப்பங்களில் யூ.என்.பி.யுடன் இன்னும் நெருக்கமாகவும் செயற்பட்டார்கள். 1979இல் (ஆனமடுவ) இடைத்தேர்தலின் போது ஜே.வி.பி.யின் தலைமையைச் சேர்ந்த உபதிச கமநாயக, கோமலன்ச அமரசிங்க, மகிந்த பத்திரன ஆகியோர் யூ.என்.பி.யின் வீரசிங்க மல்லிமாராய்ச்சி, அனுராபக்டியன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்கள். இதைத் தொடர்ந்து அரசாங்கம் ஜே.வி.பி.க்கு பாதுகாப்பு, வாகனம், பணம் கொடுத்து அவர்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியது. அடுத்து வந்த "தெவிநுவர" இடைத்தேர்தலிலும் இது நடைபெற்றது. இங்கு சுதந்திரக் கட்சி வேட்பாளரும் முன்னாள் ஜே.வி.பி. தலைவர்களுள் ஒருவருமான மகிந்த விஜேசேகர பெற்றிருக்கக் கூடிய வாக்குகளின் ஒருபகுதியை பிரியச் செய்வதன் மூலம் யூ.என்.பி. யின் வெற்றிக்கு ஜே.வி.பி. உதவியது.

ஜே.ஆர் தனது அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டும் விதத்தில் சிறிமா, பிலிக்சு ஆகியோரது குடியுரிமைகளை பறிக்க முனைந்த போதும் இதேவிதமான செயற்பாடுகளை ஜே.வி.பி. முன்னெடுத்தது. குடியுரிமை பறிப்பதற்கு சில காலத்திற்கு முன்பே ஜே.வி.பி.பல கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி இவ்விருவருக்கும் எதிரான பிரச்சாரங்களைத் தீவிரப்படுத்தியிருந்தது. இதே காலகட்டத்தில் சுதந்திரக் கட்சி நடத்திய கூட்டங்களை சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் போல உடையணிந்து சென்ற ஜே.வி.பி.யினர் குழப்பவும் செய்தனர்.

இங்கு நாம் அரசாங்கத்தைப் பயன்படுத்துவது - அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுவது எனும் பிரச்சனையில் முன்னுதாரணங்களை காண்கிறோம். நாட்டில் சனநாயக விரோத போக்கு தோன்றும் போது அவற்றைக் கண்டிக்காமல் தமக்கு வாய்ப்பானதாக தோன்றும் போது அவற்றை ஊக்குவிப்பவர்கள் பிற்காலத்தில் இதே சனநாயக விரோத போக்குகளிற்கு பலியாவதைக் காண்கிறோம். பொதுவாக கொள்கைவகைப்பட்ட தந்திரோபாயத்திற்கும் சந்தர்ப்பவாதத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை வரையறுத்துக் கொள்வது அவசியமானது. இந்த வகைப்பட்ட ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் தந்திரோபாயம் என்பதிலும் பார்க்க சந்தர்ப்பவாதம் என்பதே சரியானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய உணர்வுகளை தட்டியெழுப்பி, தேவைக்கேற்ப இனவாதத்தையும் பயன்படுத்தி ஒரு பெரும் எழுச்சியை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடிந்தது. எழுச்சியுற்ற மக்கள் தலைமையை ஜே.வி.பி தனது கையிலெடுத்துக்கொள்ள தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியது.

தமது அங்கத்தவர்களை அரசியல் மயப்படுத்துவதில் ஜே .வி .பியின் 5வகுப்புக்களும், கல்வி பாசறைகளும் அதிகம் பங்காற்றின. இந்த வகுப்புக்கள் காலத்திற்கு காலம் மாற்றி யமைக்கப்பட்டன. 1968இல் தயாரிக் கப்பட்ட 5வகுப்புக்களுள் ஒன்று இந்திய விசுத்தரிப்பு வாதம் பற்றிய தாக இருந்தது. இதில் மலையக மக்களை இந்தியாவின் ஐந்தாம் படை என்றனர். 1977 இலும் 1983 இலும் திருத்தப்பட்ட வகுப்புக்களில் இந்தப் பிரச்சனை இடம்பெறவில்லை 1987இல் தயாரிக்கப்பட்ட வகுப்புக்களுள் "இந்திய ஏகாதிபத்தியத்திலிருந்து தாய் மண்ணை பாதுகாப்போம்" என்ற வகுப்பும் இடம் பெற்றது. இந்த வகுப்புக்களில் ஆங்காங்கே இனவாதக் கண்ணோட்டம் ஊடுருவி இருக்கவே செய்தது. பொதுவாக இலங்கையின் இடதுசாரிகள் கூட இனவாத கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டவர்களாக இருக்கவில்லை என்பதை ஜே.வி.பியின் வரலாறு மீண்டும் நிரூபிக்கிறது.

**********************

ஜே.வி.பியானது 1968இல் தொடங்கப்பட்டது. 1971 கிளர்ச்சியின் தோல்வியையடுத்து அதன் தலைமையும் அங்கத்தவர்களும் கைதானார்கள். 1977 தேர்தலில் யு.என்.பி ஆட்சிக்கு வந்தபோது விஜேயவீரா உட்பட அனைவரும் விடுதலையானார்கள். மீண்டும் ஜே.வி.பி. பகிரங்கமாக செயற்பட முனைந்தபோது 1971 இல் இருந்து அதன் தலைமையின் அங்கத்தவாகளுள் 5% மானவர்கள் மட்டுமே ஜே.வி.பியில் தொடர்ந்தும் இயங்கினார்கள். ஏனைய பெரும்பான்மையோர் ஒதுங்கிக்கொள் ளலானார்கள். இன்று பிரேமதாசாவின் அரசாங்கத்தினால் அமுல் செய்யப்படும் "ஜனசக்தி" திட்டத்தின் ஆணையாளர் சுசில்சிறிவர்த்தன, பேராசிரியர் உயங்கொட, "ராலய" ஆசிரியர் பொடிஅத்துல உட்பட இப்படிப்பட்ட முக்கியமானவர்களின் பட்டியல் மிகவும் நீண்டது. இவர்களுள் பலர் இன்று சமூகத்தில் முக்கிய பிரமுகர்களாக இருக்கிறார்கள். 1977 இன் பின்பு ஜே.வி.பி யானது புதியதொரு தலைமுறையின் மத்தியிலிருந்தே தனது அமைப்பைக்கட்டியது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்திலும் இந்தப்போக்கு அவதானிக்கப்பட வேண்டியதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கிக் கொண்டவர்களின் எண்ணிக்கை இன்றுவரை இந்தப் போராட்டத்துடன் ஏதோ ஒருவகையில் தொடர்புபட்டு செயற்படுவோரின் எண்ணிக்கையை விட பன்மடங்கு அதிகமானது. எமது போராட்டத்தில் இனிவரும் புரட்சிகர அமைப்புக்கள்கூட யாரை அணிதிரட்டுவதை தமது இலக்காக கொள்ளப் போகிறார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

தனது ஆரம்பகாலம் தொடக்கம் ஜே.வி.பி.ஆனது சோசலிசம், ஜனநாயகம், மக்கள் போராட்டம் பற்றியெல்லாம் பேசி வந்த போதிலும் அதன் தாபன செயற்பாடுகளில் சனநாயகம் என்பது இருக்கவேயில்லை. அதன் தலைமை அங்கங்கள் அதன் அங்கத்தவர்களால் சனநாயகபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டவையாக அல்லாமல் விஜயவீரவின் தனிப்பட்ட நியமனங்களாகவே இருந்தன. மத்தியகுழு, பொலிட்பீரோ அங்கத்தவர்கள் மட்டுமன்றி மாவட்ட அமைப்பாளர்களும்



யூ.என்.பி. உடனான ஜே.வி.பி.யின் சுமுகமான உறவு நீண்ட காலம் நீடிக்கவில்லை. உள்ளூராட்சி தேர்தலில் பங்கெடுக்க ஜே.வி.பி.முனைந்த போது தேர்தல் ஆணையாளர் ஜே.வி.பி.யை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்ய மறுத்தார். ஜே.வி.பி.ஆனது மக்கள் மத்தியில் மிகப் பரந்த அளவில் வேலை செய்யத் தொடங்கியதும், அவர்களுக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் செல்வாக்கின் வளர்ச்சியைக் கண்டு பயப்பட்ட யூ.என்.பி. உள்ளூர் அரசியல்வாதிகளும், இவர்களின் தூண்டுதலின் பேரில் உள்ளூர் பொலிசாரும் ஜே.வி.பி.யின் மீது ஆத்திரமூட்டும் விதத்தில் அடிக்கடி தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர். ஜே.வி.பி.யின் கட்சி ஊழியர்கள் அடிக்கடி பொலிசாரால் தாக்கப்பட்டனர். அரச வாகனங்களில் வந்தவர்களால் கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டன. ஊழியர்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். ஆதரவாளர்கள் பொலிசாரால் மிரட்டப்பட்டார்கள். கட்சி சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள், பத்திரிகை விற்பவர்கள் கைது செய்யப்பட்டார்கள். மறியல் போராட்டம் நடத்தியவர்கள் கைதானார்கள். கூட்டம் நடத்த ஒலிபெருக்கி அனுமதி பெற பொலீசு நிலையம் சென்ற அமைப்பாளர்கள் தாக்கப்பட்டார்கள். அரசியல் கலந்துரையாடல் நடத்தியவர்கள் கைதானார்கள். சுவரொட்டிகள், பத்திரிகைகள் கிழித்தெறியப்பட்டன. கட்சி அலுவலகங்கள் அடிக்கடி சோதனையிடப்பட்டன. 1979இலேயே தொடங்கிவிட்ட இவ்விதமான தொல்லைகள் 1980,81,82களில் சகிக்க முடியாத அளவிற்கு அதிகரித்துச் சென்றன.

அவசரகாலச்சட்டங்களை யூ.என்.பி. அரசாங்கம் தனது கட்சியின் நலன்களிற்கு உகந்த முறையில் பயன்படுத்தி வந்தது. ஜே.வி.பி.யின் சனநாயக பூர்வமான அரசியல் முன்னெடுப்புகள் ஒவ்வொன்றையும் தடுப்பதற்கு அவசரகாலச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. ஜே.வி.பி.யின் பொதுக்கூட்டங்களிற்கு அனுமதி மறுக்கப்பட்ட போதே யூ.என்.பி. தாராளமாக பொதுக்கூட்டங்களை நடத்தியது. பற்பல சந்தர்ப்பங்களில் ஜே.வி.பி.யினர் மீது குண்டர்களை ஏவிவிட்டு யூ.என்.பி. அரசியல்வாதிகளும், பொலிசாரும் வேடிக்கை பார்த்தனர். இந்த விதமான துன்புறுத்தல்கள் பற்றி ஜே.வி.பி.யானது பல தடவைகள் அரசிற்கு முறையிட்டது. ஆனால் எந்தவிதமான பலனும் விளையவில்லை. இப்படிப்பட்ட ஒரு சனநாயகமற்ற சூழ்நிலையில் ஒரு அரசியற்கட்சி என்றவகையில் ஜே.வி.பி.யானது தன்னை ஒரு அமைப்பாக காப்பாற்ற வேண்டுமாயின் அது தன்னை தற்காத்துக்கொள்வதற்காக ஆயுதமயப்படுத்திக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ்வாருக ஜே.வி.பி.யானது ஆயுதமயப்படுவதற்கான விதைகளை யூ.என்.பி.அரசாங்கமே தூவியது. இந்த நிலையில் ஜே.வி.பி.யின் தனிநபர்களும், சிறுகுழுக்களும் தன்னியல்பாகவே இரகசியமாக ஆயுதமயப்படலானார்கள். ஜே.வி.பி.யின் தலைமை இதனை கண்டு கொள்ளாமல் இருந்தது.

ஜே.வி.பி.யினர் பற்றி அவதூறு பரப்புவதில் பத்திரிகைகள் தமது பங்கை ஆற்றத் தவறவில்லை. அரச ஆதரவு பத்திரிகைகள் மட்டுமல்ல அரச விரோதப் பத்திரிகைகளும் கூட ஜே.வி.பி.ஆயுதமயப்படுவதாக குற்றம் சாட்டின. பொதுவாகவே 3ம் உலகநாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் லட்சணம் இப்படித்தான் இருக்கிறது.

1982இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. சார்பாக போட்டியிட்ட விஜயவீர மூன்றுவதாக வந்தார். இதன் மூலம் இலங்கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3வது அரசியல் சக்தி தாமே எனவும் யூ.என்.பி.,சுதந்திரக்கட்சி ஆகியவற்றிற்கு மாற்ருன ஒரே இடதுசாரி சக்தி தாமே எனவும் ஜே.வி.பி.யினர் உரிமை பாராட்ட முடிந்தது. இந்த நிலையில் மிகவும் நம்பிக்கையுடன் 1982இல் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலை சந்திக்க தயாரானார்கள். ஆனால் ஜே.ஆர் 'நக்சலைட்டு' புரளியைக் கிளப்பினார். சுதந்திரக் கட்சியை வன்முறையில் நாட்டம் கொண்ட "நக்சலைட்டுகள்" கட்டுப்படுத்துவதாகவும் இவர்கள் இராணுவத்தை கையில் எடுத்துக்கொண்டு பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட திட்டமிட்டு இருப்பதாகவும் இந்த அனர்த்தத்தை தவிர்ப்பதற்காக பொதுத் தேர்தலுக்குப் பதிலாக சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவதாகவும் அறிவித்தார். இந்த சர்வசன வாக்கெடுப்பும் எதிர்க் கட்சிகள் மீது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்ட நிலையிலேயே நடாத்தப்பட்டது. பல தில்லுமுல்லுகளைச் செய்து யூ.என்.பி. இந்த சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

இந்த சர்வசன வாக்கெடுப்பு பற்றி ஆசிரியர் தனது கருத்தைக் கூறுகையில் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பொதுத் தேர்தலானது நடக்காமல் விடப்பட்டதனால் புதிதாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்த ஒரு புதிய தலைமுறைக்கு அவர்களது சனனாயக உரிமைகள் மறுக்கப்பட்டதற்கு சமமாகும் என்றும் இதன் மூலம் அந்த தலைமுறையானது நடப்பிலுள்ள ஆட்சியை மாற்றுவதற்கு வேறுவழிகளைத் தேடுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டதாகவும் குறிப்பிடுகிருர். "நக்சலைட்டு" புரளியில் அரசு தலைவர் உளவுப்படையால் தவருக வழிநடத்தப்பட்டாரா அல்லது ஜே.ஆர். பொதுத் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு இப்படிப்பட்ட ஒரு சாக்குப்போக்கை கண்டுபிடித்தாரோ தெரியவில்லை என்கிருர். 1989இல் இவ்வாசிரியர் ஜே.ஆரை இது தொடர்பாக பேட்டி கண்ட போது, சர்வசன வாக்கெடுப்பு நடத்தியது ஒரு தவருன செயல் என்றே தற்போது தான் கருதுவதாக ஜே.ஆர். கூறியதாகக் குறிப்பிடுகின்ருர். சனனாயக பூர்வமான வழிகளில் செயற்படுவதில் ஜே.வி.பி.யினர் முனைப்பாக இருந்த போது அவர்களுக்கு அடுத்தடுத்து தொல்லை கொடுத்த யூ.என்.பி. அரசாங்கமானது சர்வசனவாக்கெடுப்பின் மூலம் வருங்காலத்திலாவது பாராளுமன்றத்தில் சில ஆசனங்களையாவது பெறலாம் என்ற நம்பிக்கையை சிதறடித்தது. இதன் மூலம் எதிர் காலத்தில் ஜே.வி.பி.மேற்கொள்ள இருக்கும் பல நடவடிக்கைகளை நோக்கி ஜே.வி.பி.யை படிப்படியாகத் தள்ளியது.

1983 இனக்கலவரம் என்பது யூ.என்.பி.யினால் நன்கு திட்டமிடப்பட்டு இனவாதிகள், குண்டர்கள், அரசபடைகள் மூலம் நடத்தி முடிக்கப்பட்ட இனப்படுகொலைகள் என்பது அனைவரும் அறிந்ததே. இவ்வினப்படுகொலைகள் அதன் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த போது அதனைக் கட்டுப்படுத்த முடியாத ஜே.ஆர். எல்லே குணவன்சதேரோ போன்ற இனவாத சக்திகளின் கோரிக்கைகளிற்கு கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. "சிங்கள மக்களின் இயல்பான உணர்வின் வெளிப்பாடு இது" என்ற அறிக்கை விட்ட ஜே.ஆர். 6வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றி த.வி.கூ.ஐ பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றி தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை சட்டவாக்கும் மைய அமைப்பான பாராளுமன்றத்தில் இல்லாமல் செய்வதன் மூலம் சிங்கள பேரினவாதிகளை திருப்தி படுத்தினார்.

இதே காலகட்டத்தில் வேருெரு கதையும் புனையப்பட்டது. பொலீசு உயாதிகாரிகளான ஐ.ஜி.பி.,டி.ஐ.ஜி. ஆகியோர் ஜே.ஆர்.ஐ சந்தித்து தமக்கு கிடைத்த இரகசிய தகவல் என்று பின்வரும் விபரங்களைத் தெரிவித்தனர்.



இடதுசாரிகள் ஆட்சியைக்கைப்பற்றுவதற்காக தீட்டிய விரிவான திட்டத்தின் வெளிப்பாடே இந்த கலவரம் என்றார்கள். முதலில் தமிழரைத் தாக்குவது; அடுத்து முசிலீம்களைத் தாக்குவது; பின்பு சிங்களக் கிறித்தவர்களைத் தாக்குவது; இவற்றினூடாக அரசபடைகள் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது; இந்த இடதுசாரி சக்தி ஜே.வி.பி. எனவும்; இந்த சதியில் சோவியத் மற்றும் கிழக்கைரோப்பிய நாடுகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொம்யூனிசிட் கட்சி, நவ சம சமாஜக் கட்சி, ஜே. வி. பி. ஆகியன தடை செய்யப்பட்டன. இவற்றின் தலைமைகள் கைது செய்யப்பட்டன. தப்பியவர்கள் தலைமறைவாக நேரிட்டது.

சில காலத்தின் பின்பு 1983யூலை வன்முறைக்கும் இடது சாரிகளுக்கும் அமைப்பு என்ற வகையில் எந்த சம்பந்தமும் கிடையாது என்பது பகிரங்கமான நிலையில் கம்யூனிசுட்டு கட்சி, நவசம சமாசக் கட்சி என்பவற்றின் மீதான தடை நீக்கப்பட்டது. ஆனால் ஜே. வி. பி. மீதானதடை தொடர்ந்தும் அமுலில் இருந்தது. இப்படியாக ஜே. வி. பி. வன்முறை மூலம் மட்டுமே தனது நோக்கங்களுக்காக செயற்பட முடியும் என்ற முடிவுக்கு வருவதற்கு அவசியமான அத்தனை செயற்பாடுகளையும் யூ. என். பி. அரசாங்கம் செய்து முடித்தது. பிற்காலத்தில் ஜே. வி. பி. இனாலும், அரசபடைகளினாலும் செய்யப்பட்ட அனைத்து அனர்த்தங்களுக்குமான பாரிய பொறுப்பு இந்த "ஜனநாயக" அரசியல் வாதிகளையே சாரும். மோசமான ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்பில் ஆளும்– சுரண்டும்– ஒடுக்கும் வர்க்கம் என்ற வகையிலும்: ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியற்குரலை வெளிப்படுத்துவதற்கான ஜனநாயக பூர்வமான வழிமுறைகளை தடைசெய்தவர்கள் என்றவகையிலும் இரட்டை பொறுப்பை இவர்கள் ஏற்றாக வேண்டும்.

1983இல் தடை செய்யப்பட்டதை அடுத்து தலைமறைவான ஜே.வி.பி. தலைமையானது படிப்படியாக இரகசியமாக தனது கட்சியை புனரமைக்க தொடங்கியது. இரகசிய "செல்" வடிவங்களில் சிறுசிறு குழுக்களாக கிராமங்கள் தோறும் அமைப்புக்கள் கட்டப்பட்டன. விஜயவீரவின் பேச்சுக்கள் நாடாக்களில் பதிவு செய்யப்பட்டு பரவலாக சுற்றுக்கு விடப்பட்டன. இரகசிய பத்திரிகைகள், பிரசுரங்கள் பரவலாக வினியோகிக்கப்பட்டன. இராணுவ அமைப்புக்களையும் கட்டி அரச படையினர் மீதான தாக்குதல்களை நடாத்தத் தொடங்கியது. இப்படியாக சட்டவிரோத அமைப்பாக படிப்படியாக பலம் பெற்று வந்த ஜே.வி.பி.யினருக்கு 1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய– இலங்கை ஒப்பந்தம் நல்லதோர் வாய்ப்பாக அமைந்தது.

1987இல் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்பு நடந்தவைகளும், இந்திய– இலங்கை ஒப்பந்தமும், இந்தியப் படையின் வருகையும், சிங்கள மக்களின் தேசிய உணர்வுகளை தீவிரமாக பாதித்தன. இதனால் அவர்கள் தன்னியல்பாகவே கிளர்ந்தெழலானார்கள். அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கலானார்கள். இந்த சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்ட ஜே.வி.பி. சிங்கள மக்களின் எழுச்சிக்கு தலைமை கொடுக்க முனைந்தது. "இந்திய ஆக்கிரமிப்பிலிருந்து தாய் நாட்டைப் பாதுகாப்பது" என்ற கோசத்தை முன்வைத்த ஜே.வி.பி.இற்கு மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவு கிடைக்கவே செய்தது. இந்த சந்தர்ப்பத்தில் மக்களின் உணர்வுகளுக்குத் தகுந்தவாறு தமது கோசங்களையும் மாற்றிக்கொண்டு ஜே.வி.பி.மக்கள் எழுச்சியை மிகவும் மதிநுட்பத்துடனும், இலாவகமாகவும் கையாண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாராளுமன்ற குண்டுத்தாக்குதல் உட்பட பல இராணுவத் தாக்குதல்களை ஜே.வி.பி.வெற்றிகரமாக நடத்தியது. இந்தியப் பொருட்களை பகிசுகரிப்பது, கர்த்தால் தொழிற்சங்க நடவடிக்கைகள் என கிட்டத்தட்ட நாட்டின் பெரும்பகுதியை ஜே.வி.பி.தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருப்பதாகவேபட்டது. அரசு, ஜே.வி.பி.யின் பாரிய நடவடிக்கைகளிற்கு முன்பு ஏதும் செய்ய முடியாத, கையாலாகாத நிலையில் இருந்தது. இந்த நிலையில் ஜே.வி.பி.யை மக்கள் "இரவுநேர அரசு" எனவும், "கிராமப்புற அரசு" எனவும் அழைக்கலானார்கள். பல தடவைகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தேதி குறிக்கப்பட்டு அதற்கான தயாரிப்புக்களையும் செய்தனர். ஆனால் இவை அரசின் ஊரடங்கு உத்தரவுகளால் கைகூடாமல் போகவே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நாட்கள் தள்ளிக்கொண்டே போயின. இப்படியாக ஜே.வி.பி.யும் அரசும் கிட்டத்தட்ட ஒருவித சமபல நிலையில் இருக்கும் தறுவாயில் சில முக்கிய மாற்றங்கள் நடைபெற்றன.

ஜே.வி.பி.முன்னெடுத்த அரச எதிர்ப்பு இந்திய விரோத நடவடிக்கைகளுக்கு மக்கள் மத்தியில் கணிசமான, மனப்பூர்வமான, ஆதரவு இருந்தது. சட்டத்தரணி வியனாராச்சி கொலை தொடர்பாக நடைபெற்ற கர்த்தால் போன்ற முக்கிய நிகழ்வுகளில் மக்கள் தமது சுயவிருப்பத்துடனேயே தமது முழுஆதரவையும் வழங்கினார்கள். ஆனால் ஜே.வி.பி.யினர் மக்கள் சக்தியிலும் மக்களை அணிதிரட்டவல்ல தமது அரசியலிலும் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக தமது ஆயுதங்களை அதிகம் நம்பினார்கள். இந்தியப் பொருட்களின் பகிசுகரிப்பு, கர்த்தால்கள், ஊர்வலங்கள் வேலை நிறுத்தங்கள் போன்ற அனைத்தையுமே துப்பாக்கி முனையில் நடாத்திட முனைந்தார்கள். காலவரையறையற்று நீடித்த கர்த்தால்கள் வறிய மக்களை குறிப்பாக விவசாயிகள், தொழிலாளரை பொருளாதார ரீதியாக மிகவும் பாதித்தன. வைத்தியசாலைகள், வாகனப் போக்குவரத்துக்கள் செயற்படாததனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களும் இந்த வறிய மக்களே. அரசின் ஆதரவாளர்கள் மட்டுமன்றி ஜே.வி.பி.யின் அரசியலுடன் முரண்பட்ட மக்கள் ஆதரவு பெற்ற எதிரணி அரசியல்வாதிகள், பிரமுகர்கள் போன்றோரும் ஜே.வி.பி.யினால் கொல்லப்பட்டார்கள். மொத்தத்தில் அரசின் பாசிசத்திற்கு மாறாக இன்னொரு பாசிச அடக்கு முறையே மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. மக்களுக்கு தலைமை தாங்குவதாக கூறிக்கொண்டே மக்களிடமிருந்து தனிமைப்படும் வேலைகளை இவர்கள் அதிகளவில் செய்து முடித்தார்கள்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து இந்திய எதிர்ப்பு அரசியலை தீவிரமாக முன்னெடுத்த ஒரே அரசியல் அமைப்பாக ஜே.வி.பி.யே திகழ்ந்தது. ஆனால் 1988 நவம்பரில் பிரேமதாசா சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்தியப் படைகளை வெளியேறுமாறு பகிரங்கமாக கோரிக்கை விடுத்ததை அடுத்து சிங்கள மக்களின் இந்திய எதிர்ப்பு உணர்விற்கு பிரேமதாசாவும் உரிமை பாராட்டும் நிலைமை உருவானது. இதனுடன் அரசு-புலிகள் பேச்சுவார்த்தையும், பிரேமதாசாவின் "பொப்பியூலிச" நடவடிக்கைகளும் சேரவே மக்கள் மத்தியில் பிரேமதாசாவின் மீதான நம்பிக்கை அதிகரித்தது. இதனால் ஜே.வி.பி.யின் அரசியல் தளம் பலவீனப்படலாயிற்று.

1988இன் நடுப்பகுதியில் "அரசபடையினர் தமது பதவிகளை துறக்க வேண்டும் இல்லையேல் அதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும்" என்ற எச்சரிக்கையை ஜே.வி.பி.விடுத்தது. ஆசிரியரது கருத்துப்படி, இந்த எச்சரிக்கையானது படையினரின்



உணர்வுகளை சிதைக்கும் நோக்குடன் விடப்பட்ட வெறும் எச்சரிக்கை மட்டுமே. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விலகாத படையினரையோ அல்லது அவர்களது குடும்பத்தினரையோ கொல்வதற்கான உத்தரவு ஜே.வி.பி.யின் அரசியல் குழுவினால் வழங்கப்படவேயில்லை.

ஆனால் அடுத்து வந்த நிகழ்வுகள் வேறுவிதமாக அமைந்தன. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விலகாத படையினர் மீது ஜே.வி.பி.யின் அணிகள் தாமாகவே தாக்குதலைத் தொடங்கினர். விடுமுறையில் வீடுகளுக்குப் போன படையினர் மட்டுமன்றி படையினரின் உறவினர்கள் கூட அழித்தொழிக்கப்படலானார்கள். இதன் மூலம் இதுவரை காலமும் ஜே.வி.பி.யை அழித்தொழிப்பதில் அதிக தீவிரம் காட்டாத அதிகாரிகளும் சாதாரண வீரர்களும் தீர்க்கமான முடிவுகளுக்கு வந்தாக வேண்டியிருந்தது. தம்முடையதும், தமது குடும்பத்தினதும் சொந்தப் பாதுகாப்பு குறித்தாவது மிகவும் பயங்கரமான அழித்தொழிப்பை ஜே.வி.பி.யினர் மீது கட்டவிழ்த்து விடுவதே அந்த முடிவாகும். இப்படியாகப் படையினரை தமக்கு எதிராக தீவிரமாகச் செயற்பட நிர்ப்பந்தித்ததன் மூலம் ஜே.வி.பி.யின் இந்த உத்தியானது மிகவும் மோசமான எதிர் விளைவுகளையே கொடுத்தது. அடுத்து வந்த ஒரு குறுகிய காலத்துள் ஜே.வி.பி. திடீரென அழித்தொழிக்கப்பட்டதில் நேரடியாகப் பங்காற்றிய மிகவும் மோசமான தவறாக இது அமைந்தது.

இதனை அடுத்து வந்த காலத்தில் படையினர் மிகவும் தீவிரமாக ஜே.வி.பி.யை அழித்தொழிப்பதில் ஈடுபட்டனர். இதுவரை காலமும் கையாண்டு வந்த, சர்வதேசியரீதியில் ஓரளவு ஏற்றுக்கொள்ளத்தக்க மரபு வழியான கிளர்ச்சிஎதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் மாறாக நேரடியான அழித்தொழிப்பில் ஈடுபட்டனர். சந்தேகத்திற்கு உரியவர்களை கைதுசெய்வது, விசாரிப்பது, கொலை செய்வது என்பதே அதன் பின்பான வழிமுறையாயிற்று. இதன் மூலம் ஜே.வி.பி.யின் அங்கத்தவர்கள் மட்டுமல்ல ஜே.வி.பி.யின் ஆதரவாளர்கள், அனுதாபிகள், அவர்களது உறவினர்கள் கூட பெருமளவில் கைதானார்கள், விசாரிக்கப்பட்டார்கள், கொன்றொழிக்கப்பட்டார்கள். ஜே.வி.பி.யின் தாக்குதல்கள் நடைபெற்ற இடங்களில் பழிவாங்கும் முகமாக தாக்குதல்கள் இடம்பெற்றன. ஜே.வி.பி.யின் மத்திய குழு, அரசியற்குழு போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் கைதான போது அவர்கள் உடனடியாகவே கொல்லப்பட்டார்கள்.

இராணுவத்திலிருந்தும், பொலீசிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு கொலைப்படைகள் அமைக்கப்பட்டன. இந்தக் கொலைப்படைகள் அழித்தொழிப்புக்களில் தீவிரமாக செயற்பட்டன. பல சந்தர்ப்பங்களில் கைதானவர்கள் அப்பாவிகள் என்பது விசாரணையின் மூலம் தெரியவந்தது. ஆனால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை விடுதலை செய்தால் விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினர், அதிகாரிகள் பற்றிய தகவல்கள் வெளிவரும் வாய்ப்பு ஏற்படலாம். இதனால் இவர்களது குடும்பங்களும் ஜே.வி.பி.யினால் அழிக்கப்படலாம் என்பதால் படையினரால் அப்பாவிகள் என்று இனங்காணப்பட்டோரும் கூட கொல்லப்பட்டார்கள்.

இதே காலத்தில் யூ.என்.பி.யின் அரசியல்வாதிகளுக்கு தமது சொந்த பாதுகாப்பிற்கென ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இவற்றை கொண்டு இந்த அரசியல்வாதிகள் தமது பாதுகாப்பிற்கென சிறிய குழுக்களை அமைத்தார்கள். "கரும்பூனைகள்" என அழைக்கப்பட்ட இவர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரமுகரை பாதுகாப்பதையே தமது கடமையாக கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதிலும் படிப்படியாக இவர்கள் தமது பிரதேசத்திலிருந்த ஜே.வி.பி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களையும் கொலை செய்தார்கள் இதன் அடுத்தகட்டமாக யூ.என்.பி.மீதான ஜே.வி.பியின் தாக்குதலால் சுதந்திரக்கட்சி பயனடைவதாகக்கருதி சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களை கொல்லத்தொடங்கினார்கள். சில சர்ந்தப்பங்களில் யூ.என்.பியினுள் நடைபெற்ற குழுமோதல்களால் தமது கட்சியின் மாற்றுக்குழு அங்கத்தவர்கள் கூட இப்படியான "கரும்பூனை" நடவடிக்கைக்கு பலியானார்கள்

இப்படியாக தென்னிலங்கை எங்கும் பாசிசம் தலைவிரித்தாடியது. இலக்கமில்லாத வாகனங்களில் வரும் அரைகுறை சீருடை அணிந்தவர்கள், அல்லது சீருடை அணியாதவர்களால் இளைஞர்கள் கடத்தப்படுவதும் வீதிகளில் தலைகள் வேறாகவும், தலையில்லா உடல்கள் வேறாகவும் காட்சிக்கு வைக்கப்படுவதும் டயர்கள் போட்டு எரிக்கப்பட்ட சடலங்கள் கிடப்பதும் ஆறுகளில் உடல்கள் மிதப்பதும் எங்கும் நிறைந்திருந்தன. இந்த நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் தொலைந்து போனார்கள்.

ஜே.வி.பியின் மீது இப்படியான மோசமான தாக்குதல்கள் பல திசைகளிலும் தீவிரமாக மேற் கொள்ளத்தொடங்கியபோது ஜே.வி.பி அசுர வேகத்தில் சரியத்தொடங்கியது. அரசியல்குழு, மத்தியகுழு, மாவட்ட அமைப்பாளர்கள், சாதாரண அங்கத்தவர்கள் என பலரும் விரைவிலேயே கொல்லப்பட்டார்கள். வியேவீர, கமநாயக கொல்லப்பட்ட பின்பு அமைக்கப்பட்ட புதிய அரசியல் குழுவில் ஒருவர் தவிர ஏனைய அனைவருமே விரைவிலேயே கொல்லப்பட்டார்கள். இப்படியாக யே.வி.பி விரைவில் அழித்தொழிக்கப்பட்டதில் அரச தரப்பில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா, டி.ஐ.ஜி உடுகம்பொல,மேஜர் சிசில் வைத்தியரத்தின (தற்போது இவர் லெப்டினன் ஜெனரல் - இராணுவத்தின் தலைமைத்தளபதி ) போன்றோர் பிரதான பாத்திரம் வகித்தனர்.

ஜே.வி.பியானது இவ்வளவு வரைவில் அழித்தொழிக்கப்பட்டதற்கு காரணமாய் அமைந்த அவர்களது பலவீனமான அம்சங்கள் எவை என்பது விரிவாக ஆராயப்பட வேண்டியதாகும்.

புரட்சி என்பது வெறுமனே இரண்டு ஆயுதமேந்திய குழுக்களுக்கிடையில் நடைபெறும் மோதலல்ல. இது அடிப்படையில் பரந்துபட்ட மக்களுக்கும்; இம்மக்களை ஒடுக்கும் ஒரு சிறு குழுவுக்குமிடையிலான போராட்டமாகும். ஆரம்பத்தில் அரச படையினர் இராணுவரீதியில் நன்கு வடிவமைக்றப்பட்டவர்களாகவும் போதிய இராணுவ தளபாடங்கள் கொண்டவர்களாக பலம் வாய்ந்த நிலையில் இருக்கையில் புரட்சியாளர்களோ அமைப்பு தளபாடங்கள், அனுபவம் போன்றன மிகவும் குறைந்த நிலையிலேயே தமது போராட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் ஆயினும் மகத்தான மக்கள் ஆதரவு புரட்சியாளர்கள் பக்கமாகவிருந்து அவர்களை பாதுகாக்கிறது, வளர்க்கிறது, வெற்றி பெறவைக்கிறது. மக்களைவிட்டு எப்போது அந்நியப்பட ஆரம்பித்தார்களோ அப்போதே இந்த வெல்லப்படமுடியாத தன்மை அவர்களிடமிருந்து அகன்று விடுகின்றது.

ஜே.வி.பியும் ஆரம்பத்தில் வெல்லப்படமுடியாத ஒன்றாகவே காணப்பட்டது. ஆனால் இக்காலத்திலேயே இவர்கள் மக்களிடமிருந்தும் அதிகம் அன்னியப்படவும் செய்தார்கள். ஆனால் இராணுவரீதியில் அரச படைகளுடன் இவர்கள் ஓரளவு சம பல நிலையில் காணப்பட்டவரையில் இதன் தாக்கம்



வெளிப்படவில்லை. ஆனால் அரசபடைகள் தீவிரமாக செயற்படத்தொடங்கியதும் மக்களின் தீவிரமான ஆதரவையும் பங்கு பற்றுதலையும் சார்ந்திராத ஜே.வி.பி வேகமாக சரிந்தது. ஆரம்பத்தில் ஜே.வி.பி தன்னை ஒரு கெரில்லா அமைப்பாகவே ஒழுங்கமைத்திருந்தது பிற்காலத்தில் இவர்களது நடவடிக்கைகள் பெரிதும் எழுச்சித்தன்மை வாய்ந்தவையாகவே இருந்தன. அரசபடையினர் தீவிரமான தாக்குதல்களை தொடங்கிய போது பாதுகாப்பான பிரதேசங்களுக்கு பின்வாங்குவது போன்ற செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

படையினரின் தாக்குதல்கள் தீவிரமடைந்த கட்டத்திலும் ஜே.வி.யின் தலைவர்கள்கூட நகர் புறத்திலே அல்லது கிராமப்புறத்திலே சாதாரண வீடுகளிலேயே சிவிலியன்கள் போல வாழ்ந்து வந்தார்கள். அரசபடையினால் இலகுவாக அணுகப்படக்கூடிய இடங்கள் இவை முறையான தற்காப்பு ஒழுங்குகள் எதுவுமே இவர்களிடம் இருக்கவில்லை. படையினருக்கு தகவல் தெரியவராது என்பது ஒன்றே இவர்களது பலமாக இருந்தது. ஆனால் முக்கிய உறுப்பினர்கள் கைதாகி அதன்மூலம் இந்த இருப்பிடங்கள் இனங்காணப்பட்ட போது படையினர் எவ்வித எதிர்ப்பும் இன்றி இவர்களை கைதுசெய்ய முடிந்தது. இதனால் தலைமையை அழித்தொழிப்பதில் அரசுக்கு எந்தச் சிரமமும் இருக்கவில்லை

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இப்படி மிகவும் மூர்க்கமாக போராடிக்கொண்டு இருக்கும் ஒரு அமைப்பின் தலைமை இப்படியாக அமர்ந்திருக்கும் வாத்துக்கள் (Sitting Ducks) போல பிடிபடுவதும் பின்பு ஒப்புதல் வாக்குமூலங்ளைக் கொடுப்பதும் என்பது சாதாரண விடயங்களல்ல. காட்டுப்பப்புறங்களில் தளங்களை நிறுவுவதிலோ அல்லது அலைந்து திரியும் குழுக்களை அமைப்பதிலோ இவர்கள் கவனம் எடுக்காதற்கான காரணங்கள் என்ன? இதில் தலைமையின் குணாம்சங்கள், சமூகப்பின்னணி, ஏனைய சமூக பௌதீககாரணிகள், இராணுவ மூல உபாயம் தந்திரோபாயத்தின் அடிப்படையான குறைபாடுகள் போன்றவை விரிவாக ஆராயப்பட வேண்டியதாகும். தமிழீழ விடுதலைப்போரட்டத்தில் புலிகள் அழித்தொழிக்கப்படாமல் தாக்குப் பிடிப்பதில் புலிகளின் இந்தவகையான இராணுவ தந்திரோபாயங்கள் அதிகம் பங்காற்றியுள்ளன.

**கவனிக்கப்படவேணடிய அம்சங்கள் :**

ஜே.வி.பியின் "தோல்வியுற்ற புரட்சியை " பரிசீலிக்கையில் பின்வரும் விடயங்கள் விசேடமாக கவனிக்ப்படவும், விரிவாக பரிசீலிக்கப்படவும்- விவாதிக்கப்படவும் வேண்டியவையாக முன்னிற்கின்றன.

1) பாராளுமன்ற வாதம் தொடர்பாக:

பாரளுமன்றத்தினுாடாக சோசலிசத்தை நிலை நாட்டலாம் எனும் வாதம் இன்று புரட்சியாளர்களிடையே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆயினும் பாரளுமன்றத்தை ஒரு புரட்சிகர தாபனம் தனது நோக்கங்களிற்கு பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதில் பலவிதமான மயக்கங்கள் இன்னும் காணப்படவே செய்கின்றன. ஏற்கனவே சிலியில் இடது சாரிக் கட்சியொன்று பாரளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று அரசாங்கத்தை அமைத்த போது அது இராணுவப்புரட்சியினால் கவிழ்க்கப் பட்டது. ஆனால் இலங்கையில் நடை பெற்றது என்னவென்றால் ஒரு இடது சாரிக்கட்சி பாரளுமன்றத்தினுள் நுழைவதற்கு சர்ந்தப்பம் அழிக்கப்படாமல் அது தனது அரசியலை முன்னெடுக்கவே இடம் கொடாமல் தொடர்ந்து தொல்லைப்படுத்தப்பட்டதும், அது மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கு பெற்று வருவதை உணர்ந்து அவசர அவசரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடை செய்யப்பட்டதுமாகும். அக்கட்சியை தடைசெய்வதற்கான தகுந்த காரணங்கள் இல்லாமலே அவ்வாறு தடைசெய்யப்பட்ட சர்ந்தப்பத்தில் முறையாக நீதிகேட்கும் வாய்புகள் வழங்கப்படாமலேயே அரசு தனது அவசரகால சட்டங்களை பயன்படுத்தி அனைத்தையும் நடத்தி முடித்து விட்டது.

"புரட்சி என்பது சாராம்சத்தில் ஒரு வர்க்கம் இன்னோர் வர்க்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதாகும். முதலாளித்துவ அமைப்பினுள் எதிர்த்தரப்பு நடவடிக்கைகள் எதுவும் தனது மேலாண்மையை பாதிக்காத வரையிலேயே ஆளும் வர்க்கங்கள் எதிர்தரப்பு அரசியல் நடவடிக்கைகளை அனுமதிக்கும். எதிர்தரப்பு வர்க்கங்களது நடவடிக்கைகள் தனது ஆட்சி அதிகாரத்தையே தட்டிப்பறிக்கும் அளவிற்கு வளரும் போது தனது ஜனநாயக முகத்திரைகளை கிழித்தெறிந்துவிட்டு பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடவே செய்யும்." இது பொதுவாக பாராளுமன்ற வாதம் தொடர்பான விமர்சனமாகும். ஆனால் முறையான முதலாளித்துவ ஜனநாயகம் கூட இல்லாத, தரகு முதலாளி வர்க்கங்கள் ஏகாதிபத்தியத்தின் காவல் நாய்களாக செயற்படும் சார்பு நாடுகளில் பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்வதென்பது கூட எந்தளவிற்கு சாத்தியமானது. இதன் சாதக-பாதக அம்சங்கள் என்ன? என்பது இன்னும் விரிவாக விவாதிக்கப்பட வேண்டியவையாகும்.

2) அரசு-அரசாங்கம் பற்றி.......

1983 இன் இனவன்முறையின் போது ஜே.வி.பி.யை யூ.என்.பி. அரசாங்கம் தடை செய்தது. அப்போதே ஜே.வி.பி. யிற்கு அமைப்பு என்ற வகையில் அந்த கலவரத்தில் தொடர்பு இருக்கவில்லையென்பது பொதுவாக பலருக்கும் தெரிந்தே இருந்தது. அப்படியிருக்க ஐ.ஜி.பி., டி.ஐ.ஜி. ஆகியோர் ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. யின் சதிபற்றி முறையிட்டார்கள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? கலவரத்தில் இடதுசாரிகளிற்கு தொடர்பில்லை என்பது பகிரங்கமான பின்பு கொம்பியூனிசிட்டு கட்சி, நவசமசமாஜ கட்சி ஆகியவற்றின் மீதான தடையை நீக்கிய யூ.என்.பி. அரசாங்கம் ஜே.வி.பி. மீதான தடையை நீக்காததேன்? இன்று வரையில் தவறான தகவலைக் கொடுத்த இந்த உயர் அதிகாரிகள் எவர் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்படாதது ஏன்? இது போன்ற கேள்விகள் எவருக்கும் எழவே செய்யும். இந்த கேள்விகளிற்கு சம்பந்தப்பட்டவர்களும், நூலின் ஆசிரியரும் தரும் விடைகள் தவறு. தற்செயல், அதிகார துசபிரயோகம், நேர்மையின்மை, மெத்தனப் போக்கு போன்றவையாகும். இந்த கேள்விகளிற்கான விடைகளை இவர்களது வாக்குமூலத்திலிருந்து தேடாமல் முதலாளித்துவ ஜனநாயகம் என்ற திரையை நீக்கிவிட்டுத் தேட முனைவோம்.

ஏற்கனவே ஜே.வி.பி. சோசலிசத்தை தனது அரசியலாக முன்வைத்திருந்தது. தாம் ஆட்சிக்கு வந்தால் நாட்டிலுள்ள ஏகாதிபத்தியத்தின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என பகிரங்கப்படுத்தியிருந்தது. ஏகாதிபத்தியங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் திருப்பித் தரப்பட மாட்டாது என்றும் குறிப்பிட்டிருந்தது. பெரு முதலாளிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் பிரகடனப்படுத்தியிருந்தது. இதன் மூலம் ஏகாதிபத்தியங்களதும், தரகு முதலாளி வர்க்கத்தினதும் ஏனைய சுரண்டும் வர்க்கங்களினதும் வெறுப்பிற்கு ஆளாகியிருந்தது. யூ.என்.பி., சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக பலம் பெற்ற, ஒரு இடதுசாரி மாற்றாக அமையக்கூடிய அளவிற்கு ஜே.வி.பி. வளர்ந்து வருவதாக கண்ட யூ.என்.பி. பயப்பட்டது. ஆளும் வர்க்கத்தின் முதன்மைப் பிரதிநிதி என்ற



வகையில் அது தனது கரங்களில் குவிந்து கிடந்த அதிகாரங்களை பயன்படுத்திக் கொண்டது. அதிகார வர்க்கம் என்பது ஒரு நடுநிலையான அமைப்பல்ல. அது ஏகாதிபத்தியங்களுடனும், உள்ளூர் ஆளும் வர்க்கங்களுடனும், ஆளும் வர்க்க கட்சிகளுடனும் பல்வேறு வழிகளாலும் நெருக்கமாக தொடர்புகளை கொண்டவை. இந்த நிலையில் ஐ.ஜி.பி., டி.ஐ.ஜி. ஆகியோரின் நடவடிக்கைகள் யாரை எந்த விதத்தில் பிரதிநிதித்துவப்படுத்தின என்று பரிசீலிக்கப்படுவது அவசியமானது.

இவற்றை எல்லாம் தொகுத்துப் பார்க்கையில், அரசு-அரசாங்கம் ஆகியவற்றினது உறவு, இவற்றிற்கிடையிலான செயற்பாட்டுப் பொறிமுறை என்ன? ஏகாதிபத்தியங்கள், உள்ளூர் ஆளும் வர்க்கங்கள், அதிகார வர்க்கம், அரசியல் கட்சிகள் போன்றவற்றிற்கிடையிலான உறவுகள் எப்படிப்பட்டவை? என்பன போன்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது எந்தவொரு புரட்சியிலும் தீர்க்கமான பிரச்சனையாகிறது. ஆதலால் எந்தவொரு புரட்சிகர கட்சியும் தனது நாட்டின் குறிப்பான சூழ்நிலையில் இந்த கேள்விகளை எழுப்பி அவற்றிற்கான திட்டவட்டமான விடைகளை கண்டறிவது மிகவும் அத்தியாவசியமானதாகும்.

3) மிகவும் மையப்படுத்திய அரசு, பலம் வாய்ந்த இராணுவம் என்பவை முதலாளித்துவ சமுதாயத்தில் குறிப்பான அம்சங்களாகும். இதனால் இராணுவம் தொடர்பாக எந்தவிதமான அணுகுமுறைகளை கையாள்வது என்பது புரட்சியாளர்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனையாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில் அரசும், அதன் வன்முறைக் கருவியான இராணுவமும் ஆளும் வர்க்கங்களை, அவற்றின் நலன்களை காக்கும் பணியையே ஆற்றி வருகின்றன. பொதுவாகவே இராணுவத்தின் உயரதிகாரிகள் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளாக இருப்பினும் சாதாரண போர்வீரர்கள் விவசாயி, தொழிலாளிகளின் பிள்ளைகளே. எவ்வளவுதான் அடுக்கு முறையான இராணுவ கட்டமைப்பும், இறுக்கமான கட்டுப்பாடுகளும், சித்தாந்த மேலாண்மையும் இராணுவத்தினுள் நிலவினாலும் கூட சாதாரண போர் வீரரைப் பொறுத்த வரையில் தமது சொந்தக் குடும்பத்தவரது கயிட்டங்கள் உணர்வுகள், போராட்டங்கள் என்பவை எப்போதும் அவர்களிற்கு நெருக்கமானவையே. தனது சொந்த சகோதரனை எதிர்தரப்பில் காணும் எந்தவொரு வீரனும் ஒரு கணம் துயங்கவே செய்வான். புரட்சியாளர்கள் போர்வீரர்களிடையே புரட்சிகர பணிகளை சிறப்பாக ஆற்றும் போது அது வரையில் அவர்கள் மீது மேலாதிக்கம் செலுத்தி வந்த முதலாளித்துவ சித்தாந்தம் பலவீனப்படுத்தப்படுகையில், போராட்டத்தின் தீர்க்கமான கட்டங்களில் அதிகாரிகளின் உத்தரவுகளையும் மீறி மக்களின் தரப்பிற்கு படையினர் போய்விடுவது இன்றும் நடைபெற்றுக் கொண்டே வருகிறது. இதனால் தான் புரட்சியில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதில் படையினரின் குறிப்பாக சாதாரண போர்வீரரின் உணர்வுகள் என்பவை முக்கியமான அம்சமாக அமைந்து விடுகின்றன.

ஜே.வி.பியானது தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய போது படையினரின் உணர்வுகள் அவர்களிற்கு மிகவும் சாதகமாகவே இருந்தன. ஒப்பந்தம் கைச்சாத்திட வந்த ராஜீவ் காந்தியை தாக்கிய கடற்படை வீரர் ஒருவர் சராசரி படையினரின் உணர்வு நிலைக்கு மாதிரியாகவே இருந்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்தியப்படைகள் வடகிழக்கிற்கு வந்தது இலங்கைப்படையினர் முகாங்களிற்குள் முடங்கநேரிட்டது, கிழக்கில் சிங்கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் பெருந் தொகையில் அகதிகளாக வெளியேற நேர்ந்தது, போன்ற நிகழ்வுகள் படைகள் மத்தியில் அரசிற்கு எதிரான கோபத்தை தூண்டி விட்டிருந்தன. ஆனால் இவ்வளவு சாதகமான நிலைமையை தமக்கு எதிரான குரூரமான வெறியாக மாற்றியமைப்பதில் ஜே.வி.பி. யின் அரசியல் தவறுகளும், பாசிச அணுகுமுறைகளுமே மிகவும் முக்கியமானவை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், போரிடும் இரண்டு தரப்பினரும் வெவ்வேறு தேசிய இனங்களைச் சார்ந்தவர்கள் என்பதால் அரச படையினர் மத்தியிலும் சிங்கள தேசிய உணர்வு உயர்வாக காணப்படவே செய்கிறது. இந்த நிலையில் படையினரை கையாள்வது பற்றிய பிரச்சனையில் தமிழீழ புரட்சியாளர்கள் இந்த அளவிற்கு சாதகமான அம்சங்களைக் கொண்டிராத போதிலும், இந்த அரங்கில் செய்வதற்கு எதுவுமே கிடையாது என்பதல்ல. சிறிது தான் என்றாலும் செயற்படுவதற்கு ஓரளவு இடம் இந்த அரங்கிலும் இருக்கச் செய்கிறது. சாதாரண சிங்கள குடிமக்கள் பாலான தமிழீழ போராளிகளின் அணுகுமுறை, கைதான அரச படையினரை நடத்தும் விதம் போன்றவை இதில் குறிப்பிடத்தக்கவை. தமிழீழ போராளிகள் இது வரையில் இந்த விடயத்தில் போதிய அக்கறை எடுத்துக் கொண்டதாக கூறமுடியாது.

முடிவாக "1971 இல் பாதுகாப்புப் படைகளும், நீதித்துறையும், மரங்களின் கிளைகளை வெட்டின. இந்த தடவை அரசு மரத்தை வேரோடு சாய்த்துள்ளது. ஜே.வி.பி. இறந்து விட்டது. ஆனால் மக்களின் எரியும் பிரச்சனை தீர்க்கப்படாத வரையில், தாய் மரத்திலிருந்து விழுந்த வித்துக்கள் முளைத்து இன்னும் பல மரங்களை காலப்போக்கில் உருவாக்கவே செய்யும்."

ஜே.வி.பி. யின் அரசியற்குழு உறுப்பினர் ஒருவர் அரசின் படைகளிடம் கைதான நிலையில், கொல்லப்படுவதற்கு சில நிமிடங்களிற்கு முன்பு கூறிய வார்த்தைகள் இவை.

உண்மைதான், இந்த தரகு முதலாளித்துவ அரசு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கப்போவதும் இல்லை, மரங்கள் திரும்பவும் முளைக்கத்தான் போகின்றன. ஆனால் இவை எவ்வளவு தூரம் தமது இலக்குகளை அடையப்போகின்றன என்பது தமது கடந்த கால தவறுகளிலிருந்து எவ்வளவு தூரம் படிப்பினைகளை பெறுகின்றன என்பதிலேயே பிரதானமாக தங்கியுள்ளது. இந்த வகையில் ஜே.வி.பி. யினது தோல்வியானது தமிழீழ புரட்சியாளர்களுக்கும் சிறந்த படிப்பினையாக அமைய வேண்டும்.

---

95ம் பக்கத்தொடர்ச்சி

*நம்பிக்கை வரட்சி, போலி மயக்கங்கள் போன்றவற்றைக் களைந்துவிட்டு ஜனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் செயற்படவேண்டிய காலமிது. புரட்சிகர குழுக்களும் புத்திஜீவிகளும், முன்னேறிய பிரிவினரும் இன்றைய வரலாற்றுக் கடமையை எவ்வாறு ஆற்றுகிறார்கள் என்பதிலேயே 'பாசிசத்தின்' மறைவு மட்டுமல்ல, தமிழ்த் தேசத்தின் எதிர்காலமும் தங்கியுள்ளது.*

*சமூக அக்கறையுள்ள ஜனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் இன்றைய வரலாற்றுத் தேவையையும் தமது பாத்திரத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.*



# *தனிநபர் பயங்கரவாதம் பற்றி......*

*வாணி*

அண்மையில் நடைபெற்ற சில அரசியில் படுகொலைகள் தமிழீழ விடுதலைப் போரட்டத்துடன் தொடர்பு உடையவர்களிடையே வேறுபட்ட உணர்வலைகளை ஏற்படுத்தின சிலர் இந்த கொலைகளை அங்கீகரித்தனர்; நியாயப்படுத்தினர். இன்னும் சிலரோ அவற்றை நிராகரித்தனர் ; கண்டித்தனர் இந்த இரண்டு போக்கினர் இடையேயும் தொடர்ந்து நடைபெற்ற காரசாரமான விவாதங்கள் பல கேள்விகளை எழுப்பின. இந்த விவாதங்களை தொகுத்து பார்க்கையில் பெறப்படும் சாராம்சமான கேள்வி (தனிநபர் பயங் கரவாதத்தை எப்படி பார்ப்பது?) என்பதுதான். தனிநபர் பயங்கரவாதம் பற்றி கோட்பாட்டுரீதியான ஒரு விவாதத்தின் தேவையைக்கருதி எழுதப்படும் இக்கட்டுரையில் கொல் லப்பட்ட நபர்கள், கொலைகளைச் செய்த அமைப்பு ஆகியன தொடர் பான மதிப்பீடுகளை தவிர்த்துக் கொண்டு கோட்பாட்டு விடயங்களில் கவனத்தைக் குவிக்க முனைகிறேன்.

பொதுவாகவே சமூகத்தில் நடை பெறும் போராட்டங்களை ஆளும் வர்க்கங்களும் அவற்றின் வெகுஜன தொடர்பு சாதனங்களும் எவ்வாறு அணுகுகின்றன என்பதை புரிந்து கொள்ள ஒரு எளிமையான உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

ஒரு பிரபுவின் வயலில் சில விவசா யிகள் வேலை செய்து வந்தார்கள் நாள்முழுதும் உழைத்தும் அந்த விவசாயிகள் தமது அன்றாட அத்தியாவசியத் தேவைகளையே பூர்த்திசெய்து கொள்ள முடியாத நிலையில் கூலி உயர்வு கேட்டார்கள். நிலப்பிரபு மறுத்து விட்டான். விவசாயிகள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் ஆத்திரமுற்ற நிலப்பிரபு தனது அடி ஆட்களை விவசாயிகளின் மீது ஏவி அவர்களது வேலை நிறுத்தத்தை அடக்க முயன்றான். பிரபுவின் அடி ஆட்கள் விவசாயிகளை தாக்கியதில் ஒரு விவசாயி இறந்து போனார். "இரு சாதிக் குழுக்களுக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் பலி"- பத்திரிகைகளில் ஒரு துண்டுச் செய்தி வெளிவந்திருந்தது. தமதுசகாவின் இறப்பால் கொதித்தெழுந்தவிவசாயிகள் நிலப் பிரபுவைக்கொன்று பழிவாங்கிக் கொண்டனர். பத்திரிகை, வானொலி அனைத்தும் தலைப்புச் செய்தியாய் இதை அறிவித்தன. கிராமப்புறத்தில் பயங்கரவாதம் தலைதூக்கியிருப்பதாகவும், அதை முளையிலே கிள்ளிவிட வேண்டும் எனவும் அரசியல் பிரமுகர்கள் அறிக்கைவிட்டனர். இப்படியாக நிலப்பிரபு, விவசாயி களுக்கிடையிலான போராட்டமானது இரு வேறுவடிவங்களை- விவசாயி கொல்லப்பட்டதை சாதிச்சண்டை எனவும் நிலப்பிரபு கொல்லப்பட்டதை பயங்கரவாதமெனவும்- வெளியாருக்கு தந்தது. இதன் உண்மைவடிவம்- சுரண்டும், சுரண்டப்படும் வர்க்கங்களுக் கிடையேயான போராட்டம்- ஆளும் வர்க்கத்தால் திட்டமிட்டு மறைக் கப்பட்டு; சாதிச் சண்டையாகவும் பயங்கரவாதமாகவும் காட்டப்பட்டது.

தன்னால் கொல்லப்படுகிறவர்களின் எண்ணிக்கையைக் கூட சரியாக கணக்கெடுப்பதில் அக்கறை காட்டாத ஆளும் வர்க்கங்களும், அவர்களது அரசும், தனது வர்க்கத்தவர்கள் கொல்லப்படும் போதோ பெரிதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓலமிடுகிறது. கொல்லப்பட்டவரது படத்தைப் போட்டு, கோரமாக கொலை செய்யப்பட்டுள்ள காட்சியை, அவரது மனைவி பிள்ளைகள் அனாதையாகிவிட்ட கோலத்தை பலவிதமான பரிதாபகரமான தோற்றங்களில் படங்களை வெளியிட்டு அநுதாபத்தைப் பெற முயல்வது என்பது வெறுமனே மனிதாபிமானம் சம்பந்தப்பட்ட விடயமல்ல. பல நூற்றுக்கணக்கானோர், சிலவேளைகளில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படும் போது மௌனமாக இருப்பவர்கள், ஒருவரது மரணத்திற்காக இத்தனை ஓலமிடுகிறார்கள் என்றால், இங்கு மனிதாபிமானத்தை விட இன்னோர் அம்சம் ஓங்கி நிற்பதை கவனிக்க வேண்டும். அதுதான் வர்க்கநலன். கொல்லப்படும் ஒவ்வொரு மனிதருக்காகவும் கவலைப்படுவதாக இருந்தால், ஒவ்வொரு மனித உயிர்ப் பறிப்பையும் கண்டிப்பதாக இருந்தால் அதில் மனிதாபிமானத்தைக் காணலாம். ஆனால் கொல்லப்பட்டவர் யார் என்பதை இனம் கண்ட பின்புதான் வாய்திறப்பது என்று முடிவு செய்தால் அது உண்மையான மனிதாபிமானம் ஆகாது.

பொதுவாக ஆளும் வர்க்கங்களும், அவர்களின் அரசும், வெகுசனத் தொடர்பு சாதனங்களும் இப்படிப்பட்ட இரட்டை அளவு கோள்களைக் கொண்டே நிகழ்வுகளை அளக்க முற்படுகின்றன. தமது நோக்கங்களுக்கேற்ப முக்கியத்துவம் கொடுத்து பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் சமூக உணர்வுள்ளவர்கள் இந்த போலியான புகை மண்டலத்திற் கூடாக ஊடுருவிப் பார்க்கவும், சமூகத்தில் யதார்த்தத்தில் நிகழும் போராட்டங்களை இனங்கண்டு கொள்ளவும் வேண்டும். இதில் தவறிழைக்கும் போது ஆளும் வர்க்க பிரச்சாரத் தந்திரங்களுக்குப் பலியா கிப் போவதே அடிக்கடி நடைபெறும்.

வர்க்கங்களாக மக்கள் பிளவுண்டிருக்கும் ஒரு வர்க்கசமுதாயத்தில் அனைவருக்கும் பொதுவான நீதி, ஒழுக்கம், சனநாயகம், மனிதாபிமானம் என்பவை நிலவமாட்டாது. சமூகத்தில் வர்க்கப் பகைமைகளும் மோதலும் எந்தளவிற்கு தீவிரப்படுகிறதோ அந்தளவிற்கு இந்த கருத்தாக்கங்களிற்கு பகைமை வர்க்கங்களுக்கிடையே எதிரெதிர் அர்த்தங்களைப் பெறுவதை கவனிக்கத் தவறக் கூடாது.

உற்பத்தியில் ஈடுபடும் போதே அன்றாடம் பல தடவைகள் பகைமை கொண்டு மோதிக் கொள்ளும் சுரண்டும் வர்க்கமும், சுரண்டப்படும் வர்க்கமும் தமது நலன்களை தமது அன்றாட சொந்த வாழ்வினூடாகவே இனம் கண்டு கொள்கிறது. இதனால் ஆளும் வர்க்கம் பெரிதாக போற்றிப் பாராட்டும் சட்டம்,நீதி,ஒழுக்கம்,மனி தாபிமானம் போன்றவை தன்னை ஏமாற்றுவதற்கு செய்யப்படும் மோசடிகளே என்பதை சுரண்டப்படும் வர்க்கமானது புரிந்து கொள்கிறது. குறைந்த பட்சம், அந்த சட்டத்தை உயர்வாக காட்ட முனையும் சுரண்டும் வர்க்கங்களே அவற்றை விசுவாசமாக பின்பற்றுவது கிடையாது என்பதும் அதற்குத் தெரியும். இவ்வாறே இந்த வர்க்கம் சமூகத்தில் பரந்துபட்ட மக்களின் நலன்களைப் பேணக்கூடிய உண்மையான மனிதாபிமானம் என்றால் என்ன? என்பதையும் வாழ்க்கை அதற்கு கற்றுக் கொடுக்கிறது. இவ்வாறே சுரண்டும் வர்க்கம் கூட தன்னுடைய சட்டங்கள், நீதி, ஒழுக்கம், மனிதாபிமானம் என்பவையெல்லாம் உழைக்கும் மக்களை ஏமாற்றுவதற்கு புனையப்பட்டவையே என்பதை உணர்ந்து அவற்றின் உண்மை வடிவங்கள் வெளியில் தெரிந்துவிடாதபடி கவனமாகவே செயற்படுகின்றன.

ஆக மொத்தத்தில் சமூகத்தில் முரண்பட்டு மோதிக் கொள்ளும் சுரண்டும்-சுரண்டப்படும் வர்க்கங்கள் இரண்டுமே இந்த பொதுவான "சமூக நெறிகளின்" வர்க்க தன்மைகளை இனங்கண்டு கொண்டு தமது நலன்களுக்கு ஏற்பவே அவற்றை அர்த்தப்படுத்திக் கொள்கின்றன. இவற்றில் எந்தவித மயக்கமும் அவற்றிற்குக் கிடையாது. ஆனால் சந்தையில் தன்னை தொலைத்துவிடும் குட்டி முதலாளி வர்க்கத்திற்கு உறுதியான வர்க்கக் கண்ணோட்டமோ திட்டவட்டமான கோட்பாடுகளோ கிடையாது. இதனால் இன்றைய சமுதாயம் வர்க்கங்களாக பிளவுபட்டிருப்பதை புரிந்து கொள்ளவோ, அரசும், வெகுஜன தொடர்பு சாதனங்களும் ஆளும் வர்க்க நலன் காக்கும் வகையில் செயல்படுவதையோ இந்த வர்க்கம் இனங்கண்டு கொள்ளாது. இதனால் இது அடிக்கடி சுரண்டும் வர்க்கங்களின் சித்தாந்தங்களுக்குப் பலியாகிப் போய் அனைவருக்கும் பொதுவான சட்டம், நீதி, ஒழுக்கம், மனிதாபிமானம் என்ற மயக்கத்தில் இருக்கிறது.

பரந்துபட்ட மக்களை சுரண்டியும் அவர்களது நலன்களை நசுக்கியுமே மிகச் சிறுபான்மையான சுரண்டும் வர்க்கம் வாழ்கிறது. தம்மீது சகிக்க முடியாத வாழ்க்கைச் சுமையை சுமத்திவிட்டு தமது உழைப்பை அபகரித்துக் கொண்டிருக்கும் எதிரியை மக்கள் வெறுக்கவே செய்கிறார்கள். அந்த எதிரி யார் என்பதை மக்களுக்கு புரிய வைத்து, அவர்களை அமைப்பாக்கி, அவர்களது போராட்டத்திற்கு வழிகாட்டுவதே புரட்சியாளர்களின் பணி. தமது வர்க்க எதிரியை இனங் கண்டு கொள்ளும் மக்கள் எதிரி வர்க்கத்தை தூக்கியெறிந்து தமது உரிமைகளை மீட்பார்கள். அதற்கான ஆற்றலும் திறமையும் உழைக்கும் மக்களிடம் நிறையவே உண்டு. போராட்டத்தின் பிரதான புரட்சிகர சக்தி மக்களே. மக்களின் எதிரியும், புரட்சியின் இலக்கும் சுரண்டும் வர்க்கமே. மக்கள் சக்தி ஒன்றினால் மாத்திரமே சுரண்டும் வர்க்கத்தை தூக்கியெறிய முடியும் என்பதை புரட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரட்சிப் போராட்டத்தில் புரட்சிகர கட்சி என்பது மக்களின் முன்னணிப்படை-வழிகாட்டி என்ற பாத்திரத்தையே ஆற்றுகிறது.

தனிச்சொத்துடமையையும் இன்றைய சுரண்டல் அமைப்பையும் பேணிப் பாதுகாப்பதன் மூலம் சுரண்டும் வர்க்கத்தின் நலன் காக்கும் வேலையை அரசும் சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் செய்து வருகிறார்கள். சுரண்டும் வர்க்கமானது தனது நலன்களை மிகத் திறமையாகப் பேணுகின்ற, தனது நலன் காக்கும் வேலையை மிகச் சாதுரியமாகச் செய்கின்ற நபர்களையே ஆட்சிப் பொறுப்பில் தனது பிரதிநிதியாய் வைக்கிறது. சுரண்டும் வர்க்க நலன்களுக்கு ஏற்ற விதத்தில் நடக்கும் வரையிலேயே அந்த அரசியல்வாதி அதன் பிரதிநி தியாய் அங்கீகரிக்கப்பட்டிருப்பார். குறிப்பிட்ட கட்டங்களில் குறிப்பிட்ட அரசியல்வாதி பூர்சுவா நலன்களைப் பேணுவதில் சாமர்த்தியத்தைக் காட்டாவிட்டால் அந்த வர்க்கமானது அவரை பிரச்சாரத்தின் மூலமோ உட்கட்சி சதியின் மூலமோ இராணுவப் புரட்சியின் மூலமோ ஆட்சியிலிருந்து வீழ்த்திவிட்டு அவரிலும் சாமர்த்தியமான ஒருவரை அந்த இடத்தில் நியமிக்கும். இப்படியாக சுரண்டும் வர்க்கமானது தனது நலன் காக்கும் நபர்கள் மீது விழிப்பாயிருக்கிறது.

புரட்சி என்பது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்த பெரும்பான்மையான மக்கள் ஒடுக்கும் வர்க்கத்தை-அதன் ஆட்சியதிகாரத்தை-தூக்கியெறிந்து அந்த இடத்தில் உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை நிறுவுவதா கும். நிலவும் பூர்சுவா சமூக அமைப் பை தலை கீழாய் மாற்றி அதற்கு பதில் உழைக்கும் வர்க்கத்தின் நலன் காக்கும் சமூக அமைப்பை உருவாக்குவதே புரட்சி என்பதன் அர்த்தம்.

முறையான வர்க்கக் கண்ணோட்டத்தைக் கொண்டிராத குட்டி முதலாளி வர்க்கமானது சமூகம் வர்க்கங்களாக பிளவுண்டு இருப்பதை இனங் கண்டு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்வதில்லை. அரசின் வர்க்க சார்பையும் விளங்கிக் கொள்வதில்லை. இதனால் தனிநபர்களையே-அரசியல் பிரமுகர்களை, இராணுவ பொலிசு அதிகாரிகளை, தனிப்பட்ட முதலாளிகளை, பிரபுக்களை-சமூகத்தின் எதிரியாக பார்க்கிறார்கள். மக்களது புரட்சிகர பாத்திரத்தையும் இவர்கள் புரிந்து கொள்வதில்லை. இதனால் தனித்துவம் வாய்ந்த சில தனிநபர்கள், "கதாநாயகர்கள்" மூலமே புரட்சி நடைபெறுவதாக கருதுகிறார்கள். ஆளும் வர்க்கத்தையும், புரட்சியாளரையும் சில நபர்கள் சம்பந்தப்பட்ட விடயமாக குறுக்கி விடுகிறார்கள். தனிநபர்ப்பயங்கர வாதம் இந்த தவறான உலக கண்ணோட்டத்திலிருந்தே பிறக் கிறது.

சுரண்டும் வர்க்கத்தின் நலன்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசியல்வாதிகளையோ, அதிகார வர்க்கத்தைச்சார்ந்த ஒரு சில ரையோ,தனிப்பட்டசில முதலாளிக ளையோ,நிலப்பிரபுகளையோ ஒழித்துவிடுவதன் மூலம் புரட்சியை சாதித்துவிட நினைப்பதே தனிநபர்பயங்கரவாதத்தின் செயல் நோக்காகிவிடுகிறது. தனது பிரதிநிதி ஒருவரை அல்லது தன்னைக்காக்கும் பணியில் ஈடுபடும் சிலரைக்கொல்வது ஆளும் வர்க்கத்தைப் பொறுத்தவரையில் பெரியபாதகங்களை ஏற்படுத்திவிடுவதில்லை. சுரண்டும் வர்க்கமானது விரைவிலேயே அந்த இடத்துக்கு இன்னொருவரை நியமித்துதனது இருப்பை இலகுவில் பாதுகாத்துக்கொள்கிறது. ஆகவே தனிநபர் பயங்கரவாதமாது புரட்சியை, சமூகமாற்றத்தைக் கொண்டுவந்து விடமாட்டாது. மக்களை அரசியல் போதமூட்டியும், அமைப்பாக்கியும், போராட வழிகாட்டியும் செலவழிக்கப்பட வேண்டிய புரட்சியாளர்களின் சக்திகள் இப்படியாக தனிநபர் பயங்கரவாதத்தில் விரயமாக்கப்படுவது உண்மையில் புரட்சியை பின்னடையவே செய்யும்.

இத்தகைய தனிநபர் பயங்கரவாத நடவடிக்கையானது புரட்சியில் மக்களுக்குள்ள பாத்திரத்தை மறுதலிப்பதோடு மக்கள் தமது புரட்சிகர கடமையை புரிந்து கொள்ளவிடாது தடுக்கவும், தமது விடுதலைக்காக சில சாகசக் கதாநாயகர்களை எதிர் பார்த்திருக்கவும் செய்கிறது. இத னால் தனிநபர் பயங்கரவாதம் என்பது புரட்சிக்கு ஊறு விளைவித்தாயும், சமூகம் புரட்சியை நோக்கி நகர்வதற்கு தடையானதாயும். இருக்கிறது. இதனாலேயே சமூகப் புரட்சியாளார்கள் புரட்சியின் பிரதானவழிமுறையாய் தனிநபர் பயங்கரவாதத்தை ஏற்பதில்லை.

குட்டிபூர்சுவா வர்கமானது சமூக முரண்பாடுகளை வர்க்க அடிப்படையில் பார்க்காது தனி நபர்களுக் கூடாகவே பார்க்கிறது. அதனால் அந்த வர்க்கத்தின் பிரதான போராட்ட வழிமுறை தனிநபர் பயங்கரவாதமாய் இருக்கிறது. சமூகப் பிரச்சனைகளுக்கு நபர்களைக் கொல்வதன் மூலம் தீர்வுகாண நினைக்கும் குட்டி பூர்சுவா தனிநபர் பயங்கரவாத போராட்ட வழிமுறைக்கு. மாறாக சமூகப் புரட்சியாளர்கள் வர்க்கப் போராட்டத்தை தமது போராட்ட வழிமுறையாய் கொண்டிருக்கிறார்கள்.

சமூகப் புரட்சியாளர்கள் தனிநபர் பயங்கரவாதத்தை நிராகரி க்கிறார்கள் என்பதற்கு அர்த்தம் சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதி களாக இருந்து மக்களை மோசமாக ஒடுக்குபவர்களுக்கு இயற்கை மரணம்தான் நிகழ வேண்டும் என்பதில்லை. சோசலிச சமூகத்திலும் அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதில்லை.

சுரண்டும் வர்க்கத்தைக் காப்பாற்றுவ தற்காக, போராடும் மக்களை கோரமாக ஒடுக்க முனையும் அனைவருமே மக்களின் விரோதிகள் தான். இவர்கள்



மக்களின் தண்டனை க்குள்ளாகி இறக்க வேண்டியவர்களே யன்றி இயற்கை மரணம் அடைய வேண்டியவர்களல்ல. மக்களை நர வேட்டையாடி ஆட்சி செலுத்துபவர்களுக்கு இயற்கை மரணம் ஏற்பட வேண்டும் என எதிர்பார்ப்பது சமூகம் அவர்களுக்கு அளிக்கக் காத்திருக்கும் நியாயமான தண்டனையை அவமதிப்பதாகவேயிருக்கும். புரட்சி யாளர்கள் கோட்பாட்டளவில் தனிநபர் ப்பயங்கரவாதத்தை நிராகரித்தாலும் ஒரு பிரதான வழிமுறையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட சில குறிப் பான சூழ்நிலையில் தனிநபர்ப்பயங்க ரவாதத்தின் பயன்பாட்டை மறுப்பதி ல்லை.

குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் குறிப்பிட்ட தனிநபர்கள் தாம் வாழும் சூழலிலிருந்து பெற்றுக் கொண்ட தமது ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப தாம் சார்ந்த வர்க்கத்தின் நலன்களைக் காப்பதில் முன்னணியிலிருப்பார்கள். பூர்சுவா வர்க்கத்தின் பிரதிநிதியான குறிப்பிட்ட தனிநபர் தான் சார்ந்த வர்க்கத்தின் நலனைப் பாதுகாப்பதற்காக எவ்வித தயக்கமும் காட்டாது புரட்சிகர தாபனங்களை நசுக்குவதில் தீவிரமாகவும் திறமையாகவும் செயற்படுவாரானால் புரட்சிகர தாபனத்தினதும் புரட்சியாளரதும் பாதுகாப்பு கருதி அவரைக் கொல்வது தவிர்க்க முடியாததாகிறது. இப்படியான கொலைகள் புரட்சிகர தாபனத்தின் பாதுகாப்பிற்கு தவிர்க்க முடியாததாக அமையும் சந்தர்ப்பத்தில் அவரைத் தண்டிப்பதை புரட்சியாளர்கள் தந்திரோபாயமாக கையாள்கிறார்கள்.

உளவாளிகள் துரோகிகள் போன்றவர் களின் நடவடிக்கைகள் புரட்சிக்கு ஊறு விளைவிக்கும் பட்சத்தில், இவ ர்களால் புரட்சியாளர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு புரட்சி நசுக்கப்படும் அபாய நிலைக்குத் தள்ளப்படுமாயிருந்தால் இத்தகையவர்களைத் தண்டிப்பதும் தவிர்க்க முடியாததாகிறது.

குறிப்பான சில தனிநபர்கள் சில குறிப்பான வரலாற்றுக் கட்டங்களில் புரட்சியின் போக்கையே மாற்றிய மைக்கும் ஆற்றல் உடையவர்களாய்க் காணப்படுகையில்-அவர்களைத் தண் டிப்பதன் மூலம் புரட்சி பாதுகாக்கப்ப டுமாயிருந்தால்-அவர்களைத் தண்டிப் பது புரட்சிகர தந்திரோபாயமேயாகும். உதாரணமாக, ரசியாவின் வலி மைமிக்க பூர்சுவா வர்க்கத்தின் பிரதிநிதியான ஜாரும் குடும்பத்தினரும் 1917 ஒக்ரோபர் புரட்சியின் போது போல்சுவிக்குகளால் கைது செய்யப்பட்டு மக்கள் விசாரணையை முகங் கொடுப்பதற்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். உள்நாட்டுப் போரின் போது வெண்படையினரின் தாக்குதலால் செஞ்சேனை பின்வாங்க நேர்ந்த போது ஜாரையும் ஏனையோ ரையும் பாதுகாக்க முடியாத நிலையில் போல்சுவிக்குகள் அவர்களைக் கொன்றனர். வெண்படை யினரால் ஜார் மீட்கப்பட்டிருந்தால், சிதறியிருந்த ரசிய பூர்சுவா மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை ஒழுங்கமைத்து வெளிநாடுகளின் உதவியுடன் ஜார் மீண்டும் அரசைக் கைப்பற்றியிருப்பான். எதிர்ப்புரட்சிகர சக்திகள் பலம் பெற எந்த வாய்ப்பையும் அளிக்கக் கூடாது என்பதில் போல்சு விக்குகள் எச்சரிக்கையாயிருந்ததால் ஜாரைக் கொன்றனர்.

மக்களால் வெறுக்கப்படும் எதிரிகளை புரட்சியாளர்கள் தண்டிப்பதை மக்கள் அங்கீகரிக்கவே செய்கிறார்கள். மக்கள் விரோதிகளை புரட்சி யாளர்கள் தண்டிக்கும் போது அது பற்றி பொறுப்புணர்வுடன் மக்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். புரட்சியாளர்களின் நடவடிக்கை களையும் மதிப்பிட்டு தீர்ப்பளிக்கும் உரிமையுடையவர்கள் மக்களே.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் புரட்சி சாதிக்கப்பட்டுவிடும் என்றி ல்லை. ஆனால் இந்த நடவடிக்கைகள் புரட்சிகர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்பாட்டில் ஏற்படும் தடங்கல்களைத் தகர்த்து புரட்சியாளர்கள் தமது நடவடிக்கைகளைத் தொடர வாய்ப்பளிக்கும் எனும் பட்சத்திலேயே புரட்சியாளர்கள் தனிநபர்ப் பயங்கரவாதத்தினை தந்திரோபாய அடிப்படையில் மேற்கொள்வார்கள். அதே நேரம் புரட்சிப் போராட்டத்தில் மக்களுக்கு வழிகாட்டும் பணியைச் செய்யும் புரட்சியாளர்கள் விரோதிகளுக்குத் தண்டனையளிக்கும் நீதிபதிகள் மக்களேயென்பதையும் மறந்துவிடக் கூடாது.

தனிநபர்ப் பயங்கரவாதத்தை கோட்பாட்டுரீதியாக நிராகரிப்பதென்பதும் பயங்கரவாத செயற்பாடுகள் ஒவ்வொன்றையுமே நிராகரிப்பதென்பதும் ஒன்றல்ல. தனிநபர்ப் பயங்கரவாதம் புரட்சிக்கு உதவாது; புரட்சியை சீரழித்துவிடும் என்பதாலேயே அதை புரட்சியாளர்கள் நிராகரிக்கிறார்களே யன்றி, குறிப்பிட்ட மனித விரோதிகளுக்கு இயற்கை மரணம் வர வேண்டுமென்பதற்காக அல்ல. புரட்சி கர செயற்பாடுகளுக்கு கிடைக்கும் சாதகமான நிலையை அடிப்படையாய் கொண்டே தனிநபர் பயங்கரவாதத்தை தந்திரோபாய நடவடிக்கையாக புரட்சியாளர்கள் மேற்கொள்கிறார்கள்.

மொத்தத்தில் தனிநபர் பயங்கரவாதத்தை நிராகரிப்பது என்பது புரட்சியின் வழிமுறை பற்றிய பிரச்சினையாகும். இந்த விதத்தில் இது புரட்சியாளர்**களது** முகாமுக்குள் நடக்கும் ஒரு **விவாதமாகும்**. தனிநபர்ப் பயங்கரவாதம் **எவ்வாறு** புரட்சிக்கு ஊறு செய்கிறது **என்பதை** விளக்குவதன் மூலம் தனிநபர்ப் **பயங்**கரவாதத்தில் ஈடுபடும் சக்திகளை வென்றெடுப்பதே இதன் நோக்கமாகும். இந்த சக்திகள் தமது தவறான போக்கினை கைவிடாத நிலையில் இவர்கள் விழிப்புணர்வு பெறும் மக்களால் நிராகரிக்கப்படும் நிலையும் ஏற்படும். ஆனால் இவ்வாறு புரட்சியாளர்களுக்குள் நடக்கும் ஒரு விவாதத்தை, மக்கள் மத்தியில் உள்ள ஒரு முரண்பாட்டை எதிரி தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள எப்போதும் முனைவான், தன்னால் தினந்தோறும் கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாதத்தைப் பற்றி எதுவுமே பேசாத அல்லது அவற்றை நியாயப்படுத்தும் ஆளும் வர்க்கமும் அதன் அரசும், தன்மேல் தொடுக்கப்பட்ட தாக்குதலை பெரிய அளவில் கூப்பாடு போட்டு கண்டிப்பதுடன், புரட்சிகர முகாமுக்குள் உள்ள ஆனால் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கையில் நம்பிக்கையில்லாத சக்திகளையும் தன்னோடு இணைத்து கண்டிக்குமாறு செய்விக்க முனையும். இதன் மூலம் புரட்சியாளர்களது போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் மக்கள் மத்தியிலிருந்து அவர்களை தனிமைப்படுத்தவும், புரட்சிகர முகாமுக்குள் உள்ள சிநேக முரண்பாடுகளை பகை முரண்பாடுகளாக்கவும் இதன் மூலம் மக்கள் மத்தியில் தனது பயங்கரவாதத்தை நியாயப்படுத்தவும் முயலும். புரட்சியாளர்கள் தனிநபர்ப் பயங்கரவாதத்தை நிராகரிப்பது அது புரட்சிக்கு உதவாது என்பதற்காக மட்டுமேயன்றி ஆளும் வர்க்கம் கூறுவது போல் அந்த நபர்கள் மக்களுக்கு மாபெரும் தொண்டு செய்தார்கள் என்பதற்காகவோ, இவர்களைக் கொல்வது தவறு என்பதற்காகவோ அல்ல. ஆதலால் எதிரியின் சதிக்கு பலியாகிவிடக் கூடாது என்பதில் புரட்சியாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட கொலைகளில் உடன்பாடு இல்லாவிட்டாலும் அவற்றை எதிரியுடன் சேர்ந்து கண்டிக்கவோ, அந்த செயல்களை கண்டிப்பதாக கருதிக்கொண்டு கொல்லப்பட்டவர்கள் மக்கள் மீது புரிந்த பெரும் குற்றங்களை மறைத்து அவர்களுக்கு தியாகி பட்டங்களை வழங்கவோ முயலக்கூடாது. இதனை புரட்சியாளர்கள் செய்தால் அவர்கள் தமது சொந்தப் போராட்டத்தையும் தம்மையுமே கொச்சைப்படுத்தி கொண்டதாகவே



அர்த்தப்படும்.

ஒரு சிறிய உதாரணத்தை இதற்குக் காட்டலாம். உலகெங்கும் தனது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம், பலசுதீன விடுதலைக்குழுக்களில் ஒன்று நடத்தும் சிறியதோர் தாக்குதலை பலசுதீன விடுதலை இயக்கம் (P.L.O.) கண்டிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும். அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து P.L.O. இந்த நடவடிக்கைகளை கண்டித்தால் அது பலசுதீன மக்களின் போராட்டங்களை கொச்சைப் படுத்துவதாகவும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயங்கரவாதத்தினை நியாயப்படுத்துவதாகவும் தானே அர்த்தப்படும்.

அண்மையில் நடைபெற்ற விவாதங்களின் போது ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது சம்பந்தப்பட்ட நபர்கள் மக்களுக்கு அநீதி இழைத்திருந்தாலும் கூட அவர்களிற்கு அமையப்போகும் சோசலிச சமுதாயத்தில் வாக்குரிமை உட்பட அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். இந்தக் கருத்தைப் பரிசீலிப்போம்.

ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த இந்த நபர்கள் ஏற்கனவே மக்களை மோசமாக சுரண்டிக் கொழுத்ததன் மூலம் பெருந்தொகையான மக்களது வறுமைக்கும், அறியாமைக்கும், பட்டினிக்கும், நோய்க்கும் காரணமானவர்கள். இதுவே அவர்கள் மக்கள் மீது புரிந்த மாபெரும் குற்றமாகும். இதற்கும் மேலாக உழைக்கும் மக்கள் தமது உரிமைகளிற்கும் விமோசனத்திற்கும் போராட முற்படும் போது தமது சுகவாழ்க்கையையும் சொத்துடைமையையும் பாதுகாத்து கொள்வதற்காக, போராடும் மக்கள் மீது மிகவும் மோசமான அடக்குமுறைகளை, பயங்கரவாதத்தைமனித உரிமை மீறல்களை கட்டவிழ்த்து விடுகிறார்கள். இந்த விதமாக மக்கள் மீது இழைக்கப்படும் குற்றங்களை மனிதகுலம் ஒரு போதும் மன்னிக்க மாட்டாது. இதற்காக இவர்கள் நாளை மக்கள் முன்பு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள. மக்கள் வழங்கும் தண்டனைகளை இவாகள் பெற்றேயாக வேண்டும்.

புரட்சியின் பின்பு அமையும் புதிய சமூகத்தில் சுரண்டும் வர்க்கத்தவாகளிற்கு ஒரு வர்க்கம் என்ற வகையில் எதிர்காலமே கிடையாது. உற்பத்திச் சாதனங்களின் சமூக உடமையாக்கமே இவர்களிற்கு பெரிய அடிதான். ஆனால் தனிநபர்கள் என்றவகையில் அவர்கள் தமது சுரண்டலுக்கும் மேலாக எந்தளவுக்கு மக்களை ஒடுக்குவதில் நேரடியாக பங்காற்றினார்களோ அவற்றிற்காக மக்களிற்கு பதில் சொல்லியாக வேண்டும். இப்படியாக தமது சுகபோக வாழ்விற்கும் சிலவேளைகளில் தனிப்பட்ட உயிரிற்கும் ஏற்படக்கூடிய இழப்புக்களை இந்த வாக்கம் கைகட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது. தன்னாலான அனைத்தையும் செய்து ஒரு புரட்சிகர மாற்றத்தை தடுக்க முனையும். அப்படியாக அது தன்னையும் மீறி நிறைவேற்றப்பட்டால் இலகுவில் தோல்வியை ஏற்றுக்கொண்டு, புதிய சமூக ஒழுங்கிற்கு கட்டுப்பட்டு வாழ பழகிக் கொள்ள மாட்டாது. புதிதாக தோன்றிய உழைக்கும் மக்களின் அரசில் பலவீனமான அம்சங்களை பயன்படுத்திக் கொண்டு அதனை கவிழ்த்து விட்டு தனது பழைய ஆட்சியை ஏற்படுத்த தன்னாலான அனைத்தையுமே செய்யும். சீர்குலைவு, சதி, அரசியல்படுகொலைகள், அந்நியத்தலையீடு, எதிர்ப்புரட்சி போன்ற எந்தவொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள முனையும். இப்படிப்பட்ட நோக்கத்துடன் செயற்படும் ஒரு எதிர்ப்புரட்சி வர்க்கத்திற்கு புரட்சியின் பின் பேச்சு, எழுத்து, சனநாயக,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாக்குரிமை சுதந்திரங்களை வழங்குவது என்பது உழைக்கும் வர்க்கம் தனது ஆட்சியை தானே கவிழ்த்துக் கொள்வதாகவே அர்த்தப்படும். இதனால் எதிர்ப்புரட்சிகர சக்திகளை நசுக்குவதில் தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. எதிர்ப்புரட்சியை நசுக்குவதில் தயக்கம் காட்டியதே பாரிசு கொம்யூனின் தோல்விக்கான முதன்மையான காரணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் சகல பொருளாதார வளங்களையும் தனது கரங்களில் வைத்துக் கொண்டிருந்த சுரண்டும் வர்க்கங்கள் கல்வி கலாச்சார வாய்ப்புக்களை அதிகம் பெற்றிருந்தன. பல தொடர்பு சாதனங்களையும் தனது கரங்களில் வைத்துக் கொண்டு தனது செல்வாக்கை சமூகம் முழுவதிலும் செலுத்தி வந்தது. இன்னும் கூட ஏனைய நாடுகளில் ஆளும் வர்க்க ஆதரவை உறுதியாக பெற்றுள்ளது. ஆளும் கலையில் தேர்ந்தது. தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு அதிகார வர்க்கத்தைக் கொண்டு ள்ளது. இப்படியாக எல்லா விதத்திலும் இந்த வர்க்கம் உழைக்கும் மக்களை விட வாய்ப்பான நிலையிலேயே உள்ளது. யதார்த்த வாழ்வில் இரண்டு வர்க்கங்களும் இவ்வளவு தூரம் சமத்துவமற்று இருக்கும் போது புரட்சிக்கு பிந்திய அரசியல் அரங்கில் மட்டும் எப்படி சமத்துவத்தை நாம் எதிர்பார்க்கலாம்.இதனால் இந்த வர்க்கத்திற்கு சனநாயகம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு வர்க்கம் என்ற வகையில் இல்லாது போகும் வரையில் சாத்தியப்படவே மாட்டாது.

புரட்சி என்பது பகைமை கொண்ட இரண்டு வர்க்கங்களின் ஜீவமரணப் போராட்டம். இதில் காட்டப்படும் சிறிய அசட்டையீனமும் கூட புரட்சிக்கு பல தோல்விகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி விடும். ஆதலால் புரட்சிகர பணியில் ஈடுபடுவோர் தமக்குள் இருக்கும் இந்த விதமான குட்டி பூர்சுவா மாயைகளை களைந்து விட வேண்டும். சனநாயகம், மனிதாபிமானம். . . . . . . போன்றவற்றை ஆளும் வர்க்க கண்ணோட்டத்தில் இருந்தல்லாமல் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்தில் இருந்து விளங்கிகொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

தனிநபர் பயங்கரவாதம் பற்றி பேசும் போது நாம் முக்கியமான ஒரு விடயத்தை வேறுபடுத்திக் கொள்வது அவசியம். அதுதான் மாற்றுக் கருத்துக்களின்பால் சகிப்புணர்வின்மையாகும். புரட்சி யின் நலன்கள் என்பவை பரந்துபட்ட மக்களின் நலன்களாகும். சொந்த வாழ்க்கையினூடாகவும் போராட்டத்தினூடாகவும் பரந்துபட்ட மக்கள் தமது நலன்களிற்கு சேவை செய்யும் கருத்துக்களையும், அமைப்புக்களை யும் இனம் கண்டு கொள்ளும் ஆற்றல் உடையவர்கள். இதனால் புரட்சியாளர்கள் புரட்சியின் நலன்க ளுக்கு எதிரான கருத்துக்களை விமர்சித்து தமது சரியான கருத்துக்களை முன் வைக்கையில் தவறான சக்திகளை மக்கள் இனங்கண்டு நிராகரிப்பார்கள். தமது நலன் காக்கும் கருத்துக்களையும், தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களையும் மக்களே தேர்ந்தெடுப்பார் கள் இதுவே எதிர்தரப்பு மாற்று கருத்துக்களின்பால் புரட்சியாளர்கள் கைக்கொள்ள வேண்டிய அணுகுமுறையாகும்.

பரந்துபட்ட மக்களின் அரசியல் விழிப்புணர்வில் மக்களை வென்றெடுக்கக் கூடிய தமது கருத்துக்களின் பலத்தில் நம்பிக்கையின்மையால் கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளாமல் மாற்று கருத்துக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக ஆயுதங்களை நீட்டும் போக்கு தோன்றுகிறது. முதலில் எதிர்தரப்பு அரசியல் வாதிகளுக்கு எதிராகவும், பின்பு புரட்சிகர முகாமுக்குள் உள்ள மாற்று அமைப்புக்களுக்கு எதிராகவும்,பின்பு சொந்த அமைப்பினுள் மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராகவும் இறுதியில் தமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் மக்களுக்கு எதிராகவும் ஆயுதங்கள் திருப்பப்படுகின்றன. இந்த வகை யான மாற்றுக் கருத்துக்களின் பாலான சகிப்புணர்வின்மையே, ஜனநாயக மீறலே இன்று அதன் உச்ச நிலையில் பாசிச வடிவில் ஆட்சி புரிகிறது. நாம் மேலே குறிப்பிட்ட தனிநபர்ப் பயங்கரவாதத்தையும் இந்த சகிப்புணர்வின்மையை யும் ஒன்றாக போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. எமது போராட்டத் தில் தனிநபர்ப் பயங்கரவாதத்திலும் பார்க்க இந்த சகிப்புணர்வின்மையே அதிகளவில் தீங்கிழைத்துள்ளது. ஆதலால் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த சகிப்புணர்வின்மையை அனுமதிக்கலாகாது.

தொகுத்துக் கூறினால் சமூக முரண்பாடுகளை சமூக வர்க்கங்கள் அல்லது சமூகப்பிரிவுகளிடையிலான போராட்டமாக விளங்கிக் கொள்ள வேண்டும். பரந்துபட்ட மக்களின் போராட்டத் தின் மூலம் ஆளும் வர்க்கங்களை தூக்கியெறிந்து விட்டு ஆட்சியதிகாரத்தை கையேற்பதே புரட்சியாளர்களின் இலக்காக அமைய வேண்டும். இதற்கு மாறாக எதிரிகளை தனிநபர்களாக பார்ப்பதும், சில தனிப்பட்ட கதாநாயகர்களின் செயல்பாடுகள் மூலமாக வரலாறு படைக்கப் படுவதாகவும் கருதுவதும் உண்மையிலேயே புரட்சிக்கு தீங்கிழைக்கவே செய்யும். தனிநபர் பயங்கரவாதம் புரட்சிக்கு தீங்கிழைப்பது என்பதால் புரட்சியாளர்கள் தனிநபர்ப் பயங்கரவாதத்தை கோட்பாட்டுரீதியான ஒரு பிரதான வழிமுறையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சில குறிப்பான நிலைமைகளில் தனிநபர்ப் பயங்கரவாதத்தை தந்திரோபாயரீதியில் பயன்படுத்துவதை நிராகரிப்பதில்லை தனிநபர்ப் பயங்கரவாதத்தை நிராகரிப்பது எனும் பிரச்சனையில் புரட்சியாளர்கள் எதிரியின் கண்ணோட்டத்திற்குப் பலியாகிவிடாமல் இருப்பது முக்கியமானது. தனிநபர்ப் பயங்கரவாதமும் மாற்றுக்கருத்துக்களின்பால் சகிப்புணர்வின்மையும் ஒன்றல்ல.

தமிழீழ விடுதலைப் போராட்டமா னது இன்று தமிழ் மக்களின் அனைத்து சுதந்திரங்களையும் தனது காலில் போட்டு மிதிக்கும் ஒரு சக்தியிடம் சிக்கியுள்ளது. இப்படிப் பட்ட ஒரு பாதகமான சூழ்நிலையா னது தமிழீழ விடுதலைப் போராட்ட த்தில் முன்னர் தீவிரமாக ஈடுபட்ட பலர் மத்தியில் நம்பிக்கை வரட்சியை ஏற்படுத்தியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் அவர்களது கண்ணோ ட்டங்களையே பாதிக்கும் அளவிற்குப் போயுள்ளது. புரட்சி, தாபனம், எதிரிநண்பர், ஏகாதிபத்தியம், இனவாதம், மனிதாபிமானம்..... போன்ற பல்வேறு விடயங்களிலும் தாம் முன்பு கொண்டிருந்த புரட்சிகரமான கண்ணோட்டங்களைக் கைவிட்டு எல்லாத்துறைகளிலும் தார்மீக அடிப் படையிலான விளக்கங்களை மேற் கொள்ள முனைகிறார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் எதிரியையே நம்பும் அளவிற்குச் சென்று விடுகின் றார்கள்.

போராட்டத்தை இன்றைய பிற்போ க்கு நிலையில் இருந்து மீட்க வேண்டுமாயின் நாம் செய்ய வேண்டி யது, யாதெனில் எதிரிவர்க்க சித்தாந்தத்திற்குப் பலியாகிப் போய்விடாமல், புரட்சியுடன் சம்பந்தப்பட்ட அடிப்படையான பிரச்சனைக ளில் – இன்றைய பாசிச அர்த்தப்படுத்தல்கள், எதிரியின் தார்மீக விளக்கங்கள் என்பவற்றிற்கு மாறாக- புரட்சிகரமான நிலைப்பாடுகளை முன்வைப்பது உடனடி அவசரப் பணியாகின்றது. அந்த வகையில் தனிநபர்ப் பயங்கரவாதத்தின் பாத்திரம் குறித்த புரிதலும் அவசர தேவையாகிறது.

[redacted]





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள பேரினவாத இயக்கபோக்கின் திசை...

•தேவதாஸ்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் "பௌத்த சிங்கள பேரினவாதம்" மேலாதிக்கம் செலுத்தியது உண்மையே என்றாலும் இன்று அதன் செல்வாக்கு அரசியலிலும் சமூகத்தளங்களிலும் பலவீனமடைந்து விட்டது என்ற நம்பிக்கை பொதுவாக நிலவுவதைக் காணலாம். இக்கருது கோளுக்கு வலுவூட்டும் வகையில் பல்வேறு ஆதாரங்கள் மேற்படி நம்பிக்கையாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. தமிழ்மொழிக்கு உரிய அந்தசுத்து வழங்கப்பட்டுள்ளது; பல-இன, பல-மத நாடு இலங்கை என அங்கீகரிக்கப்பட்டுள்ளது; வட-கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரப்பர வலாக்கலை வழங்கும் 13ம் அரசியல் திருத்தம் நிறைவேறியுள்ளது; சிங்கள 'சிறீ' எழுத்து நீக்கப்பட்டுள்ளது விகிதாசார வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன; இனப்பிரச்சனைக்குத் தீர்வைக்காண அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாடு நடைபெறுகிறது; பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது; இவைகள் முன்வைக்கப்படும் ஆதாரங்களில் சிலவாகும். தவிர, அநுராதபுர படுகொலைகளும், புறக்கோட்டைக் குண்டு வெடிப்பும், அரந்தலாவ பிக்குமார் படுகொலைகளும் நடைபெற்றும் கூட தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் தென்னிலங்கையில் இடம்பெறவில்லையே எனவும் வாதிடுகின்றனர்.

இவ்வாறு ஆதாரங்களையும் வாதங்களையும் முன்வைப்பவர்கள் சில மூலாதார உண்மைகளை ஏனோ மறந்து விடுகின்றனர். தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவில்லை; வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகம் எனும் கோட்பாடு ஏற்கப்படவில்லை; தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்ப டவில்லை; இவ்வுரிமைகள் அனைத் தையும் கைவிடும்படி சிங்கள தேசத்தின் எல்லாத்தரப்புகளுமே தீவிரமாக நிர்ப்பந்திக்கின்றன. இனவாதம் மறைந்து விட்டதாகக் கருதுவோர் இவ்வுண்மைகளை கவனிக்க தவறுகின்றனர். அல்லது வேண்டுமென்றே கவனிக்க மறுக்கின்றனர். அது மட்டுமன்றி "83 யூலை" இனவொழிப்பு நடவடிக்கையின் போது இலங்கையின் பொருளாதாரம் எதிர்பாராத மோசமான அழிவுக்குள்ளானது; அரசு உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளை கடுமையாக முகம் கொடுக்க வேண்டியிருந்தது; சர்வதேச அளவிலும் அரசு அவமானங்களை அடைந்தது; இந்தி யாவின் நெருக்குதலுக்குள்ளானது; இவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதை அரசு விரும்பவில்லை. அத்துடன் இன்று பரந்து வியாபித்துக்கிடக்கும் ஏகாதிபத்திய மூலதனத்தையும், இடைவிடாத சுரண்டலையும் பாதுகாக்க வேண்டிய அவசியமும் இலங்கை அரசுக்கு உள்ளது. இவ்வாறான காரணங்களால் மட்டுமே தென்னிலங்கையில் இனக்கலவரம் வெடிப்பதை ஆயுதப்படைகளைக் கொண்டு அரசு வலிந்து கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மேலும் இனவாதத்தின் கடுமையை இவ்வன்முறைகளை மட்டும் கொண்டு அளவிட்டுவிட முடியாது. ஒரு



சமூக அமைப்பின் பல்வேறு தளங்களிலும்- பொருளாதாரம், மொழி அரசியல் கலாச்சாரம். . . . . என அது செலுத்தும் ஆதிக்கத்தையும் கொண்டே அதன் கடுமை கணக்கிடப்பட வேண்டும். இனவன்முறைகள் இனவாதத்தின் ஒரு குரூரமான வெளிப்பாடுதானே தவிர அதுவே முழுமையான வெளிப்பாடாகாது. எனவே கலவரம் இல்லையென்பது இனவாதம் மறைந்து விட்டதாக எவ்விதத்திலும் அர்த்தப்படுத்தாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலைமைகள் இவ்வாறாக இருக்கையில் இனவாதம் பலவீனமடைந்து சிதைவுற்று போய்விட்டது என்ற நம்பிக்கை இன்னும் நிலவுகிறதா யின் இது யார் மத்தியில் காணப்படுகிறது? இந்த நம்பிக்கை என்ன பின்னணியில் அவர்களிடம் இருந்து வெளிப்படுகிறது? என்ற தேடல் அவசியமாகிறது. பல்வேறுவகையினர் இப்போக்கினுள் அடங்குகின்றனர். யூ.என்.பி. அரசினதும், பிரேமதாசாவினதும் நலன்களுக்குப் பின்னே ஒளிந்து கொண்டும், அதற்கு சேவகம் புரிந்து கொண்டும், மார்க்சிய அறிஞர்களாக தம்மைக் காட்டும் டயன் ஜயதிலக போன்றவர்களும், பாராளுமன்ற பிழைப்புக் கருதி சிறுபான்மை இனங்களின் வாக்குகளை கனவு காணும் மரபுவழி இடதுசாரிகளும் ஒரு வகையினர். ஈழ விடுதலைப் போராட்டத்தை கைகழுவிவிட்டு நிரந்தரமாக கொழும்பில் முடங்கி அரசியல் பிழைப்பு நடாத்தும் தமிழ் இயக்கங்களின் தலைமைகளும், இந்திய-இலங்கை ஆளும் வர்க்க நலன்களிற்கு சரணாகதி ஆகிவிட்டவர்களும் இன்னொரு வகையினர், கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கைப் பிரதேசங்களிலும் நிலையான பொருளாதார நலன்களை கொண்டவர்களும், திறந்த பொருளாதார வாய்ப்புகளை தொடர்ந்து அனுபவிக்க விரும்புபவர்களும் பிறிதொரு வகையினர் ஆகும். இவைகள் தவிர, அரசியல் நேர்மையும் தேச விடுதலை போராட்ட உணர்வும் கொண்டவர்களாக இருந்தும், விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்து சோர்ந்து, போனவர்கள் மற்றொரு வகையாகும். இவ்வகையில் அடங்குவோர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று தோன்றியுள்ள நெருக்கடிகளைக் கடந்து விட எண்ணி ஐக்கியப்பட்ட புரட்சி நோக்கி கவனம் குவிக்கப்பட வேண்டும்; ஈழ போராட்டம் கைவிடப் படவேண்டும்; எனக் கோரும் நிலைக்குச் சென்று விட்டவர்கள்.

இது இவ்வாறாக இருக்கையில் தான், இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதாகக் கூறி, அமைச்சர் தொண்டமான் ஆலோசனை ஒன்றை முன்வைத்தார். பாராளுமன்ற தெரிவுக்குழு முன் தொண்டமான் சமர்ப்பித்த அதே ஆலோசனைதான் இதுவாகும். இதைப் பின்புலமாகக் கொண்டு இனவாதமானது பல முனைகளிலும் பற்றியெரியத் தொடங்கியது. பல்வேறு சமூக, வர்க்கப் பிரிவுகள் மத்தியில் இருந்தும் இனவாதம் கூர்மையாக, தெள்ளத்தெளிவாக வெளிப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிங்கள பேரினவாதம் செல்வாக்கிழந்து போய் விட்டதாகக் கொண்டிருந்த நம்பிக்கைகள் நொருங்கி விழுந்தன. நம்பிக்கையாளர் திகைத்து நின்றனர். உண்மை இதுவென்றால் பேரினவாதத்தின் முழுப் பரிமாணத்தையும் விரிவாக, வரலாற்று ரீதியாக நோக்க வேண்டிய அவசியம் இங்கு எழுகின்றது. அதன் மேலாதிக்கம் குறித்த தெளிவை அகநிலை நோக்கிற்கும் எமது விருப்பு வெறுப்புக்களுக்கும் உட்படுத்தாமல் புறநிலை நோக்கில் அடைய வேண்டியுள்ளது. இதன் அடிப்படையில் இனவாதத்தின் எதிர்கால வடிவம் குறித்தும் தீர்க்கமான நிலைப்பாட்டை நாம் அடைய வேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இனவாதத்தின் தோற்றம்

பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தினால் இலங்கையில் பெருந்தோட்டப் பொருளாதாரம் திணிக்கப்பட்டது. இதன் நேரடி விளைவாக இலங்கையில் அன்றைய பொருளாதார அமைப்பு தனது இயல்பான வளர்ச்சிப் போக்கையிழந்தது. உழைப்பும் மூலவழுங்களும் சுரண்டப்பட்டன, காலனித்துவ சந்தையாக இலங்கை மாற்றப்பட்டது. இவற்றின் தொடர்ச்சியாக பல சிக்கலான அரசியல், சமூக முரண்பாடுகள் இங்கு உருவாகத் தொடங்கின. தனிப்பெரும் ஆதிக்க சக்தியாக நின்ற பிரிட்டிச அதிகாரத்துவம் அரசியல் பொருளாதார வலிமையை தனது கரங்களில் முழுமையாகக் குவித்துக் கொண்டிருந்தது. காலனித்துவ ஆளும் வர்க்கத்திற்கு அடுத்ததாக இந்திய மூலதனம் செல்வாக்கைக் கொண்டிருந்தது. இது ஏற்றுமதி இறக்குமதி, நிதித்துறைகளில் ஆதிக்கத்தைக் கொண்டிருந்தது. எஞ்சிய சொற்ப பொருளாதார வாய்ப்புக்களில்தான் உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கங்கள் போட்டியிட வேண்டியிருந்தன. உள்நாட்டு முசுலீம் முதலாளிகள் மொத்த வியாபாரத்துறையில் செல்வாக்கைக் கொண்டிருந்தனர். சேவைகள் துறையிலும் நிதித்துறையிலும் தமிழ் முதலாளிகள் ஓரளவு செல்வாக்கைக் கொண்டிருந்தனர். சாராய வியாபாரம் குத்தகை, கரியகல்வு, தென்னை, இறப்பர் பயிர்ச்செய்கையில் சிங்கள முதலாளிகள் கூடுதலாக ஈடுபட்டிருந் தனர். அன்றைய ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் மற்றும் மொத்த வியாபாரத் துறைகளை நோக்குவோமாயின்;

**ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் 1860களில்**

33 முன்னணிஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகர்களில்:-

27 பேர் ஐரோப்பியர்
04 பேர் பம்பாய் இந்தியர்
01 சிங்களவர்
01 தமிழர்

**1880களில்**

54 முன்னணி வர்த்தகர்களில்:-

50 பேர் ஐரோப்பியர்
02 பேர் இந்தியர்
02 பேர் சிங்களவர்

**புறக்கோட்டை உள்ளூர் மொத்த வியாபாரத்தில் 1860களில்**

75 நாட்டுக் கோட்டைச் செட்டிமார்
35 முசுலீம் வர்த்தகர்கள்
(சிங்களவர் தமிழர் இல்லை)

**1880களில்**

84 செட்டிமார் நிறுவனங்கள்
64 முசுலீம் நிறுவனங்கள்
(சிங்களவர் ஒரிருவர்)

மிகவும் பலவீனமானமூலதனத்தைக் கொண்டிருந்த சிங்கள முதலாளிகள் காலனித்துவ பொருளாதார அரசியல் மேலாதிக்கத்தின் அடிப்படை குணாம்சங்களை இனம் காணத் தவறினர். அப்படித்தான் ஓரளவு உணர்ந்தாலும் வலுவான அரசியல் அதிகாரமும், பலமான மூலதனமும் மற்றும் அரசுறுப்புக்களையும் கொண்டிருந்த பிரித்தானிய சக்தியுடன் மோதுவதைத் தவிர்த்துக் கொண்டனர். பதிலாக ஒப்பீட்டளவில் தம்மை விடவும் வளமான மூலதனத் திரட்சியும், அதைத் திரட்டுவதில் தேர்ச்சியும் கொண்டிருந்த சிறுபான்மை இனங்களை குறிப்பாக முசுலீம் வர்த்தகர்களையே விரோதிகளாகக் கண்டனர். தமது வாய்ப்புக்கள் அனைத்தையும் முசுலீம்களே கவர்ந்து கொண்டவர்கள் என்று கற்பிதம் செய்து கொண்டனர்.



தவிர, பொருளாதார நலன்களுக்காகவே தம்மைக் கத்தோலிக்கர்களாக மாற்றிக் கொண்ட கத்தோலிக்கர்களின் ஒரு பிரிவு மீதும் பௌத்த சிங்கள பூர்சுவா வர்க்கம் விரோதம் பாராட்டியது. இப்பிரிவினர் பிரிட்டி சாரின் துயவுடன் சில பிரதான பொருளாதாரத் துறைகளையும், ஆங்கில அறிவு காரணமாக செல்வாக் கும் வருமானமும் மிக்க அரச சேவைகள் துறைகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். இத்தகைய சமூக பொருளாதார பின்னணியிலேயே பௌத்த சிங்கள தேசிய எழுச்சிகளும், அதை அடியொட்டி பேரினவாதமும் தோற்றம் பெற்றது.

சுதந்திரம் கிடைக்க சில தசாப்தங் களுக்கு முற்பட்ட ஒரு 'குறுகிய காலம்' "சிங்கள தேசிய எழுச்சி" அதன் அரும்பு நிலையில் ஆங்கிலேய கத்தோலிக்க எதிர்ப்புக் குணாம்சத்தைக் கொண்டிருந்தது. அதுவும் ஒரு சொற்ப அளவிலேயே ஆங்கில மொழி எதிர்ப்பு, கலாச்சார எதிர்ப்பு, கிறித்தவ மத எதிர்ப்பு போன்ற வடிவங்களில் அது வெளிப்பட்டது. தீவிர காலனித்துவ எதிர்ப்பு அரசியல் வடிவமாக எதுவும் இருக்கவில்லை. காலனித்துவ ஆதிக்கத்துடன் சமரசம் என்பதாகவே இருந்தது. பௌத்த சிங்கள சமூக நல அமைப்புகள் மத்தியதர வகுப்பினரிடையே தோன்றின; சீர்திருத்த இயக்கங்கள் உருப்பெற்றன. அன்றைய மோசமான வறுமை நிலைக்கும் பல்வேறு சமூக பொருளாதார நெருக்கடிகளுக்கும் பிரித்தானிய காலனித்துவ சுரண்டலும் பொருளா தார ஆதிக்கமுமே அடிப்படை என்பதை அன்றைய சிங்கள தேசிய வாதம் இனம் கண்டு கொள்ளவில்லை காலனித்துவ எதிர்ப்பில் கூர்மையாகத் தன்னை வெளிப்படுத்தாத "குறைநிலைத் தேசியவாதமாகவே" அது இருந்தது. மாறாக ஏனைய சிறுபான்மையினரை பிரதான எதிரிகளாகக் கருதும் பிற்போக்குக் குணாம்சத்தையும் அது கொண்டிருந்தது.

19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி யில் பௌத்த சிங்கள மறுமலர்ச்சிப் பின்னணியில் பண்பாட்டுக், கலாச்சார புனருத்தாரண பணிகளும், அகல்வாய்வுகளும் நடைபெற்றன. சிங்கள பூர்சுவாக்கள் தமது சொந்த செல்வத்தையும் கூட இதற்காக செலவழித்தனர். பௌத்த சிங்கள கலாச்சார சின்னங்கள் சிதைவுகள் மீட்கப்பட்டு பிரபல்யப்படுத்தப்பட்டன மொழி, மத எழுச்சிகள் தீவிரமடைந்தன. பௌத்த கல்வி புகட்டும் பாரம்பரிய கல்வி நிறுவனமான "பிரிவென" க்கள் (pirevena) புனரமைக்கப்பட்டன.

முதலில் சிங்கள கிறித்தவர்களை தாக்கிய அரும்புநிலை இனவாதமாகிவிட்ட பௌத்த சிங்கள தேசியவா தம் அடுத்து தனது வன்முறையை முசுலீம்களை நோக்கியும் திருப்பியது. கால்நடைக்கொலை, கொழுத்த வட்டி, கொள்ளை இலாபம் மூலம் முசுலீம்கள் பௌத்த புனிதங்களை சிதைத்தும் சிங்களவர்களின் பொருளாதார செல்வங்களை கொள்ளையிட்டும் வருவதாக உணர்வூட்டப்பட்டது. முசுலீம் விரோத உணர்வு எழுத்து வடிவங்களாகவும் கொண்டு செல்லப்பட்டன.

உதாரணமாக:-

"அந்நியர்களாகிய முகமதியார்கள் 'சைலோக்' பாணியில் யூதர்களைப்போல சிங்களவர்களின் செல்வத்தைத் திரட்டிக்கொண்டனர். 2358 வருடங்களுக்கு முன்பு அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து தாய்நாட்டை விடுவிக்க இரத்தம் சிந்திய முதாதையர்களின் வாரிசுகளும், மண்ணின் மைந்தர்களுமான சிங்களவர்களோ பிரிட்டிசாரின் கண்களில் நாடோடிக்கூட்டங்களாகவும், சோம்பேறிகளாகவும் தோன்றுகின்றனர்"

(அநாகரிக தர்மபால-1915இல் எழுதியது)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முசுலீம் மக்களுக்கு எதிரான விரோதம் மேலும் தீவிரமடைய உலக பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணியாக அமைந்தது. 1910-1915களில் உலக பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக இலங் கையிலும் பஞ்சமும், பணவீக்கமும் நிலவின. தொடர்ந்து வந்த யுத்த நெருக்கடியை பயன்படுத்தி எல்லா இன வியாபார முதலைகளும் செல்வங்களைத் திரட்டினர். ஆனாலும் முசுலீம்களுக்கு மட்டும் எதிரான உணர்வுகளே திட்டமிட்டு வளர்க்கப்ப ட்டன. இவற்றின் ஒட்டு மொத்த விளைவாகவே 1915இல் முசுலீம் மக்களுக்கு எதிரான கலவரம் தென்னிலங்கை பூராவும் வெடித்தது.

20ம் நூற்றுண்டின் தொடக்கம், அரசியல் பரப்பிலும் சுதேசிய உணர்வு தோற்றமெடுத்தது. பொருளாதார மேலாதிக்கத்தை அடைய அரசியல் அதிகாரத்தின் அவசியத்தை சிங்கள முதலாளி வர்க்கம் உணாந்து தமது அரசியல் அதிகார உரிமைகளை பிரிட்டிசாரிடம் கோரினர். மறுபுறம் சிறுபான்மை இனங்கள் அனைத்தையும் அந்நியர்களாக வகைப்படுத்தி, "மண்ணின் மைந்தர்களாகிய" சிங்களவர்களிற்கே அரசியல் அதிகாரம் என்ற கோசமும் பிறந்தது.

அரசியல் அதிகாரத்தைக் கோரிய சிங்கள பூர்சுவாக்கள், காலனித்துவ அரசுடன் தீவிரமாக முரண்பட தயாராக இருக்கவில்லை. அவர்களின் நலன்கள் பிரிட்டிசு அதிகாரத்தை அண்டி பிழைப்பதாகவே இருந்தது. சிறு அளவிலான தமிழ், முசுலீம் பிரதிநிதித்துவத்துடன் "இலங்கைத் தேசிய கொங்கிரசு" 1917இல் தாபிக்கப்பட்டது. இந்தியாவின் "கொங்கிரசு அரசியல் இயக்கத்தி ன்" ஒரு பிரதிபலிப்பாகவும் ஆனால் மிதவாத தன்மை மேலோங்கியும், பண்புவகை அடிப்படையில் வேறுபட் டும் "இலங்கை தேசிய கொங்கிரசு" காணப்பட்டது.

இலங்கை தேசிய கொங்கிரசில் ஆதிக்கம் செலுத்தியவர்களிடமும் தொடர்ந்து வந்த காலங்களில் ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பைவிட சிறுபான்மை இன எதிர்ப்புணர்வே மிதமிஞ்சிக் காணப்பட்டது. அரசியல் அரங்கில் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களின் மேற்தட்டு வர்க்கங்களை சார்ந்த சிறுபகுதியினர்களே ஆதிக்கம் செலுத்திய காலத்தில் சட்டசபையில் எல்லா இனங்களின் அபிலாசைகளும் நியாயமாக வெளிப்படும் விதத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சட்டசபையில் பேரின ஆதிக்கத்தை நிறுவும் நோக்குடன், அந்த இனரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு, பிரதேசவாரியான பிரதிநிதித்துவ முறை கொண்டு வரப்பட வேண்டும் என சிங்கள பூர்சுவாக்கள் குரல் எழுப்பினர். அவர்கள் சிறுபான்மை இனங்களின் ஆட்சேபனைகளை புறந்தள்ளினர்.

1931ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியல் அமைப்பு சிங்கள பேரினவாதத்திற்கு சாதகமாக அமைந்தது. இனரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அமுலாகியது. முதலாளித்துவ அமை ப்பின் முற்போக்கு அம்சமான சர்வசன வாக்குரிமையும் கூட இங்கு பேரினவாத ஆதிக்கத்தை வலுப்படுத் தவே உதவியது. பொருளாதார போட்டியாகவும், மத, கலாச்சார எதிர்ப்பு வடிவங்களாகவும் வெளிப்பட்டு வந்த சிறுபான்மை எதிர்ப்புணர்வு இப்போது அரசியல் பரப்புக்கு நகர்ந்து விட்டது. ஏற்கனவே தோற்றம் பெற்று விட்ட இனவாதம் மேலும் செழிப்படைய புதிய பிரதிநிதித்துவ முறை வழி சமைத் தது.

செல்வாக்குப் பெறத்தொடங்கிய இனவாதம், 19ம் நூற்றுண்டின் இறுதியிலும், 20ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் தொழிலாளர்



அமைப்புக்களையும், கட்சிகளையும், தொழிலாளர்களின் ஒற்றுமையையும் எவ்வாறு சிதறடித்திது என்பது குறிப்பாக கவனிக்கவேண்டிய அம்சமாகும். 1880, 1890 களில் பௌத்த சிங்கள மறுமலர்ச்சிப் பின்னணியில் இனவாதம் வெளிப்பட த்தொடங்கிய வேளை, எல்லா இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையிலான வர்க்க ஐக்கியம் சிறப்பாகக் காணப்பட்டது. சிங்கள, இலங்கைத்தமிழ், இந்தியத்தமிழ், இலங்கை முசுலீம், மலையாள மற்றும் மலேஇனத்தொழிலாளர்கள் வர்க்க உணர்வு மிக்கவர்களாகக் காணப்பட்டனர். தொழிற்சங்கப் போராட்டங்களை வெற்றிகரமாக நடாத்தினர். 1910-1915களில் சிங்கள தொழிலாளர்களின் சிறுபகுதியினர் இனவாதத்துள் இழுபட்டு முசுலீம்களுக்கு எதிரான கலவரங்களில் பங்கு கொண்டிருந்தாலும், பொதுவாக 1920கள் வரையிலும் தொழிலாளர் ஒற்றுமை வலிமையாகவே இருந்தது. அப்போது இருந்த "இலங்கை தொழிலாளர் யூனியன்" பல்லினத் தன்மையதாகவும், பலமானதாகவும், ஆளும் வர்க்கங்களுக்கு அச்சுறுத்தலாகவும் காணப்பட்டது. 1928இல் உருவாக்கப்பட்ட "இலங்கை தொழிலா ளர் கட்சியில்" (Ceylon Labour Party) ஏ.ஈ. குணசிங்காவின் தலைமையிலான செயற்குழுவில் மகாதேவா, முத்தையா போன்ற சிறுபான்மை இனத்தவர்களும் இருந் தனர்.

தொழிலாளர்கள் மத்தியில் பிளவும் மோதல்களும் 1930களில் ஏற்படத் தொடங்கியது. டொனமூர் அரசியல் அமைப்பை ஒட்டி எழுந்த இனரீதியான வாதப்பிரதிவாதங்களும், அப்போது நிலவிய உலகப்பொருளாதார நெருக்கடியினால் உள்நாட்டில் ஏற்பட்ட பொருளாதார தேக்கங்களும் மேற்படி நிலைமைக்கு காரணங்களாகும். உணவுப் பஞ்சம், ஏற்றுமதி பொருட்களுக்கு விலை வீழ்ச்சி, இறக்குமதி பண்டங்களின் விலை ஏற்றம் போன்றவற்றால் வேலையிழப்புகளும், வறுமையும் என்று நிலைமை மோசமடைந்த இக்கட்டத்தில், இன்னொரு புறம் பெருந்தோட்ட உற்பத்தி துறை வீழ்ச்சியுடன் அதனுடன் தொடர்பாக கொழும்பில் செயல்பட்டு வந்த பல்வேறு தொழில் துறைகளும் சரிவடைந்தன. அரச, தனியார் துறை ஊழியர்கள், தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

ஊதியக் குறைப்புக்கள் செய்யப்பட்டன. ஊழியர்களும், தொழிலாளர்களும் தொழிற்சங்கப் போராட்டங்களில் குதித்தனர். இப்போராட்டங்களில் கணிசமான மலையாளித் தொழிலாளர்கள் காத்திரமான பங்கை வகித்தனர். எனினும் வேலை நிறுத்தங்களை உடைக்கும் நோக்கில் ஒரு பகுதி மலையாளி மற்றும், இந்திய தமிழ் தொழிலாளர்களை மிகவும் அற்பமான கூலியில் முதலாளித்துவ வர்க்கத்தினர் திட்டமிட்டு அமர்த்தினர். இவை தவிர நகர்ப்புற ங்களில் சிங்கள தொழிலாளர்கள் வேலையின்றி அலைய மலையகத் தில் தமிழ் தொழிலாளர்கள் ஓரளவு வேலை உத்தரவாதம் உடையவர்களாக காணப்பட்டனர். இந்த நிலைமைக ளின் யதார்த்தங்கள் சிங்கள தொழி லாளர்களுக்கு புரியவைக்கப்படாமல் பதிலாக தொழிலாளர்கள் தலைமை யினால் இனரீதியில் திரிக்கப்பட்டு காட்டப்பட்டன. சிறுபான்மை இனத் தொழிலாளர்களை அந்நியர்களாகவும், துரோகிகளாகவும் காட்டி, அவர்கட்கு எதிராக சிங்கள தொழிலாளர்களின் உணர்வுகளை தொழிலாளர் தலைமை தூண்டிவிட்டது. 1920 களில் வர்க்க ஒற்றுமைக்குப் பாடுபட்ட ஏ.ஈ.குணசி ங்க போன்றவர்களே 1930 களில் இனவாதப் பிரச்சாரத்தில் இறங் கினர்.

சர்வதேசரீதியில் ஏற்படும் ஒவ்வொரு பொருளாதார நெருக்கடிகளும், முதலாளித்துவ அமைப்பின் சர்வவியாபக முரண்பாடுகளின் வெளிப்பாடாக புரிந்து கொள்ளாத அல்லது புரிந்து கொள்ள விரும்பாத சக்திக்ள் அவற்றை எவ்வாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது குறுகிய இனவாத நோக்கங்களுக் காக பயன்படுத்தினர் என்பதை இங்கு காணலாம். இலங்கை வரலாற் றில் 1915 களின் முதலாம் உலகப் போர் நெருக்கடியின் போது முசுலீம் களுக்கு எதிரானதாகவும் 1930களில் சிறுபான்மை இனத் தொழி லாளர்கட்கு எதிராக ஏ.ஈ.குணசிங்க போன்றவர்களின் தலைமையின் கீழும் இனவாதம் தொழிற்பட்டதை காணலாம். "அந்நியர்கட்கு வேலை வாய்ப்பு சிங்களவர்கட்கு வேலை இல்லை" என்ற கோசம் சிங்கள தொழிலார் மத்தியில் இனவாத தீயை மூட்டிவிட்டது. ஒருகாலத்தில் ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த தொழிலார்களுடன் இணைந்து தீவிரமாக வர்க்கப்போராட்டத்தில் ஈடுபட்ட சிங்களதொழிலாவர் மத்தியில் படிப்படியே பேரினவாதம் ஊடுருவிச் செல்வாக்குப் பெற்றது. முடிவில் வர்க்க ஐக்கியத்தியத்தை குப்புற வீழ்த்திவிட்டு அதன் இடத்தை இனஉணர்வு எடுத்துக்கொண்டது. இனஉணர்வு பலம் பெற்ற வேகத்தில் வர்க்க உணர்வும் பலவீனமடைந்தது. 1936ல்சிங்கள புதுவருட கொண்டாட்டங்களில் பூர்சுவா தலைவர் D.S. சே னநாயக்காவுடன் தொழிலாளார் தலை வர் A.E. குணசிங்காவும், இணைந்து கொள்கிறார்.

"சிங்களவர் என்ற வகையில் நாம் ஒரே கொடியின்கீழ் அணிதிரள வேண்டும்." என A. E. குணசிங்க கோசிக்க "நாங்கள் ஒரே ரத்தமும் ஒரே தேசமும் ஆகும். நாம் தேர்ந் தெடுக்கப்பட்ட புனித மக்கள். புத்தர் சொன்னார் அவருடைய மதம் 5500 வருடங்கள் வரையிலும் நீடிக்கும் என்று. அதன் அர்த்தம் மதத்தினி காவலர்களாகிய நாம் அதுவரை காலமும் நீடிப்போம் என்பதாகும்." என D.S.சேனநாயக்கா முழங்கினார். இரண்டு முரண்பட்ட வர்க்கங்களின் தலைமைகள் இனவாதத்தினுள் சங்கமிப்பது இங்கு நடைபெறுகிறது.

"இந்திய தமிழ்த் தோட்டத் தொழி லார்கட்கு நிரந்தரமான அரசியல் உரிமையை கொடுத்தால், அது பெரு ம்பான்மை இனத்திற்கு அரசியல் ஆபத்தையே கொன்டுவரும்" எனA.E சட்டசபையில் குரல் எழுப்பினார். அநாகரிகதர்மபால காலதத்து இன வாத பிரச்சாரத்துக்கு ஒப்ப 1930 களில் தொழிற்சங்கப் பத்திரிகை களும் கூட இனவாத பிரச்சாரத்தை முடுக்கி விட்டன. இலங்கை தொழி லாளர் யூனியனின் < Viraga>என்ற "விராக" பத்திரிகை சிங்கள பௌத்த இனம் ஏனைய இனங்கள் யாவற்றையும் விட மேன்மையானது, என்ற சித்தாந்தத்தைப் பரப்பியது. சிங்களவர்களின் வர்த்தகமும், தொழில் வாய்ப்புகளும், வளங்களும் அந்நியர்களால் பறிக்கப்பட்டு விட்டதாக எழுதித்தள்ளியது. பலவேறுவகையிலும் பொருளாதார நெருக்கடிகள் உருவாகிவிட்டால்; அதறகான கர்த்தாக்கள் இலங்கையரல்லாதோர் என்றே சொல்லப்பட்டது.இங்கு "இலங்கையர்" என பேரினவாதிகள் சிங்கள இனத் தை மட்டுமே அர்த்தப்படுதத்னர். மேதினக் கூட்டங்களில் கூலி உயர்வு, வேலை நிலமைகள் பற்றிய வழமையான கோரிக்கைகள் எழாமால் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான கோசங்களும், உணர்வுகளுமே வெளிக்கிளம்பின.

டொனமூர் அரசியல் அமைப்பும், 1940 களில்கொன்டு வந்த சோல்பரி அரசியல் அமைப்பும்,சர்வசன வாக்குரிமையை வழங்கின. தேர்தலில் போட்டியிட்டு பாரளுமன்றம் சென்று ஆட்சி அமைக்கும் அரசியல் கட்சிகளின் தோற்றத்துக்கு இவ்வரசியல் அமைப்புகள் வழிவகுத்தன. அப்போது பலவீனமாக கானப்பட்ட முதலாளித்துவ கட்சிகளின் பிரதிநிதிகளும் இனவாத தொழிலாளர் தலைவர்களும் அதிகாரத்தில் தம்மை பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடன்,இனவாதத்தை வளர்த்தெடுத்தனர்.



<u>அரசியல் பாப்பில் இனவாதத் தாக்குதல்:–</u>

சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 1947 இல் தேர்தல் நடைபெற்றது. குறைந்த பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சி அமைத்த யூ.என்.பி.க்கு எதிரான பலமான அணியாக, அச்சுறுத்தலாக இடதுசாரிக் கட்சிகள் விளங்கின. இடதுசாரியினர் தமிழ் தோட்டத் தொழிலாளிகளின் பெருமளவு வாக்குகளைப் பெற்றிருந்தனர். தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளின் பலத்தால் மட்டும் இலங்கை-இந்திய கொங்கிரசின் 7 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் இடதுசாரிகளுடன் இணைந்து யூ.என்.பி. அரசின் முதலாளித்துவ நலன்காக்கும் சட்ட மூலங்கள் அனைத்தையும் எதிர்த்தனர். பலவீனமான ஆளும் வர்க்க அமைப்பாக இருந்த யூ.என்.பி. அரசுக்கு இது பெரும் அச்சுறுத்தலாகியது. அப்போது யூ.என்.பி. க்கு மாற்றாக இடதுசாரிகளே இருந்ததால் தீவிர சோசலிச விரோதியான D.S. சேனநாயக்கா ஒரே தடவையில் இரண்டு இலக்குகளை குறிவைத்தார். இரண்டிலும் உடனடியாகவும் நீண்டகால அடிப்படையிலும் சிறுபான்மை இனங்களே பெரிதும் பாதிப்படைவனவாக இருந்தன. ஒரு இலக்கு தமிழ்த் தோட்டத் தொழிலாளிகளின் குடியுரிமை, வாக்குரிமை என்பவற்றைப் பிடுங்கி இனவாதத்தைப் பலப்படுத்திக் கொண்டது, இரண்டாவது இலக்கு இடதுசாரிகளை பலவீனப்படுத்தியது ஆகும். இதன் மூலம் தான்சார்ந்த வர்க்கத்தின் நலன்களைக் காத்துக் கொண்டார்.

தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை அங்கீகரிக்கப்பட்டால் அது சிங்களவர்கட்கே ஆபத்தாகும் என்பதே D.S. இன் குறிப்பான பிரச்சாரமாகும். சோல்பரி அரசியல் அமைப்பின் 29 வது சரத்து சிறுபான்மை இனங்களுக்கு வழங்கிய அரசியல் அமைப்பு வடிவ பாதுகாப்பையும் மீறியே குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. செல்வநாயகம் தலைமையிலான ஒரு பிரிவு இதை எதிர்த்த அதே வேளை ஏனைய சுதேசிய தமிழ், முசுலிம் சிறுபான்மை தலைமைகள் தமது வர்க்க நலன்களைக் கருதி இந்த அடிப்படை மனித உரிமை மீறலை ஆதரித்து வாக்களித்தனர். உரிமைப் பறிப்புகளுக்கு எதிராக போடப்பட்ட வழக்குகளில் திட்டவட்டமாக தீர்ப்புக் கூறாது நீதிபதிகளும் நழுவிக் கொண்டனர். ஓர் பகுதி இடதுசாரிகள் உரிமை பறிப்புச் சட்டங்களை தீவிரமாக எதிர்த்தாலும் பாராளுமன்ற வாதத்தினுள் மூழ்கிவிட்ட அவர்கள் இதற்கு மேல் எதுவும் செய்ய தயாராக இல்லை.

மக்களுக்கு தொடர்ச்சியான அரசியல் போதனையூட்டி அமைப்பாக்கி போராட்டத்தில் ஈடுபடச் செய்வது என்பதற்கு மாறாக 5வருடங்களுக்கு ஒரு தடவை கவர்ச்சியான உணர்ச்சியூட்டும் கோசங்களுடன் மக்களிடம் செல்வது, எப்படியும் வாக்குகளை கவர்ந்து விடுவது என்பது பாராளுமன்ற வாததின் குறிப்பான பண்பாகும். எனவே பாராளுமன்ற அரசியல் வாதிகள் ஒரு போதும் மக்களை வழிநடாத்த முனைவதில்லை. மக்களின் பின்னால் ஓடி அவர்களுக்கு விருப்பமானவற்றையே பேசுகின்றனர். இதன் மூலம் பாராளுமன்ற ஆசனங்களையும் ஆட்சியையும் பிடிக்க முயலுகின்றனர். பாராளுமன்ற வாதத்தையே தமது பிரதான வழிமுறையாக இடதுசாரிகள் வரித்துக் கொள்ளும் போது அவர்களும் இதே சர்ந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை எடுக்க நேர்கிறது. அரசியல் உணர்விலிருந்து மக்களை திசை திருப்புவதாக இனவாதம் உயர்ந்து நிற்கும் போது பாராளுமன்ற இடதுசாரிகளும் இனவாத அரசியலுக்கு உடந்தையாகின்றனர். உட்படுகின்றனர் அல்லது வேறு வழியின்றி விழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிதுங்குகின்றனர். புறம் தள்ளப்படுகின்றனர்.

பௌத்த சிங்கள மறுமலர்ச்சி காலத்தில் எழுச்சி பெற்று பின்னர் ஓரளவு நீறு பூந்திருந்த இனவாத உணர்வுகள் 1940 களில் மீண்டும் சுவாலை விடத்தொடங்கியது. தரகு முதலாளித்துவ நலன் கொண்ட யூ.என்.பி. அரசு என்ன தான் இனவாத தந்திரங்களை கையாண்டாலும் சிங்கள தேசத்தின் உண்மையான அபிலாசைகளை நிறைவேற்றவில்லை அவற்றைக் கருத்திற் கொள்ளவும் இல்லை. ஏகாதிபத்திய நலன்களுக்கு சேவை செய்த அளவுக்கு சுதேசிய நலன்களைப் பொருட்படுத்தவில்லை. இதை விபரமாகப் பார்ப்போமானால், காலனித்துவ அமைப்பு ஏற்கனவே நாட்டின் தொழில் துறைகள், விவசாயம் என்பவற்றை[சுய பொருளாதாரத்தை) சிதைத்து விட்டிருந்தது. மக்களின் வாழ்வு நிலை மிகவும் மோசமாக இருந்தது. வேலையின்மை பெருகியிருந்தது. இதே வேளை ஆங்கில அரசு தனக்கு தேவையானபடி ஆங்கிலம் கற்றவர்களை உருவாக்கி விட்டிருந்தது. இவ்வாறு உருவானவர்கள் சிங்கள உயர்குடி மற்றும் வடமாகாண தமிழர்களாக இருந்தனர். இப் பிரிவினர் உயர்தர வருமானத்தையும் ஏனைய சலுகைகளையும், அதிகாரங்களையும் அனுபவித்து வந்தனர். இவற்றைக் கொண்டு பெருவாரியான சொத்துக்களையும், உடமையாக்கி கொண்டனர்.

சிங்கள மொழியில் மட்டுமே கல்வித்தகைமை பெற்றிருந்த மத்தியதர வர்க்கப் பிரிவினர்கள் இக் கட்டத்தில் கணிசமாக உருவாகியிருந்தனர். பொருளாதார நெருக்கடி மோசமடைந்திருந்த அக் கட்டத்தில் இப் பிரிவினர் தொழில் வாய்ப்புகளை தேடியலைந்தனர். ஆனுல் அரச துறைகளிலும் தனியார் துறைகளிலும் இருந்த வாய்ப்புகள் அனைத்தும் ஆங்கிலத் தேர்ச்சிபெற்ற யாழ்ப்பாணத் தமிழர்களாலும் உயர்குடி கிருத்துவர்களாலும் நிரப்பப்பட்டிருந்ததை கண்டனர் .யூ.என்.பி. அரசும் சிங்கள மொழியில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் எவ்வித சிரத்தையும் காட்டவில்லை இவற்றின் விளைவுகளாக நடுத்தர வகுப்பினர்களின் உளக் குமுறல்கள் மொழிக்கோசங்களாக வெளிப்பட்டன.

"சிங்கள மொழி அரச கரும மொழியாக வேண்டும்" என்ற கோரிக்கை கூர்மை பெற்றது. இத்துடன் சுயமொழிக் கல்வி மேலும் விரிவு படுத்தப்பட வேண்டும் எனவும் சுய மொழிக் கல்வி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்தன. சிங்கள மொழியில் கற்று ஆனால் சலுகைகள் எதுவும் அற்றவர்களாக இருந்த பிரிவினர்களுக் கூடாக சிங்கள தேசத்தின் அபிலாசைகள் இவ்வாருாக வெளிப்பட்டன.

"சிங்களம் அரசகரும மொழி" எனும் கோரிக்கையின் தோற்றத்தை சற்று பின்னோக்கி பார்த்தால்... சிங்கள தேசியவாத எழுச்சியின் பின்னணியில் சிங்கள மொழியின் முக்கியத்துவம் குறித்த கோரிக்கைகள் ஓரளவுக்கு 1940 களின் தொடக்கத்தில் அரசியல் வாதிகளுக்கு நெருக்குதல்களை கொடுத்தன. இந்த புற நெருக்குதல்களின் விளைவாக 1944ம் ஆண்டு சட்ட சபையில் J.R. ஜெயவாத்தன ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அரச கரும மொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்கள மொழி கொண்டு வரப்படவேண்டும் என்பதே அத் தீர்மானம் ஆகும். ஆனுலும் சுதேசி மொழிகளாற் சிங்களமும் தமிழுமே அரச கரும மொழியாக வேண்டும் என்று சட்ட சபையின் தமிழ் பிரதிநிதிகள் உடனடியாக திருத்தம் கொண்டு வந்தனர். சதேசி மொழிகளில் ஒன்றுக்கு மட்டும் தனி சலுகை வழங்குவது,ஏனைய



மொழிகளை பயன்படுத்தும் சமூகங்களின் எண்ணற்ற வாய்ப்புகளை பலவந்தமாக பறித்தெடுப்பதாகிறது. இங்கு தமிழ் மொழிக்கு முக்கியத்துவத்தை குறைப்பது உயர் மற்றும் நடுத்தர தொழில்களில் இருக்கும் பெருமளவு தமிழர்களை நடுத்தெருவில் விடுவதாகிறது.

தீர்மானம் திருத்தத்துடன் நிறைவேறிய போதிலும் நடைமுறைப்படுத்தும் ஆர்வம் அரசுக்கு இருக்கவில்லை. ஆனால் சிங்கள மொழிக்கான கோரிக்கைக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகியது. இந்த இடைக்காலத்தில் தான் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றி வந்த தமிழர்கட்கு எதிரானதாக மொழிப்பிரச்சனை வளர்த்தெடுக்கப்படுகிறது. ஆங்கிலத்தை அரசுக்கட்டில் இருந்து இறக்குவது, சிங்களத்தை மட்டுமே அரசகரும மொழியாக உயர்த்துவது, இதுவொன்றே சிங்கள மக்களுக்கு விடிவைத் தரும், என்ற கருத்தாக்கம் வலுவடைந்தது. இக் கருத்து சிங்கள குட்டி பூர்சுவா, நடுத்தர வர்க்கங்கள் போன்றவற்றை அலை அலையாக கவர்ந்திழுத்தது. புதிதாக உருவாகி வந்த சமூகப் பிரிவுகளாகிய நகர்ப்புற கிராமப்புற குட்டி முதலாளித்துவ வர்க்கங்களின் நலன்கள் உள்ளூர பொருளாதார அடிப்படையில் அமைந்திருந்தாலும் அவ் வேட்கை மொழியுடன் சேர்ந்து மதம், கலாச்சாரம் என்ற வடிவங்களிலும் தீவிரமாக வெளிப்படத் தொடங்கியது. இவ் உணர்வுகளை எதிரொலித்தது சிங்கள மகா சபையும் அதன் பிரதிநிதிகளும். முன்னைய சட்ட சபையிலும் இப்போது பாராளுமன்றத்திலும் சிங்கள மொழி, சிங்கள-பௌத்த கலாச்சாரம், பௌத்த மதம் குறித்து தீவிரமாக பேசத் தொடங்கினர். புத்துயிர்ப்பு அடைந்து வரும் பௌத்த சிங்கள தேசிய உணர்வுகளையும்,அது நிராகரிக்கப்பட்டதால் எழுந்த உக்கிரமான உணர்வலைகளையும் S.W.R.D பண்டாரநாயக்கா தீர்க்கமாக உணர்ந்தார். தனது பௌத்த சிங்கள தேசிய உணர்வை தற்காலிகமாக கைவிட்டு யூ.என்.பி இனுள் செயற்பட்ட அவர் சமகாலத்தில் மகா சபையையும் தலைமை தாங்கினார். ஆளும் கட்சித் தலைமைப் போட்டியில் தான் புறம் தள்ளப்பட்டு தோல்வியுறுவதை உணர்ந்த பண்டாரநாயக்க கனிந்து வந்த வாய்ப்பை உரிய காலத்தில் சுலபமாகவே பயன்படுத்திக் கொள்கின்றார்.

1952இல் யூ. என். பி. யை விட்டு வெளியேறிய பண்டாரநாயக்க சிங்கள மகா சபையின் துணையுடன் புதிய கட்சியை அமைத்தார். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற இனவாதத் தை திட்டவட்டமாக பயன்படுத் தினர். வெகுசனங்கனளக் கவர்ந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற இனவாதம் பிரதான தூண்டிலானது. அத்துடன் பலவீனமான தனது இருப்பைப் பலப்படுத்தும் நோக்குடன் அவர் முன்பை விடவும் இன்னும் ஆழமான கட்டத்திற்கு இனவாதத்தை வளர்த்தெடுக்க வேண்டியிருந்தது. தொடர்ந்து வந்த அரசியலில் இப் போக்கு வெளிப்படையாகவே தெரிகிறது. தேர்தல் போட்டிக்களம் இதற் கான வாய்ப்புக்களை வழங்கியது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்று வதாயின் மக்களைக் கவரும் வகையில் கோசங்களை வைக்க வேண்டயிருந்தது. ஏற்கனவே தோன்றிவிட்ட இனவாத கட்சி அரசியலில் இனவாதம் பயன்படுத்தப்படுவதும் பின் வளர்த்தெடுக்கப்படுவதும் வளர்த்தெடுக்கப்பட்டு மீண்டும் பயன் படுத்தப்படுவதான ஒரு கட்டம் தோன்றியது. அதற்கேற்ப அன்றைய சமூக வளர்ச்சிக் கட்டத்தில் சிங்கள மொழியின் பயன்பாட்டு ஆர்வம் தீவிரம் அடைந்திருந்தது. சிங்கள தேசத்தின் எதிர்பார்ப்புகளை உரிய நேரத்தில் சரியாக மதிப்பிட்ட பண்டாரநாயக்க அவற்றிக்கு இனவாத வடிவம் கொடுத்து அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற பயன்படுத்திக் கொண்டார். "24 மணி

www.tamilarangam.net

நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக நடைமுறைப்படுத்துவேன்" என்ற உணர்ச்சி பூர்வமான கோசத்தை கையேந்தினார். அவ்வாறே 1956இல் ஆட்சி கட்டிலும் ஏறிக் கொண்டார். இவையாவும் சமாதான சூழ் நிலையில் நடந்தேறவில்லை. மொழிப்பாகுபாட்டுக்கு எதிராக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் காலிமுகத்திடலில் குண்டர்படைகள் கொண்டு தாக்கப்பட்டன இனவாதம் நாடு பூராவும் பற்றி எரிந்தது. 1956, 1958, கலவரங்கள் வெடித்தன. தமிழர்கள் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், உடமைகள் சூறையாடப்பட்டன, எரிக்கப்பட்டன.

ஏ.ஈ. குணசிங்க பிரிவு தவிர்ந்த ஏனைய இடதுசாரிகள், பூர்சுவா கட்சிகளின் இனவாத அணுகு முறைகளை தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். எனினும் இரண்டு பிரதான பூர்சுவாக் கட்சிகளும் தேர்தல் வெற்றியை குறியாகக் கொண்டு இன வாதத்தையே பிரதான தந்திரோபாயமாகப் பயன்படுத்தியதால் அதே பாராளுமன்ற வாதத்தினுள் வீழ்ந்துவிட்ட இடதுசாரிகளால் தமது எதிர்ப்புக்ளை ஒரு எல்லைக்கு அப்பால் கொண்டு செல்ல முடியவில்லை ஏனைய புரட்சிகர பணிகளை கைவிட்டு பாராளுமன்ற பாதைக்குள் ஏனைய பூர்சுவாகட்சிகள் போன்று மூழ்கி அதுவே தமது பிரதான அரசியல் வழி என்று வகுத்துக் கொண்ட நிலையில் இந்த இடதுசாரிகளால் வேறு என்ன தான் செய்திருக்க முடியும்?

மொழி வெறியின் தீவிரத் துடன் இனவாதம் வளர்ச்சி பெற்றது, தொடர்ந்து வந்த தேர்தல் போட்டிகள் நிலைமையை உக்கிரமடையச் செய் தன. பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன அல்லது கிடப்பில் போடப்பட்டன. 1960 களில் மொழி வெறி மேலும் கூர்மை யடைந்ததுடன், சிங்கள "சிறி" எழுத்துத் திணிக்கப்பட்டது. தமிழ் எழுத்துக்கள் தார் பூசி அழிக்கப்பட்டன. ஏனைய இனவாதிகளுடன் இணைந்து அனேகமான இடதுசாரிகளும் தோசை, மசால்வடை, கோசங்களையும் தமிழர் விரோத கோசங்களையும் எழுப்பினர்.

"சிங்களம் மட்டும்" கோரிக் கையை உயர்த்திப்பிடித்த பாசா பெரமுன(மொழி முன்னணி) என்ற தீவிர இனவாத அமைப்பு தென்னிலங்கை பூராவும் கிளைகள் அமைத்து இயங்கியது. இதன் தாக்கம் இடதுசாரி கட்சிகளையும் பாதித்தது. இரண்டு மொழிகளுக்கும் சமத்துவம் வழங்கலாமா? என்ற சர்ச்சையில் 'இடதுசாரிகள்' பிளவுண்டனர். (மொழிச் சமத்துவம்) கோரி ஒருபிரிவால் செய்யப்பட்ட பிரச்சாரக் கூட்டங்கள் இனவாத குண்டர்களால் தாக்கப்பட்டன. மற்றொரு தரப்பு இடதுசாரிகள் சிங்களம் மட்டும் தீர்மானத்தை ஆதரித்தனர். 1951 இல் சிங்கக் கொடியை தேசியக் கொடியாக ஏற்பதை இனவாதம் என தீவிரமாக எதிர்த்த பிரேமலால் குமாரசிறி (கொம்யூனிசு கட்சி) ஒரு சில வருடங்களுக்குள்ளேயே 'சிங்களம் மட் டும் அரச கரும மொழி' கோரிக் கையை ஆதரித்தார்."சுய பாசைகள்" என்ற ஆரம்பக் கோசம் "சிங்கள பாசை மட்டும்" என்றாகியது. ஆங்கிலேய ஆட்சிக்கும், உயர்குடி ஆதிக்கத்திற்கும் எதிராக கிளர்ந்த உணர்வுகள் இப்போது தமிழர் எதிர்ப்பாக வடிவம் பெற்றிருந்தது.

இக்கட்டத்திலும் இதற்கு பின்னரும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் அதை திடமாகவும் இனவாதம் பயன்படுத்தப்படும் நிலை திட்டவட்டமாக வெளிப்பட்டது. வெகுசனங்களின் மத்தியில் இனவாத சித்தாந்தத்தை ஆழமாக ஊன்றி விட அரச யந்திரத்தின் எல்லா உறுப்புக்களுமே பயன்படுத்தப்பட்டன. ஏனைய சித்தாந்தக் கூறுகளும் இம் முயற்சிக்குத் துணை போயின. வரலாறு, மதம், கல்வி போன்ற எல்லா ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன. 1972 ஆம் ஆண்டு



புதிய குடியரசு அரசியல் அமைப்பு, கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்புக்களில் பாரபட்சம், புதிய பாடத்திட்டங்கள், தமிழ் பிரதேசங்களில் பரவலான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், புனித நகரத் திட்டங்கள், அடுத்தடுத்து திட்டமிட்ட இனக்கலவரங்கள் போன்ற பல்வேறு ஏற்பாடுகள் மூலம் இனவாதம் வலுவூட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. இவ் அம்சங்களை ஓரளவு தனித்தனியாக பரிசீலிப்போமாயின்.....

## வரலாற்றுப் பாரம்பரியமும், இதிகாசங்களும் ஆற்றிய பங்கு

சிங்கள இனத்திற்கு மட்டுமே 2300 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு என்று சிங்கள மக்கள் பெருமையுணர்வு கொள்கின்றனர். மகாநாம என்ற பிக்குவால் 6 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட "மகா வம்சம்" என்ற இதிகாச நூல் மீது அவர்கள் ஆழமான விசுவாசம் கொண்டுள்ளனர். வேதநூல் போல அதை நம்புகின்றனர். இவையாவும் கணிசமான தாக்கத்தை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தியிருந்தன. உண்மையில் மகாவம்சம் விஞ்ஞான அடிப்படையிலான வரலாறல்ல. மேலும் பின்வந்தோர்களால் அது மாற்றியமைக்கப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. இந்நூலை ஆதாரமாகக் கொண்டு சிங்களப் புத்திஜீவிகள் பலர் இன்றைய சமூக, அரசியல் இயக்கப் போக்குகளை விளக்க முனையும் திட்டமிட்ட முயற்சிகளையும் நாம் காணலாம்.

மகாவம்சம் மூலமாகவும் மரபுவழிக்கட்டுக் கதைகள் மூலமாகவும் சிங்கள மக்கள் இரண்டு வகையான ஆனால் முரண்பட்ட நம்பிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். தென்னாசியாவில் சிங்கள இனம் வேறு போக்கிடமற்ற மிகவும் சிறுபான்மையான இனம். இம்மண்ணில் எவருக்கேனும் இடம் அளித்தால் அவர்கள் முழு சிங்கள இனத்தையும் விரட்டியடித்து விடுவர். இவ்வாறான அச்சத்துடன் கூடிய தாழ்வு மனச்சிக்கல் ஒன்றும், ஆரிய வம்சத்தைச் சேர்ந்த மேன்மக்களே தாம் என்ற பெருமை உணர்வு மற்றதும் ஆகும். லங்க சாம்ராஜ்ய இளவரசிக்கும், சிங்கத்திற்கும் பிறந்த சிங்கபாகுவின் வீரமிக்க வம்சாவழி தாம் என்ற நம்பிக்கை. இவ்விருவகை நம்பிக்கையையும் கொண்டு அரசியல் தலைமைகள் மக்களை பயப்படுத்தியும் போலி பெருமை கொள்ளச் செய்தும் தமது இனவாத அரசியலுக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

வரலாறுகள் திரிக்கப்பட்டன தென்னிந்திய மன்னர்களால் மேற் கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் யாவும் பெளத்த மதத்தையும், சிங்கள இனத்தையும் அழிக்கவே நடத்தப்பட் டதாக போதிக்கப்பட்டது. எல்லாளன் தமிழ் ஆக்கிரமிப்பாளனாகவே பிரக டனப்படுத்தப்பட்டான். பெளத்த சிங்கள இனத்தின் எதிரியாகக் காட்டப்பட்டான். தீவிர சிங்கள பெளத்த மன்னன் "துட்ட கைமுனு" 500 பெளத்த பிக்குகள் புடைசூழ படையுடன் சென்று எல்லாளனை கொன்றதாக சொல்லப்பட்டது. முழுக்கவும் இனத்தையும், மதத்தையும் காக்கும் யுத்தமாக இது காட்டப்பட்டது. ஆனால் எல்லாளன் படைகளில் "மிட்டா", "காமினி", "திக்காபய" போன்ற சிங்கள படைத் தலைவர்கள் இருந்துள்ளனர். அது போல துட்ட கைமுனுவின் படைகளில் தமிழர்களும் படைத் தளபதிகளாக இருந்துள்ளனர். "தென்னிந்திய மன்னர்கள் முழு இலங்கையையும் ஆண்ட காலத்தில் பெளத்த சிங்கள மத கலாச்சாரங்களுக்கு எதிராக இருக்கவில்லை, மாறாக அவற்றை பாதுகாத்தனர்" என்று பேராதனை பல்கலைக்கழக,புவியியல் பேராசிரியர் கலாநிதி S. வெறன்ன நாயக்கா எழுதுகின்றார். ஆனல் சிங்களவர் ஆட்சியில் பொன் ெ[illegible] இலங்கை, தமிழ் மன்ன[illegible]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாசமாக்கப்பட்டது. வறுமைக்கு அவர்களே காரணம் என்று இனவாதிகளால் சொல்லப்பட்டது. இப்போதும் சிங்கள நாடானது தென்னிந்திய தமிழர், வட-கிழக்குத் தமிழர், மலையகத் தமிழர்களின் வடிவங்களில் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக கருத்தூட்டப்பட்டது.

பௌத்த சிங்களவர் "மேன்மக்கள்" என்ற கருத்துக்கு வெறும் இதிகாசங்களே ஆதாரங்களாக்கப்பட்டன. புத்தபிரான் இந்நாட்டில் இருந்ததாகவும் அப்போது விஜயன் இங்கு வந்ததாகவும்,பௌத்த மதத்தை காக்கும் பொறுப்பை புத்தர் அவரிடம் ஒப்படைத்தார் என்றும் கதைகள் வழக்கிலுள்ளன. வெகுசனங் கள் மத்தியில் மிகப் பாரதூரமான நாடோடிக்கதைகளும் கூட உள்ளன. பௌத்த ஒழுக்க நெறிகளை காப்பாற்ற பௌத்த மத நம்பிக்கை அற்றோரை கொலையும் செய்யலாம் என அவை நியாயப்படுத்துகின்றன. தவிர தம்முடைய கலாச்சாரத்தைக் கொண்டிராத ஏனைய சமூகப் பிரிவுகள் சிங்கள நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றன. 13ம் நூற்றாண்டு காலத்தில் மாயாரபடேதேரோ (Mayarapade Thero) வினால் எழுதப்பட்ட "பூஜாவலி" (Pujavali) என்ற நூல் "இத்தீவு புத்தருக்கு சொந்தமானது, எனவே பௌத்த மத நம்பிக்கைக்கு எதிரானவர்கள் இங்கு நிரந்தரமாக வாழமுடியாது" என்று கூறுகிறது. மேற்படி கட்டுக்கதைகளும் கறுத்துக்களும் பிற்காலத்தில் புதிய இலக்கிய வடிவங்களுக்குள்ளும் புகுத்தப்பட்டன. "யார் இந்தப் புலிகள்" (Kauda Kotiya) என்று 1985 இல் வந்த பிரசுரம் ஒன்றில் "...சிங்கள இனம் அல்லாத இந்த சிறுபான்மை இனக்குழுவானது, மிக அநியாயமான முறையில் சிங்களவர்களின் தாய்நாட்டையும் அவர்களின் உரிமைகளையும் அழிக்க முயல்வது மட்டுமல்வ, அப்பாவிச் சிங்கள மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளையும் புரிகின்றனர....." என எழுத ப்படுகிறது. 1970ம் ஆண்டு வெளியான "சிங்களவர் கண்களுக்கு புலப்படாத எதிரிகள்" (Sinhalaya Adisi Hatura) என்ற பிரசுரத்தில்" ....இலங்கை சிங்கள நாடு, தமிழ் நாடு என இரண்டாகப் பிரிக்கப்பட்டால் சேருவில், தீகவாவி, கிரிவிகாரை, நாகவிகாரை போன்ற பிரபலமான தளங்களும், அது போல காடுகளால் மூடப்பட்டுக் கிடக்கும் புனித தலங்கள் யாவும் தமிழர்கள் வசமாகி விடும்..." என கூறப்படுகிறது. 1981 இல் "**சிங்களவர்**களே பௌத்த சாசனத்தை **பாதுகாப்போம்**" என்ற பிரசுரத்தில் "சிங்கள **அரசர்** காலத்தில் ரஜரட்டவில் ஒரு பகு**தியான** வட மாகாணத்தில் காணப்படும் புவியியல் சிதைவுகளும் பண்டைய ரோகண ஆட்சியின் கீழ் இருந்த கிழக்கு மாகாணத்திலுள்ள சிதைவுகளும் சில காலமாக அழிவுக் கும் ஆபத்துக்கும் உட்படுகின்றன. இவ்வழிவுகளை தொடர அனுமதிப் போமானால் உண்மையில் சிங்களவர்களுக்கும் பௌத்தத்துக்கும் எதிரான ஆக்கிரமிப்புக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம் என்பதே அர்த்தம். இந்த ஆக்கிரமிப்பு சிங்கள பௌத்த கலாச்சாரத்தின் எல்லா சான்றுகளை யும் அங்கிருந்து ஒழித்து விடக் கூடியது..." என்றுள்ளது. புராணங்களை அடியொற்றிய நவீன கருத்தாக்கங்கள் இவைகளாகும்.

## மகா சங்கமும், பௌத்த பிக்குகளின் ஏனைய அமைப்புக்களும்

ஏற்றத் தாழ்வான பல்வேறு வர்க்கப் பின்னணிகளில் இருந்து வந்தவர்களாக பௌத்த பிக்குகள் உள்ளனர். இருந்தும் மதம்,இனம் என்று வரும் போது அவற்றின் காவலர்களாக ஒருமித்த வடிவத்தையே எடுக்கின்றனர். பௌத்த சிங்கள இனவாதத்தை அவர்கள் தீவிரமாக உயர்த்திப் பிடிக்கின்றனர். வறிய மற்றும் மத்தியதர வர்க்க



பின்னணி கொண்ட மாணவ பிக்குகள் 1960-70 களில் சங்கத்தின் பராமரிப்பின் கீழ் பல்கலைக்கழக உயர் கல்வி வாய்ப்புக்ககளை பெற முடிந்தது. பலர் சமய ஆசிரியர்களாயினர். கல்வித் துறையின் மூலம் மொழி இன வெறி தூண்டப்பட்ட போது இம் மாணவ பிக்குகள் இவ்வாறான இயக்கங்களில் தீவிர ஈடுபாட்டுடன் பங்கேற்றனர் சந்நியாசி வாழ்வு, முக்தியடைதல் போன்ற, எளிமையான பௌத்த கோட்பாடுகளை துறந்து வளமிக்கதும் உயர் கௌரவம் கொண்டதுமான மட வாழ்கைச் சுகபோகத்தினுள் பிக்குகள் நுழைந்தனர். இப்போது இவர்களின் நலன்கள் ஆளும் வர்க்க நலன்களுடன் இரண்டறக் கலப்பதாக இருந்தன. மகா சங்கத்தினர் முதலில் பௌத்த சிங்கள மறுமளர்ச்சி இயக்கங்களாகவும் பின்னர் இனவாத, அரசியல் இயக்கங்களாகவும் பரிமாணமுற்றனர்.

மகாசங்கம் தேசத்தையும் இனம், மதம் என்பவற்றையும். காக்கும் முன்னணிப்படையாகத் தன்னைக் காட்டிக் கொண்டது. ஒவ்வொரு இன வாத எழுச்சியிலும் நேரடியாக பங் கேற்றது. 1950களின் இனவாத அரசியல் இயக்கப்போக்குகளில் மகா சங்கம் தீவிர செல்வாக்கு செலுத்தியது. 1956/59 ம் ஆண்டுகளில் சங்கத்தார் கிராமப்புற குட்டி பூர்சுவா பிரிவுகளான சிறு நில உடமையாளர் ஆசியர்கள், ஆயுள்வேத வைத்தியர்களுடன் இணைந்து சுயாதீன அமைப்புகளாகிக் கொண்டனர். இதனூடக கிராமப்புறங்களிவ் மேலாண்மை செலுத்தினர். இனவுணர்வுகளை ஆழப்படுத்தினர். அணமைக்கால அரசியல் பொருளாதாரமாற்றங்களின் விளைவாக இவ்வமைப்புகளின் செல்வாக்குகள் சரிந்து விட்டாலும்; கிராமங்களும், நகரங்களும் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டதால் இரண்டு தளப்பிக்குமார்களும் இணைந்து இனவாத அரசியலில் ஒன்றாக செல்வாக்கு செலுத்துகின்றனர். வீதிப் போரட்டங்களில் கூட இறங்கிவிட்டனர்.

அகிம்சையை போதிக்க வேண்டிய தலமை பௌத்த குரு ஒருவர் வடக்கு யுத்த முனைக்கு அண்மையில் பயணமானார். யுத்த தளங்களையும் போர் அழிவுகளையும் கண்டு பாராட்டினார்; படையினர்க்கு வாழ்த்துக்கள் தெரிவத்தார். பௌத்த மதமும், பிக்குமார்களும் நேரடியாகவே யுத்தத்துடன் பிணைக்கப்படும் நிலையை இங்கு காணலாம்.

அடுத்து, மகாசங்கமும் பிக்குமார்களும் பௌத்த சிங்கள குறியீடுகளாக்கப்படுவதையும் (Symbols) காணலாம். அரசியல் கூட்டங்கள், கொண்டாட்டங்கள், மேதின ஊர்வலங்கள், தொலைக்காட்சிகளில் இவர்களுக்கு முதலுரிமை வழங்கப்படுகின்றன பத்திரிகைகளில் அவர்களின் அறிக்கைகள் முக்கியத்துவமானதாக ஒன்றன் பின் ஒன்றாக காட்டப்படுகின்றன. சிங்கள நாடு, பௌத்த மதம் என்றதன் மேலாண்மையை குறியீட்டு வடிவில் காட்டுவதாகவே இவை அமைகின்றன.

நாட்டையும் இனத்தையும் காப்பாதாக கூறி சுயாதீன இயக்கங்களாகவும் பிக்குமார் அணிதிரண்டனர். அவற்றினூடாக அரசியல் நிகழ்வுகளில் தாக்கம் செலுத்துகின்றனர். அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு தடைக்கல்லாகின்றனர். 1986ல் உருவாக்கப்பட்ட இனவாத அரசியல் கூட்டமைப்பான "தாயக பாதுகாப்பு இயக்கத்தில்" Moubima Surakima Sanvitha-naya) -இது ஓரளவு அரசியல் பின் னணியை கொண்டிருந்தாலும்- சுயாதீன அமைப்புகளாகவும் பௌத்தபிக்குகள் பங்கு கொண்டனர். இவற்றுக்கு தேசாபிமான இளம் பிக்குகள் இயக்கம், ஐக்கிய இலங்கை முற்போக்கு பிக்குகள் முன்னணி என்பன இரண்டு உதாரணங்களாகும். தாயகப் பாதுகாப்பு இயக்கத்தின் முதன்மைக் குறி தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாயகம் என்பதை நிராகரிப்பது, வட-கிழக்கு இணைப்பை எதிர்பது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடக்கத்தில் பூர்சுவா அரசியல் கட்சிகளின் நலன்களுக்கு சேவை செய்த பௌத்த பிக்குமார்களும் அமைப்புகளும் இப்போது சுயமாக வெளிப்பட்டு அரசியல் கட்சிகளுக்கே நிர்பந்தங்களை கொடுக்கும் நிலைக்கு வளர்ச்சி பெற்றுள்ளன. அன்று புத்தரின் புதல்வர்களாக பௌத்த மதத்துடன் மட்டும் பிணைக்கப்பட்டிருந்த துறவிகள் இன்று ''மண்ணின் மைந்தர்களாக'' யுத்தப்பிரியர்களாக தம்மை உயர்த்திக் கொண்டுள்ளனர்.

## பாடத்திட்டங்களில் இனவாதம்

இனவாதக் கருத்துக்களை ஆழமாக வேரூன்றியதில் அரச கல்வித் திணைக்களம் குறிப்பானா பங்கை ஆற்றியுள்ளது. இளம் சிறார்களின் மனதில் இனவாதத்தை விதைக்கும் மிகச்சிறந்த சித்தாந்தமாக கல்வித்துறை பயன்படுத்தப்பட்டது. அரசு கல்வித் திணைக்களத்தின் சிங்கள மொழிப் பாடநூல்களில் இரண்டாம் வகுப்பு வரை, சிங்களவர் அல்லாதவரோ, சிங்கள மொழி, கலாச்சாரம் தவிர்ந்த ஏனையவைகளோ இலங்கையில் இருப்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. தனியே பௌத்த சிங்கள கலாச்சாரம் மட்டுமே உள்ளதாக போதிக்கப்படுகிறது. மூன்று தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையான சிங்கள பாடநூல்களில் பௌத்த சிங்கள கலாச்சாரம் வரிவாக சொல்லப்படும் அதே வேளை தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகக் காட்டப்படுகின்றனர். பல இன, பல மத தன்மைகள் முற்றாக நிராகரிக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் இத்தகைய கல்வித் திட்டங்களினூடாக போதனை பெற்றவர்களே இன்று அரச நிர்வாகங்களையும் படைப் பிரிவுகளையும் ஆக்கிரமித்துள்ளனர். இன ஒழிப்பில் ஈடுபடுவதை நியாயமாகவும், வரலாற்றுக்கடமையை செய்யும் வீரர்களாகவும் இவர்கள் திருப்தியடைகின்றனர். 'யாதிக சிந்தனை' போன்ற இனவாத கருத்துக்களை முன்னெடுக்கும் சிங்கள புத்திஜீவிகள் மட்டுமல்ல, தொழிலாளர்கள் விவசாயிகளும் கூட இதே கல்வி முறையில் வளர்க்கப்பட்டவர்களே; சிறுவதிலேயே இனவாதக் கருத்துக்களுக்குப் பலியாகி விட்டவர்களே: எனவே சிறுபான்மை இனங்களுக்கு எதிராக, பரந்துபட்ட சிங்கள மக்களை இலகுவாக தட்டி எழுப்பி விடமுடிவதை காணலாம்.

## புனித நகரங்கள் குடியேற்றங்கள், ஆலயநிர்மாணங்களின் பாத்திரம்.

வட-கிழக்கில் சிறு பான்மை இனங்களின் தொடர்ச்சியான வரலாற்று இருப்பை மறைக்க பல முனைகளில் முற்சிகள் நடைபெற்றன. பண்டைய பௌத்த சின்னங்களும், ஆலயச் சிதைவுகளும் வடக்கு கிழக்கில் ஏராளம் உள்ளதாகவும், வட-கிழக்கு சிங்கள பூமியே எனவும் போதனைகள் நடந்தன. பல ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களால் சிங்களவர்கள் விரட்டி அடிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. சான்றுகளை வலிந்து தேட அரசே முன்னின்று அகழ்வாய்வுகளை செய்தது. பல தசாப்தங்களுக்கு முன் தனி நபர்களால் செய்யப்பட்ட முயற்சிகளை அரசே தனது முழு வளங்களையும் பயன்படுத்திச் செய்யத் தொடங்கியது.

புனித நகரங்களின் பெயரில் சிங்கள குடியேற்றங்கள் நடந்தன. ஆலயங்கள் நிர்மானிக்கப்பட்டன. புனித பிரதேசங்களில் அடிக்கடி பாரிய மத வைபவங்கள் நடாத்தப்பட்டன. இலங்கை முழுவதும் சிங்கள நாடே என்ற மேலாதிக்க முத்திரைகளை சிங்கள மக்கள் மத்தியல் தொடர்ந்து பதிக்க இவை உதவின. அரச மரங்கள் நடுவது,



புத்தர் சிலைகளை பாரியதாக அமைப்பது, ஆலயங்களை நிர்மாணிப்பது யாவவும் இனவாத சித்தாந்த மேலாண்மையை நிறுவும் நோக்குடன் செய்யப்பட்டன. தமிழ்-சிங்கள பிரதேச எல்லைகளில் இவற்றை நிறுவி வேண்டும் என்றே சிறுபான்மை இனங்களை தூண்டி அதனூடாக பேரினவாதம் கூர்மையாக்கப்பட்டது.

பிரமாண்டமான விகாரைகளும், தூபிகளும், கோபுரங்களும் பௌத்த மத எளிமைக் கோட்பாடுகளை நிராகரித்தன. பதிலாக பௌத்த- சிங்கள மேலாதிக்க உணர்வின் குறியீடுகளாக மாற்றப்பட்டன. இதைப்பற்றி "சிறிலங்கா காலச்சார உருவாக்கம்" என்ற தனது நூலின் 'சுசந்த குண திலக' எழுதுகிறார். அரசு கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பின் கீழ் ஆட்சியாளர்களால் பௌத்த மதம் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடும் அவர் ''இலங்கையில் உள்ள பிரமாண்டமான தோற்றம் கொண்ட கோபுரங்களும், நினைவுத் தூபிகளும் மக்களை ஒரு வகையில் அச்சுறுத்தி அரச அதிகாரதிற்கு பணிவிக்கும் கூறுகளாகும். சித்தாந்த மேலாண்மை வடிவங்களாக கட்டடக்கலைகளும் பாவிக்கப்பட்டன என்பதை இது காட்டுகின்றது. ரோமானியப் பேரரசிலும், கிட்லரின் சேர்மனியிலும் நடந்தவற்றுடன் இவற்றை ஒப்பு நோக்கலாம். . . .'' என்கிறார். பாரிய புத்தர் சிலை புணரமைப்பு, ஆணையிறவில் மரணமான இராணுவ வீரனின் பிரமாண்டமான உருவச்சிலை என்பன அண்மைய உதாரணங்களாகும்.

## வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பாத்திரம்

பேரினவாதக் கருத்தாக்கத்தை உருவாக்கும் திட்டமிட்ட இலக்கை வெற்றிகரமாக அடையப்பண்ணியதில் வெகுசன தொடர்பு சாதனங்களுக்கும் பிரதான பங்குண்டு. ஆங்கில, சிங்கள அரச மற்றும் தனியார் பத்திரிகைகள், அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் வானொலி, தற்போது தொலைக்காட்சி போன்றவை திட்டமிட்டுச் செயல்பட்டன. சர்ச்சைக்குரிய நிகழ்வுகளை திரித்து, மிகைப்படுத்திக் காட்டின. ஜாதிகக் கட்டுக் கதைகளை பரப்பின. பத்திரிகைகள் "ஜாதிக சிந்தனை" என்ற போர்வையில் விவாதங்கள் நடாத்தி இனவாத உணர்வுகளை வலுப்படுத்தின. கருத்தியல் வகையில் செழிப்புற்ற இனவாதம் இனக்கலவரங்களாக வெடித்து சிறு பான்மைக்கு எதிரான குரோதங்களை வலுப்படுத்திற்று. இக்குரோதத்தை தீவிரப்படுத்தும் விதமாக வெகுசன தொடர்புச் சாதனங்களும் சிங்கள இனத்திற்கே அழிவு ஏராளம் என பக்கசார்பான பிரச்சாரத்தில் இறங்கின. இதனால் அடுத்து வந்த கலவரங்கள் திட்டமிட்ட வகையிலும், தமிழ் மக்களுக்கு முன்னிலும் மோசமான அழிவுகளை ஏற்படுத்தும் இன ஒழிப்பு நடவடிக்கையாக நடாத்தப்பட்டன.

அரசியல் பொருளாதார விடயங்களில் முரண்பட்டு மோதும் அரசு சார்பு பத்திரிகைகளும் எதிரணிப் பத்திரிகைகளும், இனவாத அம்சங்களில் ஒருமித்த பண்பை வெளிக்காட்டின. சிங்கள மக்களின் உணர்வுகளை தூண்டும் வகையில் புகைப்படங்களை தேடிப் பிரசுரித்தன. சிறுபான்மை இனங்களின் அவலங்களை வேண்டுமென்றே மறைத்தன. எல்லா சந்தர்ப்பங்களிலும் சிங்கள இனமே பெரிதும் பாதிக்கப்படுவதாக காட்டின. இவ்வாறாக ஆழமான மனப்பதிவுகளை சிங்கள மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக ஏற்படுத்தி தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டன.

## ஆயுதப் படைப் பிரிவுகளிடையே இனவாதம்

1960களில் அரைகுறை இராணுவ புரட்சி ஒன்று தோல்வி கண்டது. அதில் பிரதான பங்கு வகித்த அதிகாரிகள் சிங்கள கிறித்தவர்களாக இருந்தனர். இதைத் தொடர்ந்து ஆயுதப் படைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பௌத்த சிங்கள மயமாக்கும் செயல் தொடங்கியது. 1970களில் வட-கிழக்கில் தமிழர் போராட்டம் ஆயுதப் போராட்ட வடிவமெடுத்தது. இதற்குப் பின்னர் படைப்பிரிவுகள் எதிலுமே தமிழர்கள் உள்வாங்குவது அனேகமாக நிறுத்தப்பட்டது. படையணிகளுக்கு பெயரிடுவதுகூட இனக்குறியீடுகளாகவே அமைந்தது. ‘கெமுனுரெயிமென்ட்’,சிங்கரெயிமெனட், கயபாகுரெயிமென்ட், ரயாட்டறை:.பில் போன்றவை இதிகாச வரலாற்றை இனவாதமாக பிரதிபலிக்கும் செயல்களே.

ஆயுதப்படைகள் சிங்கள நாட்டையும், இனத்தையும்காக்கும் சிங்களப்படைகளாகவே செயற்பட்டன. புராணங்களைப் பின்னணியாகக் கொண்டு, தமிழர்கள் விரோதிகளாக அவர்களுக்கு காட்டப்பட்டனர். தமிழ் மக்கள் குறித்து வெறுப்பும், துவேசமும் படையினரிடையே நிலவியது. தமிழ் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு படைகளாக அவர்கள் அடாவடித்தனம் பண்ணினர். தமிழர்களை பால்,வயது, வர்க்கவேறுபாடின்றி கொன்று குவித்தனர். தமிழர் ஒழிப்பும், ஜே.வி.பி.யினர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டதும் இராணுவத்தின் குரூரத்தன்மை எனப் பொதுமைப்படுத்தும் முயற்சிகளும் சிலரால் மேற்கொள்ளப்படுகின்றன. இது அடிப்படையில் தவறான வாதமும்மா கும். ஜே.வி.பி.யினர் அங்கத்தவர், ஆதரவாளர்கள், சந்தேகநபர்கள் என்ற வரையறைக்குள்ளேயே கொல்லப்பட்டனர். அது ஒரு களையெடுப்பு தன்மையாகவே அமைந்தது. ஆனால் தமிழர்களை கொன்றுகுவிப்பதும், அகதிமுகாம் படுகொலைகளும், தமிழ்ப்பிரதேசங்களில் குண்டு மழைபொழிவதும், பொருளாதார தடைகளும், இன ஒழிப்பின் வடிவங்களே தவிர வேறல்ல என்பது உணரப்படவேண்டும்.

## பேரினவாதத்தின் இன்றைய நிலை

1983 யூலை தமிழினப்படு கொலையுடன் பேரினவாதம் தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டது. இனப்பிரச்சனை சர்வதேச முக்கியத்துவம் பெற்று, சிறுபான்மை இனங்களுக்கு அரசயல் தீர்வு வழங்கும் நோக்கில் பல மாநாடுகள் சமாதானப் பேச்சுவார்தைகள் நடைபெற்றன, அதேபொழுது இம் முயற்சிகளுக்கு எதிராக கட்சிகளும், இனவாத அமைப்புக்களும் ஊக்கம் பெற்றன. இனப்பிரச்சனைக்கு ஏதாவது தீர்வைக் கண்டுகொள்ளவேண்டிய நெருக்கடிகளுக்குள்ளாகும் அரசு அரைகுறை முயற்சியில் இறங்கி ஒரு அற்பமான தீர்வை நோக்கி நகரும் போது சிங்கள எதிர்ப்புகள் அனைத்தும் அதைப்பெரிதுபடுத்தி, பாதகமான அம்சங்களைப் பூதகரமாக்கி, சிங்கள மக்களின் உணர்வுகளை தூண்டி தீர்வு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் போடுவதாக இருந்தன இதனால் ஆளும் தரப்பும் உடனே அஞ்சிப் பின்வாங்கிவிடுகிறது.

1985,86 களில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக 12க்கும் மேற் பட்ட இனவாத அமைப்புக்கள் உருப் பெற்றன. இவை தமிழர் விரோத பிரச்சாரங்களில் மும்மரமாக செயல்பட்டன. சிறீலங்கா சுதந்திரக்கப்சி மக்கள் வடுதலை முன்னணி, தாயக பாதுகாப்பு இயக்கம் போன்றவை பகிரங்கமாக இனவாதப் பிரச்சாரத்தில் குதித்தன. இனஒழிப்பு மேலும் மோசமடைந்த நிலையில் 1987 யூலை இந்திய-இலங்கை ஒப்பந்தம் திணிக்கப்பட்டது. இதில் இரண்டு ஆளும் வர்கங்களும் தமது நலன்களில் குறியாகநின்றன. எதையும் சாதிக்கவியலாத இவ் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு சில அற்ப உரிமைகளையும் பின்னர் அரசு பறித்துக்கொள்ள 2 வருடங்களுக்குள் அவ் ஒப்பந்தம் கேள்விக்குறியாகியது. ஆனால் ஒப்பந்தம் தன்பங்குக்கு தமிழர் விரோத உணர்வுகளை தென்னிலங்கையில் மேலும் வளர்த்துவிடவே துணை செய்தது.

1990 இல் மீண்டும் யுத்தம் வெடித்தது. மோசமான பொருளாதார அழிவுகள், மனிதப்படுகொலைகள் காரணமாக சர்வதேச நெருக்கடிகள் மறுபடியும் உருவாகின. விடுதலைப்போராட்டத்தை வேரோடு நசுக்க அவகாசம் வேண்டி அரசின் ஏற்பாட்டில் நடந்த ‘அனைத்துக்கட்சி மாநாடு’ இரண்டரை வருடங்களாக நடந்து வங்குரோத்தாகிவிட்ட நிலையில் ‘பாரளுமன்ற தெரிவுக்குழு’ மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணலாம் என்ற தீர்மானம் முதலில் சபாநாயகர் எம்.எச்.முகமதுவினாலும் பின்னர் சுதந்திர கட்சி உறுப்பினர் மங்கள முனசிங்காவினாலும் தனித் தனியே முன் வைக்கப்பட்டது. ஆச்சரியப்படும் வகையில் முகமதுவின் முன் மொழிவை சுதந்திரக்கட்சியினரும், மங்களமுனசிங்கவின் முன் மொழிவை யூ.என்.பி. யினரும் விழு ந்தடித்து ஏற்றுக்கொண்டனர். முதலாளித்துவ பாராளுமன்ற முறைமைக்கே தலைகீழானதாக இச் செயற்பாடு அமைந்தது. சாதாரண சமூக நலத்திட்டங்களையே பரசுபரம் எதிர்த்து தாக்குதல் நடாத்துவதை வழமையாகக் கொண்ட முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் சம்பிரதாய பூர்வமான செயல்முறை இங்கு வேறுபட்டது. ஒரு தரப்பை மறுதரப்பு எதிர்ப்பதற்கு பதிலாக இனப்பிரச்சனை என்றதும் ஒரு பிரிவின் பின்னால் மறு பிரிவு ஒளிந்து கொள்ள முயன்றது. இனப்பிரச்சனை தீர்வுக்கு ஏதும் உருப்படியாக செய்யப்போக அது கொண்டுவரும் எதிர்ப்பலைகளை தமது எதிராளியின் தலையில் கட்டி விடும் உள்ளெண்ணத்தையே இரண்டு பிரதான கட்சிகளும் கொண்டிருந்தன. இதை உறுதி செய்யுமாற்போல் ‘தெரிவுக்குழுவின்’ முன்னால் இது வரை இவ் விரு கட்சிகளும் எவ்வித ஆலோசனைகளையும் முன்வைக்கவில்லை. இந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் பாராளுமன்றத்தில் ஆளும் – எதிர் கட்சிகளின் மோதலிகளைத் தொடர்ந்து ஆட்டம் கண்டு வருகிறது.

நிலைமை இவ்வாறு இருக்கையில் தொண்டமான் தான் பா.ம. தெரிவுக்குழுவில் சமர்ப்பித்த அரசியல் தீர்வு யோசனைகளை பகிரங்கத்திற்கு கொண்டுவந்தார். வெளிப்படையான இனவாதமும், இனஒழிப்பு முயற்சியும் கடுமையான சர்வதேச கண்டனங்களுக்கு உள்ளாகி வந்த நிலையில் தொண்டமானின் அரசியல் தீர்வு குறித்து பாதகமான அபிப்பிராயங்கள் எதையுமே வெளிப்படையாக தெரிவிக்க இரண்டு பிரதான இனவாத கட்சிகளும் முதலில் தயங்கின, தவிர சிங்களமக்களின் உணர்வலைகளையும் முதலில் தெரி ந்து கொள்ள விரும்பின. ஆனால் மகாநாயக்க தேரோக்களும், கண்டி தலதாமாளிகை "தியவர்த்தன நிலமெ"யும், ஏனைய பிக்குமார் அமைப்புக்களும், இனவாத அமைப் புக்களும் தமது கனல் பறக்கும் கண்டனங்களை வெளியிட்டன. முன்னால் யூ.என்.பி. அமைச்சர் காமினிஜயசூரிய "சிங்கள பாதுகாப்பு இயக்கம்" என்ற தீவிரவாத அமைப்பை நிறுவினார். நாடளாவிய இனவாதப் பிரச்சாரத்தில் ஈடு பட்டார். கட்சிப்பாகுபாடுகள் ஏதுமின்றி தம்முடன் இணைந்து சிங்கள தாய்நாட்டை காக்க போராட வருமாறு யாவருக்கும் அழைப்பு விடுத்தார். தொண்டமானின் அரசியல் தீர்வினை எதிர்த்து சிங்கள தேசத்தின் அனேகமாக எல்லா அமைப்புக்களும், நிறுவனங்களும் இப்போது செயற்பட தொடங்கினர். சமூக, சமய அமைப்புகள், ஏனைய சிறிய எதிர்க் கட்சிகள், தனிநபர்கள் என்று எல்லா முனைகளிலும் இருந்து எதிர்ப்புக்கள் எழுந்தன. எங்கும் கண்டன அறிக்கைகளே வெளிவந்தன. இது வரை இரண்டு பிரதான கட்சிகளும் வேண்டுமென்றே மௌனம் சாதித்த போதும், கட்சிகளின் கிளைகளும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீழ்மட்டத் தலைமைகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களின் நெருக்குதலுக்குள்ளாகினர் இதனால் யூ.என்.பி கிளைகளும், மாகாண சபைகளும் தொண்டமானின் அரசியல்தீர்வை எதிர்த்து சுயாதீனமாக ...ண்டன அறிக்கைகளை வெளியிட்டன. ஆதரவாளர்களினதும் வெகுசனங்களினதும் நெருக்குதல்களின் விளைவாக சுதந்திரக்கட்சியின் 42 பாராளுமன்ற அங்கத்தவர்கள் கட்சித் தலைமையையும், கட்சிக்கட்டுப்பாடுகளையும் மீறி "கெல உருமய" (தேசிய உரிமை) என்ற சிங்கள இனவாத அமைப்பினை உருவாக்கினர். சிங்கள இனத்தின் நலன்களை பாதுகாப்பது தமது நோக்கம் என பிரகடனம் செய்தனர். பௌத்த ஆலயங்களில் சத்தியாக்கிரகம் செய்தனர். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க கட்சித்தலைமை துணியவில்லை. சம்பிரதாயபூர்வ கண்டனங்களுடன் மௌனமாகியது. நிலைமைகள் மேலும் இறுக்கமுறத் தொடங்கவே தொண்டமானின் அரசியல் தீர்வு ஆலோசனையை நிராகரிப்பதாக இரண்டு பிரதான கட்சிகளுமே அறிக்கைகளை வெளியிட்டன. கட்சி மாநாடுகளைக் கூட்டி அங்கத்தவர்களை சமாதானம் செய்தன. முடிவாக வடக்கு- கிழக்கு இணைப்பை நிராகரிப்பதாகவும் இரண்டு எதிர்க் கட்சிகளும் பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. மதத்தலைவர்கள், படையணிகள்,அரச நிர்வாகிகள், புத்தியீவிகள், பத்திரிகையாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் ஏன் தொழிலாளர்களும் கூட இனவாதத்தில் மூழ்கி விட்ட நிலையில் அரசியல் கட்சிகள் இனவாதத்தை முன்னர் போல கையாள முடியாதவர்களாகவும், இனவாதத்தின் கைதிகளாகவும் ஆகிவிட்டனர்.

இவ்வாறு சிங்கள தேசம் சாந்தப்படுத்தப்பட்ட அதேவேளை மறுபுறம் அரசு வடகிழக்குப்பிரதேசத்தை தனிமைப்படுத்தி இன ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இதையிட்டு உண்மையான உளப்பூர்வமான கரிசனையை தென்னிலங்கை அரசியல், சமூக சக்திகள் கொண்டுள்ளதாக தெரியவில்லை. இனப்படுகொலைகள் தொடர்கின்றன; இரண்டரைவருட பொருளாதாரத்தடை மேலும் தொடர்கிறது; நிதித்துறைச் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் முடக்கப்பட்டுள்ளன; கொலைப்படைகள் கொண்டு கிழக்கில் அடிக்கடி மனித வேட்டைகள் நடைபெறுகின்றன; யுத்தமென்ற போர்வையில் தமிழீழ காட்டுவளங்கள் அழிக்கப்படுகின்றன; தொடர்ச்சியான சிங்கள குடியேற்றங்களும் அவற்றை இராணுவமயமாக்குவதும்; தமிழ்ப் பிரதேசங்களை துண்டாடுவதும் முன்னைவிட மிகவும், கட்சிதமாக, நேரடி இராணுவ ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றன. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது இனவாதம் மறைந்து செல்வதாக கருதுவது வெறும் அகவயப் பட்ட, சொந்த விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் அமைந்த வெற்று நம்பிக்கைதான் என்பது இலகுவில் புரிந்துவிடும்

<u>சித்தாந்தத்தின் பாத்திரம் குறித்து. . .</u>

இலங்கையில் இனவாதத்தின் வரலாற்றைத் தொகுத்து நோக்கினால் அதில் மூன்று கட்டங்களை அவதானிக்கலாம்.

<u>முதலாவது கட்டம்:</u> காலனித்துவத்தின் கீழ் தோன்றிய பலவீனமான சிங்கள தேசியமானது அன்றைய குறிப்பான வரலாற்று நிலைமையின்கீழ் இனவாதமாக மாற்றம் பெற்றது. இது அன்று நிலவிய சமூக பொருளாதார நிலைமைகளின் பிரதிபலிப்பாகும்.

<u>இரண்டாவது கட்டம்:</u> சர்வசன வாக்குரிமையுடன் தொடங்கி, சுதந்திரத்தின் பின்னர் தீவிரமடைந்த கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஆட்சி அதிகாரங்களை தாம் பிடிப்பதற்காக பூர்சுவா அரசியல்வாதிகள் இனவாதத்தை



பயன்படுத்த முனைந்தனர். இவ்வாறு பயன்படுத்தப்படுகையில் இனவாதமானது அரசியல், மத சமூக நிறுவனங்களால் வளர்த்தெடுக்கப் பட்டது. சமூகத்தின் எல்லாத்துறைகளிலும் ஆழமாக வேர்விட்டு எல்லா வர்க்கங்களையும் தனது செல்வாக்கினுள் இனவாதம் கொண்டுவந்து விடுகின்றது.

<u>மூன்றாவது கட்டம்:</u> அனைத்து மக்கள் பிரிவினரிடையேயும் ஆழமாக எடுத்துச் செல்லப்பட்ட இனவாத மானது மக்களை நன்கு பற்றிப் பிடித்துக் கொண்டபின்னர் அதுவே ஒரு பொருள்வகை சக்தியாக செயல் படுகின்றது. சமூக, பொருளாதார காரணிகளை நிர்ணயிக்கும் ஆற்றலையும் பெற்றுவிடுகின்றது. இது வரைக்கும் இனவாதத்தை தமது எண்ணம்போல் பயன்படுத்திய சக்திகள் இப்போது தாம் விரும்பினாலும்கூட இனவாதத்தின் பிடியில் இருந்து விடுபட முடியாதவகையில் இனவாத்தின் கைதிகளாகிவிட்டனர். இனவாதம் நிறுவன மயமாக்கப்பட்டு அரசின் இருத்தலை பாதுகாப்பதிலும் தீர்மானகரமான பாத்திரம் வகிக்கிறது. இனவாதத்தின் வரலாறானது சித்தாந்தத்தின் பாத்திரம் குறித்து சில கேள்விகளை எழுப்புகின்றது. அடித்தளக் கட்டுமானம், மேல் கட்டுமானம் என்பவற்றுக் கிடையிலான உறவுபற்றிய பிரச்சனையே இதுவாகும். உற்பத்தி முறையை - பொருளாதாரத்தை - சமூத்தின் அடித்தளமாகவும்; அரசியல், சட்டம், மதம் போன்ற உறவுகளை - சித்தாந்தத்தை - மேல் கட்டுமானமாக மார்க்சியம் வகைப்படுத்துகின்றது. அடித்தளக்கட்டுமானமாகிய உற்பத்தி முறையை அல்லது பொருளாதாரம் மேல் கட்டுமானமாகிய சமூக சித்தாந்தத்தை, உறவுகளை நிர்ணயிப்பதாகக்கூறும் மார்க்சியம் மேல் கட்டுமானங்களும் தமது பங்குக்கு அடித்தளக்கட்டுமானங்களை பாதிப்பதை வலியுறுத்தத் தவறவில்லை.

அடித்தளம் - மேல் கட்டுமானம் என்பவற்றிற்கு இடையிலான இயங்கியல் உறவானது பலசந்தர்ப்பங்களில் மறக்கப்பட்டு விடுவதும் பொருளாதாரத்தையே ஒரே நிர்ணயிக்கும் காரணியாகக் காண்பதும் நடைபெறவே செய்கின்றது. இதற்குமேல் சித்தாந்தம் என்பது வெறும் பிரதிபலிப்பு மட்டுமே என்றாகி விடுகிறது. இந்த இயங்கியல் உறவு மறக்கப்பட்டுவிட்டால்; எமது ஆய்வுகள் வெறும் பொருளாதாரவாதமாக, நிர்ணயவாதமாக குறுகிவிடுகின்றன.

மேல் கட்டுமானங்கள் இறுதியாய்வில் பொருளாதாரத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன எனும்போது மேல் கட்டுமானங்களின் ஒப்பீட்டளவான சுயாதீன தன்மையையும், அவை தமக்கே உரிய சுயமான இயங்கு விதிகளைக் கொண்டிருப்பதையும் மறுதலிப்பதாக அர்த்தப்படாது. தமக்கே உரிய விதிகளின்படி இயங்கும் மேல்கட்டுமான அமைப்புக்கள்கூட ஒரு கட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் கட்டமைப்பாக மாறி பொருளாதாரத்தையே மேல் நிர்ணயம் செய்யக்கூடிய குறிப்பான நிலைமைகளையும் கருத்திற்கெடுக்கத் தவறக்கூடாது பொருளாதாரக் காரணிமட்டுமே நிர்ணயிக்கும் காரணியாக இருக்கும் கணம் தோன்றாமலேயும் கூட போகலாம் என்பதை புரிந்து கொள்ளத்தவறக்கூடாது.

இவ்வாறு நோக்கும் போது இனவாதமானது முதலாவது கட்டத்தில் அன்றிருந்த வரலாற்று நிலைமைகளின் பிரதிபலிப்பாகத் தோன்றினாலும் இரண்டாம் கட்டத்தில் அது தனக்கே உரிய சுயமான வளர்ச்சியைப் பெற்று மூன்றாவது கட்டத்தின் போது நிாணயிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது. இனவாதத்தின் இன்றைய குறிப்பான பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாத எவருமே இலங்கையின் புரட்சிகர மாற்றங்கள் எதிலும் குறிப்பிடும் படியான காத்திரமான பங்காற்றுவது சாத்தியப்படாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடரும் விவாதம்.........

# தேசியசக்தி பற்றிய சில பிரச்சனைகள்

– ஏகலைவன்

கடந்த இதழில் புலிகளை தேசிய சக்தியாக மதிப்பிடுவது தொடர்பாக எமது கருத்துகளை முன்வைத்திருந்தோம். இக் கருத்துகள் தொடர்பாகவும், எமக்கு நேரடியாக கிடைத்த விமர்சனங்கள், கருத்துகளின் அடிப்படையிலும் ஏனைய சஞ்சிகைகளில் வந்த கருத்துகள் தொடர்பாகவும் இப்போது விரிவாக பரிசீலிக்க முயல்வோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று அடைந்துள்ள தேக்கநிலை சமூக உணர்வுள்ள அனைவருக்கும் கவலை அளிப்பதுதான். இதனைக் கடந்துவிட வேண்டும். போராட்டம் பிற்போக்கு சக்திகளின் தலைமையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு புரட்சிகர சக்திகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வும் பரவலாக வெளிப்படவே செய்கிறது. ஆனால் இந்த மகத்தான பணியை எங்கிருந்து தொடங்குவது என்பது தான் விவாதத்திற்குரியதாக இருக்கிறது.

இன்று உள்ள யதார்த்த நிலைமை சகிக்க முடியாத அளவிற்கு மோசமானதுதான். ஆனால் இதனை வெறுமனே திட்டித் தீர்த்துவிடுவதன் மூலம் கடந்துவிட முடியாது. போராட்டத்தில் ஏற்பட்ட பிளவுகள், பின்னடைவுகள், இவற்றின் விளைவாக போராட்டத் தலைமை 'பாசிச' சக்திகளுக்கு சென்றது என்பவற்றில் எதிரியின் சதிகள், ஊடுருவல்கள் போன்ற புறக்காரணிகள் பங்களித்துள்ளன என்பதும் உண்மையே. எனினும் எல்லாப் பிரச்சினைகளையும் புறக்காரணிகள் மீதும் எதிரியின் மீதும் சுமத்திவிட்டு சமூக உணர்வுள்ள ஜனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் தப்பித்துக் கொள்ள முடியாது.. உண்மையிலேயே இந்த பின்னடைவுகளிலிருந்து மீண்டுவிட விரும்பினால் " கடந்த காலம் முழுவதையுமே அலசி ஆராயவேண்டும் " என்ற சமரின் கருத்துடன் நாம் முழு உடன்பாட்டைக் கொண்டுள்ளோம்.

தேசிய விடுதலைப் போராட்டம் உருவான நிலைமைகள், மக்களின் எதிர்பார்ப்புகள், போராட்டத்தில் ஈடுபட்ட சக்திகளின் தன்மைகள், அந்த சக்திகள் போராட்டத்தில் பதித்த முத்திரைகள், இன்று போராட்டத்தின் தலைமை 'பாசிச' சக்திகளின் கரங்களுக்கு சென்றதற்கு காரணமாக அமைந்த முற்போக்கு சக்திகளின் கடந்த கால தவறுகள் போன்ற ஒவ்வொன்றும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலிக்கப்படுவதும் , இந்த பரிசீலனைகளில் இருந்து புரட்சிகர சக்திகள் முக்கியப் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதும் அவசியமானதாகிறது. இந்த வகையில் கடந்த காலத்திலும் தற்போதும் அரங்கிற்கு வந்து போன பல்வேறு சக்திகள் பற்றியும் ஒரு தெளிவான நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்வதும் அவசரத் தேவையாகிறது.

15 ம் பக்கம் பார்க்க



பாதை , அல்லது மாற்றுத் தலைமை பற்றிய கருத்தை தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் இந்தப் பரிசீலனையை இன்னும் ஆழப்படுத்துவது அவசியமானதாகிறது..

" உன்னையும் எதிரியையும் அறிந்திருந்தால் தோல்வியின்றி நூறு சமர்களை நடத்தலாம் " என்பது முதுமொழி. இந்த வகையில் இன்றைய போராட்டத்தில் ஒரு புரட்சிகர மாற்றுத் தலைமை உருவாக வேண்டும் என்று விரும்பும் எவருமே போராட்டத்தின் இன்றைய நிலைமைகள், இந்த நிலைமைக்குச் இட்டுச் சென்றதில் புலிகளினதும், ஏனைய அமைப்புகளினதும், முற்போக்கு சக்திகளினதும் கடந்தகால பாத்திரம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதை தவிர்த்துவிட முடியாது. இந்த வகையில் புலிகள் பற்றிய மதிப்பீடும் தட்டிக் கழிக்க முடியாத ஒரு அவசர பணியே. இதனால் புலிகளின் சிந்தனைமுறை, அரசியல், அமைப்பு, வேலைமுறை, பின்னால் உள்ள வர்க்க சக்திகள், இராணுவ உபாயங்கள் – – – போன்ற ஒவ்வொன்றுமே விரிவாக பரிசீலிக்கப்பட வேண்டியவையே. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றும் நெருக்கமாக பின்னிப் பிணைந்தவை. இறுதிஆய்வில் அவர்களது வர்க்க நிலைமைகளினால் தீர்மானிக்கப்படுபவை என்பதால் புலிகள் யாரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்பது மிகவும் முக்கியத்துவம் பெறும் கேள்வியாகிறது .

எமது மதிப்பீடுகளில் இருந்து புலிகள் தமக்கு சாதகமான சில பகுதிகளை மட்டும் பிரித்தெடுத்து, அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தம்மைப் பலப்படுத்திக் கொள்ள பயன்படுத்துவதால், இந்த ஆய்வுகள் புலிகளைப் பலப்படுத்தும் ஒரு வேலையைத்தான் செய்து முடிக்கிறது என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது. ஒரு சக்தியை சரியாக மதிப்பிட வேண்டுமானால் , முதலில் அதனை புறநிலையாக, தமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் வைத்து மதிப்பிட கற்றுக்கொள்ள வேண்டும். தம்மைப் பற்றியோ, தாம் வெறுக்கும் ஒரு சக்திபற்றியோ மதிப்பிடுகையில் அங்கு விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடுத்து விட்டால் உண்மையான நிலைமைகளை கண்டு கொள்வது சாத்தியப்பட மாட்டாது. இதனால் இந்த மதிப்பீடுகள் எமது சொந்த செயற்பாடுகளுக்கு வழிகாட்ட உதவமாட்டாது. ஏனெனில் அவை திருத்தமான, விஞ்ஞான உண்மைகளை அல்லாமல் ஒருவரது சொந்த விருப்பு வெறுப்பு சம்பந்தப்பட்ட விடயமாகிவிடுகிறது. ஆதலால் விஞ்ஞான பூர்வமான, புறநிலையான மதிப்பீடு என்பதையும் ஒருவரது சொந்த விருப்பு வெறுப்புக்களையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

எதிரியை ஒருவர் மோசமாக வெறுக்கலாம். ஆனால் இந்த வெறுப்பானது அவனது பலமான அம்சங்களை இனங்கண்டுகொள்ளத் தடையாக அமைந்துவிடக் கூடாது. புரட்சியாளர்களது நோக்கம் எவ்வளவுதான் உயர்ந்ததாக இருப்பினும்கூட அவர்கள் ,தமது சொந்த பலவீனங்களை இனங்கண்டு கொள்ள இந்த உயர்ந்த நோக்கங்கள் தடையாக அமைந்துவிடக் கூடாது. இப்படியாக எதிரியினதும் தம்முடையதும் பலமான அம்சங்களையும் பலவீனமான அம்சங்களையும் தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட விதத்தில் மதிப்பிட முடிந்தால் மட்டுமே புரட்சியாளர்கள் தமது பலமான அம்சங்களில் ஊன்றி நின்றுகொண்டு எதிரியின் பலவீனமான அம்சங்களில் தாக்குவது சாத்தியப்படும். இப்படியாக மட்டுமே புரட்சிகர சக்திகள் புறநிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதும், தலைமையை தாம் கையேற்பதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாத்தியப்படும்.

எமது மதிப்பீட்டில் நாம் வெளிப்படுத்தும் புலிகளின் பலமான அம்சங்கள், புரட்சிகர சக்திகளின் பலவீனமான அம்சங்கள் பற்றிய விடயங்களை ஒரு குறுகிய காலத்திற்கு புலிகள் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இருக்கவே செய்கிறது. இதனைத் தவிர்ப்பதற்காக, முழுமையான மதிப்பீடுகளை தவிர்க்க முனைந்தோமானால் புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொள்ளத் தவறிவிடுவோம். இது மாற்று வழிமுறைகள் பற்றிய தெளிவைத் தராததால் மாற்றுத் தலைமையை கொடுக்க முனையும் புரட்சிகர சக்திகளுக்கே உண்மையில் பெரிய இழப்பாகும்.

மக்களிடம் கொண்டுபோவது எனும் விடயத்தை எடுத்துக் கொண்டால் , பகுதி உண்மைகள் மக்களை பற்றிப்பிடிக்க மாட்டா, அரை குறையான ஒரு பக்க விமர்சனங்கள் ஒரு போதும் மக்களின் உணர்வுகளைத் தொடுவதில்லை. ஏனெனில் அவை மக்கள் அன்றாடம் தமது சொந்த வாழ்வில் பெறும் தனிப்பட்ட சில அனுபவங்களுக்கு எதிரானதாக அல்லது அந்த அனுபவங்களை மறைத்து விடுவதாக இருப்பதால் அந்தக் கருத்துக்களில் மக்களுக்கு சந்தேகமே ஏற்படுகிறது. மக்கள் தமது சொந்த வாழ்வினூடாகவும், போராட்டத்தினூடா கவும் சரியான கருத்துக்களையும் தவறான கருத்துக்களையும் வேறுபிரித்தறியக் கற்றுக் கொள்வார்கள். மக்களின் இந்த ஆற்றலில் நம்பிக்கை வைத்தே புரட்சியாளர்கள் செயற்பட வேண்டும்.

இன்று நடைபெறும் விவாதங்களின் பிரதான நோக்கமே முற்போக்கு சக்திகள் தமக்கிடையில் கருத்துப் பரிமாற்றங்களை நடத்தி ஒரு பொதுவான நிலைப்பாட்டடிற்கு வருவதேயாகும். இப்படியாக ஒரு பொதுவான நிலைப்பாட்டை அடைவதிலும் அதனூடாக பொதுவான திட்டத்தின் அடிப்படையில் இணைந்து வேலை செய்வதிலும் ஜனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் வெற்றிபெறும் பட்சத்தில் மக்கள் மத்தியில் கருத்துக்களை கொண்டு போவதற்கான மிகவும் சிறப்பான வழிமுறைகளை உருவாக்கிக் கொள்வது சாத்தியமே. அப்போது புலிகள் தற்காலிகமாக அடையும் இன்றைய பகுதிவெற்றிகளை நிரந்தரமாகவும் முழுமையாகவும் இழக்க நேரிடும். ஏனெனில் உண்மைகள் மக்களுக்கு நன்மையளிப்பவை என்பதால் மக்களுக்கு மிகவும் நெருக்கமானவை.

இதுவரையில் நடைபெற்ற விவாதங்களை அவதானிக்கும் சிலரிடம் கசப்புணர்வுகள் தோன்றுவதை உணர முடிகிறது. மாற்று அமைப்பைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டு தமக்குள் ஒற்றுமைப்பட வேண்டிய முற்போக்கு சக்திகள் புலிகளை எவ்வாறு மதிப்பிடுவது என்ற பிரச்சினையில் தமக்குள் மோசமான சர்ச்சைகளை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். இந்த விவாதங்கள் முற்போக்கு சக்திகளை பிளவுபடுத்துவதற்கே அதிகம் பயன்பட்டுள்ளன என்று இவர்கள் கருதுகிறார்கள். இந்த கருத்திலும் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. ஆனால் இதற்கு காரணம் புலிகளை மதிப்பிடுவது பற்றிய பிரச்சினை அல்ல. இந்த விவாதம் நடத்தப்படும் முறையே என்பது எமது அபிப்பிராயமாகும். முற்போக்கு சக்திகள் ஆழமான விவாதத்தினூடாக தமக்கிடையில் கருத்துக்களை விரிவாக பரிமாறி அதற்கூடாக ஒரு பொதுவான இணக்கத்திற்கு வருவதே நமது நோக்கம் எனக் கருதினால் எப்போதும் அந்த உயர்ந்த நோக்கத்தை மனதில் இருத்திக் கொண்டு மிகுந்த பொறுப்புணர்வுடன் ஆக்கபூர்வமான விவாதத்தை நடத்த வேண்டும்.



**1) எதிர்த்தரப்பார் கூறுவதை ஊன்றிக் கவனித்து அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை முழுமையாக கிரகித்துக் கொள்வதும்**

**2) தாம் எதிர்த் தரப்பாரிலிருந்து எந்த விதத்தில் வேறுபடுகிறார்கள் என்பதை எதிர்த் தரப்பாரும் புரிந்து கொள்ளும் விதத்தில் தமது கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்துவதும்**

ஒரு ஆரோக்கியமான விவாதத்திற்கு அவசியமானதாகும். வாதங்களில் வார்த்தை ஜாலங்கள், சொல்லலங்காரங்கள், வியாக்கியானங்கள் என்பவற்றில் அக்கறை செலுத்தாமல் தரவுகள், ஆதாரங்கள், முரணற்ற தர்க்கம் போன்றவற்றில் கவனம் செலுத்துவது இந்த விவாதத்தைப் பலப்படுத்தும். இங்கு நாம் நடத்தும் விவாதம் எதிரியை அம்பலப்படுத்தும் நோக்குடன் நடத்தும் விவாதம் அல்ல. சமூக அக்கறையுள்ள முற்போக்கு முகாமினுள் நடக்கும் விவாதம் என்பதையும் கருத்திற் கொள்வது நன்று.

முற்போக்கு சக்திகள் தமக்குள் சுமுகமான உறவுகளை ஏற்படுத்துவது விவாதங்களை தவிர்ப்பதன் மூலமாக அல்ல. விவாதங்களை ஆரோக்கியமாக நடத்தி, பொதுவான கருத்து இணக்கத்திற்கு வருவதன் மூலம் மட்டுமே இந்த ஐக்கியம் சாத்தியப்படும். எதிர்காலத்திலும் போராட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களிலும் கருத்து வேறுபாடுகள் எழுவதும், அவை ஜனநாயகபூர்வமான விவாதங்கள் மூலமாக தீர்க்கப்படுவதும் தவிர்க்கமுடியாதவை என்பதால் விவாதங்களை நடத்தும் முறையில் இப்போதே போதிய கவனம் எடுப்பது அவசியமானது.

## மறைமுகமான விவாதம்

புலிகளை மதிப்பிடுவது தொடர்பான விவாதங்களை ஊன்றிக் கவனிக்கும் எவருமே இந்த விவாதங்களினூடாக இன்னோர் கருத்துப் போராட்டம் பின்புலத்தில் நடப்பதை அவதானிக்கலாம். தேசியத்தை எவ்வாறு மதிப்பிடுவது என்பதே அந்த விவாதமாகும். தேசியவாதம் என்பதே முதலாளித்துவ மோசடி என்று சிலர் வாதிடுகிறார்கள். இன்னும் சிலரோ, இன்றைய போராட்டத்தில் பின்னடைவுகளுக்கெல்லாம் காரணம் தேசியத்தை முன்னெடுத்ததே என்கிறார்கள். இவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நிராகரித்துவிட்டு ஐக்கியப்பட்ட புரட்சியை முன்மொழிகிறார்கள். புலிகளை மோசமான சமூகவிரோத சக்தியாக அடையாளங்காட்டி புலிகளை நிராகரிப்பதன் மூலம் முழுத் தேசியத்தையுமே நிராகரிக்க முனைகிறார்கள். தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்தின் கரங்களில் சிக்கவைத்து விடும் என்றும், இனவாதத்தை இன்னும் கிளறிவிடவே பயன்படும் என்றும் அச்சம் கொள்கிறார்கள். இன்னோர் பகுதியினர் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்துக் கொண்டே புலிகளை விமர்சிக்கிறார்கள். ஆனால் இவர்கள் மத்தியிலும்கூட தேசிய நிகழ்வுப் போக்கு குறித்து பொதுவான விளக்கம் இருப்பதாகக் கூறமுடியாது.

தேசிய நிகழ்வுப் போக்கு குறித்து ஒரு பொதுவான விளக்கத்தை எட்டாது, இப்படியாக எதிரெதிர் நிலைகளில் நின்றுகொண்டு புலிகளின் தேசியத் தன்மை என்ற விடயத்தை விவாதித்து தீர்க்கமுடியும் என்று நாம் கருதவில்லை. எனவே தேசிய நிகழ்வுப் போக்கை எவ்வாறு மதிப்பிடுவது-- என்பதில் எமது முதன்மையான கவனத்தைக் குவிப்பது அவசியம் எனக் கருதுகிறோம். புலிகளை மதிப்பிடுவது தொடர்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டுமல்ல, இலங்கையின் புரட்சி பற்றிய அக்கறையுடைய எவருமே இலங்கையில் தேசிய முரண்பாடுகள் இவ்வளவு தீவிரமடைந்திருக்கும் நிலையில் தேசியத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதில் தெளிவைப் பெறாத வரையில் மேற்கொண்டு இலங்கையில் புரட்சிகர மாற்றங்கள் எதிலுமே ( ஐக்கியப்பட்ட புரட்சியோ தேசிய விடுதலைப் போராட்டமோ ) எந்தவிதமான காத்திரமான பங்கும் ஆற்ற முடியாது.

தேசியத்தை எவ்வாறு புரிந்து கொள்வது எனும் விடயம் என்றோ நடந்து முடிந்த விவாதம் என்று சிலர் கதைக்கலாம். ஆனால் புலிகளை மதிப்பிடுவது தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்பவர்களில் பலரும் அவ்வாறு கருதவில்லை என்றே படுகிறது. பலர் ஐக்கியப்பட்ட புரட்சி – தேசிய விடுதலை என்பதில் ஆரோக்கியமான விவாதம் நடத்தப்படவில்லை என்று வெளிப்படையாகவே சுட்டிக் காட்டி யுள்ளார்கள். " சுயநிர்ணய உரிமைக்காகப் போராடவேண்டும், ஆனால் இன ஐக்கியத்தை வலியுறுத்த வேண்டும் " எனும்போதும் இந்த தேவையை உணரவே செய்கிறோம்.

தேசிய நிகழ்வுப் போக்கை எவ்வாறு புரிந்து கொள்வது ? சுயநிர்ணய உரிமை என்றால் என்ன ? பிரிந்து செல்வதை எந்த நிலையில் மார்க்சியவாதிகள் ( கொம்யூனிஸ்ட்டுகள்– பாட்டாளி வர்க்க புரட்சியாளர்கள்) அங்கீகரிக்கிறார்கள் ? அப்படி பிரிந்து போவதை அங்கீகரித்தால் , அப்போது ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களைச் சேர்ந்த மார்க்சியவாதிகளின் (கொம்யூனிஸ்ட்டுகள்– பாட்டாளி வர்க்க புரட்சியாளர்கள் ) கடமை என்ன ? இலங்கையில் தேசிய முரண்பாட்டின் தன்மை பிரிவினையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறதா ? போன்ற கேள்விகளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து இவை தொடர்பான விடயங்களை விரிவாக விவாதித்து தீர்வு காண முற்போக்கு சக்திகள் முனைய வேண்டும் எனக் கருதுகிறோம். ஏனெனில் ஐக்கியப்பட்ட புரட்சியை வலியுறுத்துபவர்கள் மத்தியிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பவர்கள் மத்தியிலும்கூட இவை தொடர்பான விவாதங்களில் திட்டவட்டமான நிலைப்பாடுகளைக் காணமுடியவில்லை. கடந்த காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் இதன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் ஊசலாட்டத்தைக் காட்டினார்கள். இன்று மாற்று அமைப்பை உருவாக்குவது எனும் நோக்கில் தத்துவார்த்த விடயங்களை விவாதித்து தீர்ப்பது என முனையும்போது இந்த விடயங்கள் முக்கியத்துவம் பெறுவது புரிந்து கொள்ளத் தக்கதே. மேலே கூறப்பட்ட வினாக்கள் தவிர்க்க முடியாதவாறு இன்னும் சில வினாக்களுக்கு இட்டுச் செல்கின்றன. இன்றைய நிலையில் மார்க்சியவாதியாக (கொம்யூனிஸ்ட்டுகளாக, பாட்டாளிவர்க்க புரட்சியாளராக) இருப்பது என்பதற்கு அர்த்தம் என்ன? புரட்சிகர போரட்டங்கள் முனைப்பாக நடைபெறும் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரையில் புரட்சிகர கட்சி, பாட்டாளி வர்க்கத் தலைமை என்பவற்றை எவ்வாறு புரிந்து கொள்வது ?

மேலெழுந்த வாரியாக பார்க்கும் போது இந்தக் கேள்விகள் முக்கியத்துவமற்றதாகப் படலாம். ஆனால் இந்த அடிப்படையான விடயங்களில் தெளிவேற்படுத்திக் கொள்ளாமல் ஒரு பொதுவான திட்டத்தை நோக்கி முன்னேறுவதோ அல்லது இன்று எமக்குள் நடக்கும் விவாதங்களுக்கு முடிவுகளைக் காண்பதோ சாத்தியப்படாது என்பதால், இந்த விடயங்களில் நாம் எதிர்காலத்தில் முதன்மையான கவனத்தைக் குவிப்பது அவசியம் எனக் கருதுகிறோம்.



## பொருளாதாரவாதம் குறித்து ....

தேசியசக்தி பற்றிய விவாதத்தைத் தொடங்கு முன்பு தேசியம்பற்றி ஒரு மேலெழுந்த வாரியான, பருமட்டான வரையறையை., வகுத்துக்கொள்வதன் அவசியம் கருதி சென்ற கட்டுரையில் தேசியத்தை முதலாளித்துவத்துடன் தொடர்புபடுத்தி வரையறுக்க முயன்றோம். இந்த வரையறை பற்றி 'மனிதம்' சஞ்சிகையில் விமர்சிக்கும் கரிகாலன் எமது கருத்து பொருளாதாரவாதத்தின் பாற்பட்டது என்கிறார்.

நவீன தேசம் பற்றிய கருத்தாக்கமானது 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியின் பின்பே பிரெஞ்சுப் புரட்சியுடனேயே உருவானது என்பதும், முதலாளித்தவத்தின் வளர்ச்சியுடன் தேசிய இயக்கங்களின் இரண்டு கட்டங்களை லெனின் குறிப்பிட்டுக் காட்டுவதும், இந்தக் கருத்துக்கள் அண்மைக்காலம் வரையில் சர்ச்சைக்குரியதாக இருக்கவில்லை என்பதும், இன்றுங்கூட மரபுவழி இடதுசாரிகள் இந்தக் கருத்தின் அடிப்படையிலேயே தேசியத்தை விளக்க முனைவதும் உண்மையே. ஆனால் ரஷ்யப் புரட்சிக்குப் பிற்பட்ட காலங்களில் காலனித்துவ நாடுகளிலும் ஏனைய குறைவிருத்தி நாடுகளிலும் தேசிய இயக்கத்தின் தோற்றத்தையும், தேசங்களின் ஒன்று கலத்தல் நடைபெற்று முடிந்துவிட்டதாகக் கருதப்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும்கூட தேசிய இயக்கங்கள் தோன்றுவதையும் இந்த கருத்தால் விளக்கமுடியாது. எனவே இதற்குமேல் தேசியத்தை முதலாளித்துவ த்தின் வளர்ச்சி என்ற பொருளாதார காரணியை மட்டும் கொண்டு விளக்குவதில் சிரமங்களை எதிர் நோக்கவே செய்கிறோம். இன்று பல மார்க்சியவாதிகள் வேறுபட்ட கோட்பாடுகளை இது தொடர்பாக முன்வைக்கிறார்கள். இவற்றை இன்னோர் சந்தர்ப்பத்தில் விரிவாக பரிசீலிப்போம்.

பொருளாதார வாதம் பற்றிய விமர்சனத்தை முன்வைக்கும் கரிகாலனிடம் வாசகர்கள் தேசியம் பற்றிய விரிவான விளக்கத்தை எதிர்பார்ப்பது நியாயமே. ஆனால் இவரது விமர்சனம் தேசியத்தை விரிவாக புரிந்துகொள்ள எந்தவிதமான பங்களிப்பும் செய்யவில்லை. புலிகளை மதிப்பிடுகையில் இவர் முன்வைக்கும் 'குழுநலன்' பற்றிய கருத்தாக்கத்தை இந்தக் கட்டுரையின் பின்பகுதியில் விரிவாக பரிசீலிப்போம்.

பொருளாதார வாதம் பற்றிய கருத்தாக்கத்தை இங்கு சற்று விரிவாக பார்ப்பது பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகிறோம். சமூக இயக்கத்தை, வரலாற்றை எவ்வாறு புரிந்து கொள்வது என்ற கேள்வி பல காலமாகவே எழுப்பப்பட்டு வந்ததுண்டு.. வரலாறானது தற்செயல் நிகழ்ச்சிகளின் தொகுப்பெனவும், தனிமனிதனின் சித்தாந்தத்திலிருந்து பிறப்பதாகவும் விளக்க முனைந்தவர்கள் இந்த தற்செயல்களதும் தனிமனிதர்களதும் தோற்றத்திற்கான காரணத்தை இறுதியில் கடவுளால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதியில் கண்டாகள். இதன்படி வரலாறு, சமூக இயக்கங்கள் போன்றவற்றை விளக்குவது என்பது மனித சக்திக்கு அப்பாற் பட்டதாகவும், முழுக்க முழுக்க தற்செயல் நிகழ்வுகளினூடாக நடைபெறும் ஒரு புரியாப் புதிராகவுமே விளங்கியது. வரலாற்று ஓட்டத்தின் முன்பு பரந்துபட்ட மக்கள் கைகளைக் கட்டிக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாது திகைத்துக் கொண்டிருக்கும் மந்தைகளாகவே கருதப்பட்டனர் .

வரலாற்றை முதன் முதலில் விஞ்ஞான பூர்வமாக விளக்க முயன்ற கார்ல் மார்க்ஸ், சமுக வாழ்வின் பல்றே தளங்களில் இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதார தளத்தை வேறுபிரித்தும், பல்வேறு உறவுகளிலிருந்து உற்பத்தி உறவுகளைத் தனிப்படுத்தியும், இவற்றை அடிப்படையான, முதன்மையான, ஏனைய உறவுகளை நிர்ணயிக்கும் காரணியாகக் காட்டினார். சட்டஉறவுகள் பற்றியும் அரசியல் வடிவங்கள் பற்றியுமான விளக்கங்களை அவற்றிலிருந்தோ அல்லது மனித மனத்தின் பொதுவான வளர்ச்சியிலிருந்தோ தேடாமல் வாழ்வின் பொருளாதார நிலையிலிருந்து தேடச் சொன்னார். 'சிவில் சமூகம்' பற்றிய விளக்கத்தை அரசியல் பொருளாதாரத்தில் தேடச் சொன்னார். உற்பத்தி உறவுகளின் மொத்தமே சமூகத்தின் பொருளாதாரக் கட்டுமானத்தை உருவாக்குகிறது. இதுவே உண்மையான அத்திவாரமாகும். இதிலிருந்தே சட்ட, அரசியல் மேற்கட்டுமானங்களின் குறிப்பிட்ட வடிவங்களாகிய சமூக உணர்வுகள் எழுகின்றன எனக் காட்டினார். இதுவே வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கான திறவு கோலாயிற்று.

அடுத்தடுத்து , வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் சமூக உறவுகளில் அவற்றிற்கேற்ப ஒத்த தன்மையுள்ள மாற்றங்களை உருவாக்குவதைச் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் சமூக இயக்கத்தின் விதிகளை வெளிப்படுத்தினார். இதற்கு மேல் அரசியல் என்பது ஒரு விஞ்ஞானமாயிற்று. குறிப்பிட்ட சமூக இயக்கத்தை மதிப்பிடுகையில் அந்த சமூகம் இருக்கும் கட்டம், அது இயங்கிச் செல்லும் திசை, அந்த சமூக இயக்கத்தில் சம்பந்தப்படும் பிரதான சக்திகள் போன்றவற்றை சரியாக மதிப்பிடுவதன் மூலம் குறிப்பிட்ட சமூக இயக்கத்திற்கான திட்டத்தை, யுத்ததந்திரத்தை வகுப்பதன் மூலம் புரட்சிகர சக்திகள் குறிப்பிட்ட சமூக இயக்கத்தில் உணர்வுபூர்வமாக செயற்படுவது சாத்தியமாயிற்று. வரலாற்றிலும், சிந்தனைத் துறையிலும் மார்க்சின் இந்த கண்டுபிடிப்பு மாபெரும் சாதனையே.

மார்க்ஸ் உயிருடன் இருந்த காலத்திலேயே மார்க்சின் அடிப்படையான கருத்தாக்கங்களை அதன் கடைக்கோடி நிலைக்கு (Extreme) எடுத்துச் சென்று, அதனை வெறுமனே பொருளாதாரவாதமாக குறுக்கிவிடும் செயற்பாடுகள் அவரைப் பின்பற்றிய சிலராலேயே மேற்கொள்ளப் பட்டன. இப்படியான குறுக்கல்வாதங்களை (Reductionism) திட்டவட்டமாக நிராகரித்த மார்க்ஸ், அவர்களது அர்த்தத்தில் தானே ஒரு 'மார்க்ஸியவாதி' அல்ல என்றும் கேலிசெய்தார். ஆயினும் இந்தப் போக்கு மார்க்ஸின் மறைவின் பின்பும் தொடர்ந்தது. இதனைக் கண்டித்த ஏங்கெல்ஸ் " – – – பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் வரலாற்றைப் புரிந்து கொள்கையில், வரலாற்றுப் போக்கின் **இறுதியான** நிர்ணய சக்தியாக விளங்குவது எதார்த்த வாழ்க்கையில் நிகழும் உற்பத்தியும், மறு உற்பத்தியுமே ஆகும். இதற்கதிகமாக எதையும் நானோ, மார்க்ஸோ உறுதிப் படுத்தவில்லை. 'பொருளாதாரக் காரணம் மட்டுமே **ஒரேயொரு** நிர்ணய சக்தியாக விளங்குகிறது' என்ற அர்த்தத்தில் யாராவது இதனைத் திரித்துக் கூறினால் , இதனை ஏதுமற்ற , சூட்சுமமான , அர்த்தமற்ற சொற்றொடராக அவர் மாற்றிவிடுகிறார் என்றே பொருள். பொருளாதார நிலைமைகள்தான் அடிப்படை. ஆனால் வரலாற்றுப் போராட்டப் போக்கின்மீது மேற்கட்டுமானத்தின் பல்வேறு வகைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பலப்பல நேரங்களில் அப் போராட்டத்தின் **வடிவத்தை** நிர்ணயிக்கின்றன. வர்க்கப்போராட்டத்தின் அரசியல் வடிவங்கள், அப்போராட்டத்தின் விளைவுகள், அதாவது போராட்டத்தில்



வெற்றிவாகை சூடிய வர்க்கம் உருவாக்குகின்ற அரச அமைப்பு போன்றவையும், சட்டத்துறை அமைப்புகளும், இந்த உண்மையான போராட்டங்களின் பிரதிபலிப்பு போராட்டத்தில் பங்குகொள்வோரின் மூளையில் தோன்றுவதும்கூட, அரசியல் ரீதியான, சட்டபூர்வமான, தத்துவஞானக் கோட்பாடுகள், சமயக் கண்ணோட்டங்கள் ஆகியவையும் போதனைகளின் அமைப்புக்குள் இவையெல்லாம் மேலும் வளர்ச்சியுறுவதும் ஆகிய அனைத்தும் வரலாற்றுப் போராட்டப் போக்கின்மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. " என்று வலியுறுத்திக் கூறினார்.

ஆனால் இந்தவிதமான பொருளாதார வாதமானது இத்துடன் முடிந்துவிடவில்லை. இரண்டாம் அகிலத்தில் இதற்கெதிராக லெனின் போராடினார். லெனின் எழுதிய " என்ன செய்ய வேண்டும் " , " ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் " போன்ற நூல்கள்கூட ஒருவகையில் பொருளாதாரவாதக் கருத்துக்களுக்கு எதிரான தாக்குதல்களாகவே அமைந்தன. மூன்றாம் அகிலத்திலும் இதேவிதமான கண்ணோட்டங்கள் செல்வாக்குச் செலுத்தியிருந்ததாக பல மார்க்ஸியவாதிகள் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்கள். மரபுவழி இடதுசாரிக் கட்சிகளின் கண்ணோட்டத்தில் இந்த பொருளாதாரவாதக் கண்ணோட்டமே ஆதிக்கம் செலுத்துவதாக இன்றும் இவர்கள் விமர்சிக்கின்றார்கள்.

தேசியம் , ஆணாதிக்கம் , சாதியம் , கலை இலக்கியம் – – – – போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் பொருளாதாரம் என்ற ஒரே காரணத்தினூடாக, வர்க்கப் போராட்டம் என்ற ஒரே கருத்தாக்கத்தினூடாகவே விளக்கிவிட முனைவது பொருளாதார வாதத்தின் இன்றைய குறிப்பான தன்மையாகும். இவை வேறுபட்ட தளங்களில் நடப்பதை, இவற்றின் ஒப்பீட்டளவிலான சுயாதீனத் தன்மையை, இவை தமக்கேயுரிய குறிப்பான விதிகளைக் கொண்டிருப்பதை, இவர்கள் அங்கீகரிப்பதில்லை. இதனால் பொருளாதாரவாதமானது மார்க்ஸியத்தை ஒரு குறுகிய வரட்டுச் சூத்திரமாக்கிவிடுகின்றது. இதற்குமேல் இவர்களது தத்துவமானது சமூகத்தின் பல்வேறுபட்ட நிகழ்வுகளை விளக்கவும், யதார்த்தத்தில் நடைபெறும் போராட்டங்களுக்கு வழிகாட்டவுமான ஆற்றலை இழந்துவிடுகிறது.

இலங்கையின் மரபுவழி இடதுசாரிகள் இலங்கையில் இனப் பிரச்சினை என்ற ஒன்றே கிடையாது என்று சாதிக்க முனைந்தனர். இனப் பிரச்சினையின் தீவிரம் காரணமாக அதன் இருப்பை தவிர்க்க முடியாதவாறு ஏற்றுக்கொள்ள நேர்ந்தபோது , அதனை முதலாளித்துவ சக்திகளின் சதி என்றார்கள். இன்று ஐக்கியப்பட்ட புரட்சிபற்றி முன்மொழிபவர்களிடமும் இதே கருத்துப் போக்குகளை அவதானிக்க முடிகிறது. துண்டிலில் பரதேசிகன் " அடிப்படைப் பிரச்சினை பொருளாதாரத்திலேயே தங்கியிருக்கின்றது. " என்று கூறும்போதும் இதே சாயலைக் காணமுடிகிறது.

பொருளாதாரவாதம் பற்றி விமர்சிக்கும் கரிகாலன், தனது கருத்துக்களை அந்தத் திசையிலேயே தொடர்ந்தும் வளர்த்தெடுத்துச் சென்றிருந்தால், தேசியம் என்பதை ஒரு தனியான கட்டமைப்பாக இனங்கண்டு , அதற்கென தனியான இயங்கு விதிகள் இருப்பதை ஏற்றுக்கொண்டு , இதன்மூலம் தேசிய இயக்கத்தில் புரட்சியாளர்களது பாத்திரம் குறித்து விரிவான விளக்கத்தை வந்தடைந்திருப்பார். ஆனால் குழுநலன்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற கருத்தாக்கம் இவரை வேறோர் இடத்திற்கு இட்டுச் சென்றுவிடுகிறது. இலங்கையில் " மேலாதிக்கத்திற்காக போட்டியிடும் முரண்பாடுகள் " பற்றி கரிகாலன் குறிப்பிடுகையில் இன முரண்பாடு அல்லது தேசிய முரண்பாடு என்று குறிப்பிடுவதைத் தவிர்த்து இனங்களுக் கிடையிலான ஐக்கியத்திற்கும் ஐக்கியமின் மைக்கும் இடையிலான முரண்பாடு என்று கூறுகையில் மரபுவழி இடதுசாரிகளிடம் காணப்பட்ட அதே சாயல்களை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் தேசிய முரண்பாடு மிகவும் கூர்மையடைந்து ஒரு யுத்தம் பத்து வருடங்களாக நடைபெற்று வருகிறது. இன ஐக்கியம் என்பது வெறும் கனவாய்ப் போய்விட்டது. இந்த நிலையில் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் ஐக்கியமின்மை ஆகிய இரண்டையும் சமநிலையில் வைத்துப் பேசுவது என்பது இலங்கையில் தேசிய முரண்பாடு மிகவும் கூர்மையடைந்து இருப்பதை மறுக்க முனையும் போக்காகவே கருதப்பட வேண்டும்.

## தேசியமும் தரகுமுதலாளிகளும்

தேசியம் என்பது ஒரே கல்லில் செதுக்கப்பட்டது போன்று ஒரே சீரான, முற்றிலும் உள்ளிணக்கமான ஒரு நிகழ்வுப் போக்கல்ல. வரலாற்றில் தேசியமானது பல்வேறு வடிவங்களில் தோன்றியுள்ளது. குறிப்பிட்ட ஒரு தேசிய இயக்கம் உருவாகும் குறிப்பான வரலாற்று நிலைமைகள் அதனை முன்னெடுக்கும் வர்க்க சக்திகளின் தன்மை அவற்றுக்கு வழிகாட்டும் உலகக் கண்ணோட்டம் என்பவற்றைப் பொறுத்து தேசியமானது சோசலிசம், லிபரல் ஜனநாயகம், அரசதேசியம், இராணுவ சர்வாதிகாரம், ஏகாதிபத்திய ஆதிக்கம், பாசிசம் போன்ற முற்றிலும் வேறுபட்ட பல வடிவங்களை எடுத்துள்ளது. இந்த பல தரப்பட்ட வர்ண தேசிய இயக்கங்களிலும் குட்டி முதலாளி வர்க்கம் ஒரு அத்தியாவசியமான கூறாக இருந்து வந்துள்ளது. இதனுடன் கூட்டுச்சேரும் வர்க்கம் தொழிலாளரா, விவசாயிகளா, தேசிய முதலாளிகளா, ஏகபோக முதலாளிகளா என்பதைப் பொறுத்து இதன் வடிவம் வேறுபட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு சக்தியை தேசிய சக்தி எனக் குறிப்டுவது அது குறிப்பிட்ட ஒரு தேசிய இயக்கத்தில் ஒரு கூறாக இருப்பதை மாத்திரமே குறிக்கும் – அந்த குறிப்பான வரலாற்றுச் சூழலில் குறிப்பிட்ட ஒரு சக்தி பற்றிய ஒரு மதிப்பீடு மட்டுமே. தேசிய சக்தி என்ற மதிப்பீடு எந்த வகையிலும் குறிப்பிட்ட சக்திக்கான புரட்சிகர அங்கீகாரமாக மாட்டாது. குறிப்பிட்ட அந்த சக்தி முற்போக்கான பாத்திரம் வகிக்கிறதா அல்லது பிற்போக்கு பாத்திரம் வகிக்கிறதா என்பது பரந்துபட்ட மக்களின் நலன்கள், வரலாற்றின் வளர்ச்சிப்போக்கு போன்றவற்றுடன் அந்த சக்தி எந்த விதமான உறவைக் கொண்டுள்ளது என்பதன் அடிப்படை யிலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். கிட்லர், முசோலினி மட்டுமல்ல இஸ்ரேல் கூட தேசியம் எவ்வளவு மோசமான பிற்போக்கு வடிவங்களையும் எடுக்கலாம் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளாகும்.

பொதுவாக ஒரு காலனித்துவ நாட்டில் காலனிய ஆதிக்கத்திற்கெதிராக தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெறும்போது ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியங்களுடன் நெருக்கமான பொருளாதார பிணைப்புகளைக் கொண்டிருக்கும் தரகு முதலாளிவர்க்கமானது தேசிய இயக்கத்தை எதிர்க்கும்சக்தியாக இருக்கும் என்பது உண்மையே . ஆனால் வேறுபட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட ஒரு



ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் ஏனைய ஏகாதிபத்தியங்களுடன் தமது நலனைப் பிணைத்துக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில தரகு முதலாளி வர்க்க பிரிவுகள் அந்த தேசிய இயக்கத்தை ஆதரிக்கவும் செய்யும். அதுவும் இலங்கை போன்றதோர் நாட்டில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமானது நேரடியான ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தமாக இல்லாமல் உள்ளூர் பேரினவாதத்திற்கு எதிரானதாக இருக்கையில், இன ஒடுக்குமுறை, இனப் படுகொலைகள் என்ற வடிவத்தை அடைந்துவிட்ட நிலையில் தமிழ்த் தரகு முதலாளிகளின் நலன்களுங்கூட தமிழ் தேசியத்துடன் பிணைந்தே இருக்கின்றன. இதனால் தரகு முதலாளி வர்க்கமும்கூட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தேசியத்தை முன்னெடுக்கவே செய்யும். ஆனால் இந்த வர்க்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசியம் முரணற்றதாக இருக்குமா என்பதும், இதன் தலைமையில் அடையப்படும் விடுதலை சாதாரண உழைக்கும் மக்களைப் பொறுத்த வரையில் உண்மையான விடுதலையாக இருக்குமா என்பதும் வேறு விடயம். இதற்காக தரகு முதலாளிகளும் தேசியமும் ஒருபோதும் ஓரளவிற்கேனும் இனங்காண முடியாதவை என வாதிட முடியாது. புலிகள் தரகு முதலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக நிரூபிக்கப்பட்டாலும்கூட அது அவர்கள் இன்று தேசிய சக்திகளாக செயற்படவில்லை என்று நிரூபித்ததாகிவிட மாட்டாது. எப்படியிருப்பினும் புலிகளின் அரசியலையும், அதன் எதிர்காலப் போக்குகளையும் புரிந்துகொள்ள இப்படிப்பட்டதோர் வர்க்கப் பகுப்பாய்வு அவசியமே.

இந்த விடயம் தொடர்பாக 'சமர்' கருத்துத் தெரிவிக்கையில் " எமது தேசத்தில் தரகு முதலாளித்துவ சக்திகள் அல்லது ஒடுக்கப்பட்ட வறிய , கூலி விவசாயிகள் தேசிய விடுதலைக் கோசத்திற்குரிய தலைமைச் சக்திகளாக அமைய முடியும் " என்கிறது. ஆனால் தரகு முதலாளித்துவ சக்திகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கமாட்டா எனவும் , புலிகள் போராட்டத்தைச் சிதைப்பது அது பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கே என்றும் வாதிடுகிறது. புலிகளுக்கு ஏகாதிபத்தியங்கள் உதவுவது (!) , புலிகளிடம் தேசிய வாதம் இல்லாதிருப்பது (!!) , இந்திய இராணுவத்துடன் பேரம் பேசியது, சுயநிர்ணய உரிமையை அற்ப காரணங்களுக்காக விட்டுக்கொடுக்கத் தயாராக இருப்பது போன்றவை அதன் தரகு முதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மைக்கான சான்றுகள் என்கிறது. தரகு முதலாளி வர்க்கத்தைத் திருப்திப் படுத்துவதற்காகவே புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்தும், முஸ்லிம்களை வெளியேற்றியும், சிங்கள மக்களைப் படுகொலை செய்தும், தமிழ் மக்களது ஜனநாயக உரிமையைப் பறித்தும் போராட்டத்தைச் சீரழிப்பதாக குறிப்பிடுகிறது.

இதே பிரச்சினையை 'தூண்டிலில்' பிரசைகள் வேறோர் கோணத்தில் அணுகுகிறார்கள். ஒவ்வொரு சக்தியும் தமது வர்க்க நிலைப்பாட்டிற்கு ஏற்பவே போராட்டத்தை அணுகுவதாகவும், புலிகளுக் கென ஒரு வர்க்கநிலை இருப்பதாகவும் கூறுகிறார்கள். அந்த வர்க்கநிலை தரகு முதலாளித்துவம் அல்ல – ஏனெனில் அப்படியிருப்பின் அவர்கள் இதுவரைக்கும் சரணடைந்து இருப்பார்கள் எனவும் வாதிடுகிறார்கள். இன்னோர் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட ஒரு வர்க்கம் இன்றியே ஒரு கருத்துநிலை உருவாகலாம் என வாதிடும் இவர்கள் புலிகளின் தேசியத்தை முதலாளித்துவ தேசியம் என்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அவர்கள் எந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்ற கேள்விக்கு திட்டவட்டமான பதில் அளிப்பதைத் தவிர்த்துவிடுகிறார்கள். இந்தத் தவறு எவ்வாறு நேர்கிறது என்பதை நிச்சயப்படுத்த முடியவில்லை. தேசியம் தொடர்பாக வேறோர் தத்துவார்த்த அணுகுமுறை இவர்களிடம் இருப்பின் அதை நேரடியாக முன்வைப்பது அவசியம் எனக் கருதுகிறோம். இதற்கு பிரசைகளின் எழுத்து வடிவம் – உரையாடல் வடிவத்தில் சாதாரண மக்களுக்கு விளங்க வேண்டும் என்ற நோக்கில் எழுதப்படுவது – தடையாக இருக்குமானால் மாற்று வடிவத்தைத் தேடுவது தவிர்க்க முடியாதது எனக் கருதுகிறோம்.

இதுவரை நடைபெற்றுவரும் விவாதங்கள் தமிழ்த் தேசத்தின் வர்க்கப் பகுப்பாய்வு, பல்வேறு வர்க்கங்களது நலன்கள், தேசியத்துடன் இவை கொண்டுள்ள உறவு, பல்வேறு அமைப்புகளின் அரசியலூடாக இவை வெளிப்படும் விதம், என்ற வகையில் செல்லாமல் இதற்கு தலைகீழான ஒரு அணுகுமுறையே தொடர்ந்து வருகிறது. இந்தப் போக்கு தொடரும்வரை புலிகளின் அரசியலைப் புரிந்து கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படவே செய்யும்.

## குழுநலன்கள் என்பது பற்றிய....

இது தொடர்பாக 'மனிதம்' சஞ்சிகையில் தனது கருத்தை கரிகாலன் முன் வைக்கையில், புலிகளுக்கு குழு நலன்கள் மட்டுமே இருப்பதாகவும் புலிகளுக்கு ஒரு அரசியலே கிடையாது எனவும் வாதிடுகின்றார். இந்த விமர்சனத்தின் பொதுவான போக்கானது புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளை அடிப்படையாக வைத்து அவர்களை அரசியல் இல்லா "மா:பியா" கும்பல் போல சித்தரிக்க முனைவதாகவே இருக்கிறது.

புலிகள் வரலாற்றில் திடீரென தோன்றிய ஒரு சக்தி அல்ல அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைபொருள். தமிழ் மக்கள் தனியான அரசை அமைக்கும் நோக்கில் முன்னெடுக்கும் போராட்டத்தில் தலைமை தாங்கும், சில அரசியல் கோரிக்கைகளைக் கொண்டுள்ள அமைப்பு, புலிகளிடம் இருக்கும் அரசியல் புரட்சிகரம் அற்றது, பிற்போக்கானது என்பது வேறுவிடயம். ஆனால் இதுவும் ஒரு வித அரசியலே. இந்த அரசியலானது எந்த மக்கள் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதே நாம் விடைகாண வேண்டியதாகும் . இந்த கடினமான பணியை புலிகள் அரசியலே இல்லாதவர்கள் எனக் கூறுவதன் மூலம் தவிர்த்துவிட முனைவது , மாற்று அமைப்பை கட்ட முனையும் எமது முயற்சியில் எந்த விதமான காத்திரமான பங்களிப்பையும் செய்துவிடாது. புலிகளை " மா:பியா " போன்ற கும்பல்களிடம் இருந்து அடிப்படையில் வேறுபடுத்துவது இந்த அரசியலே. இந்த அரசியல் காரணமாகவே "மா:பியா" கும்பல்கள் போலன்று புலிகள் மக்களின் குறிப்பிடத்தக்க பிரிவினரின் ஆதரவின் (அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ) பெறமுடிகிறது. இதனாலேயே சிறீலங்கா அரசும் இந்திய அரசும் எத்தனையோ முயற்சிகளை எடுத்தும் மக்களிடம் புலிகளை முற்றாக தனிமைப்படுத்தி அழித்து விட முடியாது உள்ளது.

இன்றைய நவீன சமுதாயத்தில் அரசானது சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் மிகவும் ஆழமாக ஊடுருவி உள்ளதால் அன்றாட வாழ்வில் எல்லாத்துறைகளிலும் அரசியல் இருக்கவே செய்கிறது. இதனைக் கருதித்தான் பெண்ணிலைவாதிகள் "தனிப்பட்டது என்பதும் அரசியலே " ( The Personal is Political ) என்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் ஒரு வலதுசாரித் தீவரவாத, படுபிற்போக்கான அரசியலைக் கொண்டுள்ள ஒரு அமைப்பை அதற்கு அரசியலே கிடையாது என்று நிந்திப்பதன் மூலம் அந்த சக்தியை வரலாற்றிலிருந்து அகற்றிவிட முடியாது. அரசியலை நேரடியாக முன்னெடுக்காத " மா:பியா " கும்பல்களை விட பிற்போக்கான அரசியலைக் கொண்டுள்ள 'பாசிச' அமைப்புகள் சமூகத்திற்கு மிகவும் ஆழமான தீங்குகளை இழைக்கக்கூடியவை. எனவே புலிகளை நிந்திப்பதன் மூலம் அன்றி அதன் அரசியலை ஆழமாக புரிந்துகொள்வதன் மூலம் மட்டுமே மாற்றுத் தலைமை பற்றிய பிரச்சினை சரியான முறையில் அணுகப்பட முடியும்.

எமது விவாதங்களில் தேசத்தின் நலன்கள், வர்க்க நலன்கள், குழுநலன்கள் என்ற பதங்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. புலிகளை அவர்களது " குழுநலன்கள் " என்பதற்கூடாக மதிப்பிடும் முயற்சிகளும் நடைபெறுவதால் முதலில் நலன்கள் பற்றிய விடயத்தில் பொதுவான விளக்கத்தை எட்ட முனைவது அவசியமாகும். பொதுவாக ஒரு மனிதரின் நலன்கள் என்றால் என்ன ? இந்த நலன்களுக்கும் நடப்பில் உள்ள சமூக, பொருளாதார, அரசியல் உறவுகளுக்கும் உள்ள உறவு என்ன ? என்ற கேள்விகள் இந்த நோக்கில் முக்கியத்துவம் பெறுகின்றன.

பொதுவாக ஒவ்வொரு மனிதரும் தமது நுகர்விற்கான ( பொருள் வகையிலும், ஆன்மீக வகையிலும் துய்ப்பிற்கான ) ஆற்றலை பெருக்கிக் கொள்ள விரும்புகின்றனர். இதற்காக குறைவான சிரமத்தை ஏற்க ( குறைந்தளவு உழைப்புச் சக்தியை செலவழிக்க ) விரும்புகின்றனர். இவற்றின் ஒட்டுமொத்தமான தொகுப்பே ஒருவரது நலன்கள் என்றாகிறது. குறிப்பிட்ட **சமூகத்தின்** பொருள் உற்பத்தி எவ்வாறு **நடைபெறுகிறது** ? அந்த உற்பத்தியில் **ஒருவரது** இடம் என்ன ? என்பவற்றைப் பொறுத்து ஒருவர் அடையக் கூடிய நலன்களது அளவும் அவற்றை அடையும் முறைகளும் சமூக அளவில் வரையறுக்கப்படுகின்றன. உற்பத்தி உறவில் ஒரே நிலையில் உள்ளவர்கள் மொத்த நலன்களை கொண்டுள்ளார்கள். இவர்கள் ஒரே வர்க்கமாக அமைகிறார்கள் . உற்பத்தி உறவில் முரண்பட்ட நிலைகளில் உள்ள வர்க்கங்கள் ஒன்றுக்கொன்று முரணான நலன்களைக் கொண்டுள்ளார்கள். இதனால் தமது நலன்களை அடைவதற்காக முரண்பட்ட வர்க்கங்கள் முட்டிக் மோதிக்கொள்ள நேர்கிறது. இது வர்க்கப்போராட்டமாகிறது. இந்தப் போராட்டத்தின் இறுதி வெற்றி, யாருடைய கையில் அரசு அதிகாரம் இருகிகறது என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுவதால் இந்த நலன்களுக்கான போராட்டம் அரசு அதிகாரத்திற்கான போராட்டமாகிறது. இந்த வர்க்கப் போராட்டத்தினூடாக சமூகம் இயங்குகிறது.

சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதருக்கும் சில குறிப்பிட்ட நலன்கள் உண்டு. அந்த நலன்களை அடையும் பொருட்டு அவர்கள் தனி நபர்களாகவோ அல்லது குழுக்களாகவோ, வர்க்கங்களாகவோ, தாபனங்களாகவோ தம்மை இனங் காண்கிறார்கள், ஒழுங்கு அமைக்கிறார்கள், போராடுகிறார்கள். இப்படியாக பல்வேறு சக்திகளும் சமூகத்தில் போராடிக் கொண்டிருந்தாலும் சமூக வளர்ச்சியில் எல்லோரும் ஒரே விதமான தாக்கத்தை நிகழ்த்துவது இல்லை. யாருடைய நலன்கள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக வளர்ச்சி போக்கின் திசையில் அமைகின்றன ? யாருடைய நலன்கள் நடப்பிலுள்ள சமூக அமைப்பை காப்பதை, அல்லது சமூக இயக்கத்தை பின்னோக்கி செலுத்துவதை வேண்டி நிற்கின்றன ? எந்த தனிநபர், குழு, வர்க்கம், தாபனம் தனது நலன்களை சரியாக இனங்கண்டு உணர்வுபூர்வமாகவும் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன், முரணற்றும் முன்னெடுக்கின்றன ? என்ற கேள்விகளே சமூக இயக்கத்தை , வரலாற்றை புரிந்து கொள்வதில் முக்கியத்துவமானவை.

முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கம் மிகவும் புரட்சிகரமான வர்க்கமாக கருதப்படுவது அந்த வர்க்கம் எந்த விதமான நலன்களையும் கொண்டிராத ஒரு விதமான 'தூய்மையான' வர்க்கம் என்ற அர்த்தத்தில் அல்ல . அப்படிப்பட்ட தூய்மையான சக்திகள் என்று எதுவுமே யதார்த்தத்தில் கிடையாது. பாட்டாளி வர்க்கத்தை புரட்சிகர வர்க்கமாக கருதுவது எந்த அர்த்தத்தில் என்றால், அது சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியில் மட்டுமே தனது நலன்கள் கைகூடும் நிலையில் உள்ளது. இதனால் தனது நலன்களை அடைவதற்கு சமூக மாற்றம் என்பதை ஒரு அவசியமான முன்நிபந்தனையாகக் கொண்டுள்ளது. இதனால் சமூகப் புரட்சிக்கு தீவிரமாக பங்காற்ற முன்வருகிறது என்பதனாலேயே. கொம்யூனிச சமூகத்தில் பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கம் என்ற வகையில் இல்லாமல் செய்வதும்கூட தான் புரட்சியின் மூலம் அடைந்த நலன்களை நிரந்தரமாக காப்பதற்கே. ஏனெனில் பொதுவில் வர்க்க சமுதாயங்களில் உழைக்கும் மக்களில் நலன்களை என்றென்றைக்குமாக உத்தர வாதப்படுத்திவிட முடியாது. இதனால் நீண்ட காலக்கண்ணோட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தனது நலன்கள் காக்கப்படுவதை உத்தரவாதப்படுத்துவதற்கு ஒரேவழி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு மட்டுமல்ல தானே ஒரு வர்க்கமாக இருப்பதற்கான நிலைமைகளையே முடிவிற்கு கொண்டு வருவதே ஆகும்.

தமது குறுகிய வர்க்க எல்லைகளைக் கடந்து பரந்துபட்ட உழைக்கும் மக்களுடன் தம்மை இனங்கண்டு அவர்களுக்காக தன்னை முழுக்க முழுக்க அர்ப்பணித்துக் கொண்டு போராடிய மாபெரும் புரட்சியாளர்கள் கூட தமது உடனடியான, குறுகிய பொருள்வகை நலன்களைக் கடந்து வருகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இவர்களை இப்படிப்பட்ட தியாகங்களுக்கு உந்தித தள்ளுவது பரந்துபட்ட மக்களுக்காக, சமூகநீதிக்காக போராடுவதால் இவர்களுக்கு ஏற்படும் திருப்தியும், சமூக மாற்றத்தில் இவர்களுக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையுமேயாகும். இங்கு இவர்களது உடனடியான ஆன்மீக நலன்களும், நீண்ட காலக்கண்ணோட்டத்தில் அவர்களது முழுமையான நலன்களும் சம்பந்தப்படவே செய்கிறது.

எனவே எந்த ஒரு சமூக இயக்கத்தையும் வரலாற்றையும் மதிபபீடு செய்யும்போதும் எழுப்பப்படவேண்டிய கேள்வி அந்த சமூக இயக்கத்தில் குறிப்பிட்ட குழுக்களுக்கு நலன்கள் இருக்கின்றதா இல்லையா என்பதல்ல: ( உண்மையில் இந்த கேள்வி அபத்தமானது! பாசாங்குதனமானது ! ) யாருடைய நலன்கள் அந்த சமூக இயக்கத்தின் வளர்ச்சிப் போக்குடன் அல்லது அன்றைய வரலாற்றுத் தேவையுடன் இசைவாக அமைகின்றன என்பதே.

மோசமான தேசிய ஒடுக்குமுறையை முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் தேசம் என்ற வகையில் அந்த சமூகத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தமது உயிர்ப் பாதுகாப்பு மற்றும் அடிப்படையான ஜனநாயக உரிமைகளுக்காக போராடுவது என்பது அவர்களது உடனடி நலன்களாகிறது. தேசிய அரசை அமைப்பதன் மூலமே இந்த நலன்கள் உத்தரவாதப்படுத்தப்படலாம் என்பதால் தேசிய அரசை அமைப்பது அத் தேசத்தின் அங்கத்தவர்கள் அனைவரதும் நீண்ட கால நலனாகிறது. தேசம் என்பது பல்வேறு வர்க்கங்களையும் கொண்ட ஒரு சமூகம் என்பதால் அந்த தேசத்துள் அமையும் பல்வேறு வர்க்கங்களும் தமக்கென குறிப்பான நலன்களையும் கொண்டிருக்கவே செய்கின் றன. ஆயினும் தேசிய ஒடுக்குமுறை மிகவும் தீவிரமடைந்திருக்கும் நிலையில் தேசத்தின் பொதுவான நலன்களை பாதுகாப்பதன் மூலமே வர்க்கங்கள் ஒவ்வொன்றும் தமது வர்க்க நலன்களுக்காகப் போராடுவது சாத்தியப்படும் என்பதால் இந்த வர்க்கங்கள் தமது வர்க்க நலன்களை பொதுவான தேசத்தின் நலன்களுக்கு உட்புடுத்தி போராடுமாறு நிர்ப்பந்திக்கபட்டுள்ளன. தேசிய நலன்களுக்காகப் போராடும்பொழுது தமது வர்க்க நலன்களையும் கருத்திற்கெடுத்தே போராடுகின்றன. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இவ் வர்க்கங்கள், தேசத்தின் நலன்கள் என்பதை தமது வர்க்கத்தின் நலன்களே என்பதாக அர்த்தப்படுத்த முனைகின்றனர். தேசத்தின் நலன்கள் என்பது சுரண்டும் வர்க்கங்கள், மேட்டுக்குடியினரின் நலன்களாக அர்த்தப்படுத்துகையில், தேசத்தின் ஒற்றுமை என்பதை அந்த சமூகத்தினுள் அல்லது அந்த சமூகத்திற்கு வெளியே எழும் எழுச்சிகளை நசுக்குவதற்கான சாதனமாக அர்த்தப் படுத்துகையில் அந்த தேசியமானது பிற்போக்கானதாகிறது. தேசத்தின் நலன்கள் என்பது பரந்து பட்ட மக்களது சமூக, பொருளாதார, அரசியல் விடுதலையுடன் இனம் காணப்படுகையில் அந்த தேசியமானது முற்போக்கானதாகிறது.

இப்போது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் குழுநலன்கள் தேசிய நலன்களுடன் எப்படி உறவு கொள்கின்றன என்று பார்ப்போம். எமது தேசத்தின் நலன்களைக் காப்பதற்காக பலர் ஒன்றுதிரண்டு போராடும்போது அங்கு குழுக்கள் தோன்றுகின்றன: அந்த குழுக்களுக்கென்று சில குறிப்பான நலன்களும் உருவாகின்றன. சில குழுக்கள் தமது குழுநலன்களை தேசத்தின் நீண்டகால நலன்களுக்கு உட்புடுத்தி போராடலாம். இதன் மூலம் தேசிய விடுதலைப் போராட்டம் பலப்படுத்தப்படுகின்றது. சில குழுக்கள் தேசத்தின் நலன்களை தமது குழுநலன்களுக்கு உட்படுத்திப் போராடலாம். இதனால் தேசிய விடுதலைப் போராட்டம் பலவீனப்படுத்தப்படுகிறது. இப்படியாக ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசத்தின் நலன்கள் ஆனது வர்க்க, குழு, தனிப்பட்ட நலன்களுடன் முட்டிமோதவே செய்யும். இங்கு எழுப்பப்பட வேண்டிய கேள்வி குழுநலன்கள் உண்டா? இல்லையா ? என்பதல்ல. மாறாக தேசத்தின் நலன்கள் அடிப்படையிலேயே கேள்விக்குள்ளாக்கப்படும் தீர்க்கமான கட்டங்களில் யாருடைய நலன்கள் தேசத்தின் நலன்களுடன் ஒத்திசைந்தன என்பதே.

இந்திய அரசிடம் உதவி பெறும்போதும், அமைப்புகள் தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளை மறுத்தபோதும், அமைப்பினுள் ஜனநாயகத்தை மறுத்தபோதும், இயக்கங்கள் ஜக்கியப்பட்டபோதும் – மோதிக் கொண்டபோதும், இலங்கை அரசிடம் பேசியபோதும் – மோதியபோதும் பலதரப்பட்ட நலன்களும் தமக்குள் முட்டிமோதிக் கொண்டுதானிருந்தன. ஆனால்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசத்தின் நலன்கள் அடிப்படையிலேயே கேள்விக்குள்ளாகும் இரண்டு குறிப்பான சந்தர்ப்பங்களை தேசிய விடுதலைப் போராட்டம் முகங்கொடுக்க நேர்ந்தது.

1) தமிழ் மக்களது குறைந்தபட்ச நலன்களைக்கூட உத்தரவாதப்படுத்தாமல் இந்திய அரசு திணித்த ஒப்பந்தம்.

2) தேசியப் பிரச்சனைக்கு ஒரு குறைந்தபட்ச தீர்வைக்கூட முன்வைக்க பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசு திட்டவட்டமாகவே மறுத்தது .

இப்படிப்பட்ட இரண்டு தீர்க்கமான கட்டங்களிலும் பல்வேறு குழுக்களும் எப்படி நடந்து கொண்டன என்பதுதான் இங்குள்ள பிரச்சனை. விரும்பியோ விரும்பாமலோ, அறிந்தோ அறியாமலோ, இவை நடந்து கொண்டன என்பது இரண்டாம் பட்சமானது. பலரும் குறிப்பிடுவதுபோல் புலிகள் தேசத்தின்மீது கொண்டுள்ள அக்கறையில் இருந்தல்லாமல் தமது குழுநலன்களை அடிப்படையாக வைத்தே செயற்பட்டும் இருக்கலாம். ஆனால் இந்த காரணங்கள் எதுவுமே புலிகள் இந்தக் காலகட்டங்களில் தேசத்தின் நலன்களுடன் தம்மை இனங்காட்டிக் கொண்டதை மறுத்துவிட மாட்டாது.

இதே காலக்கட்டத்தில் ஏனைய குழுக்களது நடவடிக்கைகளையும் சற்று ஒப்பிட்டு பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும். முன்பு ஈழம் என்பது தமிழர் தாயகத்தை குறிப்பிடும் என்றவர்கள் ஒப்பந்தத்தின் பின்பு ஈழம் என்பது முழு இலங்கையையுமே குறிப்பிடும் என்று புது வியாக்கியானம் கொடுத்து 'அரசியல் நீரோட்டத்தில்' கலந்தபோதும், மாகாணசபையில் பதவி வகித்தபோதும், 'தேசியக் கொடியின் (சிங்கக் கொடி)' மகிமைபற்றி பேசியபோதும், 'பிள்ளை பிடித்தபோதும்', 'ஈழப்பிரகடனம்' செய்தபோதும், மீண்டும் கொழும்புக்குச் சென்று 'ஜனநாயகத்திற்காகப் போராடும்போதும்', பேச்சு வார்த்தைகளில் ஸ்ரீலங்காவின் பேரினவாத கட்சிகள் வடக்கு– கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட நிலையிலும் அரசுடன் தமது உறவுகளை முறித்துக் கொள்ளாதபோதும் இந்த அமைப்புகள் தேசத்தின் நலன்களுக்காகத்தான் செயற் படுவதாக யாராவது கருதுகிறார்களா ?

புலிகள் தீர்க்கமான இரண்டு கட்டங்களில் தமிழ் தேசியத்துடன் இசைந்து போனார்கள் என்பது எந்த வகையிலும் புலிகளது ஊசலாட்டங்கள், மற்றும் பலவிதமான 'பாசிச' போக்குகளுக்கான அங்கீகார மாகிவிடாது. எதிர்காலத்திலும் அவர்கள் தேசியத்துடன் இணக்கமான போக்கைத்தான் வெளிப்படுத்துவார்கள் என்பதற்கான உத்தரவாதமும் அல்ல. புலிகளது எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய எதிர்வுகூறல் எதுவுமே அவர்களது அரசியல் பற்றிய புரிதலில் இருந்தே பிறக்க முடியும். ஆனால் குழுநலன்கள் என்பதோ அவர்களது அரசியலையே மறுப்பதோ இந்தவிதமான புரிதலுக்கு உதவமாட்டாது.

புலிகள் தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப் படுத்தினால் ஏன் இத்தனை பேரம்பேசல்கள் ? இத்தனை குத்துக்கரணங்கள் ? சரணாகதி அறிக்கைள் ? என்ற கேள்வி எழவே செய்கிறது. இது புலிகள்து தேசியத்தில் உள்ள அடிப்படையான குறைபாடு. புலிகள் பரந்துபட்ட தமிழ் மக்களின் தேசிய நலன்களை முரணற்ற விதத்தில் முன்னெடுக்காமல் ஊசலாடுகிறார்கள். இதற்குக் காரணமாக அமையும் புலிகளின் அரசியலைப் புரிந்து கொள்வதுதான் இப்போது எம்முன் உள்ள பிரச்சினை. புலிகள் இந்திய நலன்களுக்கு ஆதரவாகவும், பிரேமதாசாவை நம்புவதாகவும் அறிக்கை விட்டார்கள் என்பது உண்மைதான். அவை வெறுமனே இந்திய, இலங்கை அரசுகளை ஏமாற்றுவதற்கான தந்திரோபாய நடவடிக்கைகள் அல்ல. அவர்களது அரசியலின் உண்மையான வெளிப்பாடு என்று கொண்டாலும்கூட அவர்கள் இறுதியில் எப்படி நடந்தாகவேண்டி இருந்தது என்பதுதான் முக்கியமானதாகும்.

குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சக்தி எதனைக் கருதுகிறது ? எதனை விரும்புகிறது ? என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. இறுதியில் அது எப்படி செயற்பட்டாக வேண்டி இருந்தது என்பதுதான் தீர்க்கமான அம்சமாகும். சில சக்திகள் உணர்வு பூர்வமற்றும் கூட தமது வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றமுடியும். வரலாறானது குறிப்பிட்ட சக்திகளது விருப்பங்களையல்ல, இவற்றினது நடத்தைகளையே பதிவு செய்யும். குறிப்பிட்ட ஒரு சக்தியினது விருப்பத்திற்கும், அதன் நடத்தைக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பின் வரலாறு அந்த சக்தி உணர்வுபூர்வமற்று தனது வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றி முடித்ததாகவே தீர்ப்பளிக்கும்.

திலீபனது உண்ணாவிரதத்தை, புலிகள் இந்தியாவுடன் பேரம் பேசுவதற்காகப் பாவிக்கப்பட்ட அழுத்தங்கொடுக்கும் நடவடிக்கை என விமர்சிப்பவர்களும் உண்டு.. ஆனால் திலீபனின் உண்ணா விரதத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தமிழ்த் தேசியத்தின் அன்றைய காலகட்டத்தில் மிகவும் குறைந்தபட்ச கோரிக்கைகளாகவும் அமைந்தன என்பதும் மறுக்கப்பட முடியாததாகும். இந்தக் கோரிக்கைள் மூலம் தமது நலன்களும் பிரதிபலிக்கப்பட்டதாலேயே மக்கள் அதனை ஆதரித்தார்கள்.

புலிகளின் அரசியல் தவறுகளுக்கு எப்படி அவாகளது அறியாமையைக் காரணம் கூறமுடியாதோ, அதுபோலவே மக்கள் ஏதோ ஒரு விதத்தில் புலிகளை ஆதரிப்பதற்கும் மக்களது அறியாமை காரணமல்ல. புலிகள் ஏதோ ஒரு விதத்தில் தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதே காரணமாகும். தமிழ்த் தேசியத்திற்கும் புலிகளுக்கும் உள்ள உறவை புரட்சிகர சக்திகள் சரியாக இனங்கண்டுகொண்டு அதனை இன்னும் சிறப்பான விதத்தில் பிரதிபலிப்பதன் மூலம், புரட்சிகரமான வழிமுறையில் முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே புலிகளிடமிருந்து போராட்டத் தலைமையைக் கையகப்படுத்தலாமேயன்றி 'மாஃபியா கும்பல்' என்று திட்டித்தீர்ப்பது எந்தப் பயனையும் விளைவிக்கப் போவதில்லை.

குழுநலன்கள் என்ற கருத்தை வலியுறுத்துபவர்கள் சதாம் குஃஷைன், நொரியேகா போன்றோரை உதாரணமாகக் காட்டுகிறார்கள். மக்கள் நலன்களை தமது கரங்களில் எடுத்துக்கொண்ட தனிநபர்களாக இவர்கள் சித்தரிக்கப்படுகிறார்கள். சதாம் குஃஷைனும் அவரது 'பாத்' ஆட்சியும் 60, 70 களில் அரபு உலகைக் குலுக்கி எடுத்த அரபுத் தேசிய வாதத்தின் விளைபொருட்கள் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரபுத் தேசிய இயக்கத்திற்கு தலைமை தாங்கிய குட்டி முதலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு, அதன் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு தனது வர்க்க நிலையைக் கடக்கிறது. இதன் விளைவாக தனது முன்னைய முற்போக்கான தேசியவாத நிலைப்பாடுகளைத் தளர்த்தி ஏகாதிபத்தியங்களுடன் அதிகம் முரண்படாத ஒரு வழிமுறையைத் தேர்ந்தெடுக்கின்றது.

www.tamilarangam.net

இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தத் தேசிய எழுச்சியை நசுக்கிவிட முயலும் ஏகாதிபத்தியங்களின் முயற்சிகளை இவர்கள் இன்னும் எதிர்க்கவே செய்கிறார்கள். பரவிவரும் அரபுத் தேசிய வாதத்தை முறியடிப்பதற்கான சந்தர்ப்பத் திற்காக ஏகாதிபத்தியங்கள் காத்திருந்தபோது அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை குவைத்தை ஆக்கிரமித்ததன்மூலம் சதாம் குஃஷைன் வழங்கினார்.

மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியங்கள் தமது நிலைப்பாடுகளை நியாயப்படுத்துவதற்காக அங்கு ஏகாதிபத்தியங்களின் குழு நலன்களுடன் முரண்பட்டு நிற்கும் அரபுத் தேசியவாத் தலைவர்களுக்கு எதிராக ஏராளமான அவதூறுப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிடுகின்றன. லிபியா, ஈராக், சிரியா போன்ற நாடுகள் ஏகாதிபத்தியங்களால் விமர்சிக்கப்படுவதன் நோக்கமே இதுதான்! தனிமனித சர்வாதிகாரம் நிலவுவதாகவும் , மக்கள் அடிமைகளாக நடத்தப்படுவதாகவும் காட்ட முனைகிறார்கள். இந்த விடயத்தில் ஈராக் ஆனது, ஏகாதிபத்தியங்களால் ஆதரிக்கப்படும் சவூதி, குவைத் போன்ற நாடுகளைவிட நல்ல நிலையிலேயே இருக்கிறது என்பதை மறைத்தார்கள். ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்பை எதிர்ப்பது, அதன் உள்நாட்டுக் கொள்கைகளை விமர்சிப்பது என்று வரும்போது புரட்சியாளர்களது கண்ணோட்டங்கள் ஏகாதிபத்தியங்களின் பிரச்சாரங்களுக்குப் பலியாகிப் போய்விடக்கூடாது என்பது முக்கியமானது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவகாலனித்துவப் பிடி மிகவும் வலிமையானது. இந்த வலிமையை அமெரிக்காவினால் ஆதரிக்கப்படும் பொம்மை அரசுகளால்கூட சகிக்க முடியாத நிலைமை ஏற்படுகின்றது. இதனால் இவர்கள் அமெரிக்காவுடன் முரண்பட நேர்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் பனாமா விவகாரம். அமெரிக்காவைப் பொறுத்த வரையில் பொருளாதார ரீயிலும், இராணுவ ரீதியிலும் கேந்திர முக்கியத்துவமுடைய பனாமாக் கால்வாயைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அமெரிக்காவின் கரிசனை எவ்வளவு இருக்கும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே. தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்கா போதைப் பொருள் கடத்தல் பிரச்சினையாக பிரச்சாரம் செய்தது. ஆனால் சமூக அக்கறை உடையவர்களது மதிப்பீடு இதுவாக இருக்க முடியாதல்லவா !

சதாம் குஃஷைனையும், நொரியேகாவையும் மதிப்பிடுவதில் தவறிழைப்பதும், அதே மதிப்பீட்டை புலிகள் விடயத்திலும் பிரயோகித்து அந்தத் தவறை இன்னும் ஆழப்படுத்துவதும் தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு முடிவுகட்ட எந்த விதத்திலும் உதவப்போவதில்லை.

யுத்தத்தின் நோக்கங்களை அரசியலில் காணுமாறும், அரசியல் கோரிக்கைகளை பொருளாதார நலன்களில் கண்டறியுமாறும் மார்க்ஸியம் கற்பிக்கிறது. எந்தவொரு யுத்தத்தையும் , அதில் மோதும் குழுக்களது நலன்களையும் புரிந்துகொள்ள அந்த சமூகம் பற்றிய வர்க்கப் பகுப்பாய்வு முன்நிபந்தனையாகிறது. குறிப்பிட்ட ஒரு அரசியலை நிர்ணயிப்பதில் பொருளாதாரம் மட்டுமே பங்களிப்பதில்லை. வரலாறு, சித்தாந்தம், தலைமை தாங்பவர்களது தனிப்பட்ட குணாதிசயங்கள் போன்ற ஏனைய காரணிகளும் குறிப்பான பங்களிப்புகளைச் செய்யலாம். ஏனைய காரணிகளின் பங்களிப்புகளை விளக்குவதற்கு, முதலில் வர்க்கப் பகுப்பாய்வை மேற்கொள்வதும்,



இதனடிப்படையில் பொருளாதார ரீதியிலான விளக்கங்களுக்கு விதிவிலக்காக இருக்கும் அம்சங்களை ஏனைய காரணிகள் மூலமும் விளக்க முனைய வேண்டும். இந்த வகையில் புலிகளின் அரசியலைப் புரிந்து கொள்ள தமிழ்ச் சமூகம் பற்றிய வர்க்கப் பகுப்பாய்வு தீர்க்கமான அம்சமாகிறது.
எத்தனைதான் குறைபாடுகள் இருப்பினும் கூட இன்று நாம் மேற்கொள்ளும் வர்க்கப் பகுப்பாய்வு முறைகளும், தத்துவார்த்த தேடலுமே நீண்ட காலத்திலாவது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழியாகும். புலிகளுக்கு அரசியலே கிடையாது என ஒதுக்கிவிடுவதோ, பொருளாதார வாதம் என்று கூறி இந்தவிதமான வர்க்கப் பகுப்பாய்வு முறைகளையே கைவிட்டு குழுநலன்கள் என வாதிடுவதோ எந்த விதமான முன்னேற்றத்தையும் தரப்போவதில்லை. இவை இன்று எம் மத்தியில் ஓங்கியுள்ள தத்துவார்த்த வறுமையும் , கற்றுக்குட்டித் தனமும் நிலைத்து நிற்பதற்கே வழிவகுக்கும்.

## தன்னியல்பும் திட்டமும்

கடந்தகால போராட்ட அமைப்புகள் எதனிடமும் திட்டம் இருக்கவில்லை, தன்னியல்புப் போக்கே நீடித்தது. போராட்டம் அடைந்த மோசமான பின்னடைவுகளுக்கு இது பிரதான காரணமாகும் என்ற உணர்வு இன்று பரவலாக ஏற்பட்டு வருகின்றது. இது ஓர் ஆரோக்கியமான தொடக்கமே! திட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒரு உவமானத்தை எடுத்துக்கொள்வோம்.

ஒரு குழுவினர் ஓர் அடர்ந்த காட்டைக் கடக்க விரும்புவதாக வைத்துக் கொள்வோம். அவர்களிடம் அந்தப் பிரதேசத்தைப் பற்றிய வரைபடமும் (Map) ஒரு திசையறி கருவியும் (Compass) இருப்பின் இவற்றின் உதவியுடன் இவர்கள் தமது இலக்கை அடைய தாம் போக வேண்டிய பாதையை முன்னரே திட்டமிட்டுக் கொள்வதும் சாத்தியப்படும். இதன்மூலம் அவர்கள் தமது பாதையில் எதிர்நோக்கியுள்ள இடையூறுகளையும் ஓரளவு முன்னரே ஊகித்துக்கொள்ள முடிவதால் அவற்றை முகங்கொடுப்பதற்கான தயாரிப்புக்களுடன் தமது பயணத்தைத் தொடர்வது சாத்தியப்படும். இப்படிச் செய்வதன் மூலம் அந்தக் குழுவானது தனது இலக்கை குறுகிய காலத்திலும், குறைந்தபட்ச இழப்புக் களுடனும் சென்றடைவது சாத்தியப்படும். இந்த சாதனங்கள் எதுவும் இல்லாமலும், பாதையை முன்னரே திட்டமிடாமலும் ஒரு குழு தனது பயணத்தைத் தொடர்வதாக வைத்துக்கொள்வோம். பயணத்தைத் தொடங்கும்போது எல்லாமே தெளிவாக இருப்பது போலத்தான் தோன்றும். ஆனால் காட்டினுள் இறங்கி ஆழமாக ஊடுருவத் தொடங்கியவுடன் திசை தவறுகிறது. அவ்வப்போது தோன்றும் உணர்வுகளின் அடிப்படையில் முன்னெதிர்பாராத இடையூறு களைக் கடந்துபோக முனைகின்றனர். பல தடவைகளில் திசை தவறுகின்றனர். இதனால் அனாவசியமான அலைச்சல் நீடிக்கின்றது. எதிர்பாராது தோன்றும் ஆபத்துக்களை முகம் கொடுக்க எந்தத் தயாரிப்பும் இல்லை. இதனால் பலர் களைப்பினாலும், உணவின்மையாலும், மிருகங்களின் தாக்குதலினாலும் மடிந்து போகின்றனர். சிலர் தொடங்கிய இடத்திற்கே வந்து சேர்கின்றனர். அரிதாக மிகச் சிலர் மட்டும் தமது இலக்கை நீண்ட காலத் தாமதத்தின்பின்பு பாரிய இழப்புக்களுடன் சென்றடைகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* * * *

சமுதாயத்தை அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் புரட்சிகர பயணம் என்பதும் ஒருவகையில் இதனை ஒத்ததுதான். தாம் வாழும் சமுதாயம் பற்றிய போதிய ஆய்வுகளையும், மிகவும் முன்னேறிய தத்துவத்தையும் பெற்றிருக்கும் ஒரு புரட்சிகர அமைப்பானது அவற்றைப் பயன்படுத்தி தான் செல்லவேண்டிய இலக்கையும் அதற்கான வழிமுறைகளையும் உணர்வுபூர்வமாக வகுத்துக் கொள்கிறது. இதனால் தனது வெற்றியை அர்த்தமற்ற இழப்புக்களின்றி அடைவதை உத்தரவாதப்படுத்திக் கொள்கிறது. இந்த சாதனங்களையோ திட்டத்தையோ கொண்டிராத ஓர் அமைப்பு போராட்டத்தில் இறங்கும்போது தனது இலக்கை, பாதையை தவறவிட்டு அலைக்கழிகிறது. பல அழிவுகளின்பின் சிலர் தொடங்கிய இடத்திற்கே திரும்பி வருகின்றனர். அரிதாக ஒருசிலர் மட்டும் நீண்டகால தாமதத்திற்குப்பின் பாரிய இழப்புக்களுடன் தமது இலக்கை அடையும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இந்த வகையில் ஒவ்வொரு புரட்சிகர அமைப்பிற்கும் திட்டம் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். திட்டத்தின் அத்தியாவசியத் தன்மையானது வலியுறுத்தப் படுகையில் இந்த வலியுறுத்தல் இன்னோர் கோடிக்கு (Extreme) எடுத்துச் செல்லப்பட்டு "திட்டமில்லாத யுத்தம் எப்படி தேசிய யுத்தமாகும் ? " என்று சமர் குறிப்பிடும் போது திட்டத்தின் தேவை பற்றிய எமது விளக்கம் எதிர் மறை அர்த்தகம் பெறுகிறது

தேசிய விடுதலைப் போராட்டம் மட்டுமல்லாமல் வர்க்கப் போராட்டம் கூட அதன் வெற்றியை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கு திட்டத்தைக் கொண்டிருப்பது அவசியமே. ஆனால் இதற்காக திட்டத்தைக் கொண்டிராத போராட்டம் எதுவுமே தேசிய விடுதலைப் போராட்டமாகவோ வர்க்கப் போராட்டமாகவோ கருதப்பட முடியாது என்பதல்ல. தன்னியல்பு என்பதும் கூட உணர்வைக் கரு அளவில் கொண்டிருப்பது தானே. வரலாற்றில் பல வர்க்கப் போராட்டங்கள் தன்னியல்புடன் நடத்தப் பட்டுள்ளன. நிலப்பரபுத்துவத்தின் கீழ் நடைபெற்ற பல விவசாயிகளின் போராட்டங்கள், மதப் போராட்டங்கள் எனும் வடிவிலேயே நடந்தேறின. இந்தியாவின் சைவ, சமண, பௌத்த மதங்களிடையிலான போராட்டங்கள் கூட மதத்தின் பேரால் நடத்தப்பட்ட வர்க்கங்களுக்கிடையிலான போராட்டங்களே எனக் விவாதிப்போரும் உளர்.

ஒரு போராட்டத்தின் வெற்றிக்கு திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தும்போது, திட்டம் இல்லாத போராட்டம் வர்க்கப் போராட்டமாகவோ அல்லது தேசிய விடுதலைப் போராட்டமாகவோ அமையாது என்று கூறிவிட முடியாது. திட்டம் இல்லாத போராட்டம் அநாவசியமான இழப்புகளை ஏற்படுத்தும், பல சந்தர்ப்பங்களில் இலக்கைத் தவற வைக்கும், பெரும்பாலும் வெற்றியைக் கொண்டுவர மாட்டாது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இந்த உண்மைகள் எல்லாம் ஒரு சக்தியை தேசிய சக்தியா இல்லையா என்று மதிப்பிடுகையில் அதனிடம் திட்டம் உண்டா இல்லையா என்ற கேள்வியை எழுப்புவதை நியாயப்படுத்திவிட மாட்டாது . தேசிய இயக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட சக்தி கொண்டுள்ள உறவிலிருந்தே அது தேசிய சக்தியா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.



இந்த சந்தர்ப்பத்தில் ஒரு எதிர்ப்புக் குரலும் கேட்கிறது. " முற்போக்கு சக்திகள் என்று கூறிக் கொள்வோர் வெறுமனே தத்துவம், திட்டம் என்று கூறி சர்ச்சைப்பட்டு காலத்தை ஓட்டுவதும், தமக்குள் ஐக்கியப்படுவதை தவிர்ப்பதும்தான் மிச்சம். புலிகளிடம் இவற்றில் என்ன இருக்கிறது. ? ஆனால் அவர்கள் போராட்டத்தின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டு போராட்டத்தை முன்னெடுக்கவில்லையா ? "என்பதுதான் அந்த ஆட்சேபனைக் குரல். இங்கு புலகளின் வெற்றி என்பது இன்று அது போராட்டத்தின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டதை மட்டுமே கருத்திற்கெடுத்து தீர்மானிக்கப்படுவது அல்ல. அது தமிழ்த் தேசியத்திற்கு இதுவரை கொண்டு வந்தவை எவை ? எதனைப் படைக்க முனைகிறது என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இன்று போராட்டம் இத்தனை மோசமாக சீரழிந்ததற்கு திட்டமின்மை பிரதான காரணி என உணர்ந்துகொண்டு அந்தத் தவறை சீர் செய்வதன் மூலம்தான் நாம் இந்த சீரழிவிலிருந்து போராட்டத்தை மீட்க முடியும். ஆனால் தத்துவார்த்தப் போராட்டம் என்பதன் பின்னால் குறுகிய கண்ணோட்டம், குறுங்குழுவாதம் போன்றவற்றிற்கு ஆட்பட்டு இடதுசாரி அமைப்புகள் கடந்த காலத்தில் சிதைந்துபோனது பற்றிய விமர்சனத்தை, படிப்பினையை இந்த ஆட்சேபனைக் குரலிலிருந்து கற்றுக் கொள்வது, இன்று மாற்றுத்தலைமையை படைக்க முனையும் எமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

'தூண்டிலின் பிரசைகள்' திட்டமின்மை பற்றியும், தன்னியல்பு பற்றியும் சில அக்கறைக்குரிய விடயங்களைத் தொட முயன்றார்கள். புலிகளுக்கும், கழகத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன என்பது போன்ற கேள்விகள் கவனத்திற்குரியவை. இது தொடர்பான கருத்துக்களை இன்னும் வளர்த்தெடுப்பது பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறோம்.

## தமிழீழ விடுதலைப் போராட்டமும் 83 ஜூலை தாக்குதலும் ........

தரகு முதலாளிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் புலிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை சீர் குலைப்பதற்கு செய்த வேலைகள் என பல விடயங்களை சமர் பட்டியல் இடுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 83 ஜூலை தாக்குதலாகும். " மக்கள் அமைப்பு போராட்டம் தொடர்பான கருத்துக்கள் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில் வெறுமனே இராணுவ நோக்கில் தாக்குதலை நடத்தி போராட்ட அமைப்புகளை பாய்ச்சல் நிலையில் வீங்கச் செய்து அரசியல் கோரிக்கைகளை விட இராணுவத் தேவைகளை வளர்த்திடச் செய்தது. " – இந்தக் கருத்தானது விரிவாக பாசீலக்கப்பட வேண்டியதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 83 ஜூலை தாக்குதலின் பங்கு என்ன?

83 ஜூலையில் திருநெல்வேலியில் நடைபெற்ற 13 இராணுவ வீரர்களை பலிகொண்ட புலிகளின் கண்ணித் வெடித்தாக்குதல் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க சம்பவமே என்ற போதிலும், தமிழ் மக்களது போராட்டத்தில் திடீரென தோன்றிய ஒரு தனியான சம்பவம் அல்ல. 83 ஜூலை தாக்குதல் என்பது தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் முன்னர் நடைபெற்ற பல போராட்டங்களின் ஒரு இயல்பான வளர்ச்சி நிலை மட்டுமே .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1956 இல் சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கும் சட்டத்தை எதிர்க்க அப்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்றத்திற்கு வெளிய சத்தியாக்கிரகம் செய்தது.. இந்தப் போராட்டம் சிங்களக் குண்டர்களின் தாக்குதலால் முறியடிக்கப்பட்டது. பின்பு 60களில் தமிழ்ப் பிரதேசம் எங்கும் சத்தியாக்கிரக, சட்டமறுப்பு போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டத்தின் தீவிரத்தில் தமிழ்ப் பிரதேசத்தில் அரசின் இயல்பான நிர்வாகம் நடத்தப்படுவது சாத்திமற்றுப் போன நிலையில் இராணுவத்தின் மூலம் இந்த போராட்டம் நசுக்கப்பட்டது .

70களில் ஜக்கிய முன்னணி அரசு கொண்டு வந்த தமிழர் விரோத அரசியல் அமைப்புச் சட்டம், தரப்படுத்தல் போன்றவற்றை எதிர்த்து மாணவர்கள், இளைஞர்கள் வீதிகளில் இறங்கலானார்கள். மாணவர் பேரவை போன்ற அமைப்புகளின் தோற்றம் இதனுடன் தொடங்குகிறது. இந்தப் போராட்டங்கள் தீவிரம் அடைந்த நிலையில் தமிழீழக் கோரிக்கை தன்னியல்பாக முன்வைக்கப்பட்டது. 70களின் நடுப்பகுதியில் சிறிது சிறிதாக தன்னியல்பாக தொடங்கிய ஆயுதம் தாங்கிய சிறு நடவடிக்கைகள் 70களின் பிற்பகுதியில் திட்டவட்டமான அமைப்பு வடிவத்தையும், குறிப்பான இலக்குகளையும் நோக்கி வளர்ந்து வந்தது. 80களின் முதல் மூன்று ஆண்டுகளின் போராட்ட அமைப்புகளின் இராணுவ இலக்குகளாக பொலிஸ் நிலையங்களும், இராணுவத்தின் சிறு பிரிவுகளும் மாறிவிட்டிருந்தன. இந்தவிதமான தாக்குதல்களின் மூலம் போராட்ட அமைப்புகள் கணிசமான தன்னியக்க ஆயுதங்களை கைப்பற்றத் தொடங்கின. இவ்வளவும் நடைபெற்றறு முடிந்த நிலையில் போராட்டமானது தன்னியல்பாகவே இராணுவ ரீதியில் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது. அது தான் கண்ணி வெடித் தாக்குதல்.

இதே காலகட்டத்தினுள் சிறீலங்கா அரசின் பேரினவாத அணுகுமுறையுடன் கூடிய படை திரட்டலானது அரசபடைகளை சிங்களப் படைகளாக மாற்றிவிட்டிருந்தது. இதனால் தமிழ்ப் போராட்ட அமைப்புகள் அரச படைகளைத் தாக்கும்போது அந்தத் தாக்குதல்கள் சிங்களவர்களுக்கு எதிரான தாக்குதல்களாக சிங்கள மக்கள் மத்தியில் அர்த்தப்படுத்தப்படக் கூடிய நிலைமை உருவாகியிருந்தது. இதனால் சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான ஜூலைத் தாக்குதல் சிங்கள மக்களுக்கெதிரான தாக்குதல்களாக அர்த்தப்படுத்தப்பட்டது. இது இன வன்செயலுக்கு வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது. 83 ஜூலை இனவன்செயலானது சாதாரண சிங்கள மக்கள் ஆத்திரப்பட்டு தன்னியல்பாக கிளர்ந்தெழுந்து நடத்திய சாதாரணமான இனக் கலவரமல்ல. இது மிகவும் திட்டமிடப்பட்டது. சிங்கள அரசியல் வாதிகள், படையினர், குண்டர்கள் போன்றவர்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் வாக்காளர் பட்டியல்களுடன் வந்து நடத்திய இனஒழிப்பு நடவடிக்கையாகும். சிறீலங்கா அரசுக்கும், பேரினவாத சக்திகளுக்கும் இதில் நேரடி பங்குண்டு.. புலிகள் தமது தாக்குதல்மூலம் இப்படிப்பட்டதொரு தாக்குதல்களை எதிர்பார்க்கவில்லை. பிற்காலங்களில் அரசு, மேற்கொண்டு கலவரங்கள் நடப்பது தனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் என்ற நோக்கில் கலவரங்களைத் தவிர்க்க முனைந்த காலங்களில், புலிகள் கலவரங்களை உருவாக்கும் நோக்குடன் நடத்திய அனுராதபுர படுகொலைகள், அரத்தலாவ படுகொலைகள், புறக்கோட்டை குண்டு வெடிப்பு போன்ற மிக மோசமான,



சிங்கள மக்களது உணர்வுகளை மிகவும் பாதிக்கக்கூடிய தாக்குதல்களின்போது கூட இனவன்செயல்கள் என்று குறிப்பிடத்தக்க எதுவும் நடைபெறாதது 83 இனப்படுகொலைகளில் அரசின் பாத்திரத்தை துல்லியமாகக் காட்டக்கூடியது.

77 இல் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி அரசாங்கம் உடனடியாகவே **ஒரு** இன வன்செயலை நடத்தியது. இதனை அடுத்து வந்த காலங்களில் தீவிர இனவாத பிரச்சாரத்தை தானே முன்நின்று நடத்தியது. பாராளமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற கேலிக் கூத்தின் மூலம் தமது இனவாத பிரச்சாரத்திற்கு ஒரு பகிரங்க மேடையை உருவாக்கினார்கள். இதனைத் தொடர்ந்து சிறில் மத்தியூ குழுவினர் இனவாத பிரச்சாரத்தை பகிரங்கமாக முன்னெடுத்துச் சென்றார்கள். 81ல் யாழ் நூலக எரிப்பு, அடிக்கடி நடந்து வந்த இனவன்செயல்கள் என்று இது தொடர்ந்தது. இப்படியாக ஸ்ரீலங்கா அரசிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் ஆழமாக கட்டமைக்கப் பட்டிருந்த இனவெறி வெளிப்படும் ஒருசந்தர்ப்பத்தை மட்டுமே 83 ஜூலை தாக்குதல் ஏற்படுத்திக் கொடுத்தது.

83 ஜூலை இனப் படுகொலைகள் தமிழ் மக்களது மனங்களில் தமது பாதுகாப்பற்ற நிலைமையை உணரச் செய்து, தனியான அரசு அமைப்பதன் மூலம் தமது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தலாம் என்ற கருத்தை ஆழமாக பதியச்செய்தது உண்மையே, எனினும் போராட்ட அமைப்புகள் வீங்கியதில் இன்னோர் காரணியும் சம்பந்தப்படுகிறது, அதுதான் இந்திய அரசு. 1977 முதல் யூ.என்.பி அரசின் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் எரிச்சலடைந்திருந்த இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசை பணியவைப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தது. 1983 இனவன்செயலும், அதனைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்ட அவப்பெயரும், தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக குவியத் தொடங்கியதும், தமிழ் நாட்டு மக்களதும் அரசியல்வாதிகளதும் உணர்வு நிலைகள் போன்றவற்றை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இந்திய ஆளும்வர்க்கம் இராணுவரீதியில் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தொடங்கியது .

1983 ஜூலை வரையில் தீவிரமாக இயங்கி வந்த சில சிறிய குழுக்களையும், கிட்டத்தட்ட அழிந்து போன நிலையில் இருந்த சில குழுக்களையும் தேர்ந்தெடுத்த இந்திய அரசு பயிற்சியும் ஆயுத உதவிகளும் வழங்க ஆரம்பித்தது. இவ்வாறு இந்திய அரசு உதவுவதன் நோக்கம் பற்றி இந்த அமைப்புகள் எதுவும் பெரிதாக சந்தேகிக்கவில்லை. இந்த அமைப்புகளில் இருந்த ஒரு சிலர் இவுற்றை விமர்சித்தாலும் பொதுவாக இந்த அமைப்புகள் இந்திய அரசின் உதவிகளைப் பெறுவதற்கு போட்டி போட்டுக்கொண்டு செல்லும் நிலைமைதான் காணப்பட்டது. இந்திய அரசை திருப்திப்படுத்துவதற்காக தமது அரசியல் நிலைப்பாடுகளைக்கூட் மாற்றிக் கொண்ட அமைப்புகளும், இந்தியாவிற்கு தாமே உயர்ந்தபட்ச விசுவாசம் உடையவர்கள் என்பதை நிருபிக்க முயன்றவர்களும்கூட இருந்தார்கள். இந்தியா எமது நட்பு சக்தி என்பதே பொதுவான கோசமாக இருந்தது. இதே கருத்தை தமிழ் மக்களுக்கு – ஓரிரு சிறு குழுக்கள் தவிர்ந்த – அனைத்து அமைப்புகளும் ஊட்டின.

இந்தியத் தலையீடு சிறிய குழுக்களையும், மற்றும் அழிந்துபோகும் நிலையில் இருந்த குழுக்களையும் செயற்கையாக பருக்கச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தது. போராட்டமானது சுயசார்பில்லாத இந்திய அரசை சார்ந்து நின்று பாய்ச்சல் வடிவை எடுத்தது. அமைப்புகளை இப்படியாக செயற்கையாக வீங்கச் செய்ததில் 83 கலவரமும், இந்திய அரசும் ஆற்றிய பாத்திரத்தைவிட, எப்படிப்பட்ட குறுக்கு வழிகளாலும் தம்மை வளர்த்துக் கொள்ள முனைந்த போராட்ட அமைப்புகளின் தலைமைகள் பிரதான காரணிகளாக விளங்கின. தமது தேசத்தின் நலன்களையும் எதிரியின் நலன்களையும் சரியாக மதிப்பிட்டு செயற்படும் புரட்சிகர நிலைமை இந்த அமைப்புகளிடம் இருந்திருப்பின் 83 கலவரமும், இந்திய அரசும் கூட போராட்டத்தை இவ்வளவு சீரழித்திருக்க முடியாது. போராட்டத்தை சீரழித்ததில் அமைப்புகளின் குட்டிமுதலாளித்துவ தலைமைகளின் குறுகிய கண்ணோட்டங்களே பிரதான பாத்திரம் வகித்தன. அந்தக் காலகட்டத்தில் இருந்த மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான அமைப்பாக கருதப்பட்ட ஒரு அமைப்பும்கூட ஆரம்பத்தில் இந்தியாவின் தலையீட்டை கடுமையாக விமர்சித்தாலும், பின்பு இந்தியாவின் உதவி பெற்ற அமைப்புகள் பாரிய அமைப்புகளாக மாறி போராட்டத்தை தீவிரமாக முன்னெடுக்கையில், தாம் பின்தங்கிவிட்டதாக உணர்ந்தது. இந்தியாவின் உதவிகளை 'தந்திரோபாய நோக்குடன்' பெறுவது, இந்தியாவைப் 'பயன்படுத்துவது' என்ற முடிவுக்கு வந்தது . ஆனால் இந்த அமைப்பு பின்பு இந்தியாவிடம் இருந்து உதவிகளைப் பெற முடியவில்லை என்பது வேறு விடயம். ஒரு புரட்சிகர குழுகூட தன்னியல்பு அலையில் அடித்துச் செல்லப்பட்டதைத் தானே இங்கு காண்கிறோம்.

பல்வேறு சக்திகளும் கலந்து கொள்ளும், தனினயல்பாகவே மக்கள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு போராட்டத்தில் சமர் குறிப்பிடுவதுபோல முதலே மக்கள் அமைப்பு, போராட்டம் போன்ற கருத்துக்களின் வளர்ச்சி, பின்பு இக் கருத்து வளர்ச்சியின் வெளிப்பாடாக ஆயுத நடவடிக்கைகள் என்றதொரு ஒழுங்கை எதிர்பார்க்கலாமா? எந்த ஒரு போராட்டமும் சாதாரண விளையாட்டுப்போல, முன்னரே தீர்மானிக்கப்பட்ட திட்டவட்டமான குழுக்கள், முன்னரே வரையறுக்கப்பட்ட விதிகள் படி நடைபெற்று முடிவதில்லை. போராட்டத்தில் பலதரப்பட்ட சக்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டு போராட்டத்தின் ஒட்டுமொத்தமான போக்கிலும், அமைப்புகள் பரஸ்பரம் ஒன்றின்மீது ஒன்றும் தாக்கம் நிகழ்த்தும். வரலாறு முன்னர் அறிந்திராத பல புதிய விடயங்கள் தன்னியல்பாகவே மக்களின் போராட்டத்திலிருந்து தோன்றி எழும். புரட்சியாளர்கள் செய்யக்கூடியதெல்லாம் சமூகம் பற்றியும், போராட்ட சூழல் பற்றியும் விரிவாக பரிசீலனை செய்து, தமக்கு வெளியிலும் வேறு சக்திகள் செயற்படலாம் என்பதையும், மக்கள் மத்தியில் இருந்து தன்னியல்பாக எழக்கூடிய போராட்ட வடிவங்களையும் கருத்திற்கெடுத்து தமது திட்டத்தையும், மூல உபாயத்தையும், நடைமுறை தந்திரங்களையும் வகுத்து செயற்படுவதுதான். இதன் மூலமாக அந்தப் போராட்டத்தின் உணர்வுபூர்வமான சக்தியாக தம்மை நிலைநாட்டிக் கொள்வதன் மூலம் போராடும் மக்களின் உண்மையான தலைமையாக திகழ்வதுதான். எமது போராட்டத்தில் நடைபெற்றது என்ன வென்றால், மக்களின் தன்னியல்பான போராட்டங்களுக்கு புரட்சியாளர்களது உணர்வு மிகவும் பின்தங்கிவிட்டதுதான். இப்போது தன்னியல்பை குறைகூறுவதன் மூலம் தாம் பின்தங்கிவிட்ட தவறை மறைத்துவிட முயலக் கூடாது.



1968 இல் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டத்தில் கொம்யூனிஸ்ட்டு கட்சி மிகவும் தீவிரமாகச் செயற்பட்டது. இதன் தீவிரமும் செல்வாக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களை பாராளுமன்றத்தில் 'குட்டி வியட்நாம்' பற்றிப் பேசி தமது வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்க்க வைத்தது. ஒரு புரட்சிகர தாபனம் தீவிரமாக போராடிக்கொண்டிருந்த ஒரு சமூகத்தில் இப்படிப்பட்ட ஒரு 'பாசிச' தலைமை எப்படி உருவானது ? என்ற கேள்வி இப்போது தீவிர கவனத்தை வேண்டி நிற்கின்றது. இவ்வாறு நடைபெற்றதில் புரட்சிகர கட்சிகள், தமிழ்ப் புத்திஜீவிகளின் பாத்திரம் என்ன என்பதும் இதே அளவு முக்கியத்துவமுடைய பிரச்சினையே.

70 களில் சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரம் குறைந்துபோனதற்கு உயர்சாதி இளைஞர்களின் கரங்களுக்கு ஆயுதங்கள் வந்ததே காரணமென்று 'தூண்டிலில்' சாந்தன் குறிப்பிடுகிறார். இவர் 70 களுடன் தொடர்புடைய இன்னோர் மாற்றத்தை கவனிக்கத் தவறிவிடுகிறார். அதுதான் 1970 இல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசு முன்னெடுத்த தமிழர் விரோத கொள்கைகளும், இவற்றின் விளைவாக தமிழ்த் தேசியவாதம் தீவிரமடைந்ததுமாகும். இதனால் சாதிய எதிர்ப்புப் பேராட்டம் இரண்டாம் பட்சமான நிலையை எடுத்தது. அரசின் தமிழர் விரோதக் கொள்கைகளை எதிர்த்து தமிழ் மக்கள் மத்தியிலிருந்து உருவான தன்னியல்பான எழுச்சியை தமிழரசுக் கட்சியும் (பிற்காலத்தில் த.வி.கூட்டணியும்) உறுதியாகப் பற்றிப் பிடித்தது. ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக்களின் தேசிய எழுச்சியைப் புரிந்து கொள்ள, சரியாக மதிப்பிடத்தவறிய கொம்யூனிஸ்டு கட்சி 70 களில் தொடர்ந்து முன்னேறிய தமிழ் மக்களின் தேசிய எழுச்சியில் எந்தவிதமான தாக்கத்தையும் செலுத்த முடியவில்லை.

மரபுவழி மார்க்சியம் தேசியத்தை சரியாக மதிப்பிடவில்லை என்ற விமர்சனம் இன்று உலகளாவிய அளவில் இருக்கிறது. இலங்கை கொம்யூனிஸ்டு கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்தே சிங்கள பேரினவாத சக்திகள் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழருக்கு எதிரான நேரடித் தாக்குதலில் இறங்கியபோது, அதன் எதிர் விளைவாக தமிழ்த் தேசியம் எழுந்தது. தமிழ்த் தேசியமானது அடக்குமுறைக்கு எதிரானது என்ற வகையில் தன்னளவில் உள்ளுர முற்போக்கான அம்சத்தைக் கொண்டுள்ளது. தேசியம் என்பதை முதலாளித்துவத்தின் பக்க விளைவு எனக் கருதிய இலங்கை கொம்யூனிஸ்டு கட்சிகள் ஆரம்பத்திலிருந்தே அதனைப் புறக்கணித்தே வந்தனர். பாராளுமன்ற வாதத்தில் மூழ்கிய சில இடதுசாரிகள் தேர்தல் நோக்கங்களுக்காகவும், சிலர் தம்மையறியாமல் இனவாதத்திற்குப் பலியாகிப்போன நிலையிலும்கூட அக் கட்சியில் இருந்த தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களது தன்னியல்பான போராட்டங்களை ஆதரிக்கத் தவறினார்கள். தாம் அவ்வாறு ஆதரிக்காமல் விட்டதற்கு, தமிழர் கட்சிகளை பிற்போக்கு கட்சிகள் என்று காரணம் காட்டினர். சிங்கள இடதுசாரிகளோ தேவைப்பட்டபோது சிங்கள பேரினவாத முதலாளித்துவக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்தார்கள். ஆனால் தமிழ் இடதுசாரிகள் தமிழ் மக்களது ஜனநாயக பூர்வமான பேரினவாத்திற்கு எதிரான போராட்டங்களில்கூட தம்மை இணைத்துக் கொள்ளத் தவறினார்கள். தம்மை இனவாதிகள் என்று கட்சியின் சிங்களத் தலைமைகள் முத்திரை

www.tamilarangam.net

குத்திவிடலாம் என்ற அச்சத்தில் இவர்கள் மிகவும் கவனமாகவே கருத்துகளையும் தெரிவித்தார்கள். தலைமையில் ஊடுருவி விட்ட சிங்களப் பேரினவாதத்தை விமர்சிக்கத் தவறினார்கள். இப்படியாக தமிழ் மக்களது தேசிய எழுச்சியிலிருந்து தமிழ் இடதுசாரிகள் எவ்வளவு தூரம் விலகி நின்றார்களோ, அவ்வளவு தூரம் தமிழ் மக்களும் அவர்களை நிரந்தரமாகவே தள்ளிவைத்து விட்டார்கள்.
தமிழ் இடதுசாரிகள் தேசிய எழுச்சிகளைப் புறக்கணித்ததன் விளைவு முதலாளித்துவ சக்திகளே தேசிய எழுச்சிக்கு தலைமை தாங்கின. இந்தப் பிற்போக்கு சக்திகள் அரம்பம் முதலே தமிழ் இனவாதத்துடனேயே தமது அரசியலை முன்னெடுத்தனர். இஸ்ரேல்தான் தமிழ் மக்களுக்கு முன்மாதிரியாகக் காட்டப்பட்டது.. தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றப்பட்ட பிற்போக்கு அரசியல் இன்று புலிகளின் வடிவில் வந்து சேர்ந்துள்ளது. தேசியம் தொடர்பாக முறையான தத்துவார்த்த ஆய்வுகளை மெற்கொண்டு தமிழ்த் தேசிய இயக்கத்தை சரியாக மதிப்பீடு செய்து, அந்தப் பேராட்டத்தில் புரட்சிகர தலைமையை நிலைநாட்டும்வரை இந்த பயங்கரமான பிற்போக்கு நிலைமை நீடிப்பது தவிர்க்க முடியாததே.

தமிழ்த் தேசியம் தன்னளவில் உள்ளூர முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்த போதும், தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கும் சக்தியின் அரசியலைப் பொறுத்தே அதன் குறிப்பான வடிவம் நிர்ணயம் பெறும். ஒரு புரட்சிகர தலைமை உருவாவது சாத்தியமானால் தமிழ்த் தேசியம் புரட்சிகரமான பாத்திரத்தை ஆற்றும். அது இல்லாதபோது படுபிற்போக்கான பாத்திரத் தையே அது தொடரும். பொதுவாகவே தேசிய இயக்கங்களில் உணர்ச்சிமிகுந்த கோசங்கள் இலகுவில் வெற்றிபெறும் வாய்ப்பு அதிகம் என்பதால் பிற்போக்கு சக்திகள் இலகுவில் இங்கு ஊட்டம் பெற்றுவிடும் வாய்ப்புள்ளது. எனவே தமிழ்த் தேசியத்தின் வருங்காலமானது தமிழ் சமூகத்திலுள்ள முற்போக்கு சக்திகளது கரங்களிலேயே உள்ளது.

இன்றைய நிலைமைகளுக்கு தமிழ்ப் புத்திஜீவிகளது பங்களிப்புகள் எப்படி காரணமாயின என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். தமிழ்த் தேசிய எழுச்சி ஓங்கிய காலத்தில், இடதுசாரிக் கட்சிகளின் வழியில் இவர்களும் தேசிய எழுச்சியை முதலாளித்துவ சித்தாந்தம் என ஒதுக்கித் தள்ளினார்கள். 70 களை அடுத்த காலங்களில் இலக்கியம் என்ற களத்தினுள் தம்மை மட்டுப் படுத்திக்கொண்டார்கள். இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இவர்கள் சில குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்தார்கள் என்பது உண்மையே ஆயினும் தமிழ்த் தேசியத்தின் இருப்பே கேள்விக்குள்ளான இன்றைய நிலையில், அதன் தலைமை ஒரு 'பாசிச' கும்பலின் பிடியில் சிக்கிக் கொண்ட இன்றைய நிலையில் இந்த இலக்கிய சாதனைகளை வரலாறு எவ்வாறு மதிப்பிடும் என்பது விவாதத்திற்குரியதே.
இயற்கையின் பொருளாதார வளங்கள் ஒப்பீட்டளவில் குறைந்த ஒரு வரண்ட பிரதேசத்தில், கைத்தொழில் வளர்ச்சிகள் பேரினவாதத்தால் திட்டமிட்டு மறுக்கப்பட்ட நிலையில் வாழும் ஒரு சமூகத்தில் அரச துறையே பிரதான உத்தியோக வாய்ப்பாக அமைந்தது. இப்படிப்பட்ட ஒரு சமூகத்தில் அரச கரும மொழி, கல்வியின் பாரபட்சம் என்பவை தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தும். இவ்வாறே அந்த தேசத்தின் தாயகப் பகுதிகள், விவசாய நிலங்கள், கடற்கரை ஓரங்கள் குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்படுவது அத்தேசத்தின் எதிர்



காலத்தை கேள்விக்குள்ளாக்கக் கூடியவை. குடியேற்றமானது ஒரு பிரதேசத்தின் குடிசனப்பரம்பலை மாற்றியமைத்து விடக் கூடியது. ஒரு சிறுபான்மை இனத்தைப் பொறுத்தவரையில் அது தனது தாயகப் பகுதிகளிலேயே சிறுபான்மை சமூகம் ஆக்கப்படுவதால், இது படிப்படியாக அது தன்னை அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப் படுத்துவதை சாத்தியமற்றதாக்கி விடக்கூடியது. இதன் மூலம் மைய அரசின் அரசியல் அதிகாரத்தில் தனது பங்கை முற்றாகவே இழக்கச் செய்துவிடக் கூடியது. இந்த நிலையில் மொழி உணர்வும், மண்மீதான அக்கறையும் வெறும் போலியான மிகைப்படுத்தப்பட்ட உணர்வுகள் அல்ல. அவை திட்டவட்டமாக அந்த சமூகத்தின் பொருளாதார அரசியல் அம்சங்களுடன் நெருக்கமான உறவு கொண்டவை. இந்த வகையில் பொருள்வகை காரணிகளாகும். தமிழ்த் தேசத்திடம் இருந்து பறிக்கப்பட்ட இந்த பொருளாதார அரசியல் அம்சங்கள் சிங்கள தேசத்திற்கு சலுகைகளாக வழங்கப்பட்டன. எனவே சிங்களப் பேரினவாதம் வெறும் உணர்ச்சிகளை மட்மே நம்பி செயற்படவில்லை. அதற்குள் பொருளாதார சலுகைகளும் ஊடுருவி நிற்கின்றன. இப்படியாக இன முரண்பாடுகள் என்று கூறப்படுபவை வெறும் தவறான உணர்வுகளின் (FalseConciousness) மோதல் அல்ல. திட்டவட்டமான பொருளாதார அரசியல் நலன்களின் மோதலும் கூட. பாதிக்கப்பட்ட தேசத்தை பொறுத்த வரையில் அதன் உடனடி இருப்பும், எதிர்கால வாழ்வும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகிறது. இப்படியாக தேசிய வாதத்தின் ஆழமான தன்மைகளைப் புரிந்துகொள்ள மறுத்த இந்த புத்திஜீவிகள் தேசியவாதத்தை உணர்ச்சி மயமான அம்சமாகக் கருதி எதிர்க்கலானார்கள்.

மொழி உரிமை பறிக்கப்பட்டதை தமிழ்ச் சமூகம் எதிர்த்தெழுந்தபோது " மொழி என்பது வெறும் ஊடகம் தானே? " என்றார்கள். குடியேற்றங்கள் மூலம் தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்ட போது " எந்த மண்? யாருடைய மண்? " என்று கேலி செய்தார்கள். பிரிவினைக் கோரிக்கை எழுந்தபோது " தமிழ் தொழிலாளியைச் சுரண்ட தமிழ்மும் கேட்கிறான் தமிழ் முதலாளி " என்றார்கள். தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்த முதலாளித்துவ சக்திகள் பேரினவாதத்தால் தமிழ்ச் சமூகம் முகம்கொடுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை திட்டவட்டமாக அறிவுபூர்வமாக வெளிப்படுத் தாமல் வெறும் உணர்ச்சிமயமான கோஷங்களையும், சமயத்தில் இனவாத கோஷங்களையும் கொண்டு தனது அரசியல் அணிதிரட்டலைச் செய்தன என்பது உண்மையே. பொதுவாக தேசிய இயக்கங்களில் முரண்பட்ட நலன்களை உடைய வர்க்கங்கள் ஒரே தேசிய இயக்கத்தினுள் அணிதிரட்டப்படுகையில் இந்த விதமான பழமைவாதங்கள், பகுத்தறிவிற்கு பொருந்தாத கோஷங்கள் முன்வைக்கப்படுவது உலகளாவிய ரீதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த உணர்ச்சி மயமான கோஷங்களைக் கடந்து, தமிழ்த் தேசத்தின் அடிப்படையான ஜனநாயகக் கோரிக்கைகள் இந்த தேசிய இயக்கத்தில் முன்னுக்கு வந்ததை புத்திஜீவிகளும், இடதுசாரி கட்சிகளும் இனங்கண்டு, அந்த ஜனநாயகக் கோரிக்கைகளை ஆதரித்து தரப்படுத்தியிருக்க வேண்டும்: தாமே இன்னும் புரட்சிகரமான முறையில் முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்தவிதமான செயற்பாடுகளை இடதுசாரிக் கட்சிகளோ, புத்திஜீவிகளோ முன்னெடுக்க தேசியம் பற்றிய அவர்களது புரிதல் தடையாக இருந்தது.

www.tamilarangam.net

தேசியம் பற்றிய இவர்களது நிலைப்பாடு இப்படி இருக்க இவர்கள் எவருமே சமூகத்தில் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு போராட்டத்தை தம்முடைய கருத்துநிலையிலிருந்தும் கூட மதிப்பிடுவதற்கு முறையான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இலங்கையில் தமிழ்ச் சமூகத்தின் சமூக–பொருளாதார நிலைமை பற்றியோ, உலகளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் மாக்சியத்தின் விவாதங்கள் பற்றியோ தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்த் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டு மாக்சியத்தை நோக்கி முன்னேறிவந்த ஒரு பகுதியினருக்கு வழிகாட்ட தமிழ்ச் சமூகத்தில் சரியான தத்துவம் இருக்கவில்லை. இன்றும் கூட, இலங்கையில் தமிழ்ச் சமூகத்தில் தேசிய முதலாளிகள் இருக்கிறார்களா? பாட்டாளி வர்க்கம் என்றொரு வர்க்கம் இருக்கிறதா? போன்ற விடயங்கள் இந்த முன்னேறிய பிரிவினரிடையே தலையைப் பிய்த்துக் கொள்ளும் விவாதமாக இருக்கிறது. ஆனால் விவாதத்தில் ஈடுபடும் எவராவது தமது வாதங்களுக்கு ஆதாரமாகக் கொள்ளக்கூடிய ஆய்வுகளைக்கூட இந்த புத்திஜீவிகள் கடந்த காலத்தில் முன்வைக்கவில்லை. இதனால் தத்துவார்த்த வறுமை தமிழ்த் தேசியத்தின் முன்னேறிய பிரிவினர் அனைவரிடமும் ஆட்சி செலுத்துகிறது.

புத்திஜீவிகள் தமது வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றத் தவறியபோது, வரலாறு ஏனைய பிரிவினரிடமிருந்து தனது அன்றைய தேவைகளை நிறைவுசெய்தது. 15–20 வயதுடைய இளைஞர்களும், சில உதிரிவர்க்கப் பின்னணிகளைக் கொண்டவர்களும் தன்னியல்பாகவே ஆயுத நடவடிக்கைகளில் இறங்கினார்கள். படிப்படியாக தம்மை அமைப்பாக்கிக் கொண்டார்கள். இந்த இளைஞர்களது ஆரம்பகால அரசியல் அறிவு நம்பமுடியாத அளவிற்கு அப்பாவித்தனமானதாக இருந்தது. புலிகளின் ஆரம்பக் கொள்கை அறிக்கை, தமிழீழம் அமைந்ததும் அதனை ஆளும் பொறுப்பை அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்துவிட்டு தமது அமைப்பை கலைத்துவிடுவதாகக் கூறியது. அன்று விதைத்த சிறுபிள்ளை வேளாண்மையைத்தான் தமிழ்ச் சமூகம் இன்று அறுவடை செய்துகொண்டு இருக்கிறது.

70 களின் நடுப்பகுதியில் போராட்ட அமைப்புகள் உருவாகத் தொடங்கிய காலகட்டத்தில் புத்திஜீவிகளின் பங்களிப்புகள் அறவே இருக்கவில்லை. 80 களின் ஆரம்பத்தில் மிகவும் அரிதாக ஒரு சில புத்திஜீவிகள் இந்த அமைப்புகளுடன் தம்மை இணைத்துக் கொண்டு ஆபத்துக்களை எதிர்நோக்கத் தயாராக செயற்பட்டார்கள். அப்போதே ஓரளவு காலங்கடந்திருந்தது. ஏனெனில் அந்த காலகட்டத்திற்குள்ளேயே அந்த அமைப்புகளினுள் மோசமான அராஜகப் போக்குகள் முளைவிடத் தொடங்கியிருந்தன. இந்தப் புத்திஜீவிகள் இந்த அராஜகப்போக்குகளைக் களைவதில் எதுவும் உருப்படியாக சாதிக்க முடியவில்லை. 83 ஜூலையின் பின்பு தேசிய அலை வீசத்தொடங்கிய காலத்தில் பல புத்திஜீவிகள் போராட்ட அமைப்புகளுடன் இணைந்து கொண்டார்கள். இப்படியாக இணைந்துகொண்ட புத்திஜீவிகளின் பங்களிப்புகள் குறிப்பிடப்படும் படியாக ஆரோக்கியமாக இருக்கவில்லை. குறிப்பிடத் தக்க தத்துவார்த்த, அரசியல் படைப்புகள் இவர்களிடமிருந்து பிறக்கவில்லை. பெரும் பாலானோர் தாம் சார்ந்த அமைப்புகளை



நியாயப்படுத்தும் வேலைகளைத்தான் செய்தார்கள். அமைப்புகளில் காணப்பட்ட மோசமான அம்சங்களைக் கண்ட சிலர் இவற்றிலிருந்து வெளியேறினார்கள். இன்னும் சிலர் போராட்டம் தேக்கநிலையை அடைந்த காலத்தில் தமது அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டு மீண்டும் ஐக்கியப்பட்ட புரட்சிபற்றி பேசலானார்கள். இன்னும் சிலர் அமைப்புகளுக்குள் நடைபெற்ற ஜனநாயக மீறல்களுக்கு எதிரான போராட்டங்களில் வகித்த பாத்திரங்களை இன்று திரும்பிப் பார்க்கையில், அவைகுறித்து யாருமே பெருமைப்பட முடியாது. இவை எல்லாமாகச் சேர்ந்து ஒட்டுமொத்தமாக தமிழ்ச் சமூகத்திலும், முன்னேறிய பிரிவினரிடமும் கூட இந்தப் புத்திஜீவிகள் பற்றி ஒரு ஆரோக்கியமான மனநிலை இல்லாமல் போனதே நடைபெற்று முடிந்தது.

புத்திஜீவிகள் 70 களில் இலக்கியம் படைத்துக் கொண்டிருந்த காலத்தில் இளைஞர்கள் பலர் பல இழப்புகளுடன் தமது அமைப்புப் பணிகளைத் தொடர்ந்தார்கள். எதிரியின் வேட்டைகளாலும், உள்முரண்பாடுகளாலும் அமைப்புகள் பலதடவை சிதைக்கப்பட்டபோதிலும் கூட அவர்கள் மீண்டும் மீண்டும் அமைப்புக் கட்டும் பணிகளைத் தொடர்ந்தார்கள். வெறுமனே 16 பேராக, 4 பேராக மட்டுமல்ல தனியொருவராக விடப்பட்ட நிலையிலும் கூட, மக்களின் ஆதரவு கணிசமாக இல்லாத காலங்களிலும் பல ஆபத்துக்களை எதிர்கொண்டு உயிரைப் பலதடவை பணயம் வைத்து தலைமறைவாக அமைப்புப் பணிகளை சளைக்காது செய்தார்கள். இப்படியாக வரலாற்றில் தீர்க்கமான கட்டங்களில் யார் தமது பணிகளை மிகுந்த சிரமத்துடன் செய்து முடித்தார்களோ அவர்களது கரங்களில் அவர்களது பலவிதமான குறைபாடுகளையும் மீறி, போராட்டத் தலைமை சென்றடைந்தது.

70 களில் இளைஞர் அமைப்புகளின் முன்னோடிகளது பணிகளையும், புத்திஜீவிகளது பணிகளையும் இவ்விதமாக ஒப்பிடுவது ஏதோ இழப்புகளையும் தியாகங்களையும் பட்டியல் இட்டுக் காட்டி அதன்மூலம் இந்த அமைப்புகளின் பிற்கால 'பாசிச' நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக அல்ல. மாறாக புலிகளின் கரங்களுக்கு தலைமை சென்றதில் தமிழ்ச் சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் கடந்த காலத்தில் இழைத்த தவறுகளைப் புரிந்து கொள்வதற்காகவே. இன்று மாற்றுத் தலைமையை உருவாக்கவேண்டும் என விரும்பும் புரட்சிகர சக்திகள் இவற்றிலிருந்து படிப்பினை பெறுவது அத்தியாவசியமானது.

இன்று தமிழ்த் தேசிய விடுதலைக்கு மூன்றாவது பாதையை அல்லது மாற்றுத் தலைமையை உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் நடைபெறும் விவாதங்களை கவனித்தால், அதில் ஈடுபடும் எல்லோர் மத்தியிலும் (எம்மையும்தான் குறிப்பிடுகிறோம்) தத்துவார்த்த ரீதியான பல குறைபாடுகள், பற்றாக்குறைகள் காணப்படுவது வெளிப்படையானது. இப்படியான நிலைமையிலும் பல புத்திஜீவிகள் மௌனம் சாதிப்பது அல்லது சர்ச்சைக்குரியதாக அல்லாதவற்றை மட்டுமே பேசுவது என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பது வருந்தக்தக்கது. மூன்றாவது பாதையை உருவாக்குவதிலும் தத்துவார்த்த பணிகளில் அதிகம் பங்களிக்க வேண்டியவர்கள் இன்றைய தமது வரலாற்றுப் பாத்திரத்தைப் புறக்கணித்தால் தமிழ்ச் சமூகம் சபிக்கப்பட்ட சமூகமாக இன்னும் பலகாலம் வருந்துவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை சீரழித்தது 83ஜூலைத் தாக்குதல் அல்ல.

www.tamilarangam.net

மாறாக தேசிய இயக்கம் தொடர்பாக இடதுசாரி அமைப்புகளும், புத்திஜீவிகளும் காட்டிய பாராமுகம்தான் என்பது தெளிவாகும். முன்னேறிய பிரிவினர் தமது பாத்திரத்தை ஆற்றத் தவறுகையில் சமூகத்திலுள்ள பிற்போக்கு சக்திகள் அந்த சந்தர்ப்பங்களை பற்றிப் பிடித்துக் கொண்டுள்ளார்கள். தன்னியல்பாகவே வளர்ந்துவந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் 83 ஜூலை தாக்குதல் என்பது ஒரு சம்பவம் மட்டுமே.

இங்கு புரட்சிகர அமைப்புகளதும் புத்திஜீவிகளதும் கடந்தகால செயற்பாடுகள் பற்றி ஒரு நீண்ட விமர்சனத்தை வைக்க நேர்ந்தது, கடந்தகால குறுந்தேசியவாதிகளின் இடதுசாரி எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்தோ, அல்லது அமைப்புகளுக்கிடையே பரவலாகக் காணப்படும் புத்திஜீவி எதிர்ப்பு நிலைப்பாட்டிலிருந்தோ அல்ல. மாறாக இன்றும்கூட புரட்சிகரக் குழுக்களும், புரட்சிகர புத்திஜீவிகளும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆற்றவேண்டிய பங்கு மிகவும் அதிகம் என்றே கருதுகிறோம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு பங்களிப்பைச் செய்வதற்கு, முதலில் கடந்தகால தவறுகளுக்கான காரணங்களை தன்னியல்பு சக்திகளின் தலையில் சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்ளாமல், இந்த தவறுகளில் தமது பங்கு என்ன என்பதில் ஒரு ஆழமான, சுயமான, ஆத்மார்த்தமான பரிசீலனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் கடந்தகாலத் தவறுகளை திறந்த மனதுடன் ஒத்துக்கொண்டு அவற்றுடன் கறாராக கணக்குத் தீர்த்துக் கொள்ளவேண்டும். தமது இன்றைய வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்துகொண்டு உணர்வுபூர்வமாக இன்றைய உடனடிப் பணிகளில் தமது பங்களிப்பைச் செலுத்த முன்வரவேண்டுமெனக் கருதுகிறோம்.

## மாற்றுக் கருத்துக்களின்பாலான அணுகுமுறை

'சமர்' இரண்டில் புலிகள் சக அமைப்புகளைத் தடைசெய்ததன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஊறுவிளைவித்ததாகக் கூறும் அதேநேரத்தில் அடுத்த வரிகளில் 'ரெலோ' என்ற துரோகக்குழு சரியான ஒரு சக்தியால் அழிக்கப்படவேண்டியதே என்பதில் நாம் உடன்படுகிறோம் என்றும் குறிப்பிடுகிறது. இந்தக் கருத்தானது ஒரு அமைப்பு சக அமைப்புகளைத் தடைசெய்வதற்கான உரிமை பற்றிய பிரச்சினையை முன்னுக்குக் கொண்டுவருகிறது. ரெலோ அமைப்பு தடைசெய்யப்பட்ட காலத்தில் மிகவும் வெளிப்படையாகவே ஒரு சீரழிந்த அமைப்பாக இருந்தது என்பது உண்மைதான். ஆனால் அந்தக் காலகட்டத்தில் இருந்த பெரிய அமைப்புகள் அனைத்திலுமே இதே தன்மைகள் சில வேளைகளில் இதே அளவிலும் ஆனால் குறைவான பகிரங்கத்துடனும் காணப்படவே செய்தன. மக்கள்மீது அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுவது, அமைப்பினுள் மோசமான ஜனநாயக மீறல்கள், மக்களிடம் கொள்ளையிடுவது, போதைப் பொருள் பாவனையும் கடத்தலும், சந்தர்ப்பவாத அரசியல் போன்றவை கிட்டத்தட்ட அனைத்து பெரிய இயக்கங்களுக்கும் பொதுவான தன்மையாக இருந்தது. அக்காலத்தில் மிகவும் முன்னேறிய அமைப்பாக கருதப்பட்ட புரட்சிகரக் குழுக்கள் கூட மக்களுக்கு எதிராக ஆயுதங்களை திருப்பிய சம்பவங்கள் இருக்கவே செய்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் ரெலோவை தடைசெய்யும் உரிமை, தார்மீக பலம் யாருக்கு, எப்படி வந்தது ?



ரெலோவில் காணப்பட்ட இந்த சீரழிவுகளுக்கும் அதன் அணிகளில் இணைந்திருந்த, போராட்டத்திற்காக விசுவாசமாக முன்வந்த சாதாரண அங்கத்தவர்களுக்கும் என்ன சம்பந்தம் ? இயக்கத்தடை என்பது இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை வீதிகளில் துடிக்கத் துடிக்க சுட்டும், எரித்தும்தானே நடந்து முடிந்தது. தம்மை யார் பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதை தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கு மட்டுமே உள்ளது. போராட்ட அமைப்புகளைத் தடைசெய்யும் உரிமையை மக்கள் யாருக்குமே வழங்கவில்லை. மக்களின் ஆற்றலில் நம்பிக்கை வைக்காது, மக்களது உரிமைகளை தமது கரங்களில் எடுத்துக் கொண்டு தம் இஸ்டம்போல சில அமைப்புகள் பயன்படுத்த முனைவதுதானே இன்றுள்ள பிரச்சினை.

மாற்றுக் கருத்துகள், மாற்று அமைப்புகள் பாலான சகிப்புணர்வின்மை என்பது எமது போராட்டத்தில் அண்மையில்தான் உருவானது என்பதல்ல. 70 களில் தேசிய எழுச்சி தீவிரமடைந்த உடனேயே இதுவும் தொடங்கிவிட்டது. தமிழ் மக்களின் தேசிய எழுச்சி தீவிரமடைந்த காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்த சில அரசியல்வாதிகள் சிங்கள கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டார்கள். முரண்பட்ட அரசியலைக் கொண்டிருந்த இவர்களை அரசியல் ரீதியாகவே அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தியிருக்கும் வாய்ப்புகள் நிறையவே இருந்தன. அப்படிப்பட்ட வெகுஜன அமைப்புகளைக் கட்டி, வெகுஜனங்கள் மத்தியில் தொடர்ச்சியான அரசியல் பணியாற்றி வந்திருப்பின் இவர்கள் இலகுவாக அந்நியப்படுத்தப்பட்டு தோற்கடிக்கப் பட்டிருப்பார்கள். ஆனால் அரசியலை தமது பகுதி நேர வேலையாகக் கொண்ட, பாராளுமன்றத்திலேயே குறியாக இருந்த குட்டி பூர்சுவாக்களுக்கு இதற்கெல்லாம் கால அவகாசமும் பொறுமையும் இருக்கவில்லை. மாற்று அரசியலை கொண்டிருந்தவர்கள் 'துரோகிகள்' என்று அரசியல் மேடையில் பகிரங்கப் படுத்தப்பட்டார்கள். குறுகிய காலத்துள் இவர்கள் ஆயுதக் குழுக்களால் கொலை செய்யப்பட்டார்கள் . இந்த வகையில் மாற்றுக் கருத்துடையவர்கள்பால் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடும் போக்குக்கு த.வி.கூட்டணி தான் குரு. பின்பு இவர்களே இதே போக்கிற்குப் பலியானார்கள் என்புது வேறு விடயம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முழுவதிலும் இதே போக்கு நீடிக்கவே செய்கிறது. ஆரம்பத்தில் த.வி.கூட்டணியின் செல்வாக்கின்கீழ் செயற்பட்ட விடுதலை இயக்கங்கள், பின்பு படிப்படியாக த.வி.கூட்டணியின் செல்வாக்கிலிருந்து விடுவித்துக்கொண்டு சுயாதீனமாக செயற்பட்டன. பிற்காலத்தில் த.வி.கூட்டணிக்கு எதிராகவும் திரும்பின. மாற்றுக் கருத்துக்கொண்ட அரசியல்வாதிகளை, சாதாரண குடிமக்களை, மாற்று அமைப்பின் போராளிகளை, சொந்த அமைப்பின் அங்கத்தவர்களை அழித்தொழிக்கும் போக்குகள் வெவ்வேறு அமைப்புகளில் வேறுபட்ட அளவுகளில் காணப்படவே செய்தன. ஆரம்பத்திலிருந்தே இந்தப் போக்கை தீவிரமாக முன்னெடுத்த புலிகள் சக அமைப்புகளைத் தடைசெய்தும், அழித்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது ஏகபோக தலைமையை நிறுவிக் கொண்டுள்ளனர்.

இப்போது எம்முன் உள்ள முக்கியமான கேள்வி, நாம் எதனை எதிர்க்கிறோம் ? என்பதுதான். புலிகள் என்ற ஒரு அமைப்பையும், அதன் தலைமையிலுள்ள சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனிநபர்களையுமா ? அல்லது குறிப்பிட்ட ஒரு பிற்போக்கு அரசியலையா ? மாற்றுக் கருத்துகளின்பால் சகிப்புணர்வு காட்டாத ஒரு வழிமுறையையா?

இன்றுள்ள 'பாசிச' நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர யாராவது உண்மையிலேயே விரும்பினால் , முதலில் அவர்கள் இந்த நிலைமைகளுக்கு அடிப்படையில் காரணமாக அமைந்த பிற்போக்கு அரசியலுடன் தம்மளவில் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அது நடைபெறாத வரையில் எமது நல்லெண்ணங்களும், முயற்சிகளும் ஒருவேளை புலிகளின் தலைமையை அகற்றுவதில் வெற்றிபெற்றாலும்கூட இதே 'பாசிச' போக்குகளை வேறோர் வடிவத்தில் மீளக் கட்டமைப்பதே மொத்தத்தில் நடந்தேறும். இன்றுவரை மொத்தத்தில் இந்தத் தவறான அரசியலின் செல்வாக்கு மறையவில்லை என்பது வருந்தத்தக்க யதார்த்தமாகும்.

## புலிகளை தேசிய சக்தி என்பது எந்த அர்த்தத்தில் ?

புலிகளை தேசிய சக்தியாக மதிப்பிடுவது அது நடத்தும் தாக்குதல்களையும் பலிகொடுக்கும் தனது அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் வைத்துத்தானா? என்ற கேள்வி பரவலாகவே எழுப்பப்படுகிறது. தேசிய சக்தி என்பதை வெறும் யுத்தம் சம்பந்தப்பட்ட விடயமாக குறுக்கிக்கொள்ள முடியாது. அது தமிழ்த் தேசிய இயக்கம் என்ற முழுமையுடன் தொடர்புபடுத்தி மதிப்பிடப்பட வேண்டும். தமிழ்த் தேசத்தின் நலன்கள் எவற்றை வேண்டி நிற்கின்றன? புலிகள் அவற்றை எந்த அளவிற்கு பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்? என்பவைதான் இங்குள்ள பிரச்சனை.

தேசியம் என்பது தமிழ்ச் சமூகம் வரலாற்று ரீதியாக தான் முகங்கொடுத்த நெருக்கடிகளின் விளைவாக உருப்பெற்றது. ஆரம்பத்திலிருந்தே தமிழ்த் தேசிய இயக்கத்தில் புரட்சிகர சக்திகள் அக்கறை காட்டாததால் முதலாளித்துவ சக்திகளது கரங்களே தேசிய இயக்கத்தில் ஓங்கி நின்றன. தமிழ்த் தேசிய இயக்கத்தை முன்னெடுத்த பல்வேறு குட்டி முதலாளித்துவ குழுக்களும் தமிழ்த் தேசத்தின் நலன்களை முரணற்ற விதத்தில் பிரதிபலிக்கும் வகையில் தமது தேசிய அரசியலை புரட்சிகரமாக முன்னெடுக்கவில்லை. புரட்சிகர அரசியலின்மை, எதிரியையும் நண்பனையும் சரியாக வரையறுத்துக் கொள்ளாமை, தேசியத்தில் ஊசலாட்டம், பரந்துபட்ட மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கி மக்களின் பாத்திரத்தை முதன்மைப் படுத்தாமை, தேசத்தின் நலன்களிலும் பார்க்க தமது குழுநலன்களை முதன்மைப்படுத்தல், மாற்றுக் கருத்துகளின்பாலான சகிப்புணர்வின்மை, எந்த குறுக்கு வழியிலாவது தாம் முன்னுக்கு வந்துவிட வேண்டும் என்ற குறுகிய குட்டி முதலாளித்துவ கண்ணோட்டம் போன்றவை கிட்டதட்ட எல்லா அமைப்புகளிலும் காணப்பட்ட அம்சங்களே. இவற்றுள் ஆரம்பத்திலிருந்தே தீவிர வலதுசாரி அரசியலை வெளிப்படுத்திய புலிகள், இந்த அம்சங்களை மிகவும் மூர்க்கத்துடன் முன்னெடுத்து ஏனைய சக்திகளை அழித்து தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே சக்தியாக தன்னை நிலைநாட்டியுள்ளது.

தேசிய சக்தி என்பது ஒரு சார்பளவிலான மதிப்பீடு மட்டுமே. ஏனைய அமைப்புகள்

அனைத்தும் தேசியத்தை துறந்தோடி ஸ்ரீலங்கா, இந்திய அரசுகளுடன் சேர்ந்து கொண்டபின்பு புலிகள் மட்டுமே தமிழ்த் தேசியத்துடன் தம்மை இனங்காட்டுகிறார்கள்



என்பதிலிருந்து பெறப்படும் மதிப்பீடு மட்டுமே. இந்த மதிப்பீடு புலிகளுக்கான புரட்சிகர அங்கீகாரமாகிவிடாது. மாறாக பேரின வாதமும் தமிழ்ச் சமூகம் முகங்கொடுக்கும் பிரதான எதிரி என்பதைச் சுட்டிக் காட்டும். தேசிய சக்தி என்னும் மதிப்பீடு புலிகளின் தேசியத்தின்பாலான ஊசலாட்டத்தையோ, மக்களின் நலன்களுக்கு விரோதமான அம்சங்களையோ, 'பாசிச' அரசியலையோ நீண்டகால கண்ணோட்டத்தில் தமிழ்த் தேசியத்தை உள்ளூர சிதைத்து வருவதையோ மறுத்துவிடாது.

தேசிய சக்தி என்பது ஒரு சார்பளவிலான மதிப்பீடு மட்டுமே. ஏனெனில் எந்த ஒரு சக்தியும் அந்த குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் வைத்துத்தான் மதிப்பிடப்பட வேண்டும். நாம் மனதிற்குள் உருவாக்கிக் கொண்ட இலட்சிய மாதிரிகளுடன் ஒப்பிட்டு மதிப்பீடுகளை உருவாக்க முடியாது. எதிர்காலத்தில் ஒரு புரட்சிகர அமைப்பு தேசிய அரங்கிற்கு வரும்போது புலிகள் பற்றிய இந்த மதிப்பீடு மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## முடிவாக .........

இந்த விவாதங்களில் கலந்து கொள்ளும் பலரும் புலிகளை திட்டித் தீர்ப்பதன் மூலம் புலிகளுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை திட்டவட்டமாக வெளிப்படுத்துகையில், எமது மதிப்பீடுகள், நாம் புலிகளை நியாயப்படுத்த முனைகிறோமா ? என்ற சந்தேகத்தை பலிடமும் ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது என்பதைப் புரிந்து கொள்கிறோம். எனவே புலிகள் பற்றிய எமது நிலைப்பாட்டை திட்டவட்டமாக வெளிப்படுத்துவது அவசியம் எனக் கருதுகிறோம்.

புலிகள் தமிழ்த் தேசியத்தை ஏதோ ஒரு வகையில் முன்னெடுத்துச் சென்றாலும், அவர்கள் தமிழ்த் தேசியத்தை உள்ளூரவும், நீண்டகால நோக்கிலும் சிதைக்கும் பணியையே இதுவரை ஆற்றியுள்ளார்கள். புலிகள் மக்களில் தங்கியிராதது மட்டுமல்ல, மக்களது ஜனநாயக உரிமைகளைப் பறித்து அவர்களை பாசிச அடக்கு முறைக்கு உள்ளாக்குவது, ஏனைய ஜனநாயக சக்திகளை அழித்தொழிப்பது போன்றவற்றின் மூலம் புலிகள் புதிய சமூகத்தை படைக்கமாட்டார்கள் என்பது ஒருபுறமிருக்க, புலிகள் அடையும் எந்தவொரு வெற்றியும் தமிழ் மக்களது விடுதலையாக அர்த்தம் பெறமாட்டாது என்பது முதன்மையான அக்கறைக்குரியதாகும். சாதாரண சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் மூலம் தமிழ்த் தேசியத்தை மிகவும் குறுகிய, நோயால் பீடிக்கப்பட்ட தமிழ் இனவாதமாக சிதைத்துள்ளார்கள். இதற்குமேல் தமிழ்த் தேசியமானது தனது சமூகக் கூறுகள் அனைத்தினதும் ஆற்றலை திரட்டி வெளிப்படுத்தும், தனக்கு வெளியில் உள்ள ஜனநாயக சக்திகளது தார்மீக ஆதரவைப் பெறும் தகுதியை இழந்துவிட்டுள்ளது. இதனால் தமிழ்த் தேசியத்தின் வெற்றிக்கான வாய்ப்புகளை சிதைத்து வருகிறது. இந்திய அரசுடனான உறவுகளைக் கையாண்ட விதத்திலும், இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் உறவைப் பேணியதாலும், சர்வதேச போதைப்பொருள் கும்பல்களுடனான உறவுகள் பற்றி எழுப்பப்படும் சர்ச்சைகளினாலும் சர்வதேச ரீதியாக எமது தேசிய விடுதலைப் போராட்டம் பெறக்கூடிய பலமான ஆதரவையும் சிதைத்து விட்டுள்ளது. இவற்றுடன் புலிகளிடம் காணப்படும் ஊசலாட்டம், புரட்சிகர தத்துவமின்மை போன்றவற்றையும் சேர்த்துப் பார்த்தால் புலிகள் இதுவரை காலமும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய

www.tamilarangam.net

பங்களிப்புகள் எதிர்மறை பெறுமதியையே உடையதாகும்.

இந்த வகையில் புலிகள் வெறும் குழுவோ, அரசியல் அற்றவர்களோ அல்ல. அதைவிட மிகவும் ஆபத்தான பிற்போக்கு சக்திகள். இவர்கள் தாமாகவே திருந்திவிடுவார்கள் என்ற எந்தவிதமான மயக்கமும் எமக்குக் கிடையாது. புரட்சிகர சக்திகளினால் வரலாற்றிலிருந்தே அகற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் அதனை எவ்வாறு செய்வது என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை.

புலிகளிடம் இவ்வளவு மோசமான அம்சங்கள் இருந்தும், அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்தியாக வந்ததும், இன்றுவரை மக்களில் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெற முடிவதும் எவ்வாறு என்பதுதான் நாம் விடைகாண வேண்டிய தீர்க்கமான வினாவாகும். இன்னும் குறிப்பாக சொல்வதானால் எமது முதன்மையான, அக்கறைக்குரியதாக இருக்க வேண்டிய விடயமே புலிகள் அல்ல, மாறாக தேசிய இயக்கமே ஆகும்.

தேசியம் என்பது இன்று தமிழ் மக்களது தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவையாகி உள்ளது. எந்த சக்தி தேசியத்துடன் தன்னை இனம் காட்டிக் கொள்கிறதோ, அந்த சக்தியை தாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆதரிக்கவேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் பேரினவாதத்தால் தள்ளப்பட்டுள்ளார்கள். இன்று புலிகள் மட்டுமே தமிழ்த் தேசியத்துடன் தம்மை இனங்காட்டிக் கொள்வதே தமிழ் மக்கள் புலிகளை ஆதரித்தாகவேண்டி ஏற்படுவதற்கான காரணமாகும். தமிழ் மக்கள் இப்படியாக புலிகளை ஆதரிக்க நேர்ந்தாலும், புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் மிகவும் ஆழமானவை. இந்த முரண்பாடுகள் முதன்மை பெறுவதும், பகிரங்கமாக வெளிப்பட்டு, புலிகள் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தப்படுவதும் கோட்பாட்டளவில் இரண்டு வழிகளில் சாத்தியப்படலாம்.

**1) தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை இன்றுள்ள அமைப்பு முறைகளுக்குள் காணுதல்.**

**2) புரட்சிகர சக்திகள், தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்திகளாக மாறுதல்.**

இனப் பிரச்சினை என்பது மிகவும் வளர்ச்சியுற்று இரண்டு தேசங்களுக்கிடையிலான பிரச்சினை என்றான பின்பு, ஒரே அமைப்பிற்குள் இதற்கு தீர்வு காண்பது சாத்தியமாகாது என்றே நாம் கருதுகிறோம். ஸ்ரீலங்கா அரசு கட்டமைக்கப்பட்டிருக்கும் விதம், சிங்கள– பௌத்த பேரினவாதத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியங்களுடன் ஸ்ரீலங்கா அரசு கொண்டுள்ள உறவு போன்ற அனைத்துமே இப்படிப்பட்ட ஒரு தீர்வினை சாத்தியமற்றதாக ஆக்கிவிட்டுள்ளன. மிக அண்மைக்கால பேச்சுவார்த்தைகளின் தோல்வியும் இதனையே காட்டுகிறது. பத்து வருடகால யுத்தத்தின் அழிவு, ஈடுசெய்ய முடியாத இழப்புகள், யுத்தத்தின் வெற்றிக்கான வாய்ப்புகள் அண்மைய எதிர்காலத்தில் காணமுடியாத நிலை, தொடரும் யுத்தத்தில் செலவுகளை தாக்குப்பிடிக்க முடியாத நிலைமை, சர்வதேச நெருக்கடிகள் போன்ற அனைத்துமே பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அனைத்து தரப்பினருக்கும் மிகவும் வெளிப்படையாகவே தெரிந்தபோதிலும் கூட, தமிழ் மக்களது மிகவும் மிதவாத கட்சிகளைக் கூட திருப்திப்படுத்த சிங்கள கட்சிகளால் முடியவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களது மிகவும் அடிப்படையான ஜனநாயக உரிமைகளை இன்றுள்ள அமைப்பு முறைகளினுள் பெறுவது சாத்தியம் இல்லை என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.



தமிழ் தேசியத்தை இன்னும் புரட்சிகரமாகவும் முரணற்றும் முன்னெடுப்பதே புலிகள் தமிழ் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தப் படுவதற்கு உள்ள ஒரே வழியாகும். தேசிய இயக்கத்தை புரட்சிகர சக்திகள் முன்னெடுக்காத வரையில் புலிகளை தலைமையிலிருந்து அகற்றுவது சாத்தியப் படப்போவதில்லை. ஒருவேளை ஸ்ரீலங்கா இராணுவம், புலிகளை பௌதீக ரீதியாக அழிப்பதில் வெற்றிகண்டாலும் கூட, இன்றைய வரலாற்றுத் தேவைகள் புலிகளை ஒத்த அல்லது அதனிலும் மோசமான ஒரு சக்தியை இலகுவில் தோற்றுவித்துவிடும். எனவே தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமை சக்திகளாக தம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு, முதலில் தேசியம் பற்றியதொரு ஆரோக்கியமான மதிப்பீட்டிற்கு புரட்சிகர சக்திகள் வந்தாக வேண்டும்

தேசியம் என்பது இன்று சர்வதேச ரீதியில் ஒரு வரலாற்றுப் போக்காக ஆகிவிட்டுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னான இலங்கை அரசியலே சாராம்சத்தில் தேசிய அரசியலாகவே அமைந்து, இன்றைய நிலைமைகளுக்குக் காரணமாகி உள்ளது. இதுதான் இன்றைய புறநிலை யதார்த்தம். புலிகளின் பாசிசப் போக்குகளுக்கு உண்மையிலேயே முடிவுகட்ட யாராவது விரும்பினால், அவர்கள் இந்த யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு, தமது கடந்தகால தவறுகளிலிருந்து மீண்டு, உண்மையான மாற்று சக்தியாக தங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் தேசியத்தை சரியாக மதிப்பிடத் தவறிய புரட்சிகர சக்திகள், இன்று அதே கண்ணோட்டத்துடன் புலிகள் பற்றிய விமர்சனத்தை, தேசியத்தை நிராகரிப்பதற்கான காரணமாக முன் வைப்பார்களாயின், புலிகளுக்கு அவர்கள் ஒரு வகையில் உதவியவர்களாகவே வரலாறு தீர்ப்பளிக்கும்.

பேரினவாதத்தின் தன்மை பற்றியும், புலிகளின் கரங்களுக்கு போராட்டத் தலைமை சென்றடைந்ததில் முற்போக்கு சக்திகளது கடந்தகால தவறுகள் பற்றியும்கூட தெளிவைப் பெற்றுள்ள சிலர் கடந்த காலத்தில் நடந்தவற்றையெல்லாம் மறந்துவிட விரும்புகிறார்கள். போராட்டத்தை மீண்டும் புதிதாக, தாம் தவறவிட்ட இடத்திலிருந்து தொடங்க விரும்புகிறார்கள். அதற்காக " இன்று புலிகளை ஸ்ரீலங்கா இராணுவம் அழிக்கட்டும் (!) பின்பு நாம் புதிதாக தொடங்குவோம் (!!) " என்ற வகையில் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்கள். வரலாறு என்பது காட்டாற்று வெள்ளம் போன்றது. அதில் ஒருதடவை கடந்து சென்றவை என்றென்றைக்குமே கடந்து போனவைதாம். மீண்டும் புதிதாக பழைய இடத்திலிருந்து தொடங்குவது என்பது வெறும் கனவுகளும் பிரமைகளும்தான். புரட்சிகர சக்திகள் செய்யக் கூடியதெல்லாம் தமது கடந்தகால தவறுகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு, சமகால வரலாற்றுத் தேவைகளை சரியாக மதிப்பிட்டு, வரலாற்று ஓட்டத்தில் புரட்சிகரமான தலையீட்டைச் செய்வதுதான். இந்தத் தலையீட்டுச் செயற்பாட்டின் மூலம் மட்டுமே தமிழ்த் தேசிய இயக்கத்திற்கு ஒரு புரட்சிகரமான தலைமையை உருவாக்குவது சாத்தியப்படும்.

32 ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்கள் எங்களுக்கு............

உயிர்ப்பு ஆசிரியர்கட்கு!

ஐரோப்பாவின் இன்னொரு சஞ்சிகை கண்டு சந்தோசப்பட்டேன். முதற்பக்கம் முழுமையாக வாசித்தேன். 2ம் பக்கத்திற்கு போனேன் வாசித்தேன் முடியவில்லை. 3,4 இப்படியே தட்டினேன் மூடிவைத்து விட்டேன் தொடர்ந்து வாசிக்க எரிச்சலூட்டுகிறது. வரிகளைத் தேடிக் கண்டுபிடித்து தொடரவேண்டியுள்ளது இப்படி பந்தியமைப்பு இருந்தால் "உயிர்பு" வாசகர்களை கொலை செய்யும் கவனமெடுக்கவும் வெகுசன வாசிப்புத் தன்மை கொஞ்சமும் இல்லை. இப்படி இருந்தால் கருத்துப்பரிமாற்றம், தத்துவார்த்த விவாதங்கள் எல்லாம் குப்பைக்கு போய்விடும்

தமிழில் புழக்கத்திலுள்ள 15,000 வார்த்தைகளையும் கட்டுரைக்குள் அடக்கினால் நாங்கள் எங்கு போய் முட்ட அடுத்த சஞ்சிகையை முழுமையாக வாசிக்கிறமாதிரி எதிர்பாக்கிறேன்.

முரளி
பிரான்சு

0000

தோழமையுடன் உயிர்ப்பு!

உயிர்ப்பு தொடர்ந்து வெளிவரவேண்டும். வேதங்கள் எப்படி உபனிடதங்களாகமாறியதோ! அது போன்று மார்க்சியம் எமது நடைமுறை யதார்த்தத்துடனும், யதார்த்த உண்மையின் உணர்வுகளுடனும் இணைகிறது. சர்வதேசிய மார்க்சியர்கள் காணத்தவறிய உண்மைகளை எமது தமிழ்மக்களின் உரிமைகளுக்கான போராட்டமும் அதன் ஆய்வும் பல மடங்கு உண்மைகளை சர்வதேசிய மார்க்சியர்களுக்கு எடுத்துக்காட்டுமென நம்புகிறேன்.

தோழமையுடன்
சிவா
டென்மார்க்

0000

"உயிர்ப்பு" வெளியிட்டாளர்களுக்கு வணக்கங்கள்!

தங்களுடைய சஞ்சிகை இன்று நடைமுறைக்கு தேவையான பிரச்சனைகளை நன்கு அலசி ஆராய்ந்து உள்ளது இவ்வளவு காலமும் நான் பார்த்த சஞ்சிகைக்குள் "உயிர்ப்பு" உடனடித் தேவையை வலியுறுத்தி இருப்பதும், அதற்கான தீர்வை வேண்டி நிற்பதும் யதார்த்த நிலைமையை புரிந்து கொண்டுள்ளீர்கள் என்பதைக் காட்டுகிறது. இப்படியான



கருத்துக்களில் ஒரு சிலரே இருக்கின்றார்கள். இவர்களை ஒன்றிணைத்து இக்கருத்துக்களை பலப்படுத்துவதும் இக்கருத்துக்கள் சமூக சக்தியாக திரட்சி பெறவேண்டிய தேவையுமுள்ளது. ஆனால் சிலர் பத்திரிகை வெளியிடுவது என்பதை மட்டுமே இறுதி இலக்காகக் கொண்டு செயற்படுகிறார்கள். மேலும் புலி எதிர்ப்பு போர்வைக்குள் தம்மை முடக்கிக் கொண்டுள்ளார்கள். நீங்கள் எப்படியோ தெரியாது.

அன்பின்
சீலன்
கனடா

0000

உயர்ப்பு சஞ்சிகை தோழர்கட்கு!

புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து வரும் சஞ்சிகைகளிலிருந்து வேறு பட்ட கோணத்தில் ''உயிர்ப்பு'' பணி யை ஆரம்பித்துள்ளது. தமிழ்மக் களின் போராட்ட வரலாற்றில் ''உயி ர்ப்பின்'' வெளியீடும் ஒரு மைல்கல் ''உயிர்ப்பில்'' போராட்டம் குறித்த பல்வேறுபட்ட பிரச்சனைகளில் ஆரா ய்ப்பட்ட விதம் கண்டு நானும் இவ்விடமுள்ள சமூக உணர்வுள்ள தோழர்களும் மிக ஆகர்சிக்கப்பட் டுள்ளோம். ''உயிர்ப்பிலுள்ள'' சில கருத்துக்கள் சம்பந்தமான என்பார் வையை இங்கு முன்வைக்கிறேன்.

''தேசிய இனப்பிரச்சனையில் மார்க் சிய நிலைப்பாடு'' என்ற ''சொரூ பனின்'' கட்டுரையில் ஒடுக்கப்படும் இனப்பாட்டாளி வர்க்கத்தின் பணி யைப் பொறுத்தவரையில் சுயநிர்ணய அடிப்படையில் தனியரசு அமைக்கும் போராட்டத்தை முதாலாளித்துவ தலைமையின் வசம் விட்டுவிடாமல் அதை தானே கையகப்படுத்த வேணடும். பாட்டாளி வர்கக்கம் தானே பிரிவினைப் போராட்டத்தை புரட்சியாக முன்னெடுதது பிற் போக்கு முதலாளித்துவ தலைமை களை தனிமைப்படுத்த வேண்டும்.

மறுபுறம் ஒடுக்கும் தேசியஇன பாட் டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை ஒடுக்கப்படும் தேசிய இனத்தை சுய நிர்ணய உரிமையை அங்கிகரித்து அம்மக்கள் புரட்சிகரமாக பிரிவி னைப் போராட்டத்தை முன்னெடுப் பதற்கு ஓர் உந்து சக்தியாக விளங்க வேண்டும் பிரிவினைப் போராட்டத் திலுள்ள பிற்போக்கான அம்சங்களை நிராகரிக்கும் அதேவேளை போராட் டத்தை புரட்சிகரமாக முன்னெடுக் கும் வகையில் அதை நெறிப்படுத்த அதற்கு முழு ஆதரவும் வழங்கவேண் டும் என்று கூறிப்பிட்டுள்ளீர்கள்.

எனினும் கிறித்தோப்பரின்,"முசுலிம் மக்கள்தொடர்பாக சில குறிப்புகள்" என்ற கட்டுரையில் "முசுலீம் மக் களை தனித் தேசியமாக இனம் காண்பதே பொருத்தமானது" என்று குறிப்பிட்டு தொடர்ச்சியாக,"சுயநிர் ணய உரிமை என்பதனையும் பிரிவி னை என்பதனையும் பிரித்துப் பார்த் தும் புரிந்து கொள்ள வேண்டும். பிரிந்து போகும் உரிமையை அங்கீ கரித்து விட்டால் ஓர் இனம் கட்டாய மாக பிரிந்து தான் போகும் என்பத ல்ல விவாகரத்து உரிமை குடும்ப அமைப்பையே தகர்த்து விட்டதா என்ன?" என்று குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகிறார் "அமையும் தமிழீழத்தில் இப்படியான தோர் பிரிவினைக் கொள்கையே எழாத வகையில் முசுலீம்களது பாது காப்பையும் சனநாயக உரிமையையும் உத்தரவாதப்படுத்துவது என்பதே பிர ச்சனை" என்பதாக குறிப்பிடுகின் றார்.

இது சொ.ருபனின் ஒடுக்கும் பாட் டாளி வர்க்கம் ஒடுக்கபடும் தேசிய இனம் புரட்சிகரமாக பிரிவினைப் போராட்டத்தை முன்னெடுக்க உந்து சக்தியாக விளங்க வேண்டும் என்ற கருத்துக்கு முரணாக அமைகிறது. அல்லது முசுலீம் தேசிய இனம் இன் னும் ஒடுக்கப்பட்ட தேசிய இனமாக அமையவில்லையா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச.கிறித்தோபரது கருத்தானது அமையும் தமிழீழத்தில் சிறுபான்மை முசுலீம் தேசிய இனப் பிரச்சனையை முரணற்ற சனநாயகம் மூலம் எப்படி தீர்க்க முடியும் என்று குறிப்பிடுகின்றதே ஒழிய தமிழீழத்தை ஏற்பதா இல்லையா? இலங்கையில் சிங்கள மக்களுடன் வாழ்வதா? அல்லது முசுலீம் மக்கள் தமது பிரதேசத்தை தனியே பிரித்துக் கொள்வதா என்பதான தமது தலை விதியை முசுலீம் மக்கள் தாமே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையை மறுதலித்து, முசுலீம்கள் தமிழீழத்தில் தான் சிறுபான்மை இனமாக அமைவார்கள் என்ற முடிவின் அடிப்படையில் தமிழீழ எல்லைகளை நிர்ணயம் செய்கின்ற கடந்த கால தவறுகளையே இழைக்கின்றார்.

மேலும் இரு கட்டுரைகளின் தொகுப்பின்படி பார்த்தால்; நாம் ஒடுக்கப்படும் இனப் பாட்டாளி வர்க்க நலன்களாக இருக்கும் போது பிரிவினைப் போரட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் ஒடுக்கும் பாட்டாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் போது சிறுபான்மை இனங்களது அபிலாசைகளை நிறைவேற்றிவைக்கின்றதான வேலைத்திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்கிறீர்கள் இது சிங்கள பெரும்பான்மை இன மார்க்சியர்கள் எனக் கூறிக்கொண்டோர் தாங்கள் ஆட்சியதிகாரத்திற்கு வரும் போது சிறுபான்மை இனத்திடமிருந்து பிரிவினைக்கோரிக்கை எழாதவகையில் சிறுபான்மை தமிழ் தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என்று சொன்னதற்கு தென்படவில்லை

சாராம்சமாக. புதிய சனநாயக புரட்சிக்கு பாட்டாளி வர்க்கம் தலைமைதாங்கும் இன்றைய காலகட்டத்தில் தேசிய இனப்பிரச்ச னையை பாட்டாளிவர்க்கம் தனது கைகளில் எடுக்க வேணடும் என்பது சரியானதே. எனினும் " தனது தேசிய இனத்திற்கு மட்டுமே சுயநிர்ணய உரிமை கோருவது முதலாளித்துவ தேசியவாதமாகும். அனைத்து இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை கோருவது பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். இதன் மூலம் பிரிந்து போவதிலுள்ள அனுகூலங்களை அடைய முதலாளிகள் வைக்கும் பிரிவினை வாதத்திலிருந்து நமது சுயநிர்ணய உரிமைகளுக்கான கோரிக்கைகளை வேறுபடுத்துவதும், தேசிய தப்பெண்ணங்கள் தோன்றுமலும் அது வர்க்கப் போராட்டத்திற்கு தடையாக மாறுமலும் பார்த்துக் கொள்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமை" என லெனின் வலியுறுத்துகின்றார். (புதிய சனநாயகம் வெளியீட்டில் இருந்து) அதாவது தேசிய இனப்பிரச்சனையை பாட்டாளிவர்க்கம் கையிலெடுக்க வேண்டும் என்பதன் அர்த்தம் சொரூபன் குறிப்பிடுவது போல பிரிவினை போராட்டமாகத் தான் முன்னெடுக்க வேண்டும் என்பதல்ல தனது சொந்த தேசிய இனத்தினது பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்காக போராடும் போதே பிற தேசிய இனங்களுடனான ஐக்கியத்திற்கான முழக்கத்தை முன்வைத்து பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு பாடுபட வேண்டிய வர்க்கக் கடமையை பாட்டாளி வர்க்கம் மறக்க இயலாது.

இலங்கையின் இன்றைய கால கட்டத்தில் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைப் போரை,சொந்த மக்களின் பாதுகாப்பிற்கான யுத்தத்தை தமிழ் பாட்டாளி வர்க்கம் கையிலெடுப்பது மிகமிக சரியானதே. எனினும் பாட்டாளி வர்க்கம் பிற தேசிய இனங்களது நலன்க ளையோ, அல்லது இலங்கையின் பாட்டாளி வர்க்க நலன்களையோ கணக்கில் எடுக்காது பிரிவினையை கோருவதாக இருக்குமாயின் அது பாட்டாளி வர்க்கத்தினது கோசம் அல்ல. அது தனது தேசிய இன நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளும் ஏதோ ஒருவகைப்பட்ட முதலாளித்துவ தேசியவாதமே.

எனவே தமிழ் பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்த வரையில் தனது சொந்த தேசிய இன சுயநிர்ணய உரிமை போராட்டத்தை கையிலெடுக்கும் போதே பிறதேசிய இனங்க ளின் சுயநிர்ணய உரிமைக்கான கோசங்களை முன் வைப்பதும் தேசிய இனங்களிடையே ஐக்கியத்திற்கான முழக்கத்தை முன் வைக்க வும் வேண்டும். தனது தேசிய இனப்



போராட்டத்தை நிகழ்த்தும் போதே அனைத்து தேசிய இனங்களினது சுயநிர்ணய உரிமைகளை உத்தரவாதம் செய்யும் இலங்கையின் புதிய சனநாயகப் புரட்சியை நடாத்திட தனது பங்கை செலுத்த வேண்டும்.

சாராம்சமாக, தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போரை கையிலெடுக்கும் போதே சிங்கள, முசுலீம்,மலையக இனங்களிடையேயுள்ள பாட்டாளிவாக்க சக்திகளுடன் இணைந்து கொள்வதும் இலங்கையின் இனவாத தரகு முதலாளித்துவ அரசை தூக்கியெறிவதற்கான போராட்டங்களில் தலைமையேற்ற பாட்டாளி வர்க்ககட்சியொன்றை தாபிப்பதும் தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் புறக்கணிக்க முடியாத வாக்கக் கடமையாகும். அதை தவிர்த்து விட்டு ஒருபகுதியான எமது சொந்த இனத்திற்காக மட்டும் போராட்டம் நிகழ்த்துவது மார்க்சிய சொல் அலங்காரத்துடன் பிறந்திருக்கும் முதலாளிய தேசியவாதமாகவே அமையும்.

கடந்த காலங்களில் மார்க்சிய கனவான்கள் சிறுபான்மை இனங்கள் மீதான ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடவில்லை என்பதாலோ அல்லது அதற்கு துணைபோனார்கள் என்பதாலோ இன்றைய மார்க்சிய-லெனினியவாதிகள் வர்க்க நலன்களை கடந்து தேசியத்திற்கு பலியாவது சரியான அணுகுமுறையல்ல. எனவே நியாயமான தேசிய இன சுயநிர்ணய உரிமைப் போரை கையி லெடுக்கும் போதே அதைப் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு உட்பட்ட தேசியவாதமாக முன்னெடுக்க வேண்டும். சர்வதேசிய வாதத்தைக் கணக்கில் எடுக்காமல் தேசியவாதம் பேசுவதை நியாயமெனக் காட்ட முனைந்தாலும் அது பாட்டாளி வர்க்க அணுகுமுறையல்ல.

எனவே ச.கிறித்தோப்பர் குறிப்பிட்டது போல சுயநிர்ணய உரிமை என்பதனையும், பிரிவினை என்பதனையும் பிரித்துப் பார்க்க வேண்டும். பிரிந்து போவதற்கான உரிமையை பாட்டாளி வர்க்கம் கோரவும் வேண்டும் அங்கீகரிக்கவும் வேண்டும். ஆனால் ஐக்கியத்திற்கான முழக்கத்தை முன்வைப்பதற்கு பதில் தனியரசு, தமிழீழம் என வரையறுத்துக் கொள்வது தமிழ் தேசியவாதமே. இது முதலாளித்துவ தேசியவாதமே. இது ஆதரிக்கப்பட வேண்டியது தான் எனினும் முதலாளித்துவ தேசியவாத கோசமே ஒழிய பாட்டாளிவர்க்க கோசமே அல்ல.

தமிழ் பாட்டாளிவாக்க கோசமானது,

**# தமிழ் தேசிய இனத்தின் பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!**

**# முசுலீம்,மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு போராடுவோம்!**

**# இலங்கையின் இனவாத,தரகுமுதலாளித்துவ,பாசிச அரசைத் தூக்கி எறிய இலங்கையின் அனைத்து தேசிய இன தொழிலாள விவசாயிகளே,தேசப்பற்று உள்ளவர்களே ஒன்றுதிரளுங்கள்!**

என்பதாகவே அமைய முடியும். இதைச் சாதிப்பதன் மூலமே மக்கள் விரோத,பாசிச அரசை தூக்கியெறியவும் ஏகாதிபத்திய, பிராந்திய வல்லரசுகளின் சகல சதிகளையும் ஆக்கிரமிப்புக்களையும் முறியடிக்கவும் இயலும்

**சமரன்**

<u>கனடா</u>

<u>0000</u>

உயிர்ப்பு ஆசிரியர்கட்கு!

இன்றைய யதார்த்தம் 3வது அணியின் அவசியத்தை உணர்த்துகிறது. இந்த அவசியம்--3வது அணியின் உருவாக்கம் எப்படி சாத்தியமாகும்? புலிகள் பற்றிய மதிப்பீட்டினூடாக இது சாத்தியப்படப் போவதில்லை. ஏனெனில் இந்த மதிப்பீடு தமிழீழ போராட்டத்தில் தொடர்ந்தும் நேரடியாக பங்குகொள்ளும் சந்தர்பத்திலிருந்து தடுக்கப்பட்டிருக்கும் புரட்சிகர, முற்போக்கு சக்திகளுக்கிடையிலான முரண்பாட்டை மேலும் ஆழப்படுத்தியிருக்கிறது. எனவே தமக்குள் முரண்பட்டும்,பிளவுண்டும்,தனித்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கும் பல்வேறு பிரிவினரையும் நெருங்கி வரச்செய்யக் கூடிய விவாதப் பொருளை முன்வைப்பதன் மூலமே 3வது அணியை நோக்கியதான நகர்வை விரைவுபடுத்த முடியும். இத்தகைய நெருக்கத்தை "தேசியம்" பற்றிய விவாதம் ஏற்படுத்தும் என நம்புகின்றேன்....."

"......தேசியவாதம் பொதுவாக பிற்போக்கானது என்ற கருத்தமைப்பு உடைக்கப்பட வேண்டும் இன்றைய உலகில் தேசியத்தின் முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். மார்க்சிய புரட்சியாளர்கள் இயங்கு தளமாக அமையக் கூடிய வகையில் தேசியம் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

"........பாட்டாளிவர்க்கத்திற்கு தலைமை வகிப்பதும் சோசலிச முன்னெடுப்பை மேற்கொள்வதுமே மார்க்சியவாதிகளின் ஒரே கடமையல்ல. தான் வாழும் சமூகத்தில் நிலவும் பல்வேறு வர்க்கங்கள், பிரிவுகளின் வளர்ச்சியையும் அவற்றிற்கிடையிலான முரண்பாடுகளையும் மதிப்பிடுவதும், சமூக இயக்கம் அடுத்த நிலைக்கு உயர்வதை ஆதரிக்கும் பிரிவுகளை அடையாளம் காண்பதும் அத்தகைய பிரிவுகளுக்கு-வர்க்கங்களுக்கு தலைமை தாங்குவதுமே மார்க்சியவாதிகளின் வரலாற்று கடமையாகிறது. பாட்டாளி வர்க்க தலைமை சோசலிச முன்னெடுப்பு என்ற கோசங்களுடன் மார்க்சியவாதிகள் தம்மை எல்லைப்படுத்திக் கொள்வார்களாயின் சமூக இயக்கத்தினால் அவர்கள் ஒதுக்கப்பட்டு விடுவார்கள்........"

".........புலிகளை எப்படியாவது ஒரு வர்க்கத்திற்குள் அடக்கி விடுவதில் அனைவரும் கடும் பிரயத்தனப்படுவது தெரிகிறது. மார்க்சிய புரட்சியாளர்கள் தமக்கு வெளியேயுள்ள சக்திகள் பற்றிய வர்க்க மதிப்பீட்டை செய்வதற்குரிய அடிப்படைக் காரணம் என்ன? போராட்டப் பாதையில் அத்தகைய சக்திகளுடனான ஐக்கியத்திற்குரிய அவசியம் மற்றும் சாத்தியம் பற்றி புரிந்து கொள்வதற்கே இத்தகைய வர்க்க மதிப்பீடு அவசியப்படுகின்றது. ஆனால் தமிழீழத்துக்கான போராட்டத்தில், தனக்கு வெளியேயுள்ள எந்தவொரு போராட்ட, அரசியல் அமைப்புடனும் சமத்துவமான ஐக்கியத்தை ஏற்காமலும் அத்தகைய அமைப்புகள் அனைத்தையும் அழித்துவிடவும் முனைகின்ற புலிகள் பற்றிய வர்க்க மதிப்பீட்டின் மூலம் சாதிக்கப்பட போவது என்ன?! உண்மையில் பல்வேறு குழுக்களாகவும், தனிநபர்களாகவும் இருக்கின்ற புரட்சிகர மற்றும் முற்போக்கு சனநாயக சக்திகளிடையே பிளவுகளையும் முரண்பாடுகளையும் மேலும் ஆழமடையச் செய்துள்ளதைத் தவிர வேறு எதையும் இந்த வர்க்க மதிப்பீடு செய்து விடவில்லை.......:"

"..........புலிகள், சிறீலங்கா அரசு ஆகிய இரண்டையும் பலப்படுத்தல் என்ற ரீதியில் அல்லாமல், தமிழ் தேசியத்தை இவற்றின் சிதைவு, மற்றும் அழிவை நோக்கி இயங்குவதே இன்றைய தேவை! எனவே தமிழ் தேசியத்துடன் தமிழகத்தின் உழைக்கும் மக்களுடன் தன்னை முழுமையாக பிணைத்துக் கொண்ட 3வது அமைப்பொன்றின் உருவாக்கமே இன்றய அவசியம்.

NORWAY
SIGNATURE
EELAN BOOKS

கோபாலன்
ஈழம்

குறிப்பு: ( நீண்ட கடிதம் சுருக்கப்பட்டுள்ளது)

www.tamilarangam.net

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிர்ப்பு வெளிவருகின்றது உயிர்ப்பின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பை – நிதி உட்பட – எதிர்பார்க்கின்றோம்.

அன்பளிப்பு :- 1 பவுண்ஸ்

கணணி அச்சுப்பதிப்பில் வடமொழி எழுத்துக்கள் இன்மையால் கட்டுரைகளில் அவ்வெழுத்துக்கள் இடம்பெறவில்லை. இனிவரும் காலங்களில் இவற்றை நிவர்த்திக்கின்றோம்

தொடர்புகட்கு.....

2

1992

UYIRPPU

**UYIRPPU**

**BM BOX 4002**
**London**
**WC1N 3XX**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்